ஸ்ரீராமஜயம்.

# மிருச்சகடிகம்

## என்னும் நாடகம்.

இவ்வடமொழி நாடகத்திற்கு

நாகபட்டணத்தில் ஹைகோர்ட்டு வக்கீல்

பிர்மஸ்ரீ S. A. பாலகிர்ஷ்ணையர் B.A.B.L. அவர்கள்

செய்த மொழிபெயர்ப்பும்

திரிசிரபுரம்

மஹாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களுடைய

மாணாக்கரும் பிரஸங்கஸாகர வித்வானுமாகிய

திருக்கண்ணமங்கை தன்வந்தரி

உ. வே. திரு. லா. இராகவாசாரியார் இயற்றிய

சுலோக மொழிபெயர்ப்புச் செய்யுட்களும்

நாகபட்டணம்

ஸ்காட்டிஷ் பிராஞ்சு பிரஸில்

பதிப்பிக்கப்பட்டன.

1909.

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBR
BESANT NAGAR, MAD

இதன் விலை] (All Rights reserved.) [௹ 1½.

Printed by Graves Cookson & Co.,

AT

*The "Scottish Branch Press," Negapatam.*

# நூன்முகம்.

உலகெலாம் பரவு மொருதனிமுதல்வ
னலகிலாக்குணத்த னடிநமுடிவில்
லிறையவனச்சுத னீச்சுரனெம்மான்
பிறப்பிறப்பில்லான் பேரருளாள
னும் பிரமத்தை யங்கைநெல்லிக்கனி
போன்மெனக்காட்டும் புகழுறுதகைகொளீஇத்
தன்னைத்தானிகர் தனிமொழியாகி

நன்னயப்பாஷைகள் நற்றாய் என்னும் பெருமை வாய்ந்த வடமொழியிற், சொற்சுவை, பொருட்சுவை, கற்பனாலங்காரங்கள் நிரம்பிய இந்த மிருச்சகடிகம் என்னும் நாடகக்காப்பியம், கவிஞர் பெருமானாகிய சூத்திரகன் என்ற அரசனா லியற்றப்பட்டுளது. இச்சூத்திரகனால் அபிமானித்தலையுற்ற வடமொழிவல்லானொருவன், இந்த நாடகத்தை யெழுதிச் சூத்திரகன் பெயரால் வெளியிட்டனனெனச் சிலர் கூறுகின்றனர்; அதற்கு நூல்மூலமான ஆதாரமொன்றும் தென்படாமையின் அவர் கூற்று வெற்றுரையெனவிடுக்க. மற்றைய நூலாசிரியர்கள் காலம்போலவே இந்நூலாசிரியர் காலமும் நன்கு விளங்காவிடினும், இந்நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த *Mr. H. H. Wilson. M. A. F. R. S.* அவர்களால் ஒருவாறு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறபடி, தெலுங்கர் குலத்தரசனான சூத்திரகன், ஏறக்குறைய இற்றைக்கு இரண்டாயிரம் வருஷங்களுக்கு முந்தி அவந்தி (உச்சயினி) யில் அரசுபுரியுங்காலத்தில், இவ்வடமொழிநாடகம் வரைந்தனனென்று தெரிகின்றது; சூத்திரகனுடையகாலத்தையும், "பிராசீனகிரந்த மிந்தநூல்" என்று வடமொழி வல்லுநர் வழங்குதலையும், ஊகித்துணருங்கால், ஆரியபாஷையிலுதித்து நடைபெறும் மற்றையெல்லாநாடகங்கட்கும் இது முந்தியதென்று தெற்றென விளங்குகின்றது. அக்காலத்து அரசாங்க அமைதியையும், நீதிமுறைமையையும், நீதியதிபர், சேனாபதி, காவலாளர் முதலாயினோர் தன்மையையும், அரசன் ஆராய்ச்சியின்றித் தீர்ப்பளித்தலையும், மாந்தர்களிருப்பையும், அற்பர் தீச்செயலையும், குணாகுணச்சிறப்பினையும், மற்றும்பலவற்றையும், எளிதிற்கூறுதலை யோசிக்குமிடத்து, இந்நூலாசிரியர் உலகநடையையும் ஒருங்கே உணர்ந்து, அவைகளை யுலகத்திற்குக்காட்ட இந்நூலியற்றி யுள்ளாரென்றறிகின்றேம்.

பண்டைக்காலத்தில் வழங்கிவந்த பலவகை யாசாரங்களை, இக்காலத்தார் இலேசாய்த் தெரிந்துகொள்ளுதற்கு இந்தநாடகம் ஒரு உபகரணமாகவுள்ளதென்பதை யடியில் எழுதப்பட்டிருப்பவைகள் கூறும்.

அவை வருமாறு:—அந்தணர் மற்றை மூன்று வருணக் கன்னியரைப் பாணிக்கிரகணஞ் செய்யலாமென்ற மநுவசநத்திற் கொப்ப, வேதிய சாருதத்தன் சூத்திரையான தாசி வசந்தசேனையையும், வேதிய சர்விலகன் சூத்திர மதநிகையையும், மணம்புரிந்தனர்; சாருதத்தனேவலால், வசந்தசேனை வீட்டிற்குப் பிராமண மைத்திரேயன் சென்றபோது, உணவுண்டு போகும்படி தன்னையவள் விரும்பவில்லையென்று அவன் சொற்றனன்; இதை எண்ணுங்கால், இக்காலத்திற் பூசுரர்களுக்குள் பெருகிவரும் ஆசாரநியமம் அநுட்டிக்கப்படாமல், அரசர்கள் வீட்டில் இருடிகள் உண்டுவந்த ஆசாரணையொத்த சிலச்சில விடயங்கள், சூத்திரகன் காலத்தில் அத்தேயங்களில் மாறுமலிருந்தனவென்றறிகின்றேம்; பார்ப்பார் வாணிபஞ்செய்து வாழ்ந்தன ரென்பதைச் சாருதத்தன் றகப்பன் றொழில் வெளியிடா நின்றது; வசந்தசேனையின் றாய்க்கு நீதிபதி, சாருதத்தன் முதலியோர் மரியாதை பண்ணினர்; அவளும் அநுக்கிரகம் பண்ணும் பதவியுற்றவள்போல, அவர்களைச் "சிரஞ்சீவி" என்றழைத்திருக்கின்றனள்; இவை, இக்காலத்திற் பரத்தையர்கள் இழிந்தோர்களாக எண்ணப்படுதல் போலன்றி, யக்காலத்திற் கவுரவமாக நடத்தப்பட்டார்களெனக் காட்டுகின்றன; பண்டைக்காலத்தில் மதங்கள் கலப்புற்றிருந்தனவேயல்லாது, மதவைராக்கியமும் வித்தியாசமும் இப்போது காணப்படுதலவ்வளவு அப்போது இல்லை யென்று சாக்கியமுனிவன் சரித்திரமும், சாருதத்தன் சாக்கியமுனிவனாகிய சம்வாஹகனை மற்றைப் பௌத்த மடங்கட்குத் தலைவனாக்கினதுவும், வெளியிடுகின்றன. கேவலம் விடையச்சார்பான சாட்சியத்தை மாத்திரம் நம்பி மரண தண்டனை விதித்தல், பண்டைக்காலத்திய நீதிச்சபையாரின் கொள்கை யென்பதையும் இந்நூலிற் காண்கின்றேம்.

செல்வமெல்லாமிழந்து தீராவறுமைக்குள்ளாயினும் சத்தியம், சாந்தி தயை, தானம், முதலியவைகளை விடுதல் கூடாதென்பதூஉம், பஞ்சமா பாதகங்களுடன் கூட்டி ஆறும்பாதகமாகத் தரித்திரத்தை நினைத்தல் வேண்டுமென்பதூஉம், ஒருமுறை சிநேகித்தவனை உயிருள்ளவரை துறத்தல் கூடாதென்பதூஉம், ஒருவன் செய்தநன்றியை மறத்தல் கூடாதென்பதூஉம், பகைவனாயினும் அடைக்கலம்புகுந்தாற் காத்தல் வேண்டுமென்பதூஉம், அடைக்கலப்பொருளைக் கவர்தல் பாவமென்பதூஉம், மங்கையர்க்குத் தங்கள் கணவரினும் உயிர்சிறந்ததன்றென்பதூஉம், நீதியதிபர் கடமை இத்தகையதென்பதூஉம், நீதியை விசாரணைசெய்யும் வழியின்னதென்பதூஉம், அற்பர்கட்குச் செல்வம்வாய்ப்பின், அவர்கள் பழமையை மறந்து கொந்தளிப்பாரென்பதூஉம், இந்நூலிற் கூறப்பட்டுள்ளன; அகாலமழை மூட்டவருணனை, சூதாட்டபேதங்கள், வசந்தசேனை வீட்டின் வருணனை, திருடர் முறைமை, எழுவகைக் கன்னங்களினிலக்

கணம், களவு நூலாசிரியர்பெயர், இசைப்பாட்டின் இன்பம், இலக்க கனம், பந்துலரிலக்கணம், இவைகளையும் இந்நூலிற்காண்க.

உத்தியோகமுறைமையிற் செலவிடுங்காலத்தில் விஞ்சியகாலத்தைப்பல பல அரியநூல்களின் ஆராய்ச்சியிலுபயோகித்துக் களிப்பவரும், எனக்கு நண்பரும் பரமோபகாரியுமான ஸ்ரீமத் *S. A.* பாலகிருஷ்ணையரவர்கள் இந்த நூலைச் சிறந்த வியாக்கியானங்களோடு ஐயந்திரிபறவுணர்ந்து நன்கு மொழிபெயர்த்து, என்னை யழைத்து, என்கையிலீய்ந்து "இந்த நாடகத்திலுள்ள ஒவ்வொரு சுலோகத்தின் கருத்து அணுவளவுந்தவறாமல் சரியான மொழிபெயர்ப்பாகக் கவிதை களியற்றி, உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுளாகப்பண்ணித்தருக" என ஏவினார்கள்; அவர்கள் கட்டளையை மறுத்தற்கஞ்சி யான் உடம்பட்டேன். ஆரியமொழிச்சுலோகங்கட்கு எதுகை மோனைமுதலிய நியமங்களில்லை; அவ்வகை விதிகளையின்றியமையாமையாகக்கொண்ட நந்தமிழிற்சுலோகங்களை உள்ளவண்ணம் மொழிபெயர்த்தல் பிரயாசமாக விருக்குமென்றற்கு, வடநூன் மொழி பெயர்ப்பாயுள்ள தமிழ் இதிகாச புராணங்களுங் காவியங்களுஞ் சான்று; என்றாலும், ஒவ்வொரு சுலோகத்தையும் பெரும்பான்மையும் அத்தன் கருத்துப்பிறழாவண்ணங் கவிபாடியிருக்கின்றேன்; இங்ஙனம் பாடுதல் எம்போலியர்க்கு எளிதல்ல வென்பதை நல்லிசைக்கவிஞர் நன்கறிவார் என்றல் எனது துணிபு. வடமொழிப்பதங்களின் பொருளைக்குறிக்குஞ் சொற்களும், எதுகை மோனை முதலியவைகட்கு இயைபுடைச் சொற்களும், அகப்படாமல் முட்டுப்பாடுற்ற விடங்களில், வடசொற்கிளவிகளைப் பிரயோகித்திருக்கின்றேன். சிற்சில விலக்கிய விலக்கணப் பிரயோகங்களுக்குத் தேவாரம், திருவாய்மொழி, சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு, இராமாயணம், தொல்காப்பியம் முதலியவைகளினின்று மேற்கோள்களும் விதிகளுங் காட்டியிருக்கின்றேன்.

மொழிபெயர்த்த நடையில் வழு விருப்பினுங் துணிந்த கருத்து நன்றெனக்கருதி யுவந்தேற்குமாறு தூயபுலவர்களை வேண்டுகிறேன். "குற்றமேதெரிவார்குறுமாமுனி, சொற்றபாவினு மோர்குறை சொல்வரால்" என்பவாகலின், அவர்பக்கல் யான் வேண்டுவது யாதுளது? என் வேண்டுகோளாற் படைக்கும் பயன்றானென்னை?

இந்நற்காரியத்திலென்னை ஏவிய ஐயர் அவர்கட்கு எனது என்றும் மறவா நன்றியைத் தெரித்தலோடு, யான் றொடங்கியிருக்கும் மற்றை நூல்களையும் முற்றுவிக்கும் வண்ணம், ஸ்ரீ சீதாராமன் றிருவருளைத் தாநந்தியானியாநின்றேன்.

இங்ஙனம்

திரு. ஸா. இராகவாசாரியன்.

## மிருச்சகடிகம் என்ற பெயர்வந்தகாரணம்.

சாருதத்தன் வீட்டிற்கு வசந்தசேனை சென்றிருந்தபோது, சாருதத்தனுடைய அருமைப்புதல்வன் உரோகசேனனைச் சேடியேந்தினவளாய், விளையாட்டுக் காட்டுங்கால், குழந்தை யழுதுகொண்டிருந்ததையும், அக்குழந்தை சாருதத்தன் வடிவத்தை யொத்திருத்தலையும், வசந்தசேனை நோக்கி விம்மிதமுற்று, இரதனிகையைப் பார்த்து, அப்பாலன் "யாருடைய குழவி, எதற்காக அழுகின்றனன்" என்று வினவினள். "இவன் ஆரிய சாருதத்தருடைய மைந்தன்; இவன் விளையாடும் பொருட்டு மண்வண்டி (மிருச்சகடி) யொன்று செய்து கொடுத்தேன்." அயல் வீட்டுப்பிள்ளை யொருவன் றங்கவண்டிவைத்து விளையாட்டுப் புரிதலைப் பார்த்த இவன் "மண்வண்டி எனக்கு வேண்டாம், அந்தத்தங்கவண்டிதா" என்று உரோதநம் பண்ணுகிறுனென விடை பகர்ந்தாள். வசந்தசேனை கேட்டு, சாருதத்தன் வறுமையை யெண்ணி, மனமுருகிக், கண்ணீர் சொரிய, அப்பாலனைத்தான் வாங்கித், தன்மடிமீதிருத்தி, இலாலனைசெய்து தனது, விலையேறப்பெற்ற ஆபரணங்களைக் கழற்றி அம்மண்வண்டிமேற்போட்டுப், பாலனைப்பார்த்து, "குழந்தாய்! அழாதே; இந்த நகைகளைக்கொண்டு நீ தங்கவண்டி பண்ணிக்கொள்ளுதி" என்றுரைத்துக்களிப்போடு விடுத்தனள். இந்த வரலாற்றுற்றுன் இந்நாடகக்காப்பியத்திற்கு மிருச்சகடிகம் என்ற நாமகரணஞ் சித்தித்த தென்றுகிக்கின்றேம். வேறு காரணம் நன்கு புலப்படவின்று.

# இந்நாடகக் கதைச்சுருக்கம்.

முதலாவதங்கம்.—அவந்திநகரத்தில் அந்தணர்குலத்தில், வியாபாரிக ளிற்றலைமைபூண்ட சாகரதத்தருடைய புதல்வன் சாருதத்தனென்பான் கற்புநிலைதவறாத தூதையென்பாளை மணந்து, உரோகசேநனென்னும் பாலனைப்பெற்று, வாழ்ந்து வருகையிற், பெருமிதக் கொடையாற் பிதா ஈட்டிவைத்த பெருஞ் செல்வத்தை யிழந்து, வறிஞனாயினன். கல்வி, அறிவு, ஒழுக்கம், பொறுமை, தயை முதலியவைகளிற் சிறந்தவன்; கட்டழகும் யௌவநமும் வாய்ந்தோன்; அளவற்ற செல்வமும், அழகும் இளமையும் நற்குணங்களும் படைத்த தாசி வசந்தசேனை, காமதேவன் கோயிற்றோட்டத்திற் சாருதத்தனைக் கண்ணுற்று, அவன் மீது தனியா மோகங்கொண்டனள். ஒருநாள் மாலைப்பொழுதிற் றேவ பூசைசெய்த சாருதத்தன் பலியைச் சந்தியிற்போட்டுவரும்படி மைத்திரேயனையுஞ் சேடி இரதனிகையையும் நியோகித்தனன். அவர்கள் பலியைக்கையி லேந்தி வாயிலிற் புறப்படுகையில்—தற்செயலாய் வீதியிற் போய்க்கொண்டிருந்த வசந்தசேனையை, அரசன் மைத்துனன் † சகாரன், விடன் சேடர்களோடு பின்றொடர்ந்து, தன் கருத்துக்கிசையும் வண்ணம் பலவாறாக வேண்டியும், அவளவனிடம் வெறுப்புற்று, அவனை நிந்தித்து, அவன் கையிலகப்படாமல், அவன் வாய்மொழியாற் சாருதத்தன் வீட்டையறிந்தவளாய், அவ்வீட்டினுட்புகுந்தனள். வெளியில் வந்த இரதனிகையை வசந்தசேனை யென்றெண்ணிச் சகாரன் பிடித்துக்கொண்டான். அப்போது மைத்திரேயனுக்கும் ஸம்ஸ்தானகனுக்குஞ் சண்டை யுண்டாயிற்று. விடன் சமாதானப்படுத்தினான். சகாரன் மைத்திரேயனை நோக்கி "வசந்தசேனையை யென்னிடங்கொணர்ந்து விடாவிடில், யெனக்கும் உனக்குந் தீராப்பகை விளையும்" என்று நான் சொன்னதாகச் சாருதத்தனுக்குச் சொல்லென்று கூறி, விடனோடுஞ் சேடனோடுந் தன்னிடஞ்சென்றனன். மைத்திரேயனும் இரதனிகையும் பலியிடப்போயினர். உட்புகுந்த வசந்தசேனையை இரதனிகையென வெண்ணித்தன் குழந்தையை எடுத்துப்போகும்படி ஏவியசாருதத்தன், பிற்பாடு வசந்தசேனையென்றறிந்தானாகி, அவளையுபசரித்தனன். அத்தருணம் தான் அங்குத்தங்குதல் தகாததென் றெண்ணிய வசந்தசேனை, தன்னுடைய ஆபரணங்களைக் களைந்து, ஒரு சீலைத்துண்டில் முடிந்து,



† சகாரன் = ஸம்ஸ்தானகன் என்பது இவனுக்கு இயற்பெயர். சகாரனென்பது ஓர் பாத்திரபேதம். இவனுடைய தீயகுணங்களை, இந்த நாடக பாத்திரங்களுடைய அபிதானவிளக்கத்தினடியில் வரையப்பட்டிருக்கும் இலக்கணத்தாலுணர்க.

சாருதத்தனை நோக்கிப் "பணிகளினிமித்தம் பாவிகளென்னைப் பின்பற்றுகின்றனர், உம்மிடத்தில் இந்த முடிப்பை யடைக்கலமாக வைக்கிறேன்" என்று கூறிக்கொடுக்கின்றனள். சாருதத்தன் வாங்கிச் சாக்கிரதையாக வைத்திருமென்று, மைத்திரேயனிடங்கொடுத்து, வசந்தசேனையையழைத்துச்சென்று, அவள் வீட்டில் விடுத்துப், பின்னர்த் தன் வீட்டை யடைந்தனன்.

இரண்டாவதங்கம்.—வசந்தசேனைவீட்டில் வசந்தசேனையும் மதனிகையுஞ் சாருதத்தன்மேல் வசந்தசேனைக்குள்ள காமமேலீட்டாற், சாருதத்தனைப்பற்றிப் பலவாறாகச் சம்பாஷித்துக் கொண்டிருக்கின்றனர். சாருதத்தனுக்குக் கால்பிடிக்குந்தொழிலைச் செய்து வந்து, பிறகு சூதாடியாக மாறினவன் ஸம்வாஹகனென்பான். மாதுரன் தியூதகரன் என்னுஞ் சூதர்கட்குக் கொடுக்கவேண்டிய பத்துப்பொன்னை யிறுக்குந்திறமற்று, அவர்களாற் றுரத்துண்ட ஸம்வாஹகன், வசந்தசேனை பக்கல் சரண்புகுந்து, தான் சாருதத்தனுக்குச் சம்வாஹகனாக விருந்ததையும், பிற்பாடு சூதனாகிச்சூதுக்கூட்டாளிகளாற் றுன்பப்படுதலையும், அவளுக்குத் தெரிவித்தனன்; சாருதத்தனிடத்திலுள்ள காதலால் அவள் அவன்மீதிரங்கி, கைக்கடகத்தையளித்துக் கடனிலநின்றுமவனை விலக்கினள். அப்போதேயவன் இவ்வுலகப்பற்றுக்களை முற்றத் துறந்து, சாக்கியமுனிவனாகி, வசந்தசேனையிடம் நன்றி பாராட்டிச செல்லுகையில், வழியில் வசந்தசேனையுடைய குண்டமோடகமெனனும்யானைகையிற்சிக்கி, வசந்தசேனையுடைய சேடன் கர்ணபூரகனால் விடுதலையுற்றுப்போயினன்.

மூன்றாவதங்கம்.—சாருதத்தன் மைத்திரேயனோடு போகிப், பாடகன் ரைபிலனுடைய கானத்தைக்கேட்டுப்புகழ்ந்து களிப்புற்றானாகி, வீட்டிற்குத்திரும்பிவந்து, வசந்தசேனை தன்னிடம் அடைக்கலம்வைத்த வாபரணங்களைப் பத்திரமாகப் பாதுகாக்கும்வண்ணம் மைத்திரேயனுக்குக்கூறி, தன்னுடைய பள்ளியறையுட் புகுந்து துயில்வுற்றனன்; மைத்திரேயன் மார்பின்மீது அடைக்கலப்பொருளை வைத்துக்கொண்டு நித்திரைசெய்தனன்; இப்படியிருக்கையில், மதனிகைமேல் காதல்கொண்டான் ஓர் வேதியன் சர்விலகனென்பான்; அவன் மதனிகையை விவாகஞ்செய்ய விருப்பமுற்றனன்; வசந்தசேனைக்குத்தான் அடிமையாதலின் வசந்தசேனைக்கு முறிப்பணத்தைக்கொடுப்பின், றான் மணத்திற்குடன்படுவதாக மதனிகை யவனுக்கு வாக்களித்தனள். சர்விலகன் ஏழையாதலின், திருடிப் பொருளீட்டவெண்ணிச் சாருதத்தன் வீட்டிற் கன்னமிட்டு, உட்சென்று பார்க்கும்பொழுது, மைத்திரேயன் கனாவிற்சாருதத்தனைக்கருதி "இந்தத் தங்கப்பானையைக் காப்பாற்ற என்னால் முடியாது, நீர் வாங்கிக்கொள்ளும்" என்று பிதற்றச் சர்வில

கன் மனவருத்தத்தோடு வாங்கிப்போயினன். காலையிற் சாருதத்தன் தன்னுடைய வீட்டிற் கள்வன் கன்னமிட்டு நுழைந்து, அடைக்கலப் பொருளைக் கவர்ந்து ஏகினனென்றறிந்து துயருற்றனன்; இச்செய்தி யைக்கேள்வியுற்ற அவன் மனையாட்டி தூதை யனுப்பிய, அவளுடைய மாணிக்க மாலையைச், சாருதத்தனிடம் வாங்கிக்கொண்டு வசந்தசேனை யிடம் அடைக்கலப் பொருளுக்குவதிலாகக் கொடுக்கும்பொருட்டு மைத்திரேயன் சென்றனன்.

நான்காவதங்கம்.—வசந்தசேனை, சாருதத்தனுடைய உருவப்படத்தைக் கையிலேந்திக் காதலோடு பார்த்து, மதனிகையோடு வார்த்தையாடிக்கொண்டிருக்கின்றனள்; வசந்தசேனையுடைய தாயாலனுப்பப்பட்ட சேடிவந்து, "சமஸ்தானகன் விலையேறப்பெற்ற உடைமைகளோடு வண்டியும் அனுப்பியிருத்தலால், அவனிடம் போகும்படியம்மாள் கட்டளையிடுகின்றனள்" என்று தெரிவித்தனள். வசந்தசேனை, வெறுப்புங் கோவமுமிகுந்தவளாகிச், சமஸ்தானகன் விண்ணப்பத்தைத் திரஸ்காரஞ்செய்து, சேடியை யனுப்பினள்; இத்தறுவாயிற், சர்விலகன் மதனிகையைச்சந்தித்துத், திருட்டுடைமைகளைக் கொடுக்கின்றான்; அவை சாருதத்தனிடம் வசந்தசேனை யடைக்கலம் வைத்தவையென்றும், அவைகளைச் சர்விலகன் திருடிக் கொணர்ந்தனனென்றும், அறிந்து தனது தலைவியிடந்தருகின்றனள்; அவள் வாங்கிக்கொண்டு, திருட்டு நடத்திய வீட்டிற் சர்விலகன் பிராணுபாயமான காரியம் பண்ணவில்லையென்று தேறி, மதனிகையை, அடிமைத்தன்மையில் நின்றும் விலக்கிச், சர்விலகனுக்குத் தானஞ் செய்கின்றனள்; சர்விலகன் சந்தோஷத்தோடு மதனிகையைக் கூட அழைத்துப் போகையில், சித்தர்வாக்கியத்தால் அரசனுகப்போகும் இடையப்பையன் ஆரியகனை, யரசன் பாலகன் சிறையிட்டிருக்கின்றனனெனக் கேட்டுத் துன்புற்று, மதனிகையைச் சார்த்தவாஹரைபிலன் வீட்டிற்கனுப்பி, ஆரியகனைச்சிறைநின்றும் நீக்கச்செல்லுகின்றனன். விதூஷகன் சாருதத்தன் ஆக்ஞைப்படி வசந்தசேனை யில்லத்திற்கேகிப், பூந்தோட்டத்திலவளைக் கண்டு, அடைக்கலப்பணிகளைச் சூதாட்டத்திற் சாருதத்தன் இழந்தமையால், அவைகட்குப் பதிலாக மாணிக்கமாலையைக் கொடுக்கின்றனன், என்றுரைத்து இரத்நஹாரத்தையீந்து, கலக்கத்தோடு திரும்பியேகினன். வசந்தசேனை சாருதத்தன் வீட்டை நோக்கி ஏகுகின்றனள்.

ஐந்தாவதங்கம்.—ஆகாயத்தில் அகாலமேகமூட்டம் உண்டாயிற்று. சாருதத்தன் அதை வருணித்தவனாகி, மைத்திரேயன் வருகையைக் கவலையுடன் எதிர்பார்த்திருக்கையில், அவன்திரும்பிவந்து வசந்தசேனை இரத்நாபரணத்தை வாஙகிக்கொண்டனளென்றுகூறிப், பரத்தையின் நட்பைப்பரிகரித்தல் தகுதியென்றும், வற்புறுத்தி யுரைத்தனன். வசந்த

சேனை அப்படிப்பட்டவளன்று, நற்குணமுடையாளெனச் சாருதத்தன் மறுமொழி சொற்றனன். பின்னர், வசந்தசேனை மேகக்குழப்பமுற்ற அந்திப்பொழுதில், மேகத்தை உபாலம்பநஞ் செய்து, சாருதத்தன் மனையை யடைந்து, அவன்றிருடனு விழப்புற்ற சுவர்ணபாண்டத்தையு மவனுக்குக்காட்டி, யவன் றுயரையகற்றி, யவனை மகிழ்வித்து அன்றிரவு அங்குத் தங்கினள்.

ஆறவதங்கம்.—மறுநாட்காலையில் வண்டியில் வசந்தசேனையையேறச்செய்து, தன்னுடைய பூந்தோட்டத்திற்குக் கொணரும்படி சேடனுக்குத்தரவளித்துச், சாருதத்தன் றன்னுடைய புஷ்பகரண்டகம் என்னுஞ்சீர்ணோத்தியாநத்திற்குச்சென்றான். வசந்தசேனை நித்திரையினின்றும் எழுந்து, மாணிக்கமாலையைத்தூதையிடம் அனுப்பினள். “சாருதத்தர் அன்புற்று அளித்த அக்கண்டாபரணத்தை யான் அங்கீகரிக்கமாட்டேன்” என்று தூதை மறுத்துவிட்டனள். உடனே, “நான் விளையாடுதற்கு இந்தமண்வண்டி தந்தாயே! இது எனக்கு வேண்டாம்; அடுத்தவீட்டுக்குழந்தை வைத்து விளையாடுகிற தங்கவண்டி வேண்டும்” என்று அழுகையுற்ற குழந்தை உரோகசேனனைச்சேடி எடுத்துவந்தாள். வசந்தசேனை பார்த்துச் சாருதத்தன் றநயனெனக் கேட்டறிந்து, மகனை இலாலனைசெய்து, தன்னாபரணங்களைக் கழற்றி யவ்வண்டிமீது சுமத்தி, “இந்த நகைகளாற் றங்கவண்டி செய்துகொள்ளு குழந்தாய்” எனக்கசிந்து கூறினள். பிற்பாடு பிள்ளையைத்தாங்கி இரதனிகை யேகினள். நிற்க, வீதியில் வண்டிகள் போக்குவரத்து மிகுதியாக இருந்தமையாற், சாருதத்தனுடைய மூடலுற்ற வண்டி வேறொரு பக்கத்திலும், சமஸ்தானகன் (சகாரன்) வண்டி சாருதத்தனுடைய பக்கவாசலிலும் நின்றன. ஐயோ பாவம்! வசந்தசேனை வலக்கண் துடிப்போடு சமஸ்தானகனுடைய வண்டியிலேறினள். இச்சமயத்திற், “சிறைச்சாலையில் விலங்கிடப்பட்டிருந்த ஆரியகன், சிறைச்சாலையை உடைத்துக், காவலாளனைக் கொன்று, விலங்கைமுறித்து ஓடுகிறான்” என்ற ஒரு பெருங்கூச்சலுண்டாயிற்று. ஒருகாலில் விலங்குடன் முக்காடிட்டு ஓடோடிவந்த ஆரியகன் றப்பியோடுந் தடமறியாது, சாருதத்தனுடைய இடிந்த பக்கவாசலில் தங்கி மறைந்தான். சாருதத்தனுடைய வண்டியைக் கொணர்ந்த வர்த்தமானகச்சேடன் இரதனிகையைக் கூவி “வசந்தசேனையை வண்டியிலேறும்படி சொல்லு” என்ற வார்த்தைகளை ஆரியகன் கேட்டு அந்த வண்டியிலேறினான். கால் விலங்கொலியை காற்சிலம்பொலியெனக்கருதிய சேடன் வண்டியை நடாத்திச்செல்லுகின்றனன். இதற்கிடையில், ஆரியகனைத் தேடித்திரியும் சந்தனகன் வீரகன் என்னுஞ்சேனாதிபதி யிருவரும், மூடலுற்ற இந்தவண்டியண்டை வந்து, வண்டியைத்தடுத்து விசாரித்தனர். வண்டியில் வசந்தசே

னையிருக்கிறாளென்று, சேடன் செப்பினன். சந்தனகன் வண்டியிலேறிப்பார்த்து, ஆரியகனிருத்தலையறிந்து, அவனைக் காட்டிக்கொடுத்தல் இல்லையென அவனுக்கபயமளித்துக், கீழேயிறங்கி வீரகனைநோக்கி, வசந்தசேனை வண்டியிலிருக்கிறாளென்றனன். வீரகன் ஐயமுற்று, வண்டியைத்தான் பரிசோதிக்க முயலுகின்றனன். சந்தனகனுக்கும் வீரகனுக்கும் விவாதம்விளைந்து, வீரகன் வண்டிமீதேறப்போகையில், சந்தனகன்மறித்து அவனையடித்தான். வீரகன் நீதிச்சவையாரிடஞ் சந்தனகனுடைய தீயநடக்கையைத் தெரிவித்து, தக்கதண்டனைக் குள்ளாக்குவதாக வீரம்பேசிப்போயினன். சந்தனகன் தன்கத்தியை ஆரியகனுக்களிக்க, அவன் பெற்று வண்டியிற் சென்றனன். ஆரியகனுக்கு உதவி புரிவானுந் தனது தோழனுமாகிய சர்விலகனைத் தேடிச் சந்தனகன் சென்றனன்.

ஏழாவதங்கம் —வர்த்தமாநகசேடன், வசந்தசேனையை வண்டியிலேற்றி வருதலிற் றாமதிக்குங்காரணந் தெரியவில்லையென்று, சாருதத்தன் விதூஷகனோடு விளம்பிக் கவலையுற்றிருக்கையில், வர்த்தமானகன் வண்டியைக்கொணர்ந்து நிறுத்தினான். விதூஷகன் வண்டியிலேறிப்பார்த்து வசந்தசேனை யில்லாமல் மற்றொருத்தனிருத்தலைக்கண்டு, சாருதத்தனுக்குச் சொல்லச் சாருதத்தன் வண்டிமீதேறி ஆரியகனைப் பார்த்தான். ஆரியகன் சாருதத்தனிடம் சரண்புகுந்து, தன் விர்த்தாந்தத்தை யுரைக்கச் சாருதத்தன், வசந்தசேனை வராமையைக்குறித்து வருத்தமுறாமல், ஆரியகன்பக்கல் அன்புபாராட்டி, அவனுக்கு அபயமளித்து, அவன் விலங்கையு முறிவித்து, அவனைத்தன் வண்டியிலேயே பிறர்கண்ணிற்படாமற் செல்லும் வண்ணஞ் செய்து, தனது இடக்கண் துடிப்பையும் அபசகுநமாக எதிரிற் சமணகன் வருதலையும் எண்ணி இடர்பட்ட மனத்தோடு, தன்னில்ல மேகினன்.

எட்டாவதங்கம்.—சமணக சந்நியாசியாகிய சம்வாஹகன், சகாரனுடைய தோட்டத்திற்கு வந்தனன். அவனைச் சகாரன் கண்டு காரணமின்றியடித்தான். அவ்வடிகளைப் பொறுக்கமாட்டாமற் கதறிய துறவியைக்கண்ணுற்ற விடன், சகாரனுக்கு நல்ல வார்த்தை சொல்லித், துறவியை வெளியில் விடுத்தனன். சாருதத்தன் சகடமென வெண்ணிச் சகாரன் வண்டியிலேறிப்போகும் வசந்தசேனை, வண்டிக்காரன் குரலைக் கேட்டு, வர்த்தமானகனுடைய குரலோசைக்கு மாறாகவிருத்தலையறிந்து, ஐயங்கொண்டு கிலேசிக்கையில், வண்டிக்காரன் வண்டியைச் சகாரனிருக்குந் தோட்டத்திற் கொணர்ந்தான். சகாரன் வண்டியிலேறிப்பார்த்து, அதிலிருந்த வசந்தசேனையை அரக்கியல்லது கள்வனென்றுகருதிப் பயந்து, வண்டியில் நின்றிழிந்து விடனைப் பார்வையிடும்படி ஏவினன்.

அவ்வண்ணம் விடன்பார்த்து வசந்தசேனை யென்று தெளிந்து, சகாரனைக்கருதி யவள் வந்திருக்கிறாளாகுமென எண்ணி, அவளைக்கேட்க, அவள் வண்டி மாறுதலால் அங்ஙனம் வந்ததாகக் கூறி, விடனிடம் அடைக்கலம் புகுந்தாள். விடன் சகாரனிடத்தில் இராட்சசி யிருக்கிறாளென்றுரைத்துப், பலவாறாக நீதியை கூறிக் கடைசியில் வசந்தசேனை உன்னை யுத்தேசித்து வந்திருக்கின்றனளென்றான். அதைக்கேட்ட சகாரன், தன்மனோரதம் அன்று நிறைவேறிற்றென்று களிப்படைந்து, வசந்தசேனையிடஞ் சென்று காதல்வார்த்தை கழறி, யவள் காலிற்பணிந்தனன்; அவன் விழுந்ததை மதியாது அவள் அவனைநிராகரித்துக் காலாலுதைத்துத் தள்ளினள். அதற்குமேற் சகாரன் றணியாச்சினமுற்றவனாகி, சகடத்திலிருந்து வசந்தசேனையை இறங்கச்செய்து; விடனைப்பார்த்து "உனக்குத் தக்க பரிசளிக்கிறேன், வசந்தசேனையை வதை" என்றான். விடன் பலபல நியாயமுகத்தாற் பாவமான செய்கைக்குத் தான்றுணியாமையைச் சாற்றினன். அவ்விதமே சகாரன் சேடனையும் பார்த்துச் சொல்ல, அவனுங்கொல்லத்துணியாது மறுக்க, அவனைத்துரத்திவிட்டு, வசந்தசேனையைத் தானேகொல்ல தலைப்படும்பொழுது, விடன் தடுத்தனன். அவளையச்சப்படுத்தினதேயன்றிக் கொல்லுகிறதில்லை என விடனுக்கு உறுதிமொழிகூறி, ஓடிப்போன சேடனையழைத்துவரும்படி விடனை வெளியிற்போக்கிச், சாருதத்தனையும் வசந்தசேனையையும் நிந்தித்து, அவளைத்தன் பலங்கொண்டமட்டும் அடித்தனன்; அவள் சேட்டையற்றுத் தரையில் வீழ்ந்தனள்; அவள் மரித்துப்போயினளென்றுமகிழ்ந்து வேறு ஒரு இடத்தில் ஒளித்திருந்தனன். அப்பாற் சேடனோடு திரும்பிவந்த விடன், வசந்தசேனை வதையுண்டாளென தெரிந்தவனாகி, யவளைப்பற்றிப் புலம்பினன். இந்தப்பழியைத் தன்றலையிற் சுமத்தக்கருதிய சகாரனை விடன்வைது, வாளால் வெட்டிவிடுவதாக அச்சங்காட்டி, இனியவனுடன் பழகுதல் பாதகம் விளைக்குமெனத்தெளிந்து, ஆரியசர்விலகன், சந்தனகன், இவர்களிருக்குமிடந் தேடிச்சென்றான். சேடன் இத்தீயசெய்கையை வெளியிடுவானெனச் சகாரன் கருதி, அவனைத்தன்னுடைய உபரிகையில் விலங்கிட்டிருத்தி, வசந்தசேனையின் றேகத்தை, காய்ந்தஇலைச்சருகுகளால் மூடிவிட்டுச் "சாருதத்தன் வசந்தசேனையை வதைத்தனன்" என்று நியாயசபையிற் பிரியாதுசெய்கிறேன் எனச்சொல்லிப்போயினன். சமணகசந்நியாசி மறுபடியுஞ் சகாரன் றோட்டத்திற்புகுந்து, குளத்திற்றனது காஷாயத்தைத் தோய்த்து, வசந்தசேனை மூடப்பட்டிருந்த சருகுக்குவியலின் மீது காஷயத்தை விரித்துக் காயவைத்துப் பார்த்திருக்கையில், காவிவஸ்திரம் மேலுங்கீழுஞ் சலிப்பதைப் பார்த்து, மூச்சு விடுதல் போலத் தோற்றமுண்டாகி யோசிக்கும்பொழுது, மேலெழுந்த வசந்தசேனையின் கையைக்கண்டு,

ஞாபகமுற்றுச் சலத்தைத் தெளித்து, வசந்தசேனையைக்கிளப்பிய பின் னர், நிகழ்ந்தவைகளை யறிந்து, தனக்கு அவள் செய்த உபகாரத்தை யுன்னி " உபாஸிகையே ! களைப்புத்தீர்ந்த பிறகு உன் வீட்டுக்குப் போக லாம் ; அதுவரை யெனது புண்ணிய சகோதரி அகத்திலிரு " எனவுரை த்து, வசந்தசேனையை யழைத்துப்போய்ப் புத்தோபாஸிகை வீட்டிலிரு த்துகின்றனன்.

ஒன்பதாவதங்கம்.—சோதனகன் பிரவேசித்து, நீதிச்சபையை ஒழு ங்குப்படுத்திய பின்னர், சிரேஷ்டி காயஸ்தர்களுடன் நியாயாதிபதி உத் தியோக காரியமாகப் பீடத்தில் வீற்றிருந்தனர். அலங்காரவேடம்பூ ண்டு, சகாரன் நியாயத்தலத்தை யடைந்து, தான் வியவகாரார்த்தமாய் வந்திருப்பதாக, நீதித்தலைவருக்குச் சமாசாரமனுப்புகிறான். அதைக்கே ட்ட நீதித்தலைவர், அவன் வியவகாரம் அளவற்ற ஆபத்தை யாக்குமென அறிந்து, அன்று அவன் வழக்கு விசாரிக்கப்படமாட்டாதென்று விடை யளிக்கின்றனர். சகாரன் கோபங்கொண்டு " என் சகோதரி கணவனு கிய அரசனுக்குச்சொல்லி, இந்த நீதித்தலைவனை நீக்கி, வேறொருவனை நியமிக்கும்படி செய்கிறேன் " எனவுரைத்ததைக் கேள்வியுற்ற நியாயா திபதி, இந்த மூர்க்கன் மொழிகிற வண்ணம் நடப்பினும் நடக்குமெனக் கலங்கிச், சகாரனை யழைத்துவரச செய்து, அவன் வாதத்தைத் சொல்லு ம்படியுரைத்தனர். சகாரன் மகிழ்ந்து, நீதித்தலைவரை நோக்கிப், புஷ் பகரண்டகமென்னும் பழுந்தோட்டத்தில், அற்பப்பொருளாசையாற் சாருதத்தன் வசந்தசேனையைக் கொலைபுரிந்தான், என்று எழுதிவைத் தான். நியாயாதிபதி பிற்பாடு சாருதத்தனையும் விதூஷகனையும் விசாரித்துப், பிரத்தியட்ச சாட்சியமில்லாமல் விஷயச்சார்பு சாட்சிய த்தை நம்பிச சாருதத்தனைக் குற்றவாளியெனறு தீர்மானித்து அரசனு க்கு அறிவுறுத்த, அரசன் பாலகன், சாருதத்தனைக் கழுவேற்றும்படிக் கட்டளையிட்டனன். நியாயாதிபதிச் சாருதத்தனைச் சண்டாளர் வசம் விடுமென உத்தரவளித்துப் போயினன்.

பத்தாவதங்கம்.—சண்டாளர் சாருதத்தன் கழுத்தில் அலரிப்பூமா லையை மாட்டி, அவனைக்கொலைக்களத்திற்கு அழைத்துப்போய்க், கொ லையைத் தம்பட்டமடித்துப் பிரசித்தப் படுத்துகின்றனர். சகாரனுல் விலங்கு பூட்டப்பெற்று, மேன்மாடியிற் சிறையிடப்பட்டிருந்த, ஸ்தாவ ரக சேடன், பிரசித்தமொழிகளைச் செவியுற்று, சகாரன் கொலைபுரியச், சாருதத்தன் கொலைக்குள்ளாதல் தெய்வ சம்மதமல்ல வெனக் கருதி, உண்மையை உலகத்தார்க் குரைத்து, உத்தம சாருதத்தனை விடுவிக்க எண்ணித் தனக்கு மரணமுண்டாகாவிடில், சாருதத்தன் றப்புவானெ ன்று மாடியிலிருந்து புரண்டுருண்டு கீழே பூமியில் விழுந்தனன். அங் ஙனம் விழுந்ததிற் றெய்வச்செயலாற் கால்விலங்கு முறிந்து நீங்கிற்று.

சிறிதேனுந் தேகர்பாயமடையாத சேடன், மிக்கவிரைவுடன் கொலைக்களத்தைக்குறுகி "சாருதத்தனால் வசந்தசேனை கொல்லப்படவில்லை; சகாரனாற் கொலையுண்டாள்" என்று உரத்தசத்தத்தோடுரைத்தான். சண்டாளர் மயங்கினர். சகாரன்கேட்டு "இந்தப்பயல் தங்கசாலையிற் றங்கந்திருடினன்; அதற்காக நான் விலங்கிட்டேன்; அந்தப்பகைமையால் இவ்விதப்பொய் புகலுகிறான்" என்று வற்புறுத்தி யுரைத்துச், சண்டாளர் மனத்தைத்திருப்பிச், சாருதத்தனை உடனே வதைபுரியும்படி வேண்டினான். சாருதத்தன் றன்னுடைய மகனைப்பார்க்க விரும்பினான். மைத்திரேயன் கொணர்ந்து விடுத்த உரோகசேனனைச் சாருதத்தன் கண்ணீர்சொரியத்தழுவி முத்தமிட்டுக், குழந்தைக்குக் கொடுக்க வேறொன்று மில்லாமற், றனது பூணூலைக்கழற்றி மைந்தனுக்களித்துத் தன்குழந்தையைச் சாவதானமாய்க் காப்பாற்றும்படி மைத்திரேயனைப்பிரார்த்தித்தனன். அப்பால், சண்டாளர் சாருதத்தனைக் கொல்ல எத்தனித்துச் சாருதத்தனை யழைக்கையில், சாருதத்தன் சங்கடத்தைக் கேட்ட சமணக சந்நியாசியும் வசந்தசேனையும் பெருந்துயரமுற்றுக்கொலைக்களத்தை யடைந்தனர். வசந்தசேனை சாருதத்தனைத் தழுவினள். முதலில் சாருதத்தன் கனவென வெண்ணிப் பிற்பாடு தெளிவுற்று வசந்தசேனையைத் தழுவினான். அப்போது வசந்தசேனை சகாரனுடைய கொடிய செய்கைகளை வெளியிடுகின்றனள். இத்தறுவாயில் சித்தர்மொழியின் பிரகாரம், இடையப்பையன் ஆரியகன் அரசன்பாலகனைக் கொன்று இராசசியபட்டாபிஷேக மடைந்து, ஆரியசாருதத்தனை விடுதலைசெய்யும்படி கட்டளையிட்டனன். அரசனுடைய அந்தஆக்ஞாபத்திரத்தைப் பெற்ற சர்விலகன், கொலைக்களத்திற் புகுந்து, உலகம் உவப்பச் சாருதத்தனை விடுவிக்கின்றனன். தீவளர்த்து அதிற்குதித்து உயிரைத்துறக்க நினைத்து, அக்கினியருகிற் சென்றிருந்த மனைவி தூதையைச் சாருதத்தன் றக்க காலத்திற் சென்று தடுக்கின்றனன். பிறகு ஓடிப்போன சகாரனைக்கொல்லும் பொருட்டுச் சேவகர் பிடித்துக்கொண்டு வருகின்றனர். சகாரன் நடுநடுங்கிச் சாருதத்தன் சரணங்களில் அடைக்கலம் புகுகிறான். சாருதத்தன் அந்தப்பாவிக்கு அபயமளித்து, அவனைக்கொல்லாது அவனிஷ்டப்படி சுவேச்சையாக விருக்கும்படிவிட்டுத், தன்னிடம் அன்புபாராட்டிய சண்டாளர்கட்குஞ் சேடனுக்குஞ் சந்தனகனுக்குஞ் சம்வாஹகனுக்குந் தக்கபரிசளித்து, அப்போது அரசன் ஆரியகனாற் றனக்குத் தானஞ்செய்யப்பட்ட இராஜ்யத்தையும் மறுத்து, தூதை, குழந்தை, வசந்தசேனை, மைத்திரேயன், இரதனிகை இவர்களுடன் களிப்புற்று வீட்டையடைந்து வாழ்ந்தனன்.

# இந்நாடக பாத்திரங்களுடைய
# அபிதாந விளக்கம்.

---

சூத்திரதாரன்.

நடி.

| | |
|---|---|
| விதூஷகன் ... ... | இவன்பெயர் மைத்திரேயன், சாருதத்தனுடைய நண்பன். |
| சாருதத்தன் ... ... | கதாநாயகன். |
| வசந்தசேனை ... ... | (தாசி) கதாநாயகி. |
| விடன் ... ... ... | வசந்தசேனையின் றோழன். |
| மதனிகா ... ... ... | வசந்தசேனையின் சேடி. |
| † சகாரன் ... ... ... | இவன் அரசன் பாலகனுடைய மச்சான், இவனுடைய இயற்பெயர் சமஸ்தானகன். |
| விடன் ... ... ... | சகாரனுடைய தோழன். |
| ஸ்தாவரகன் ... ... | சகாரனுடைய சேடன். |
| வர்த்தமானகன் ... ... | சாருதத்தனுடைய சேடன். |
| கும்பீலகன் ... ... | வசந்தசேனையின் சேடன். |
| பல்லவகன், பரபிருதிகா, மாதவிகா ... ... | இவர்கள் வசந்தசேனையின் ஏவலாளர், காட்சியில் வருதலில்லை. |
| சேடி ... ... ... | வசந்தசேனையுடைய தாயின் வேலைக்காரி. |
| சம்வாஹகன் ... ... | சமணசந்நியாசி, சூதாடியாகவிருந்தவன். |
| மாதுரன் ... ... ... | தொழிற்பெயர் சபிகன், சூதாடிகளின் றலைவன். |
| தியூதகரன் ... ... | மற்றொரு சூதாடி. |
| தர்த்துரகன் ... ... | பழைய சூதாடி. |
| கர்ணபூரகன் ... ... | வசந்தசேனையின் மற்றொருசேடன். |
| ரைபிலன் ... ... | பாடகன் (காட்சியில் வருதலில்லை). |
| சர்விலகன் ... ... | திருடன், ஆரியகனுடைய நண்பன். |
| தூதை ... ... ... | சாருதத்தன் மனைவி. |
| உரோஹசேனன் ... ... | சாருதத்தன் மகன். |
| இரதநிகா ... ... | தூதையின் சேடி. |
| பாலகன் ... ... ... | அரசன். |
| ஆரியகன் ... ... ... | இடையவாலிபன், சித்தர் மொழிப்படி அரசனானவன். |
| பந்துலர் ... ... ... | வேசை மைந்தர். |

| | |
|---|---|
| சந்தனகன் ... ... | சேநாபதி. |
| வீரகன் ... ... ... | ஷை. |
| சோதனகன் ... ... | தலைமைச்சேவகன். |
| நியாயாதிபதி. | |
| சிரேஷ்டி ... ... | நீதிச்சபையில் நியாயாதிபதிக்குஉதவியதி [பதி. |
| காயஸ்தன் ... ... | நீதிச்சபைலேககன். |
| தாய்க்கிழவி ... ... | வசந்தசேனையின்றாய். |
| ஆகிந்தன் ... ... | சண்டாளன். |
| கோகன் ... ... | ஷை. |

---

† சகாரன் இலக்கணம்.

ஒருபொருள் கருதி மற்றொன் றுரைத்தலும்
பயனில் சொற்களைச் செயிருறச் செப்பலு
மொருசொல் வினையே பலகாற் பயிலலு
முறவினரலாரை யுறவு படுத்தலும்
பொருந்தா வுவமை புணர்த்திப் புகறலு
முலக நீதி மலைவுற வழங்கலுஞ்
சகாரன் றகையெனச் சாற்றினர் புலவர்—என்பதுசூத்திரம்.

---

## மொழிபெயர்ப்புக் காப்புச்செய்யுள்.

பூமகள்பூமகள் பொன்மலரங்கைகள் பொற்புறநீவு பதம்
போதமருண்மறை யாயிரமுந்துதி புகலவிளங்கு பதந்
தாமதராசத மற்றவர்நெஞ்சத் தளிருடிமேயபதந்
தம்மையடுத்தவ ரிம்மையொடம்மைகள் சாரவழங்கு பதங்
காமுறுகோவிய ரேமுறநிசச மவர்க்கரு ேயபதங்
காசினிமுற்று மளந்ததிருப்பதங் கங்கையளித்த பதந்
தேமலரந்தணனுதி விசும்பினர் தேடிவணங்கு பதஞ்
செங்கமலப்பத மெங்கள்குலப்பகை தீர்த்திருமால்பதமே.

ஸ்ரீராமஜயம்.

# மிருச்சகடிகம்.

## மண்வண்டி.

### முதலங்கம்.

நாந்தி.

அரவுகள்சூழ்ந்த † பரியங்கக்கிரந்தி
யமர்ந்துபி னைம்புலனடக்கித்
திரம்பெறு ப்ரத்யாகாரத்தைமருவிச்
சிறந்ததா ரணையினிற்பொருந்தி
மரபுறுசகல ஞானமுமழிந்து
மலர்க்கணைக்ககன்று மாச்சமாதி
பரமுறவிழைக்கும் பசுபதியென்றும்
பரிந்துமைக்காத் தளிக்குகவே. (1)

வேறு.

கொண்டலை மின்னற் கொடிவளைத்ததுபோ
லண்டர்கள் பணிந்தேத் தம்பிகைகையால்
வண்டுற வளைத்த வரன்றிரு நீல
கண்டமதும்மைக் ‡ காத்தளிக்கும்மே. (2)

(நாந்தி முடிவிற் சூத்திரதாரன் பிரவேசம்)

சூத்திர.—இந்தச் சபையார்களுடைய குதூகலத்தைப் போக்காநின்ற பரிசிரமம் போதும்; நான் ஆரியர்களை வணங்கிக் கூறுதல் என்னவெனில: நாங்கள் மிருச்சகடிக மென்

† பர்யங்கக்கிரந்தி = யோகாசனங்களிலொன்று மேல் அங்கவஸ்திரத்தால், இடையையும் முழந்தாள்களையுங் கட்டி வீற்றிருத்தல்.

‡ அளிக்கும்மே என்றதில் மகரம் விரித்தல் "அந்தணர் வேள்வியோர்க்கும்மே யொருமுகம்" என்றதுபோல; திருமுருகாற்றுப்படை வரி 96.

னும் ஒரு † பிரகரணத்தை, நாடகரூபமாக நடித்துக் காட்டச் சித்தமாகி இருக்கின்றோம் என்பதே.

இந்த மிருச்சகடிகஞ் செய்த கவி யார் என்னீரேல் :—

தந்திராச னிகர்நடையுஞ்
சகோரக்கண்ணுங் கலைநிறைந்த
விந்துமுகமு மெழிலுருவு
மிணையில்கீர்த்தியீடுற்றோன்
புந்திமிகுத்த வரசர்பிரான்
புகலுஞ்சூத்திர கன்னெனுமோர்
சந்தக்கவிஞ னுள னிருக்கு
சாமவேதந் தமில்வல்லான். (3)

கங்கைச்சடையோன் றண்ணருளாற்
கணிதம் ‡ வைசிகீ கலையு
மங்கக்கரியைப் பழக்குதலு
மறிந்தோனந்த காரமொரீஇத்
துங்கஞானக் கண்பொருந்திச்
சுதனைப்புவியா ளரசாக்கி
யங்காச்செல்வ மரீஇயசுவ
மேதமகத்தை மகிழ்ந்தாற்றி. (4)

சதவாண்டோடு தசதினமித்
தரணியாண்டு தழல்புகுந்தோன்
§ கதநவேகமுளான் சோம்பு
காணுன்மறைகள் கற்றுணர்ந்தோ

---

† பிரகரணம் = பத்துவித நாடகபேதங்களிலொன்று.

‡ வைசிகீகலை = இதன்பொருள் நன்குபுலப்படவில்லை; முதல்நூலின் வியாக்கியானத்தால் ஒருசாமநூல் என்று விளங்குகிறது; அது பொருந்தாதுபோலும். அங்கிரிவேசன் என்னும் அரசனாலியற்றப்பட்டுள்ள அறுபத்துநான்கு கலைஞானத்தை விரித்துக்கூறும் ஒரு நூலெனக்கொள்ளலாம். அன்றியும் காமசூத்திரத்தின் ஒரு பாகத்திற்கு வைசிகப்பிரகரணமென்று பெயரிட்டிருத்தலையும் நோக்குக.

§ கதநம் = போர்.

னுதவுதவத்தான் † பகைக்கரியை
　　யொழிக்கும்வாகு வலியானல்
விதமேயாற்றுஞ் சூத்திரக
　　னெனும்பூபால னிருந்தனனால். (5)

அவனியற்றிய இந்த நூலில் :—

அவந்திநகர்வா ‡ழந்தணன்மா
　　வழகன்சாரு தத்தனென்போன்
அவர்ந்தமிடியா னவன்குணத்திற்
　　காதலகூர்ந்தாள் கணிகைமிகச்
சிவந்தமெய்யா டனிவசந்த
　　சேனையென்பாடிகழ் § வசந்த
முவந்தகாந்தி யெனவிளங்கு
　　மொளியின்மிகுத்தா ளுண்டொருத்தி. (6)

இந்தவிருவர் சூதவிழா
　　வினையுநீதி யநீதியையுஞ்
சிந்தும்புகழார் கீழ்மக்கள்
　　செயலுமூழின் றிறத்தினையு
முந்துமிந்த நூலதனின்
　　முதியோருவப்ப மொழிந்தனனாற்
சந்தமறைகள் கற்றுணர்ந்த
　　தரணிபாலன் சூத்ரகனே. (7)

---

† பகைக்கரி = சத்துருவாகியயானை அல்லது சத்துருவினுடைய யானை

‡ அந்தணன் = பார்ப்பான், அழகிய தட்பமாகிய குணமுடையார் அந்தணர் என உரையிட்டனர் பரிமேலழகர் "அந்தணரென்போ ரறவோர் மற்றெவ்வுயிர்க்கும்" திருவள்ளுவர், நீத்தார்பெருமை 10.—"அந்தத்தை அணவுவார் அந்தணர், என்றது வேதாந்தத்தையேநோக்குவார் என்றவாறு" என நச்சினார்க்கினியர் உரையிட்டனர். "அந்தணர் வேள்வியோர்க்கும்மேயொரு முகம்" திருமுருகாற்றுப்படை வரி 96.

§ வசந்தருதுவின் சோபை போன்றவள் வசந்தசேனையென முதல் நூலார் சொற்றதற்கொப்ப "வசந்தம் உவந்தகாந்தியென விளங்கு மொளியின் மிகுத்தாள்" என்றும்.

(சிறிது தூரஞ்சென்றுநோக்கி)

அம்மம்ம! நமது சங்கீதசாலை சூனியமாக விருக்கின்றதே! பாடகர்கள் எங்கேபோனார்கள்! [என்று ஆலோசித்து] ஆமாம்! தெரிந்தது:—

மக்களில் மனையும்பாழே மனக்கினி தாற்றுநண்பன்
றுக்கிலா விடமும்பாழே புந்தியில் புல்லனுக்குத்
திக்கெலாம் பாழேநாளுந் தரித்திரத் தீயுற்றார்க்கே
யிக்குவ லயத்திலெல்லாம் பாழென்றே யியம்புவாரே.

இதுகாறும் யான் பாடினேன். இச்சங்கீதம் வெகுநேரம் பாடினேனாதலால், கோடைகாலத்திற் கொடிய வெய்யிலினாற் காய்ந்த தாமரைவிதைபோல, ஆடிக்கொண்டிருக்கிற என்னுடைய இருகண்களும் பசியினால் கடகடவென்று சுழலுகின்றன; இப்போது எனது மனைவியைக் கூவிக்காலைநேரத்தில் உண்ணத்தக்கது ஏதேனு மிருக்கிறதா இல்லையா என்று கேட்கிறேன்; கஷ்டம் கஷ்டம்! நீண்டகாலம் பாடினதாற் காய்ந்து போன தாமரைத்தண்டுபோல, என்தேகம் வாடிப்போயிற்றே: ஆகையால் வீட்டிற்குட்சென்று, எனது மனையாளால் ஏதேனும் ஆயத்தஞ் செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிந்துகொள்ளுவேன். இது என்னுடைய வீடு. இதற்குள் இப்போது பிரவேசிப்பேன்—அம்மம்ம! என்னே? எனது வீட்டில் வேறு ஏற்பாடு நடக்கிறதுபோலத் தோன்றுகிறதே. தெருவெல்லாம் நீளமாய்க் கழுநீரோடியிராநின்றது; வெண்கலக்கடாரத்தைப் (தூக்கமுடியாமையினால்) பூமியிலிழுத்திருப்பதால், அதினுடைய வர்ணம் பூமியிற்படிந்திருக்கின்றதானது பூமிக்குத் திலதமிட்டிருப்பது போற் கண்கட்குத் தோற்றுகிறது. சமையற் பதார்த்தங்களிலிருந்து வெளிப்படுகிற சிறந்த மணமானது, என்னுடைய பசியை அதிகப்படுத்தாநின்றது; என்னுடைய முன்னோர்கள் தேடிவைத்த புதையல் அகப்பட்டதா என்ன! அல்லது எனக்குத்தான் பசியினால் உலக முழுதும் அன்னமயமாகத்தோன்றுகிறதோ! எனது வீட்டிற் பழைய சோற்றிற்கும் இடமில்லையே; பிராணனோ பசியினால் வெளிப்படுகிறது. இவ்விடத்தி

லோ எல்லாம் புது ஏற்பாடாக விருக்கின்றது; ஒருத்தி வாஸனைப் பொடிகள் செய்துகொண்டிருக்கின்றனள்; மற்றொருத்தி பூத்தொடுக்கின்றனள்; இது எப்படிச் சம்பாவிதம்; இருக்கட்டும். எனது பெண்டாட்டியை அழைத்து உண்மையைத் தெரிந்துகொள்ளுவேன். ஆரியே, இங்குவா.

நடி.—[பிரவேசித்து] ஆரியரே, இதோ வந்தேன்.

சூத்திர.—ஆரியே, உன்வருகை நல்லவரத்தாகட்டும்.

நடி.—ஆரியரே, யான் என்ன †நியோகத்தைச் செய்யவேண்டுமோ, அதைக் கட்டளையிடுங்கள்.

சூத்திர.—ஆரியே, யான் நீண்ட காலம் பாடினதாற் காய்ந்த தாமரைத் தண்டுபோல, என் உடம்பு வாடிப்போயிற்று. நமது வீட்டில் உண்ணத்தக்கது ஏதாவதிருக்கிறதா இல்லையா?

நடி.—ஆரிய, எல்லாமிருக்கின்றன.

சூத்திர.—என்னென்ன இருக்கின்றன?

நடி.—எவையெனில்—சர்க்கரைப் பொங்கல், நெய், தயிர், அரிசி, மற்றும் புசிக்கத்தக்க எல்லாம் இருக்கின்றன. இவ்விதமாகத் தேவர்கள் உம்மை ஆசீர்வதிக்கக்கடவர்கள்.

சூத்திர.—இவைகள் யாவும் உண்மையில் நம்முடைய கிரகத்திலிருக்கின்றனவா? அல்லது பரிஹாஸஞ் செய்கின்றனையா?

நடி.—[மனத்திற்குள்] பரிஹாஸம் பண்ணுகிறேன். [வெளிப்படையாய்] ஆரிய, இவைகளெல்லாங் கடையிலிருக்கின்றன.

சூத்திர.—[மிக்ககோபத்துடன்] அடி அநாரியே! இவ்விதமாக உனது ஆசை அழியக்கடவது. நீ நாசமாய்ப்போக! இங்ஙனம் என்னை உயரத்தூக்கித் திடீரென்று கீழே தள்ளினையே!

† நியோகம்=பணி, காரியம்.

நடி.—ஆரிய ! பொறுத்தருளுக பொறுத்தருளுக ! வேடிக்கையாகச்சொன்னேன்.

சூத்திர.—அங்ஙனமாயின் எல்லாம் புதிய ஏற்பாடாக விருக்கின்றது ; ஒருத்தி வாஸனைக் கலபபுப்பொடி செய்கின்றனள் ; வேறொருத்தி பூத்தொடுக்கின்றனள் ; பூமியோ பஞ்சவர்ணப் புஷ்பபலிகளால் விளங்காநின்றது.

நடி.—ஆரியரே ! இன்று ஒரு உபவாஸம் எடுத்திருக்கிறேன்.

சூத்திர.—அவ்வுபவாஸத்தின் பெயர் ?

நடி.—அதின்பெயர் “ அபிரூபபதி.”

சூத்திர.—ஆரியே ! இவ்வுலகத்தைப்பற்றிய உபவாஸமா ? அன்றேல் பரலோகத்தைப்பற்றிய உபவாஸமா ?

நடி.—ஆரிய ! பரலோகத்தைப்பற்றியதே !

சூத்திர.—[மிகுந்த கோபத்துடன்] ஆரியர்களே ! பாருங்கள், பாருங்கள் ! என்னுடைய அன்னத்தைத் அடைத்துவிட்டுப், பரலோகத்தில் வேறு நாயகனையடையப் பார்க்கிறாள் !

நடி.—ஆரிய ! கோவஞ்செய்யாதேயும் ! கோவித்துக் கொள்ளாதீர் ! தாமே மறுசென்மத்திலும் எனக்குப் புருஷனாக வேண்டுமென்பது எனது விரதம.

சூத்திர.—யாரால் இந்த உபவாஸம் உனக்கு உபதேசிக்கப்பட்டது ?

நடி.—தங்களுடைய பிரிய நண்பனான சூர்ணவிரதனால்.

சூத்திர.—[கோபத்துடன்] ஆ ! ஆ ! தாஸி மகனான சூர்ணவிரதனே ! எப்போது நூதனப் பெண்ணின் றலையிற் பூவணிவதுபோல, கோபங்கொண்ட பாலகனென்ற அரசனால, உன்சிரத்திற் பூச்சூட்டப் பெற்று உன்சிரச்சேத மாதலை நான் பார்ப்பேன் !

நடி.—ஆரிய! கோபம் வேண்டாம்! தங்கள் நிமித்தமாகவே இந்தப்பரலோக உபவாஸங்கொண்டேன் [என்று காலில் விழுகிறாள்].

சூத்திர.—ஆரியே! எழுந்திரு இந்தவிரதம் யாரால் முடிவடைய வேண்டும்?

நடி.—† உபநிமந்திரணம் செய்யப்பட்டிருக்கிற நம்மையொத்த பிராமணனால்.

சூத்திர.—அப்படியானால் நீபோ! நமக்குத்தகுதியான அந்தணனைப் பார்த்து அழைத்து வருகிறேன்.

நடி.—தாங்கள் கட்டளையிடுகிறபடி [என்று போய்விடுகிறாள்].

சூத்திர.—[கொஞ்சதூரஞ்சென்று] ஆ! ஆ! மிக நிறைவுற்ற இந்த உஜ்ஜயினி பட்டணத்தில் நமக்குத் தகுதியான ஒரு பிராமணனை எவ்விதங் கண்டுபிடிக்கிறது! [பார்த்து] அதோ சாருதத்தனுடைய சிநேகிதன், மைத்திரேயன் வருகிறார், இருக்கட்டும்; அவரைக் கேட்கிறேன். ஆரிய! மைத்திரேய! இன்று எனது கிரஹத்தில் போஜநஞ் செய்வதற்குத் தாங்கள் வரவேண்டும். [திரைக்குள்] ஓய்! நீர் வேறு பிராமணனைத் தேடிக்கொள்ளும். நான் இப்போது வேலையாய்ப்போகிறேன்.

சூத்திர.—ஆரிய! நல்ல சாப்பாடு! நீர் தனித்துத் திருப்தியாய் உண்ணலாம்; தட்சணையுங் கிடைக்கும். [மறுபடியுந் திரைக்குள்] ஓய்! முதலில் நான் வரமாட்டேனென்று சொல்லிவிட்டேனே; என்னை நிர்ப்பந்தமாயடிக்கடி விரட்டுகிறீரே.

சூத்திர.—இவர் வரமாட்டேனென்று சொல்லிவிட்டார். இருக்கட்டும் வேறு பிராமணனைக் கூப்பிடுகிறேன். [என்று போய்விட்டான்.

ஆமுகம் முற்றிற்று.

---

† உபநிமந்திரணம் = மரியாதையாக அழைத்தல்.

[மைத்திரேயன் பட்டுச்சவுக்கத்துடன் பிரவேசிக்கிறான்]

மைத்திரே.—["வேறு பிராமணனைக் கூப்பிடு" என்று சொல்லிக்கொண்டு] அல்லது மைத்திரேயனாகிய நான், அன்னியர்கள் கூப்பிடுவார்களோ என்று எதிர்பார்க்கவேண்டியவனாக ஆகிவிட்டேன். ஆ! விதியே! என்னைத் துரும்பாக்கினையே! அத்தன்மையுற்றயான், மஹான் சாருதத்தனுடைய செல்வப் பெருக்கில், இரவும் பகலும் மிகுந்த பிரயாஸத்துடன் சமைக்கப்பட்ட நிறைமணமுற்ற மோதகங்கள் ஊட்டப்பட்டு, வீட்டின் மூன்றாங் கட்டில் இருந்து, சித்திரமெழுதுபவன் பலபல வர்ணக் கிண்ணங்களில் † தூரியத்தைத் தோய்த்தெடுப்பதுபோல் பலவித பதார்த்தங்களையும் விரல்களால் தொட்டுத்தள்ளிவிட்டுக், கோயிற்காளைபோல இருந்த நான், இப்பொழுது சாருதத்தனுடைய தரித்திர தசையில் அங்கு மிங்குந் திரிந்து, வளர்க்கப்படுகிற புறாவைப் போலப், படுக்கையின் நிமித்தம் இங்கு வருகிறேன். இந்தப்பட்டுச் சவுக்கம் சாதிப்பூ மணம் ஊட்டப்பட்டுத் தேவ பூசையை முடித்த சாருதத்தனுக்கு அவருடைய நண்பன் சூரணவிரதனால் என்னிடம் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகையால் ஆரிய சாருதத்தனைப்போய்ப் பார்க்கிறேன். [கொஞ்சதூரஞ்சென்று பார்த்து] சாருதத்தன் தேவ பூசையை முடித்துக் கிரகதேவதைகளுக்கு வேண்டிய பலியைக் கையில் எடுத்துக்கொண்டு இதோ வருகிறான்.

(பிறகு மேற்சொல்லியபடி சாருதத்தனும் இரதனிகையும் பிரவேசிக்கிறார்கள்.)

சாருதத்தன்.—[மேலே பார்த்துத் துக்கத்துடன் பெருமூச்சுவிட்டுக் கொண்டு]

† தூரியம் = சித்திரம் எழுதுகிறகோல்.

முன்னைநாட் டேவர்க்காக
முற்றத்திற் பலிகள் வைத்தா
லன்னமுங் † குருகுந்தின்ற
வன்னமுற் றத்திப்போழ்து
மன்னுபுன் மலிந்தவைக்கும்
பலிகளைப் புழுக்களாங்குத்
துன்னியே யுண்ணுகின்ற
சொல்லுமா றென்னேயென்னே ! (9)

(என்றுமெல்ல நடந்துபோய் உட்காருகிறன்.)

விதூஷ.—இதோ ஆரியசாருதத்தர். இப்போது அவர் அருகில் போகிறேன். [கிட்டப்போய்] உமக்கு க்ஷேமமுண்டாகுக ! தங்கள் வாழ்வு பெருகுக !

சாருத.—அட ! எக்காலத்திலும் மித்திரனுகிய மைத்திரேயர் வந்துவிட்டார். நண்ப ! உமது வரவு நல்வரவே. உட்காரும்.

விதூஷ.—உமது ஆக்ஞைப் பிரகாரம் [என்றுட்கார்ந்து] ஓ மித்திரா! உமது அன்பனை சூரணவிரதனுல் “ பூசை முடித்த சாருதத்தரிடங்கொடு ” என உரைக்கப்பட்டு, சாதிப்பூ மணமூட்டிய பட்டுச்சவுக்கம் என்னிடமனுப்பப்பட்டிருக்கிறது. [என்று பட்டைக்கொடுக்கின்றனன்.]

சாருத.—[வாங்கிக் கவலையுற்றேனுகின்றனன்.]

விதூஷ.—ஓய் ! ஆலோசனை பண்ணுகின்றீரே ! என்ன ?

சாருத.—சகாவே !

---

† குருகு = நாரை, வெண்ணாரை, யென்பாருமுளர் “ பருவமேகத்தினருகுறக் குருகினய் பறப்ப ” இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் கார்காலப் படலம். செய்யுள் 41, அன்றியுங் குருகு நாரையலலாது வேறொருசாதிப் பறவையென்று அடியில் வருஞ்செய்யுளாலறியக் கிடக்கின்றது “ தடஞ்சிறையன்னங் குருகொடு நாரைப் பார்ப்பினமோம்பு தண்மருதம் ” சீவகசிந்தாமணி மண்மகளிலம்பகம் 1.

† கருமையார்ந்த நல்லிருளினில் விளக்கது
காந்திசெய் தலையொப்பத்
‡ துரிதமாற்றிடுந் துயரினைத் துய்ப்பதாற்
சுகத்திறந் தெளிவாகுந்
திருவையுற்றவன் றரித்திரந் தாழ்வனேற்
சீவனோ டிருந்தாலு
மரணமுற்றவ னாகுமென்பது
§ மாண்டவர் மத மாதோ. (10)

விதூஷ.—ஸ்நேகிதரே! மரணம் தரித்திரம் என்னு மிரண்டில், எது நலமென்று உமக்குப் புலப்படுகிறது?

சாருத.—தோழ!

இறத்த லேயுமேற் சிறிது நோந்துய
ரெய்துதற் றிருநீங்கி
$ வறத்தலுற்றிடிற் சந்ததந்துயரமே
மலிந்துயிரினை வாட்டு
மிறத்தனல்குர வென்னுமிவ் விரண்டினி
லெதுநலமெனத் தேரி
னிறத்தலேமிகு நலமென வெண்ணுவெ
னின்மையன் றுயிர்த்தோழ! (11)

விதூஷ.—நண்பரே! துக்கித்தது போதும்! மித்திர ஜநங்கட்குக் கொடுத்தமையால் உமது செல்வங்குறைந்து போயிற்று.

---

† கருமை=பெருமை "கருவலித்தடக்கை வாளிற்காளையை வெளவினானே" சீவகசிந்தாமணி, மண்மகளிலம்பகம்=பக்கம் 168.

‡ துரிதமாற்றிடுந்துயர் = உடலுக்கு வருத்தத்தைச் செய்யும் மனக் கலக்கம் "துரிதம்" "துன்பம்" என்பன ஒருபொருட்கிளவிகள்! "துன்பம்" உடலை வருத்தும் பீழை. "துயரம்" மனத்தை வருத்தும் பீழை "துன்பமில்லைத் துயரில்லை யாமினி, நம்பனாகிய நன்மணி கண்டனார்" என்னுந் தேவாரத்தாலுணர்க. திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் திருவேட்களப்பதிகம் 5.

§ மாண்டவர் = பெரியார்.

$ வறத்தல் = காய்தல், வறுமைக்காகுபெயர்.

ஆயினுங் கலைகள் நிரம்பிய சந்திரன், தேவதைகளாலுண்ணப்பட்டுக், கலைகள் குறைவுபட்டிருக்குங்காலத்திலும் அழகாக விருத்தல்போலத், தரித்திரமும் உமக்கு மாண்டைக்கொடாநின்றது.

சாருத.—அன்ப! பொருளைப்பற்றி யான்றுயருறுகின்றேனோ! இல்லை! பாரும்.

† கறையடியின் கவுள்பெருகும் ‡ தானமற வீடிற்
§ கள்ளுண்கள் கபோலம்விட்டுக் கழலல்போல
நிறைசெல்வ மற்றவென்ற $ நிவேசநத்தை
நேயமுற்ற விருந்தினரே நீத்துச்சென்றார்
தறையிலவ ரவ்வாறு தணந்த தன்மை
தனைநினைக்குந் தொறுமென்னைத் தழலேயொப்ப
அறவருத்தா நின்றதெனி லகலாநண்ப!
அறைந்திடல்யான் வெறுளதோ அறிவாய் நீயே.

விதூஷ.—ஓ நண்பனே! இடையர்கள் கட்டிற் குளவி கொட்டும் இடத்தை விட்டு அது இல்லாத இடத்தில் மாடுகளைக் கொண்டுபோய் நிறுத்துவார்கள். அதுபோலப் பணமென்கிற அற்பப்பொருளானது, எங்கு அநுபவிக்கப்படவில்லையோ அந்த இடத்தையே அடைகிறது.

சாருத.—காதல!

திருவினையிழந்த தான்மநக்கவற்றி
சோர்கிலேன் சத்திய மாகக்
கருமமேலிட்டால் வாழ்வுதான்பெருகுங்
கவிழுமங்கதைத்தடுப் பவரார்

---

† கறையடி = யானை. கறை = உரல். உரற்போன்ற கால்களுடைமையின் கறையடியெனப்பட்டது, காரணப்பெயர், "தூமபிமாதங்கர்தூங்கல் தோல்கறை யடியெறும்ப" சூடாமணிநிகண்டு.

‡ தானம் = மதநீர்.

§ கள்ளுண் = வண்டு, மதுபம் என்றல்போல.

$ நிவேசநம் = வீடு.

ஒருவிய செல்வன் றன்னைநட்டோரு
முவர்த்து நீத்தேகிறு ரதுவே
எரிநிகராக என்றனைவாட்டா
நின்றதென் செய்குவென் இனியே (13)

மேலும்

தரித்திரமதனால் நாணமுண்டாகு
நாணத்தாற் றேசதுகுன்றும
விரி ஒளி குன்றா அவமதிவிளையும்
அவமதி வெறுப்பினைக் கூட்டும்
வருத்துமவ்வெறுப்பாற் சோகமாமதனால்
மதிகெடுமதிகெட நாசம்
பொருந்துமம்மம்ம!! தரித்திரமெல்லா
ஆபதப்புகலிடம் † போன்மே. (14)

விதூஷ.—தோழ, பொருளின் இழவைநோக்கிப் புலம்பினது போதும்.

சாருத.—புருடனுக்குத் தரித்திரமோ என்றால் :—

கவற்சிவாழிடமா மயலவர் வெறுப்பர்
கடும்பகை விளைத்திடு நட்பி
னவரிடங்கூச்ச முறவினர் மற்றோர்
விரோதியராவர் தன் மனைவி
அவமதியுறலாற் காட்டினிலேக
அருத்தியாம் புந்தியிவ் வறுமை
நவமுறு ‡ சோகத் தீயெரிக்காமே
நல்கிடுந்தாபமே நாளும். (15)

---

† போன்ம் = போலும் "செய்யு ளிறுதிப்போலி மொழிவயி, னகார மகார மீரொற்றாகும்" தொல்காப்பியம் எழுத்ததிகாரம், மொழிமரபு சூத்திரம்.

‡ சோகம் = கிலேசம் "சோகந் தீர்ப்பவளென்று சுமித்திரை, மேகந் தோய், னிக்கோயிலை மேவினன்" இராமாயணம் அயோத்தியா காண்டம் நகர்நீங்கு படலம் 29 ‡ சோகத்தீ = துக்காக்கினி.

ஆகையால் ஓ மித்திரா! கிராமதேவதைகட்குப் பூசை பூர்த்திசெய்தேன். நீர்சென்று நாலு சந்தி கூடுமிடத்தில் இந்தப் பலியைப் போட்டு வாரும்.

விதூஷ.—நான்போகமாட்டேன்.

சாருத.—யாது காரணத்தால்?

விதூஷ.—எவ்வளவு பூசனைபுரியினும் இந்தத் தேவதைகள் உமக்குக் கிருபை செய்தலில்லை; அவர்களை ஆராதித்தலாற் பிரயோசனம் என்னை?

சாருத.—நண்ப! அவ்விதமல்ல; கிரகஸ்தனுக்கு இது நித்திய விதியல்லவோ.

தவத்தினுன் மனத்தால் வாக்காற் றவாப்பலி கன்மத்தாலே
† சிவமுறப் பூசையேற்ற தெய்வத மெக்காலத்தும்
உவப்புறு மென்னினீயிங்கு சாவுதலெண்ணே நீசென்
றவமிலா ‡ மாத்ருகட்கே யரும்பலி யளித்தனன்றே. (16)

விதூஷ.—ஓய் நான்போகவே மாட்டேன்; வேறு யாரை யேனும் போகச் செய்யும்; பிராமணனாகவிருக்கிற எனக்கு எல்லாம் விபரீதமாகவிருக்கிறது; எப்படியென்றால்—கண்ணாடியிற்றோன்றும் பிரதிபிம்பத்தில் வலமிடமாயும் இடம் வலமாகவுங் கண்ணுக்குத் தோன்றுகின்றன—அதுபோல; அன்றியும் இந்தப் § பிரதோஷவேளையில் இராஜ வீதியில், தாஸி, விடன், சேடன், இராஜவல்லபர்கள், இவர்கள் திரிகின்றார்கள்; ஆகையால், தவளையை நோக்கிச் செல்லுங் காலசர்ப்பத்தின் முன்னர்ப்பெருச்சாளி யகப்பட்டால் நா

---

† சிவம்=மங்கலம் "சிவமுற முகூர்த்தம் வாரந்தினந்திதிகரணம் யோகம்." பாரதம் ஆதிபருவம் சம்பவச்சருக்கம் 67.

‡ மாத்ரு=பெண்டெய்வத்திற்காகு பெயர் வடமொழி.

§ பிரதோஷவேளை=பொழுது அத்தமிக்குமுன் மூன்றேமுக்கால் நாழிகை தொடங்கி அத்தமித்து மூன்றேமுக்கால் நாழிகை பரியந்தமுள்ளநேரம்.

கம்விடுமோ! அதுபோல: அவர்கள் என்னை வதைபுரிவார்கள்; நீர் இங்கு உட்கார்ந்து யாதுசெய்யப் போகின்றீர்?

சாரு.—இருக்கட்டும்; சற்றிரும், சமாதியை முடிக்கிறேன்.

(திரைக்குள்)

நில்லு! வஸந்தசேனை! நில்லு.

(பிறகு விடன், சேடன், சகாரன் இவர்களாற் பின்றொடரப்பட்டு வஸந்தசேனை பிரவேசம்.)

விடன்.—நில்லு வஸந்தசேனையே! நில்லு.

பயத்தினாலகன்ற † பந்துரமுடையை!
பண்ண ‡ டச்சால்புலாம் பதத்தின்
நயங்கெடவோடா நின்றனையச்சஞ்
சலிப்புளநயநத்தின் கடைநோக்
§ குயங்கினைவேடன் றொடர்தலினஞ்சி
யோடுறுபிணையென ஓகோ!
வயங்கெடவேகா நின்றனைவசந்த
சேனையேமதுரமாங்குயிலே! (17)

சகாரன்.—வஸந்தசேனையா! நில் நில்.

போகிறாய்த் தாண்டுகின்றாய்ப்
போந்தோடுகின்றாய் மீறி
யேகிறாய் $ வாலையென்மே
விரக்கம்வை சாகமாட்டாய்
வேகவெண் ணெருப்பிலிட்ட
¶ விடக்கினைப்போல என்றன்
ஆகமார் மனத்தைக்காமன்
ஐயையோ! எரிக்கின்றானே!! (18)

சேடன்.—ஆரியே! நிள்ளு நிள்ளு.

---

† பந்துரம் = அழகு. ‡ நடச்சால்பு = நடனத்தின்மாட்சி. § உயங்கல் = வருந்தல். $ வாலை = பாலா (வடசொல்) பதினாறு வயதுப் பெண். ¶ விடக்கு = ஊன்.

† மிகுசிற குள்ளமஞ்ஞை வேனிலில் வருந்தல்போலப்
புகுமெங்கள் பக்கம்விட்டுப் பொள்ளென வோடுகின்றாய்
தகுமென தையன்காட்டில் தாண்டுமோர் கோழிச்சேவல்
நிகரெனத் துள்ளியோடி வருகின்றாய் நில்லு நில்லு (19)

விடன்.—நில்லு வஸந்தசேனையே! நில்லு.

இளவாழை போலசைந்து சேதாம்பல் மொட்
டினைவாரி யிறைப்பதுபோ ‡ லிடங்கத்தாலே
ஒளிமிகுத்த மனோசிலையாங் குகையைமோதில்
உறுதூளி யெழும்புகின்ற தொப்பக்காற்றால்
§ நளியசையு முன்றானையோடு சேர்ந்த
நல்லாடை யுடனிங்குச் செலகின்றாய் நீ
களிபடைத்த $ கலாபமயிற் சாயற்றேனே
கனைகடற்போற் கண்வசந்த சேனைமானே !!

சகாரன்.—வஸந்தசேனையே! நில் நில் !!

எனக்குமதன் மன்மதனை ¶ அநங்கன்றன்னை
யிசைவித்துப பெருக்கியிராப் படுக்கைதன்னில்
எனக்குரிய துயிலொழித்தாய் கலக்கத்தாலே
யிருமச்சந் தனைக்கொண்டா யிரெட்டுத்தோள்
கனக்கொற்றத் திராவணன்கைப் பட்டகுந்தி
காந்தாரி சக்களத்தி யவளைப்போல
எனக்குவசத் தகப்பட்டாய் தள்ளாடிச்சென்
றேகின்றாய் தடுமாறிப் போகின்றாயே. (21)

† சிறகு=கலாபத்திற்காகுபெயர்.

‡ இடங்கம்=உளி. § நளி=பெருமை, "நாவாய் சூழ்ந்த நளி நீர்ப் படப்பை" பெரும்பாணாற்றுப்படை வரி 322. $ கலாபம்=மயிற்றோகை "மணிமயிற் கலாபம் பரப்பிப் பலவுடன்" சிறுபாணாற்றுப்படை வரி 15.

¶ அநங்கன்=காமன், உருவிலான் என்றபடி "அழுங்கச் சென்றணைதல் பேய்காள் அநங்கற்கு மாவதுண்டோ" சீவகசிந்தாமணி காந்தருவதத்தையாரிலம்பகம் செய்யுள் 260.

விடன்.—வஸந்தசேனையே !

என்பதத்தினுநின பதமவிரைவாக
விருமபுளினர சனைக்கண்ட
வன்பணியதுமபோ லோடுகினறனை நீ
† வரைநதிடத்திறம்படைத் திலனோ ?
நனபவனத்தைச் சடுதியிலவெலுவே
ஞயினுநல்லெழிற் கொமபே !
அனபுறுமுனனைப் பற்றவிற்சிறிது
மாயத்த முற்றிலே னறிவாய். (22)

சகாரன்.—பாவ ! பாவ !

நாணயநதிருடு மாண்பினையுடையவள்
வீணினிறகாமத தீவிளைவிப்போள்
பானைபோல் வயிறுற மீனுணகினறவள்
ஆசைகள்தீர ‡ லாசியஞ்செய்பவள்
ஒட்டைபோல் நாசி தட்டையாயுடையவள்
பல நாசததுடன் குலநாசஞ செய்பவள்
முசலெனயார்க்கும வசபபடாப்பட்டி
வேசிவிலைமகள் தாசிகணிகை
மதுநனிகுடிக்கும பொதுமகளாடவர்க்
காவடியளிக்கும் தேவடியாள் நற
பரத்தையேகெடுக்கும பரததைசொல் சூளை
நாமகள் தமையன காமனூா பேழை
மின்னுடலெங்கும பன்னகை பூணடவள்
இவ்வணமாகச் செவ்வைகொள் பெயர்கள்
வைச்சிவடன்னைப் புகழ்ந்து
மிச்சையோடென்னை நச்சிலள் நன்கே. (23)

† வரைதல்=தடுத்தல். ‡ லாசியம்=நாட்டியபேதம்.

விட.—

விடபுருட னகமு † ளரும் வீணையைப்போல் மேக
விடிகேட்டு மெய்ந்நடுங்கு மிளங்குருகுப் பெடைபோ
லுடுபதிநேர் குண்டலங்க ளூர்ந்திருபான மோதும்
படிதிகழுங் கபோலி பயந் தோடலுனக் கழகோ ! (24)

சகார.—

துணிவுடை யிராமன்சூழத்
துரோபதை யோடுற்றுப் போந்
சணசண வெனப்பூணகத்துஞ்
சத்தந்தோ டோடா நின்று
யணிவிசுவா வசுவின்றங்கை
சுபத்ரையை யநுமா னேந்தி
விணிற்கொண்டு போனானந்த
விதமுனை வாரிப் போவேன் !

சேட.—

அரசன்மச்சா னெமதைய
னவன்மீதாசை வையம்மா !
திரையிலோடு மச்சமொடு
செய்யபுலாலுந் தினமுணரக்
தரையிலூனை யுணவிரும்பு
தன்மைகொண்ட நாய்களெலாந
திரமிலுயிரை நீத்தபிணத்
தினையுஞ் ‡ சேவை செய்யாதா ?

விடன்.—பவதி வஸந்தஸேனை !

தாரகைநிகரு மணிகளிட்டிழைத்த
சவிமணிக்கலனபல தாங்கி
நேருறமின்னு மனோஞசிலைமுகத்தோய் !
நீநனியச்சமேமேவி

† உளர்தல்=நரம்பை யுருவி வாசித்தலென்றார் அடியார்க்கு நல்லார் "முதுமறைதேர் நாரதனார் முந்தை முறை நரம்புளர்வார்" சிலப்பதிகாரம் 17 ஆய்ச்சியர் குரவை பக்கம் 410

‡ சேவை செய்தல்=சேவித்தல், ஊழியஞ்செய்தலென்றபடி.

*ஊரினைவெறுத்த நகரதைவதம்போ*
*லோடுகின்றனை யுறுநீலக்*
*காரினையறலைச் சைவலத்திரளைக்*
*† கடியுமங்கருங் குழற்றோகாய்!*

சகாரன் :—

*காட்டினிற் கானிற் கடத்தினில் வனத்தில்*
*கோணுவை நரியைக் கோமாயு சம்புவை*
*சுவாநாய் சுணங்கன் றொடர்ந்து பின்போதல்*
*போலெனல் விரைவாய்ப் பொள்ளென வொல்லை*
*பின்றொட ரெனது கன்னிகர் மனத்தைக்*
*கவர்ந்தனை மிக்க கடுமையாய் வேகமாய்*
*அவமுற வம்மநீ ஓடுகின்றாயே.*

வஸந்த.—*பல்லவக! பல்லவக! பரபிருதிகே! பரபிருதிகே!*

சகாரன்.—*(அச்சத்துடன்) பாவ! பாவ! மனிதன்! மனிதன்!!*

விடன்.—*பயப்படவேண்டாம்! பயப்படவேண்டாம்!!*

வஸந்த.—*மாதவிகே மாதவிகே!!*

விடன்.—*(சிரிப்புடன்) மூட! பரிசனங்களைத்தேடுகிறாள்!!*

சகாரன்.—*பாவ! பாவ! பெண்களையா தேடுகிறாள்?*

விடன்.—*ஆம்.*

சகாரன்.—*பெண்களில் நூறுபேர்களானாலும் கொன்று விடுவேன்! நான் சூரன்!*

வசந்த,—*[‡ பாழ்த்த பார்வையுடன் நோக்கி] ஐயோ! ஐயோ! எனது ஏவலாளர்களெங்கேயோ போய்விட்டார்களே! இத்தருணத்தில் நானே யென்னைப்பாதுகாக்க வேண்டுவது போலும்!*

---

† கடிதல் = *அழித்தல், சினக்குறிப்புமாம்.*
‡ பாழ்த்தபார்வை = *குனியதிருஷ்டி.*

விடன்.—தேடு, தேடு.

சகார.—வசந்தசேனையே! கத்தடி! கத்து! "பல்லவக! பரபிருதிகே!" என்று வசந்தமாதம் முழுதையும்வேண்டுமானாலுங் கூப்பிடு! எங்களாற்றுரத்துண்ட உன்னை யெவனடி காப்பாற்றுவான்!

தடிபீம சேநனு, ‡ சமதங்கி பிள்ளையா!
அடிகுந்தி மைந்தனு, அந்தலங் கேசனு!
முடிமயிர் முறுக்கிதுச் சாசனன் போலவே
படிமிசை யடிக்குவென் பாரடீ மூடியே!! (29)

இதோ பார்! பார்!!

இந்த என் கத்தியோ கூராவிருக்குது!
அந்த உன் கழுத்ததோ அழகாவிருக்குது!
கழுத்தினை யறுக்குவேன்! அல்லவேற்கொல்லுவேன்!
சழக்கி நீ ஓடுதல் சாலுமே! சாலுமே!!
சாதலைவிரும்பினோர் தன்னுயிர் பிழைப்பரோ!! (30)

வசந்த.—ஐயா! நான் பேதைப் பெண் அன்றோ!

விடன்.—அதனாற்றான் நீ உயிரோடிருக்கின்றனை.

சகார.—அதனாற்றான் நீ கொல்லப்படவில்லை!!

வசந்த.—[மனத்திற்குள்] இவன் காதலுடன் சொல்லும் வார்த்தைகள்கூட மிகுந்த அச்சத்தை விளைவிக்கின்றது! நல்லது இவ்விதஞ் சொல்லுகிறேன்—[வெளிப்படையாய்] ஐயன்மீர்! என்னுடைய ஆபரணங்களில் ஏதேனும் உங்கட்கு நோக்கமா என்ன?

---

‡ சமதங்கி=சமதக்கினியென்னும் இருடி பரசிராமன்றந்தை. யமதங்கி யென்றனர் வில்லிபுத்தூரார், "தன்னைவந்து புடைசூழ வேகி யமதங்கி மைந்த னகர்சாரவே." பாரதம் ஆதிபருவம். குருகுலச்சருக்கம் 134.

விடன்.—சாந்தம் (பாபம்) பவதி வசந்தசேனு! பூந்தோட்டத்தி லிருக்குங் கொடியிலுள்ள பூவை எவனுகிலும் பறிப்பானு! நகைகளைப்பற்றிய பிரஸ்தாபம போதும்.

வசந்த.—அங்ஙனமாயின் இஃதென்னை?

சகார.—நான்வர புருஷன்! பெருமையுற்றவன்! மனிதன! வாசுதேவன! நீ என்மேல ஆசைப்படவேண்டும்!!

வசந்த.—[கோபத்தோடு] சாந்தம, சாந்தம; சீபோ! இழிவான காரியஞ் சொல்லுகின்றனை!

சகார.—[கைகொட்டிச்சிரித்து] பாவ! பாவ! பாருங்கள் பாருங்கள்! இந்தத் தேவடியாள் மகள் என்மீது பிரியங்கொண்டிருக்கின்றனள். இவள் எனனைப்பார்த்து "போம், சிரமமுற்றிருக்கின்றீர், கிலேசமுற்றிருக்கின்றீர்" என்று சொல்லுகின்றனள்! நான் வேறு கிராமத்திற்காவது பட்டணத்திற்காவது போய்வந்தேனு! ஆரியே, என்னுடைய இரண்டு பாதங்களையும பாவருடைய தலையில் வைத்துச் சொல்லுகிறேன; உன் பின்னுல ஓடோடியும் வந்தமையால் இவ்விதஞ் சிரமத்தையுற்றவனுகவும் கிலேசமுற்றவனுகவும ஆகிவிட்டேன்.

விடன்.—(மனத்திற்குள்) அட என்ன! † சாந்தம் என்றதைச், ‡ சிராந்தம் என்று அவள் சொன்னதாக, இந்த மூடன் எண்ணினன்போலும். [வெளிப்படையாய்] வசந்தசேனையே, நீஉன்னுடைய வேசித்தொழிலுக்கு விரோதமாக இப்பொழுது பேசுகின்றனை. என்னெனில்.

வேசையின் றெழில் விடர்களுக் குதவியாய்விளைந்த
நீசற்றே நினை கணிகைநீ நெடுவழிக் கொடிபோல்
§ தேசத் தாரெலாந் திளைக்குதற் குரியவோ ருடம்பை!
நேசத் தாரயலா ரெனல நீக்கிநீ நடப்பாய். (31)

---

† சாந்தம்=பொறுமை. ‡ சிராந்தம்=வருத்தம்.

§ தேசத்தார்=நாட்டிலுள்ளவர் சாதிபேதமின்றி நாட்டிலுள்ளார் யாவரும் அநுபவித்தற்குரிய தேகத்தைப்படைத்த நீயென்பது இந்த அடிக்குப்பொருள் "தேசத்தாரென்னை யென்னென் சிந்திப்பாரென்று தியும்" இராமாயணம் உயுத்தகாண்டம் நாகபாசப்படலம் செய்யுள் 209.

மேலும்,

கேணியில்ஞாநப் பூசுரன்கயமைக்
கீழ்மகன்மூழ்குவர், பூத்த
மாணிமிர்கொடியிற் காகமுமமிலும்
வைகுமே, யோடத்தில மறைதேர்
† வாணரும் பிறரு மிவருவர், கேணி
மலர்க்கொடியோடமே நிகரும்
பாணநேர்கண்ணாய்! வேசையாதலிற்பூப்
பலரையுந்தழுவனின் கடனே. (32)

வசந்த.—ஆசை விளைதற்குக் காரணம் குணமேயல்லது பல வந்தமன்றே!

சகாரன்.—பாவ! பாவ! கருவுதொட்டு வேசியாகவிருக்கிற இவள், காமதேவன் கோயிற் பூந்தோட்டத்தில் அந்தத் தரித்திரன் சாருதத்தனைப் பார்த்து, அது முதல் அவன் மீது மோகங்கொண்டு, என்மேற் பிரியமில்லாத வளாயி னள்; அவன் வீடு இதோ இடதுபக்கத்திலிருக்கின்றது! என்னுடைய கையினின்றும் தவறி இவள் ஓடிப்போகா வண்ணம் நீர் பார்த்துக்கொள்ளுக!

விடன்.—இந்த மடையன் எதைச் சொல்லக்கூடாதோ அதைச் சொல்லுகிறானே! ஆரியசாருதத்தனிடம் வசந்த சேனை அன்புற்றிருக்கின்றனளா என்ன! "மாணிக்கம் மாணிக் கத்தோடுதான் கூடும்" என்னும் பழமொழி பொய்க் குமோ. ஆதலால் அவள் சேரட்டும். இந்த மடையனாற் காரியமென்ன? [பகிரங்கமாய்] அடே! கலியாணமாகாதவ ளுடைய மகனே, அவன் வீடு இடதுபக்கத்திலா?

சகா.—ஆம், இடது பக்கத்தில் அவனுடைய வீடு.

† மறைதேர்வாணர்=பூசுரர்; "வேதவாணர்" என்றல் போல "தழல் புரைவேதவாணர் தாளிணைவணங்கித்தானும்" பாரதம் சபாப ருவம் இராசசூயச்சருக்கம் 103.

வசந்த.—[தனக்குள்] ஆச்சரியம் இடதுபக்கத்தில் அவர் வீடென் பதுண்மையானல், நமக்குப் பொல்லாங்கு புரிகிற இந்தக் கொடியோனல் நமக்கு நன்மை விளைந்ததுபோலும். இவ னல் எனது பிரியனுடைய கூட்டுறவு எனக்குக் கிடைக்கு மன்றோ!

சகார.—பாவ! பாவ! உளுந்துக்குவியலில் மைக்கூண்டுபோல இந்தப் பெரிய இருளில் பார்த்திருக்கும்போதே வசந்த சேனை மறைந்துபோயினள்!!

விடன்.—ஆச்சரியம்! அடஎன்ன! பலத்த அந்தகாரம்! எப் படி யெனில்

அகன்றவெனது கண்ணிரண்டு
மழகாரிமைகள் திறப்புற்றும்
புகலுமிந்தப் பேரிருளாற்
பொதியப்பெற்றே நோக்கிழந்த! (33)

மேலும்

இருளங் கமெலா மிணைந்ததே போலும்
மருளும்வான் மைம்மழை வருடமே போலுந்
தெருளிலா மனங்கொள் சிறியர்பாற் பணிபோல்
விரியுமென் பார்வை † விபலமாய் மாய்ந்த! (34)

சகா.—பாவ! பாவ! வசந்தசேனையைத்தேடுகிறேன்.

விடன்.—கலியாணமாகாதவள் மகனே! நீயறியத்தக்க அடை யாள மெதுவாயினு மிருக்கின்றதோ?

சகா.—அப்படியென்றால் என்ன?

விட.—ஆபரணங்களின் சத்தம் அல்லது புஷ்பவாசனை.

சகா.—பூமணங்காதில் விழுகிறது. இருள் நிரம்பி யிருத்தலால் ஆபரணங்களின் சத்தமட்டும் மூக்கிற் செவ்வையாய் ஏற வில்லை.

---

† விபலம்=பயனின்மை.

விடன்.—(வசந்தசேனை காதிற்படும்படியாக) ஓ வசந்தசேனு!

அர்தியி னிருளான் மங்குலின் மறைந்த
அவிர்தலில் மின்னல்போ லெனது
மந்தமார் விழிக்குத் தோற்றிலாய் மிக்க
வருத்துமாலச்சமே படைத்தோய்!
கந்தமார் மாலை கமழ்தலுங் காலி
னூபுர வோசையு முன்பே
† இந்திட விருப்பைத் தெரித்தமா வசந்த
சேனையே காதிலேற் றனையோ? (35)

வசந்தசேனு! காதில் விழுந்ததா?

வசந்த.—[தனக்குள்] காதில் விழுந்தது; காரியமுமறிந்தேன்! [காற்சிலம்புகளைக் கழற்றிப் பூமாலையையு களைந்துவிட்டுக் கொஞ்சதூரஞ்சென்று கையாற்றடவிப்பார்த்து] ஓகோ சுவரைத்தடவிப்பார்த்ததினுல், ஒரு வாயிற்படி யிருக்கிறதென்றும், கதவுமூடப்பட்டிருக்கிறதென்று மறிந்தேன.

சாருத.—ஓ மித்திரா! நான் ஜபம் முடித்தாயிற்று. நீ இப்போது சென்று தெய்வத் தாயர்கட்குப் பலியைப போட்டுவா.

விதூஷ.—ஓய் நான் போகமாட்டேன்.

சாருத.—ஐயோ கஷ்டம்!

தரித்திரத்தா லுறவினர்சொற் கேட்டலில்லை
சாலநட்புக்கொண்டோரும் வெறுக்கா நின்றார்
உரத்தபல வாபதங்கண் மேன்மேலுண்டாம்
உறுவலியுங் குன்றுகின்ற துடுவின்வேந்தன்

† "இந்த இடம்" என்பதில் நிலைமொழியீற்று அகரங்கெட்டது சந்தம் நோக்கி.

பரித்தவொளி போலொழுக்க மலிநமாகும்
பாரதனிற் பிறரியற்றும் பாவம் யாவுந்
தரித்திரனான் மேலசாருந் தானிதன்னிற்
சரித்திரத்தி, † ஈடுதரித் திரமேயம்மா! (36)

மேலும்

வறிஞனுடன் றெருநாளும் போய்க் கூடல்செய்யான்
‡ வாரமுடன் பேசுகிலான விழாக்காலத்தில்
வறிஞரொரு § தனிகனில்லம் புகுந்தானாயின்
மதிப்படையாள றணிபகிலலா வெட்கத்தாலே
வறிஞனமக்கள் கூட்டத்தைக் கண்ணுற்றானேல்
வழிவிலகித் திரிகின்றா னந்தோபாவம்!
வறுமைதனை, நிச்சயமா || யாறாமாபா
தகமென்றே மனதார வகுப்பேன்மாதோ. (37)

தரித்திரமே! யிது காறு மென்னையுன்றன்
றனிநண்ப னெனக்கருதித் தன் வீட்டைப்போற்
தரித்திருக்கின்றாயிழந்த செல்வனுமென்
றன்றேக மழிந்துபடி லெங்குபபோவாய்!
தரித்திரர்க ளெனைபபோன்றோ ரியாவருண்டு
சந்தேக மொன்றுமிலை யில்லைநேயத்!
தரித்திரமே! யொருநொடிப்போ தேனுமென்னைத்
* தணவாமல வாழுதியாற் சாற்றினேனே. (38)

† ஈடு=உவமை "இது விகாரம் இடுதல்=உவமிததல் இது வழக்கு" என்றார் நச்சினார்க்கினியர். "ஈடில் சந்தன மேந்து தாமரைத்" சீவக சிந்தாமணி இலக்கணையாரிலம்பகம் 46.

‡ வாரம்=அன்பு "வாரம்பட்டுழித்தீயவுநல்லவாம்" சீவகசிந்தாமணி குணமாலையாரிலம்பகம் செய்யுள் 38.

§ தனிகன்=செல்வன்.

|| பாதகமைந்து=கொலை, பொய், திருட்டு, ஆசாரியநிந்தை, மதுபானம் என்பன. வறுமையைச சேர்த்துப் பாதகம் ஆறென்றார் முதல்நூலார்.

* தணத்தல்=நீங்கல், பிரிதல் "தணந்தோ ருள்ளத் துள்ளுறப் புகுந்தயின்" கல்லாடம் செய்யுள் 44.

விதூஷ.—[முகத்தைக்கடுத்துக்கொண்டு] ஓ சிநேகிதா! நானே போகவேண்டுமென்றால், இந்த இரதனிகையையும் எனக்குத் துணையாகவரச் சொல்லும்!

சாருத.—ஓ ரதனிகே! நீ மைத்திரேயர் பின் செல்லுதி!

இரதனி.—ஆரியர் கட்டளைப்படி.

விதூஷ.—ரதனிகே! இந்தப் பலியையுந் தீபத்தையும் வைத்துக்கொள்ளு, நான் கதவைத்திறக்கிறேன் (அங்ஙனந்திறக்கிறான்).

வசந்த.—எனது அநுக்கிரகத்தின்பொருட்டு இக்கதவு திறக்கப்பட்டதுபோலும்; உள்ளேபோகிறேன் [பார்த்து] ஓகோ! விளக்குப்போயிருக்கின்றதே. [என்று முன்றானையாலவித்துப் பின்னர் பிரவேசிக்கின்றனள்.]

சாரு.—மைத்திரேய! இஃதென்னை?

விதூஷ.—கதவைத் திறந்தபடியால், காற்றுத் திரண்டுவந்து விளக்கை யவித்தது; ரதனிகே! கதவுதிறக்கப்பட்டிருக்கின்றது; நீபோ! நான் உள்ளேபோய் விளக்கைக் கொளுத்திக் கொண்டுவருகிறேன். [என்று சென்றனன்]

சகார.—பாவ! பாவ! வசந்தசேனையைத் தேடாநின்றேன்.

விடன்.—தேடு தேடு.

சகார.—[அவ்வண்ணந்தேடி] பாவ! பாவ! அகப்பட்டாள்! அகப்பட்டாள்!!

விட.—மூட! இது நானல்லவா?

சகா.—இவ்விடத்தில் நீ தனித்து ஒரு பக்கத்திலிரு (மறுபடியுந் தேடிச் சேடனைப்பிடித்துக்கொண்டு] பாவ! பாவ! அகப்பட்டாள்! அகப்பட்டாள்!!

சேட.—ஐயா! நான் சேடனல்லவா?

சகார.—இதோ பாவர்; இதோசேடன்: பாவர் சேடன்; சேடன் பாவர்; நீயும் ஒரு பக்கத்தில தனித்திரு [மறுபடியுந்தேடி இரதனிகையின் றலைமயிரைப் பிடித்து] பாவ! பாவ! இப்பொழுது சிக்கிக்கொண்டாள்! வஸந்தசேனையகப்பட்டாள்!!

இருளினி லோடிமுன் றன்னை யோர்மலர்
மருவுநன் மணத்தினால் மகிழ்ந்து கண்டனன்!
தெருளுசா ணக்கியன் றிரௌபதி யெனச்
சுருளுமுன் கூந்தலைத் தொடர்ந்து பற்றினேன்! (39)

விடன்.—

† சற்குலத் துதித்தவச் சாரு தத்தன்மாட்
டற்புத வாசைகொண் டோடு ‡ மாயிழாய்!
மருமல ரணிந்தலங் காரமாய நின்
கருநிறக் கூந்தலிற் கவரப் பட்டனை! (40)

சகாரன்.—

வாசுவே யுனது மயிரிற் கேசத்தில்
ஒதியிற் கூந்தலில் உறுபிடி யுண்டாய்!
சம்புவைச் சிவனைத் தானுசங் கானை
உரத்தழை கூப்பிடு ஓவெனக் கதறு! (41)

இரதனிகை.—[அச்சத்துடன்] ஐய! என்ன செய்ய ஆரம்பித்திருக்கின்றீர்?

விடன்.—கலியாணமாகாதவள் மகனே! இந்தப் பேச்சுக்குரல் வேறாகவிருக்கிறது!

சகாரன்.—பாவ பாவ! தயிரேட்டைக் குடிக்கப்போகிற பூனை, எவ்விதந் தன்குரலை வேறுபடுத்துமோ, அவ்விதமே இந்த வேசிமகள் குரலோசையை மாற்றிவிட்டாள்!

---

† இக்கலிவிருத்தம் முதலிரண்டடிகளோ ரெதுகையாகவும் பின்னிரண்டடிகளோ ரெதுகையாகவும் வந்தது விருத்த விகற்பமெனக்கொள்க ‡ ஆயிழை ஆயிழாய் என விளியேற்றது "அவற்றுள், இ ஈயாகும் ஐ ஆயாகும்" தொல்காப்பியம் செல்லதிகாரம் விளிமரபு, சூத் 4.

விடன்.—குரலா மாற்றப்பட்டிருக்கிறது! ஒகோ ஆச்சரியம்! ஆச்சரியம்! என்ன! இந்த விஷயத்தில் :—

நடநசாலையி னடித்தநற் பழக்கத்தாற், கல்வித
† திடப்பயிற்சியாற் சேர்ந்தனை ‡ காளையை வஞ்சத்
திடவில்வல்லவோர் சமர்த்திறு விவள்குரல் வேறு
படப்பணிக்குநற் றிறமிவட் குண்டெனப் பகர்வாய்.

விதூ.—[பிரவேசித்து] சாயுங்காலத் தென்றற்காற்றுல், பசுபந்த யாகத்திற்குக் கொண்டுபோகப்படுகிற ஆட்டின் மனம் போல, விளக்கு மிக நடுங்குகின்றது [சென்று, இரதனிகையை நோக்கி] ஓ ரதனிகா!

சகா.—பாவ! பாவ! மனிதன்! மனிதன்!

விதூ.—இது சரியல்ல! சிறிதும் ஒழுங்கல்ல! ஆரியசாருதத்தன் ஏழையானுற், பிறரெவ்வண்ணம் அவர் வீட்டிற் பிரவேசிக்கலாகுமோ?

இரதனி.—ஆரிய! மைத்திரேய! என் அலங்கோலத்தைப் பாரும் [பரிபவம்]!

விதூ.—என்ன! இந்த அவமானம் உனக்கா அல்லது நமக்கா?

இரத.—தங்கட்கே!

விதூஷ.—இஃதென்னை! பலவந்தமா?

இரத.—அவ்விதமே!

விதூஷ.—நிஜந்தானு?

---

† திடம்=வலி, "திருட" மென்னும் வடசொற் சிதைவு.

‡ காளை = ஆண், மகன்; யௌவநமுற்றுனைக் "காளை" யென்றல் தமிழ்நூலார் மாபு; வடநூலார் "புருடரிடப" மென்றல்போல; "காளை சீவகன் கட்டியங்காரனை" சீவக சிந்தாமணி. குணமாலை யாரிலம்பகம் 33.

ரேத.—உண்மையாகவே!

விதூஷ.—[கோபத்தோடு கைத்தடியை ஓங்கிக்கொண்டு] அடபய லே! வேண்டாம்; நாய்களுக் கூட [illegible] டிா பெருங் கோபம் உண்டாகும்; அங்ஙனமிருக்கப், பிராமணனான எனக்குக் கேட்கவேண்டுமோ; இதோபார்! என்னைப் போன்றவர்களுடைய அதிர்ஷ்டம் போலக் கோணியிருக் கிற இந்தத் தடியால் உன்மண்டையிலடித்து உன்றலையை உடைத்துப்போடுகிறேன்.

விடன்.—ஓ மகாப்பிராமணா! கொஞ்சம் பொறுத்தருளுக. கோவம் வேண்டாம்.

விதூஷ,—[விடனை நோக்கி] இங்குக்குற்றஞ் செய்தவன் இவ னல்ல. [சகாரனைப் பார்த்து] இவன் தான் அபராதி. அடே அடே! அரசன் மைத்துனா! வெமஸ்தாநக! துர்ச்சந! கொடியவனே! இது யுக்தமன்று. ஆரிய சாருதத்தன் வறுமையுற்றிருப்பினும், அவர் தன்னுடைய குணத்தினால், உஜ்ஜயினிபட்டணத்திற்கு ஒரு அலங்காரம் போன்றவ ரன்றோ! இவ்விதம் அவர் கிரகத்திற் பிரவேசித்து, அவரு டைய பரிசனங்களை இந்தவைகய அக்கிரமஞ் செய்கின்ற னையே. அது சரியா உனக்கு.

† இல்லவ னெனினிழி வில்லையின்மையன்
செல்வவா னெனல்நற் கில்லை சீலமிங்
கில்லவன் பொன்னையுற் றிருப்ப னாயினும்
அல்லல்செய் வறுமைப னுவ னுய்தியால். (43)

விடன்.—[வெட்கத்தால் முகம் வேறுபட்டு] சிறப்புற்ற அந்தணா! மன்னித்தல் வேண்டும். வேறு ஒருவர் என்றெண்ணி இவ் விதம் நடாத்தப்பட்டது. கொழுப்பினால் அன்று; இதோ பாரும்.

† இல்லான் = இல்லான் வறிஞனென்றபடி.

நாங்களோர் பெண்ணினை † நாடுகின்றனெம (43¼)

விதூஷ.—என்ன இவளையா ?

விட.—சாந்தம் பாவம் !

மாங்குயி லனையவள் மறைவை யுற்றனள்
ஆங்கவ ளாமெனு மையத்தா லிந்தத்
தீங்கது விளைந்தது சிறந்த அந்தண ! (44)

ஆகையால் யான் மன்னிப்பை வேண்டுகின்றேன். [என்று கத்தியை எட்டவைத்துவிட்டுக் கைகளைக் கூப்பிக்கொண்டு காலில் விழுகிறான்].

விதூஷ.—ஆடவர்திலக! எழுந்திரும், எழுந்திரும், நான் அறியாமல் உம்மை இவ்விதம நிந்தித்தேனா ; இப்பொழுது தெரிந்துகொண்டேன், மன்னிக்கவேண்டும.

விட.—நான்தான் உமது மன்னிப்பைக் கேட்டுக்கொள்ள வேண்டுபவன் ; நீர் எனக்கு ஒருவாக்களித்தால்தான் நான் எழுந்திருப்பேன்.

விதூஷ.—சொல்லுக.

விட —இந்த விர்த்தாந்தத்தை ஆரிய சாருதத்தனுக்குத் தெரிவிக்கவேண்டாம.

விதூ.—சொல்லவில்லை.

விட.—

அந்தண நன்றியைச் சிரத் தணிந்தனெம
உந்துமா யுதஞ்சு மந்துலவு நாங்களும்
அந்தமில் குணப்படை தாங்குமை ஐய ! ஓர்
விந்தையா விற்றைநாள் வெலலப் பட்டனெம். (45)

† நாடுகின்றனெம் = தேடுகின்றேம், நாடுதல் = தேடுதல "எதிரேயர் திழை தன்னையிருந்துழீஇ, நாக நாடுக நனில நாடுக" இராமாயணம். கிஷ்கிந்தாகாண்டம் நாடவிட்டபடலம். செய்யுள் 6.

சகார.—[வெறுப்போடு] ஓய் பாவ! ஏன் இந்தப்பிரகாரந்தகாத அஞ்சலிசெய்து இந்த நஷ்டப்பயல காலில விழுகிறீர்!

விடன்.—அச்சத்தால்.

சகார.—யாரிடத்தில அச்சங்கொண்டு?

விட.—அந்த ஆரிய சாருதத்தருடைய குணங்களில.

சகா.—அந்த சாருதத்தன் குணங்களென்ன! அவன் வீட்டிற்குள் நுழைந்தால் சாப்பாட்டிற்கும வழியிலலே!!

விட.—அப்படிக்கூறுதே.

நம்மைப்போன்றோர் தமக்களித்து
நலிவுற்றனனுற் செல்வமுற்றுச்
செம்மைவாழ்ந்த காலத்திற்
செய்தானலல னவமானம்
அம்முநிறைந்த குளங்கோடை
யடைந்தோர்தாகந் தனைப்போக்கிக்
கயமற்றதுபோ லிவனீய்ந்து
கட்டமிடிக்குள் ளாயினனே. (46)

சகா.—[கோவத்தோடு] கருப்பதாஸிமகன் அவன் யாரடா!

சூரனு! பாண்டவ தீரனு! சுவேத
கேதுவா! ராதையின கெடிகொள் பிள்ளையா!
தராதல நடுக்கிய இராவணனு! வல
இந்திரதத் தனு! இளைய குந்திபால்
அந்தமே விராமனன் றளித்த பிள்ளையா!
அச்சுவத் தாமனு! அல்லது தரும
புத்திரனு! புகழ் பூண் சடாயுவா? (47)

விட.—மூர்க்க! அவர் ஆரிய சாருதத்தர் அல்லவா!

வறுமையின் மிக்கோர்க் குறுதுய ரகற்றுந்
தனகுணக் கனிகளா லின்புறத் தாழ்ந்த

மருமலர்க் கற்பகத் தருநிகர் கொடையான்
நிரமபிய நலலோர்க் கரும்பெறற் குடும்பத்
தலைவனை யொத்தவன் நிலைமரி யாதைச்
சுலோசந மென்று முலோபமில் சீலக்
கரைகட வாத திரையெறி சிந்து
நேசமா யெவர்க்கும் பூசனை புரிவோன்
ஆடவர் குணநிதி பீடுறு நடையான்
இத்தகைக் குரிசில் நத்துமிப் பாரில்
உயிருட னிருப்பவன் † அயிர்நிகர் மற்றோர்
மூச்சினை மட்டும் விடுக்கும்
பூச்சிக ளென்றே புகலுவர் புலவோர். (48)

ஆகையா லிவ்விடத்தைவிட்டுப் போவோம்வா.

சகார.—வஸந்தசேனையைப் பிடிக்காமலா ?

விட.—வஸந்தசேனை மறைந்துபோயினளே.

சகா.—எப்படி ?

விட.—

குருடனையுற்ற இருநோக்குப் போலும்
வறிஞனையடைந்த வனப்பது போலும
மந்தன்மாட் டொன்றிய புந்தியைப்போலும்
‡ அலசனைக்கூடிய நிலைபேறு போலுங்
காமுகனாகி மறதியு முள்ளோன்
றனையுறுமாத்துமத் தனிவித்தை போலும்
பகைவனையடுத்த நகுமன்பு போலும்
உன்னையடைந்த அப் பெண்மணி
மின்னென மறைந்தனள் மன்னவன் மைத்துந ! (49)

† அயிர் = நுண்மணல் “அயிநும் வளையு மார்ப்ப வயிரச் செறியிலை காயா வஞ்சனமலர” முல்லைப்பாட்டு வரிகள் 92, 93.

‡ அலசன் = சோம்பன்.

சகா.—வசந்த சேனையைக் கைப்பற்ருமல் நான வரமாட்டேன்!

விட.—இதை நீ கேட்டதில்லையோ!

† ஆளாநந்தனில் யானையை யங்கடி
வாளத்திற்பரி மாவினை நன்மநக்
‡ கேளாற்பொன்மயந் கிண்கிணி மாதரை
ஆளாஞேர்வச மாக்குவ ரன்றியென். (50)

சகா.—உனக்கிஷ்ட மிருந்தாற்போ! யான் வரமாட்டேன்.

விட.—சரி நான் போவேன் [என்று சென்றனன்]

சகார.—மித்திரன் போயினன் [விதூஷகனை நோக்கி] அட! காக்கையின் கால்போன்ற ஜொத்தைத், தலையை உடையவனே! துஷ்டப்பயலே! உட்காரு, உட்காரு.

விதூ.—உட்கார்த்தப பட்டவாகளாகவே யிருக்கினேரும்.

சகா.—யாரால்?

விதூ.—காலனுல்.

சகா.—எழுந்திரு, எழுந்திரு.

விதூ.—எழுந்திருபபோம்!

சகா.—எப்போது?

விதூ.—விதி மறுபடியும அநுகூலஞ் செய்யும்போது!

சகாரன்.—அழு, அழு!

விதூஷ.—அழுகை உண்டுபண்ணப் பட்டிருக்கின்ேரும்!

சகாரன்.—யாரால்?

விதூஷ.—துரதிர்ஷ்டத்தால்.

† ஆளாநம்=யானைகட்டும் தறி. ‡ கேள்=நேசம்.

சகாரன்.—அடே! நகு, நகு!

விதூஷ.—சிரிப்போம்.

சகாரன்.—எப்பொழுது?

விதூஷ.—ஆரிய சாருதத்தனுக்குச் செல்வமுண்டாகும்போது!

சகாரன்.—துஷ்டப்பயலே! நான் சொன்னதாக அந்தத்தரித்திர சாருதத்தனிடத்திற் சொல்லு! பொன்னேடு, தங்கத்தோடு, சுவர்ணத்தோடு கூடியவளும், புதிய நாடகத்திற் சூத்திரதாரிபோ லிருக்கிறவளுமான வஸந்தஸேனை யென்கிற தேவடியாள் மகள், காமதேவன கோயில தோட்டத்தில் அவனைக் கண்டதுமுதல் அவன் பேரில் மோகித்தவளாய், நாம் பலவந்தமாகக் காமித்திருக்கையிலும், உன் வீட்டிற்குள் புகுந்திருக்கிறாள்; அவளை யென்கையில் நீயே சுவயமாகக் கொணர்ந்து விட்டால், அப்படிச் சீக்கிரம கொணர்ந்துவிடுகிற உன்பேரில், நீதிச்சபையில் வியவகாரமில்லாமலே பிரியமுண்டாகும்; அல்லது கொணர்ந்துவிடாமற்போனல், உயிருள்ளவரையும் பகைமூளும்!! மேலும் இதோ பாரு!

சாணத்தாற் பூசப்பட்ட தவளப்பூ சனிக்காய் காய்ந்த
† மாணத்தார் சாகம்செய்யில மடமடப் பொரித்த மாஞ்சம்
சேனுலாம் பனிக்காலத்துத் திமிராச் சமைத்த சோறும்
ஆனையா யெக்காலத்து மணிகெட வூசாவன்றே? (51)

நன்றாகச் சொல்லு; கபடமாகச் சொல்லு; நான் என்னுடைய அரண்மனையிற் புறாக்கள் வளர்க்கின்ற மேல்உப்பரிகையில் உட்கார்ந்துகொண்டு கேட்பேன்; என்காதில் விழும்படி நீசொல்லவேண்டும்; வேறுவகையாகச் சொன்னையானல், அப்போது உன்றலையைக் கதவிடுக்கிற் கொடுத்த விளாம்பழத்தைப்போல மடமடவென்று உடைப்பேன்.

† மாண் நத்து ஆர் = குணமாக விரும்பல் உற்ற.

விதூஷ.—சொல்லுவேன்.

சகா.—[முகத்தின் ஒரு பக்கத்தைக் கையால் மறைத்துக்கொண்டு] ஏசேடா! பாவர் போயிட்டாரோ?

சேட.—ஆம்.

சகா.—ஆகையாற் சீக்கிரம் போவோம்.

சேட.—அங்ஙனமானால் எசமான் கத்தியை யெடுத்துக்கொள்ளுங்க.

சகா.—உன்கையிலேயே யிருக்கட்டுமடா.

சேட.—இதோ இது எசமான்கத்தி, எடுத்துக்கொள்ளுங்க.

சகா.—[தலைகீழாகக்கத்தியின் நுனியைப்பிடித்துக்கொண்டு.]

தோலுரித்த முள்ளங்கித் தோனிறம் பூண்டேசுழற்றும்
† வாலுறையிற் றூங்குகின்ற ‡ வைமேவு வாட்பிடியைக்
கேல்பொருந்தக் கைப்பற்றிக்கௌராண்பெண் ணாய்கள்குரைத்
தோலமிட்டுப் பின்றொடர வுறுநரிபோன் மனையுறுவேன்.

விதூ.—இரதனிகே! உனக்குற்ற இந்த அவமானத்தைப் பூசிதரான சாருதத்தருக்குச் சொல்லாதே; இதை யுரைத்தாற் றுர்ப்பாக்கியத்தாற் சோர்ந்திருக்கிற அவருக்குத் துயரம் இருமடங்காக விளையும்.

இரத.—ஆரியமைத்திரேய! காவடக்கமுள்ள இரதனிகையன்றோ நான்!

விதூ.—அதுசரிதான்.

சாருத.—[வஸந்தசேனையைக் கண்ணுற்று] இரதனிகே!

---

† வால்=வெண்மை "வாலரி கழுவிய வண்ணச் செம்புனல்" சீவகசிந்தாமணி காந்தருவதத்தை யாரிலம்பகம் 337.

‡ வை=கூர்மை. "வையேகூர்மை" தொல்காப்பியம், சொல்லதிகாரம், உரியியல் 91,

சாரு௫த.—[வசந்தசேனையைக் கண்ணுற்று] இரதனிகே! காற்றில் உலாவிக்கொண்டிருந்த ரோஹஸேனன், பிரதோஷகாலத்துக் குளிரால் வருந்துகிருன்; ஆனதால் உள்ளே இவனைக் கொண்டுபோ! இந்தச் சவுக்கத்தால் இவனைப் போர்த்து [என்று சவுக்கத்தைக் கொடுக்கிருன்.]

வஸந்தசேனை.—என்ன! என்னைத் தன் பரிஜனமாக நினைக்கிருர் [சவுக்கத்தை வாங்கி முகர்ந்து பார்த்து ஆசையுடன் மனத்திற்குள்] ஆச்சரியம்! இந்தச் சவுக்கம் ஜாதிப் புஷ்ப மணமுள்ளதாக இருக்கிறது! இவன் யௌவனம் வெறுக்கப் படவில்லை [என்று போர்க்கிருள்.]

சாருதத்தன்.—இரதனிகே! ரோஹஸேனனை எடுத்துக்கொண்டு உள்ளே போ.

வஸந்த.—[தனக்குள்] உமது வீட்டிற்குள் நுழையக்கூடிய அதிர்ஷ்டம் எனக்கு இல்லையே.

சாருதத்தன்.—இரதனிகே! பதிற்கூடக்கிடையாதா, ஹா! கஷ்டம்!

விதியினு லொருவன் வெறுக்கையிற் றீருந்
ததியினி னட்டோர் சார்பில ராவர்
துதியொடு பன்னுட் பழகிய தொல்லோர்
மதிப்பகன் றன்பு மறந்திடல் வழக்கே. (53)

விதூஷ.—[இரதனிகையிடஞ் சென்று] ஓய்! இரதனிகை இதோ இருக்கிருள்.

சாருதத்தன்.—அவள் இரதனிகையானுல் இவள் யார்?

என்றுகிலை யேந்தியதா
லிம்மடமான் சிந்தையுற்ருள் (53½)

வஸந்த.—[மனத்திற்குள்] பூஜிக்கப்பட்டவளன்ருே!

சாருதத்தன்.—

மன்சரத்து முகில்மறைத்த
† மதிலேகை தனைநிகர்த்தாள். (54)

அல்லது பிறன்மனையாளை நாம் பார்த்தல் சரியல்ல.

விதூஷ.—ஐய! பிறன் மனையாளைப் பார்க்கிறோமென்ற அச்சம் வேண்டாம்; இவள் காமதேவன் கோயில் தோட்டத்தில் உன்னைக்கண்டு, உன்னிடத்தில் ஆசையுற்றவளான வஸந்தசேனை!

சாருதத்தன்.—ஓகோ இவள் வஸந்த சேனையா? [மனத்திற்குள்]

செல்வமெலா மழிந்து ‡ தவத்தரித்திரத்திற் றேய்வுறுங்கால்
மெல்லியன்மீ தநுராகம் விளைந்ததெனக் கென்புரிவேன்
புல்லனிடத் ததிகோவம் புறம்பொசியா தழிதலைப்போல்
வல்லையிலென் னநுராகம் வன்மனத்தே மடிந்திடுமால். (55)

விதூஷ.—ஓ மித்திரா! அரசன் மைத்துனன் இவ்விதஞ் சொல்லுகிறான்!

சாரு.—என்ன?

விதூஷ.—"பொன்னோடும், சுவர்ணத்தோடும், தங்கத்தோடும் கூடியவளும், புதிய நாடகத்திற் சூத்திரதாரன் போலுமிருக்கிற வஸந்தசேனையென்கிற தேவடியாள் மகள், காமதேவன் கோவில் தோட்டத்தில் உன்னைக்கண்டது முதல், உன்மீது ஆசைவைத்தவளை நாம் பலவந்தமாய் அநுநயஞ்செய்தும் உன் வீட்டிற் புகுந்திருக்கிறாள்."

---

† மதிலேகை=சந்திரனுடையவரி.

‡ தவ=மிகுதி "அவைதாம், உறுதவநனியென வருஉமூன்று, மிகுதி செய்யும் பொருளவென்ப" தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரியியல் சூத். 3.

வஸந்த.—[மனத்திற்குள்] பலவந்தமாய் அநுநயஞ்செய்தானென்பது ஸத்தியம்; இந்த எழுத்துக்களால் நான் அலங்கரிக்கப்பட்டேன்.

விதூஷ.—“அவளை என் கையில் நீயே சுவயமாகக் கொண்டு வந்துவிட்டால், நீதி ஸபையில் வியவகாரமில்லாமலே, விரைவில் கொண்டுவந்துவிடுகிற உன்பேரில் பிரியமுண்டாகும். அல்லது கொண்டுவந்து விடாமற்போனால் உயிருள்ளவரையில் பகையுண்டாகும்” என்று.

சாருதத்தன்.—[அலட்சியமாக] அவன் மூடன். [தனக்குள்]

பெண்டெய்வ மெனப்பூசை பேணத்தக்க
பெருமையுற்ற செல்வியிவ ளென்றுட்கொண்டே
னெண்டொடியே! உள்ளேகென் றுரைத்தேன்செல்ல
வுடம்படுதலின்றி மலர்க் கொடிபோனின்று
ளெண்டகைசே ராடவர்கள் பழக்கத்தாலின்
றெவ்வளவோ † சாடுமொழி யியம்பக்கற்ற
கண்டுமொழிக் கெண்டைவிழிச் செண்டுக்கொங்கைக்
காரிகையாள் வாய்திறவா விரதங்கொண்டாள். (56)

[வெளிப்படையாக] பவதி வஸந்தஸேனையே! தெரியாமையினால் பரிஜனமாக உன்னை நினைத்து நான் நடந்துகொண்டமையால் அபராதியாயினேன். தலைவணங்கி உன்னை மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வஸந்த.—நான் பிரவேசிக்கக் கூடாத இடத்தில் பிரவேசித்தபடியால், நான் அபராதியாகிவிட்டேன். ஆகையால் ஆரியரைச்சிரத்தால் வணங்கி மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

விதூஷ.—ஓய்! நீங்கள் இருவரும் சுகமாகச் சம்பாப்பயிர்போலும், வயல்போலும் ஒருவரையொருவர் நமஸ்காரஞ்

† சாடு = சாதுரியம், வடசொல்.

செய்துகொண்டு தலையோடுதலையைச் சேர்த்துக்கொண்டிருக்கிறீர்கள்; நானும் ஒட்டகைமுழங்கால்போன்ற என் றலையாலும் உங்களை நமஸ்கரிக்கிறேன். [என்று எழுந்திருக்கிறான்.]

சாருதத்தன்.—அன்பு மொழிகள் இருக்கட்டும்; வஸந்தஸேனே! உன்வரவு நல்வரவு ஆகுக.

வஸந்த.—[மனத்திற்குள்] இந்த வார்த்தைகள் மதுரமாகவும் சமர்த்தாகவும் இருக்கிறது. இவ்விதம் இங்கு வந்திருக்கிற நான், இந்த ஸமயம் இங்கிருப்பது உசிதமல்ல; இருக்கட்டும்; இந்த விதமாய்ச் சொல்லுகிறேன் [பிரகாசமாக] ஆரிய! இவ்விதமாக நான் ஆரியரால் அனுக்கிரகிக்கப்பட்டவளாயின் இந்த அலங்காரத்தை ஆரியருடைய வீட்டில் அடைக்கலமாக வைக்க நான் விரும்புகிறேன்; அலங்கார நிமித்தமாக இந்தப்பாவிகள் என்னைப்பின்றொடருகின்றனர்.

சாருதத்தன்.—இந்த வீடு அடைக்கலத்திற்குத்தகுதியற்றது.

வஸந்த.—ஆரிய! தாங்கள் சொல்வது தவறு; அடைக்கலங்கள் மனிதர்களிடத்தில் வைக்கப்படுகின்றனவேயன்றி வீட்டைப்பொறுத்ததல்லவே?

சாருதத்தன்.—மைத்திரேய! இந்த ஆபரணத்தை வாங்கிக்கொள்ளு.

வஸந்த.—அநுக்கிரகிக்கப்பட்டவளானேன் [என்று ஆபரணத்தைக்கொடுக்கிறாள்]

விதூஷ.—[வாங்கிக்கொண்டு] உனக்கு மங்களமுண்டாகட்டும்.

சாருதத்தன்.—சீ! மூட! அது அடைக்கல சொத்தல்லவோ?

விதூஷ.—[† அபவாரிதமாக] அப்படியானால் திருடன் கொண்டு போகட்டுமே.

சாருதத்தன்.—சமீபகாலத்தில் [சீக்கிரமாக]

விதூஷ.—இது நம்மிடத்தில் அடைக்கலமல்லவா ?

சாருதத்தன்.—திருப்பிக்கொடுப்பேன்.

வஸந்த.—ஆரிய ! இந்த ஆரியரால் பின்றொடரப்பட்டவளாக வீட்டுக்குப்போக விரும்புகிறேன்.

சாருத.—அவளைப் பின்றொடர்ந்து போம்

விதூஷ.—அவள் பின் நீர்சென்றால் அழகிய பெட்டையன்னத்தின் பின்னர் அரச அன்னம் போதலை யொத்திருக்கும். யானோ பிராமணன். நாற்சந்தியிற் போடும்பலிகளை நாய்கள் ஒன்றோடொன்று சண்டையிட்டுத்தின்றல்போல எனக்கு விபத்து விளையும்.

சாரு.—அப்படியே யிருக்கட்டும், நானே போகிறேன். ஆகையால் இராஜமார்க்கத்தில் நம்பிக்கையோடு போதலின்பொருட்டுத் தீவட்டி கொளுத்தச் சொல்லும்.

விதூஷ.—வர்த்தமானக ! தீவத்தி சித்தஞ் செய்.

சேட.—[சபையை நோக்கி] அடே ! எண்ணை யில்லாமற் றீவட்டிகொளுத்தப்போகிறேன்.

விதூ.—[சபையைப் பார்த்து] செல்வமற்றவனிடம் பிரியத்தை வைத்த தேவடியாள் அவனை அலட்சியஞ்செய்தலொப்ப, நமது தீவட்டிகள் ‡ சிநேகமற்றவைகளாயின.

சாருத.—மைத்திரேய ! இரும், தீவட்டிஎதற்காக? இதோபாரும்.
இராசவீதியின் மாசகல் விளக்கெனக்
காமினிகபோல காந்திபோல் விளர்த்தும்

---

† அபவாரிதமாக=முகத்தின் ஒரு பக்கத்தில் ஒரு கையினால் (திருபதாக ஹஸ்தம்) பிறர்கேளாவண்ணம்மறைத்துக்கொண்டு.

‡ சிநேகம்=நண்பு, தயிலம்.

† யாமினிவிண்மீ னினங்களாற் சூழ்ந்தும்
விண்ணிலுலாவுந் தண்ணிய மதியின்
வெண்பொனிகர்த்த நன்னிலாக் கிரண
நீருறக்கலந்த பால்வணப் ‡ பங்க
மேலுறச் சொரியும § பயமென
நீனிறவிருளி னிமிர்ந்துவீழ் கின்ற (57)

[அன்போடு] வசந்தசேனையே ! இது உன் வீடு. உள்ளே செல்லுதி.

(வசந்தசேனை அதிக அநுராகத்தோடு பார்த்துக்கொண்டே உட்புகுந்தனள்.)

சாருதத்தன்.—நண்பனே ! வஸந்தசேனை போய்விட்டாள் ; ஆகையால் போ ! வீட்டுக்குப்போவோம்.

பலர்செலுமி ராஜவீதி சூனியம் பட்டகாவற்
றலைவர்க ளங்குமிங்குஞ் சஞ்சரிக் கின்றார் வஞ்சங்
குலைபடல் வேண்டுமிந்தக் குவலயஞ் சூழிராவு
மலைநிக ரிருளினோடு வன்புறப் பொருந்திற்றன்றே (58)

[கொஞ்சதூரம் போய்] இந்தத் தங்கபாத்திரத்தை இரவில் நீர் காப்பாற்றவேண்டும்; பகலில் வர்த்தமானன் காப்பாற்ற வேண்டும்.

விதூஷ.—உமது உத்தரவுப்படியாகட்டும். [என்று போய்விட்டார்கள்.]

மிருச்சகடியில் ஆபரண அடைக்கலம் என்கிற முதலங்கம்

முற்றிற்று.

---

† யாமினி=இராத்திரி "அல்லிபாவரியேகங்கு லல்கல் யாமினீயே நத்தம்" சூடாமணி நிகண்டு.

‡ பங்கம்=சேறு "பங்கமே சேறு தூசுபழுதொடு பின்னமாமே" நிகண்டு.

§ பயம்=பால் "பழுதிலாத பயோவிரதத்தினை" பாகவதம். 8-ஸ்கந்தம். வாமநாவதார செய்யுள் 13.

## இரண்டாவதங்கம்.

(சேடி பிரவேசித்து)

சேடி.—ஆரியை யிடத்திற் செய்தி சொல்லும்படி ஆரியையின் ருயினுல் அனுப்பப்பட்டிருக்கிறேன். ஆகையால், இப் பொழுது ஆரியையின் அருகிற்போகிறேன். [கொஞ்சதூரம் போய்ப்பார்த்து] இந்த ஆரியை எதையோ மிகவும் ஆலோசித்துக்கொண்டிருக்கிருள்; ஆரியை அருகிற்போகிறேன்.

(பிறகு ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு, கவலையுடன் வஸந்த சேனையும் மதனிகையும் பிரவேசிக்கிருர்கள்.)

வஸந்த.—அடியே! அப்பால், அப்பால்.

மதனி.—ஆரியே! நான் ஒன்றுஞ் சொல்லவில்லையே. அப்பால், அப்பால் என்னை?

வஸந்த.—என்ருல் என்ன சொல்லப்பட்டது?

மதனி.—அப்பால், அப்பாலென்று.

வஸந்த.—[புருவங்களை நெரித்துக்கொண்டு] ஆம், அப்படியே.

சேடி.—[சமீபத்தில் வந்து] ஆரியே! நீரில் மூழ்கித் தேவதைகட்குப் பூஜை செய்யும்படி அம்மாள் சொல்லுகிருள்.

வஸந்த.—சேடி! இன்றைக்கு நான் ஸ்நானம் செய்யவில்லை; பிராமணனே தேவபூஜை செய்யட்டும் என்று நான் சொன்னதாக அம்மாளிடம் சொல்லு.

சேடி.—ஆரியையின் உத்தரவுப்படி [என்றுபோய்விட்டாள்].

மதனி.—ஆரியே! சிநேகமுறைமையிற் கேட்கிறேன்; வேருக எண்ணுதை; இஃதென்னை!

வஸந்த.—மதனிகையே! நான் எவ்விதமாக இருக்கிறதாக உனக்குத் தோற்றுகிறது?

மதனி.—ஆரியே! நீ செய்கையற்ற மனமுடையவளாயி ருக்கிறபடியால், மனத்தில் யாரையோ நினைத்து மையல் கொண்டிருப்பதாய் எண்ணுகிறேன்.

வஸந்த.—நீ நன்றாயறிந்துகொண்டாய்; பிறர்மனத்தை யறியும் பண்டிதை யென்னும் மதனிகையன்றோ நீ?

மதனி.—சந்தோஷம்! சந்தோஷம்! நமது பகவானே காம தேவன்; அவன் தருண ஜனங்களுக்கு அநுக்கிரகஞ் செய் கிற மஹோத்ஸவம் போன்றவனன்றோ? ஆரியே! பிரிய மாய்ச்சொல்லு; உன்னால் ஸேவிக்கப்படுகிறவன் அரசனா? அரசப்பிரியனா?

வஸந்த.—சேடி! நான் இரதிக்கு ஆசைப்படுகிறேனே யன்றிப் பணியவல்ல.

மதனி.—கல்வியாலலங்கரிக்கப்பட்டிருக்கிற பிராமண யுவாமீது மையல் கொண்டிருக்கிறாயா என்னை?

வஸந்த.—என்றாற் பிராமணர்கள் பூஜிக்கத்தக்கவர்கள்; காமிக் கத்தக்கவர்களல்லவே!

மதனி.—பல பட்டினங்கட்குப்போய்ச் சம்பாதித்த வாணிபக் காளையையா இச்சித்திருக்கிறாய்?

வஸந்த.—மிகு நண்பு பூண்ட காதலிகளைப்பிரிந்து தேசாந்தரம் போகிறபடியால், வணிகர்கள் பிரிவால் உண்டாகிற துய ரத்தை உண்டாக்குகின்றனர்.

மதனி.—ஆரியே! இராஜனல்ல; இராஜப்பிரியனல்ல; பிரா மணனல்ல; வைசியனல்லவென்றால், மற்றை யார்பேரில் நீ காதல்கொண்டாய்?

வஸந்த.—பாங்கி! நீ யெனது காமதேவன் கோயில் தோட்டத் திற்கு வந்தாயன்றோ?

மதனி.—வந்திருந்தேன்.

வஸந்த.—அப்படியிருந்தும் அறியாதவள்போல் கேட்கிருயே!

மதனி.—தெரிந்தது; என்ன! அவர்தானு? சரண்புகுந்த வுனக்கு எவர் அடைக்கலங்கொடுத்தாரோ அவரா?

வஸந்த.—அவர்பெயரென்ன?

மதனி.—செட்டித்தெருவிலிருக்கிருரே!

வஸந்த.—அடீ! அவர்பெயரையல்லவா கேட்டேன.

மதனி.—ஆரியே! நற்கொடைவள்ளலென்ற பொருள் தருஞ் சாருதத்தனலலவா அவர் பெயர்?

வஸந்த.—[மனக்களிப்போடு] நல்லது மதனிகே! ஸாது. நீ நன் கறிந்தாய்.

மதனி.—[தனக்குள்] இந்தப் பிரகாரஞ் சொல்லுவேன் [வெளிப்படையாக] ஆரியே! அவர் தரித்திரனென்று கேள்வி.

வஸந்த.—அதனுற்றுன் நான் மையல் கொண்டேன்; தரித்திரனிடத்தல மநத்தைச் செலுத்திய தாசியை உலகத்தார் நிந்தியார்களனறே!

மதனி.—பூ இல்லாத கட்டுமாமரத்தை † மதுகரி விரும்புமோ?

வஸந்த.—அதனுற்றுன் இவ்வண்டு மதுகரியென்ற பெயர்படைத்தது.

மதனி.—ஆரியே! அவரிடத்தில் நீ ஆசைகொண்டாயானுல், நீ யேன் காமித்துச் செல்லல் கூடாது?

வஸந்த.—மோகத்தால் விரைவிற் செல்லுபவர்கட்குப் பிரதியுபகாரஞ் செய்யுந் திறமில்லாமையாற் பிறகு பார்த்தல் அரிதாகும்; அது கூடாதென்கிற கருத்தினுற்றுன்.

† மதுகரி = பெண் வண்டு. இதன் ஆண் 'மதுகரம்'

மதனி.—என்னே ? அந்தக்காரணத்தை முன்னிட்டுத்தான் ஆப ரணங்களை அடைக்கலம் வைத்து வந்தாயோ ?

வஸந்த.—பாங்கி ! நன்றுயறிந்துகொண்டனை.

[திரைக்குள்]

ஐயா! பத்துப் பொன்னுக்காகப் பிடிபட்ட சூதாடியானவன் ஓடுகிருன் ! ஓடுகிருன் !! அவனைப் பிடியும் ! அடே பயலே நில்லு, நில்லு ! அதோ ஓடுகிருன். [சம்வாஹகன் திரையை ப்பீறிக்கொண்டு † பரபரப்புடன் பிரவேசிக்கின்றனன்.]

சம்வா.—அக்கோ ! அச்சோ !! சூதாட்டந்துன்பமடா அப்பா !

புதிதாக அவிழ்த்து விட்ட
கழுதையைப்போற் ‡ கவடியினுன்
மதியங்க வரசன்விட்ட
சத்தியெனு மாப்படைபோல்
அதிவன்மை யுற்றகடோற்
கசன்போலச் சத்தியினுல்
கதியிழந்த பேதையைப் போற்
கலந்தடிக்கப் பட்டேனே. (1)

மேலும்

கவருட்ட வாதாயக்
கணக்கனெனுஞ் சபிகனைக்கண்
டுவமாக மறுதிகிலா
னுற்ருேடி னேன்வழியி
லவமாக மிகப்பெருக
ஆ ! வழியி லேவிழுந்தேன்
தவமிலியான் யாரையினிச்
சரண்புகுவேன் றளர்ந்தேனே. (2)

† பரபரப்பு=விரைவைக் காட்டுந் திசைச்சொல்.

‡ கவடி.=சோகி.

இச்சபிகனுஞ் சூதாடியும் என்னைப் பக்கத்திற்றேடிக் கொண்டிருக்கும்போது, அடிச்சுவடு தெரியாவண்ணம் இந்தப் பாழ்த்த கோயிலுட்புகுந்து தேவியாய் விடுகிறேன். [அவ்வண்ணம் பலவகையான பாசாங்குசெய்து கோயிலிற் றேவிபோல வீற்றிருந்தனன்.]

(மாதுரனுஞ் சூதாடியும் பிரவேசம்.)

மாதுர.—பத்துப்பொன்னினிமித்தம் பிடியுண்ட சூதாடியோடுகிறான்; அவனைப்பிடியுங்கள் பிடியுங்கள்! அடபயலே! நில்லு, நில்லு! அதோ ஓடுகிறான்! ஓடுகிறான்!!

சூதாடி.—

பாதலத்துக் கோடினுமென்
 † பலாரிசரண் ‡ புக்கினுமென்!
சூதில்வல்ல சபிகனன்றித்
 துணைபுரிவார் யாவரடா?
மாதுபங்க னென்னுமந்த
 வரைவில்லி யுருத்திரனும்
போதிலுனைக் காத்தல்செயும்
 பொருட்டெவரன் போலுமடா! (3)

மாதுர.—

நற்சபிகனை வஞ்சிப்பா
 னுடிநீயோடா நின்றாய்
அற்பனே யெங்குப்போவாய்?
 அடிக்கடி கால்கண்மாறிச்
சற்குலங் கீர்த்தியாவுந்
 தறைமிசைக் § கறைக்குளாக்கி
வற்புமிக் கோடலுற்றாய்
 மாழ்கியெங் குறுவாய்மாதோ (4)

சூதாடி.—[பாத அடையாளத்தைப்பார்த்து] இங்குப் பாதச்சுவடிருக்கிறது; இதற்கப்பால் அடிச்சுவடு தெரியவில்லையே.

† பலாரி=இந்திரன். ‡ புக்கல்=புகுதல். § கறை=குற்றம்.

மாதுர.—[பார்த்து ஆலோசனையோடு] அடே! பாதச்சுவடு கோணலாகவிருக்கிறது. கோவிலிற் றேவப்பிம்பமில்லை. பாழுங் கோயில் [யோசித்து] தூர்த்தனை சூதாடி வக்கிரமுற்ற அடிகளுடன் கோயிலில் நுழைந்திருக்கின்றனன்போலும்.

சூதாடி.—அப்படியானால் நாம் அடிபிடித்துப்போவோம்.

மாதுர.—அப்படியே யாகட்டும். (இருவருங் கோயிலுக்குள் நுழைந்து ஒருவனையொருவன் பார்த்துச் சாடை செய்துகொண்டு)

சூதாடி.—தேவப்பிரதிமை கட்டைபோலிருக்கின்றதே.

மாதுர.—அடே அல்ல, அல்ல; கல்லுப் பிரதிமையடா, அல்ல அல்ல (என்று பலவிதமாயசைத்துப் பார்த்துச் சன்னைசெய்து கொண்டு) அப்படியேயிருக்கட்டும்; வா, நாஞ் சூதாடுவோம (என்று பலவகையான சூதாடுகின்றனர்)

சம்வாஹ.—[சூதாட்டத்திலிருக்கும் ஆசையாற் பலப்பல சேட்டைகளைத் தனக்குள்ளடக்கிக்கொண்டு, [மனத்திற்குள்]

அரசினையிழந்த வோரரசன்காதினில்
முரசொலிபட்டது போல மொய்த்திடும்
பொருளிலான் செவிகளிற் புகுமிவ் † வல்லொலி
தரமிலாத்துன்பினைத் தருதல் என்னையோ? (5)

மிகச்சூதாட்டந் தனில்வல்லேன்
மேருச்சிகரத் தினினின்று
மகிக்கண்வீழ்தல் நிகர் ‡ கவற்றை
மகிழ்வுற்றினியா னாடேனல்

† வல்=சூதாடு கருவி.

‡ கவறு=சூது "இருமனப்பெண்டிருங்கள்ளுங்கவறுந், திருநீக்கப்பட்டார் தொடர்பு" திருக்குறள் 92ம் அதிகாரம் வரைவின்மகளிர்குறள் 10.

† பிகத்தின்குரல்போற் செவிதமக்குப்
பேராவின்ப நனிவிளைத்தே
‡ அகத்தைக்கவருந் திறமிந்த
வாயந்தனக்கே உளதம்மா! (6)

சூதா.—அடே எனக்கு விழுந்தது; என் ஆட்டம்.

மாதுர.—அல்லடா! என் ஆட்டமல்லவோ!

சம்வாஹ.—(ஒரு பக்கத்திற் குதித்தோடிவந்து) அடே அல்ல! என் ஆட்டமடா!

சூதா.—அடே பயலகப்பட்டான்.

மாதுர.— (பிடித்துக்கொண்டு) அடே தப்பியோடியபயலே! அகப்பட்டாய்! பத்துப்பொன்னையுங்கொடு!

ஸம்வாஹ.—இதோ கொடுக்கிறேன்.

மாதுர.—இப்போழ்தே வேண்டுங்கொடு.

ஸம்வாஹ.—தயைசெய்யும்; தருகிறேன்.

மாதுர.—பயலே! இந்த நொடியிற் கொடடா!

ஸம்வாஹ.—தலைசுற்றுகிறதே ஐயோ (என்று பூமியில் விழுகிறான்; இருவரும் பலவாறாய் அடிக்கிறார்கள்.)

மாதுர.—சூதாடிகளுடைய இந்தக் கோட்டினுற் கட்டப்பட்டாய்.

ஸம்வாஹ.—(எழுந்து துக்கத்தோடு) சூதாடிக்கோட்டிற்குள் அகப்பட்டுவிட்டேனு என்ன? சூதுக்கோட்டில் அகப்பட்டால் அக்கோட்டைத் தாண்டக்கூடாதே, நான் எவ்விதங்கொடுப்பேன்.

† பிகம்=குயில். ‡ அகம்=மனம்.

மாதுர.—அடே! பிணை கொடு!

ஸம்வாஹ.—அப்படியே ஆகட்டும் (சூதாடியிடம்போய்) அரை வாசிப் பொன் தருகிறேன். அரைவாசியை மன்னித்துவிடு.

சூதாடி.—அப்படியே ஆகட்டும்.

ஸம்வாஹ.-(சபிகனை மாதுரனிடம்போய்) அரைவாசிக்குப்பிணை கொடுக்கிறேன்; பாதியை விட்டுக்கொடு.

மாதுர.—குற்றமில்லை; அப்படியே ஆகட்டும.

ஸம்வாஹ.—(வெளிப்படையாக) ஐயா பாதியெனக்குவிட்டுக் கொடுத்தீரல்லவா?

மாதுர.—ஆம் விட்டுக்கொடுத்தேன்!

ஸம்வாஹ.—(சூதாடியை நோக்கி) நீரும் பாதிவிட்டுக் கொடுத்தீ ரல்லவா?

சூதா.—ஆம் விட்டுக்கொடுத்தேன்.

ஸம்வாஹ.—இப்போது நான் போகிறேன்.

மாதுர.—எங்கடாபோகின்றாய், பத்துப்பொன்னையுங்கொடு.

ஸம்வா —ஐயன்மீர்! பாருங்கள் ஆ! ஆ! இப்பொழுதுதான் ஒருவனிடத்திற் பாதிக்குப்பிணை கொடுத்தேன். மற்றொருவன் பாதியைவிட்டுக் கொடுத்தான். என்றாலுஞ்சக்தியற்ற என்னை இப்போதே கொடுவென்கிறான்!

மாதுர.—(பிடித்துக்கொண்டு) அடபோக்கிரி! நான் மாதுரன்! கைகாரனல்லவா! என்னிடத்தில் உன் போக்கிரித்தனங் காட்டுகிறாயே! உன் கைச்சரக்கு என்னிடஞ்செல்லாது! பத்துப்பொன்னையும் இந்த நொடியிற்கொடு! தப்பி ஓடின பயலே!

சம்வா.—எங்கிருந்து கொடுப்பேன்?

மாதுர.—உன்றகப்பனைவிற்றுக்கொடு.

சம்வாஹ.—எனக்குத்தகப்பன் இல்லையே!

மாது.—தாயைவிற்றுக்கொடு.

சம்வாஹ.—எனக்குத்தாயுமில்லை.

மாது.—உன்னைவிற்றுக்கொடுபயலே!

சம்வாஹ.—அப்படியே செய்கிறேன். தயவுசெய்து என்னை இராஜவீதியிற் கொண்டுபோங்கள்!

மாதுர.—வாடாபயலே!

சம்வாஹ.—அப்படியேயாகட்டும் [சிறிதுதூரஞ்செல்கின்றனன்] ஆரியர்காள்! சபிகனிடத்திற் பத்துப்பொன்னைக் கொடுத்து என்னையாரேனும் வாங்கிக்கொள்ளுங்கள். [ஆகாயத்தைப் பார்த்து] என்ன செய்வாய் என்று கேட்கின்றீர்கள்? தங்கள் வீட்டில் எல்லாவேலையுஞ் செய்வேன்; என்ன! பதிற் சொல்லாமற் போய்விட்டானே! இருக்கட்டும். வேறொருவன் போகிறான், அவனைக்கேட்பேன். [முன் சொன்னபடி மொழிகின்றனன்] என்னை! இவருங்கவனியாது செல்கின்றனரே! ஐயோ! ஆரியசாருதத்தனுடைய செல்வமழிந்தமையாற்றுர்ப்பாக்கியனாயினேன்.

மாதுர.—கொடடா. பொன் எங்கடா?

சம்வா.—எங்கிருந்து கொடுப்பேன் [என்று தரையில்வீழ்கின்றனன் மாதுரன் இழுக்கின்றனன்] ஐயன்மீர்! காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!!

(தர்த்துரகன் பிரவேசம்)

தர்த்துர.—ஓகோ! சூதாட்டம் ஒரு மனிதனுக்குச் சிங்காசனமில்லாத இராஜ்யம்.

பிறர்பாற்றேல்வி தனைக்கருதாப்
பெருநாடோறும் பொருள் வாங்கல்
உறவேகொடுத்தல் உளஉலகை
யோம்புமரசன் வருவாய்போற்
றிறமையாயம் வரத்துமுள
செல்வம் படைத்த மாந்தர்களு
மறவேயாசைப்படவிந்த
ஆயந்தனக்கே யாமன்றோ? (7)

மேலும்

சூதினாலமனை யாட்டியுஞ் சொன்னமுஞ்
சூதினாற்கொடையுந் துதி நண்பருஞ்
சூதினாற்பல வுமவருஞ் சொல்லிய
சூதினாற்பல வுந்தொலைந் தோடுமே. (8)

† திரேதையால் யாவுஞ் சரேலென வழிந்தும்
‡ பாவரத்தா லுடம பானது குன்றியும்
§ நர்த்திதத் தாலே நடைவழி கண்டும்
|| கடத்தால் மோதி யடிந்தலை யுற்றும்
உடலெலா நடுங்கி யோடுகின் றேனே (9)

(முன்னர் நோக்கி)

நமக்குமுன் சபிகனாய் இருந்த மாதுரன், இதோ இந்தப் பக்கத்தில் வருகிறான்; அப்பாற்போகமுடியவில்லை; மெல்லத்தலையில வஸ்திரத்தைப் போட்டுக் கொள்ளுகிறேன். [பலவிதமாய் நடித்து நின்றான்].

(உத்தரீயத்தைப்பார்த்து)

நூலிலாதாகி யெண்ணில்
புழைகளா னேன்மையுற்ற
தாதலாலிந்த வுத்த
ரீயத்தை விரித்தல் மூடல்

---

† திரேதை ‡ பாவரம் § நர்த்திதம் || கடம் இவை சூதாட்டபேதம்,

போதுலாம் பிரமனேனும்
புரியலாந் திறத்தனல்லன்
ற்றிலா திலைதழூடிச்
சேமித்தல் சிறப்பிற்றோ (10)

அல்லது இந்த மாதுரன் அற்பன்; இந்தப்பயல் நம்மை யாது செய்யக்கூடும்!

விண்மணி தோன்றலதொட் டந்தியின் காறும்
மண்மிசை யொருகால் விண்ணின்மா றொருகால்
உண்பவை பெறாத பறவையைப் போல
நண்ணியே போடா நின்றனனிங்கே (11)

மாதுர.—கொட்டா, கொட்டா.

ஸம்வாஹ.—எங்கிருந்து கொடுப்பேன் (மாதுரன் பிடித்திழுக்கிறான்.)

தர்த்துர.—அடே, இது என்னடா (ஆகாயத்தில்) "இந்தச் சூதாடியானவன் சபிகனாற்றுன்பப்படுத்தப்படுகிறான்; அவனுக்கோ ஒத்தாசை இல்லை" என்று சொல்லுகிறாய்? இதோ தர்த்துரன் வந்திருக்கிறேன். அவனை விடுவிப்பேன் (போய்) பாதை விடுங்கள், பாதை விடுங்கள் (பார்த்து) அந்தப் போக்கிரி மாதுரனோ! இந்த ஸம்வாஹகன்.

பகன்முற்றுங்குனிந்த தலைநிமிராத பண்பனிவன்
மகிதலத்தி விழுந்துமிவன் † குரம்பை வருந்திலதே
புகுமிவனை நாய் கடிக்கிற் புண்ணிவிடம் மிலதே
தகுதியிலா வுடலாற்குத் தாயமெதன் பொருட்டே (12)

இருக்கட்டும்; மாதுரனைக் கொஞ்சஞ்சமாதானப்படுத்துகிறேன் (சென்று) மாதுர! வந்தனம் பண்ணுகிறேன் (மாதுரன் பிரதி வந்தனஞ்செய்கின்றனன்.)

† குரம்பை=உடல் "இமைக்கும்போது மிராதிக்குரம்பைதான்" திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம். திருநல்லப்பதிகம் 1.

தர்த்துர.—இது என்னடா இது?

மாதுர.—இவன் எனக்குப்பத்துப்பொன் கொடுத்தல் வேண்டும்.

தர்த்துர.—இது என்ன பெரிதா?

மாதுர.—(தர்த்துரனுடைய கழுக்கட்டில் சுருட்டிவைத்திருக்கும் உத்தரீயத்தை இழுத்து) ஐயா! பாருங்கள், பாருங்கள்! கந்தையான அங்கவஸ்திரமுடைய இந்தத்தர்த்துரனுக்குப் பத்துப்பொன் அற்பமாம்!

தர்த்துர.—அடமூர்க்க! பத்துப்பொன்னையுஞ் சில நிமிஷத்திற் சூதாடிக் கருவேனடா! பணமிருந்ததானால் அதைக்கழுக்கத்தில் வைத்துக்காட்டுகிறதா? என்ன அடே!

இழிந்தசாதிப் பயலே பதிதனே!
மொழிந்தவைம்பொறி முற்று மொருவனைக்
கழியுமீரைந்து † காஞ்சநத் தின்பொருட்
‡ டழிந்தல்செய்த லடுப்பதனா முமரோ (13)

மாதுர.—ஐயா உமக்குப் பத்துப்பொன் அலட்சியம். அது எனக்குப் பெரியசெலவம்.

தர்த்துர.—அங்ஙனமாயின் யான் கூறுவதைக்கேளும். இன்னொரு பத்துபொன்னை அவனுக்குக்கொடும்; அவன் சூதாடட்டும்.

மாதுர.—கொடுத்தால்.

தர்த்துர.—ஜயித்தாற்கொடுப்பான்.

மாதுர.—வெல்லாவிடில்.

தர்த்துர.—அப்போது கொடுக்கமாட்டான்.

† காஞ்சநம்=பொன். இங்கு ஆகுபெயராய் ஓர் வகை நாணயத்தைச்சுட்டிற்று.
‡ அழித்தல் செய்தல்=கெடுதி பண்ணல். அழிந்தலெனமெலிந்தது.

மாதுர.—அங்ஙனமாயின், இவ்விதம் உளறுதல் சரியல்ல நீ போக்கிரி. நீ கொடுத்துவிடு. நான் மாதுரன்! தூர்த்தன்! இதுபரியந்தஞ்சூதாடினது வீணன்று. யாரிடத்தில் யான் அச்சமுடையவன்! நீ போக்கிரி! கெட்டபயல்!

தர்த்துர.—அடலே, யாரடாகெட்டபயல்?

மாதுர.—நீதானடாபயலே.

தர்த்துர.—உங்களப்பன் கெட்டபயல் [சம்வாஹகனைக் கண் சாடை காட்டி அப்பால் வரும்படி சொன்னான்]

மாதுர.—அடவேசிமகனே! இவ்வண்ணஞ் சூதாடியல்லவா நீ கெட்டாய்?

தர்த்துர.—இவ்வண்ணந்தான் நான் சூதாடினேன்!

மாதுர.—அடலே சம்வாஹகா! பத்துப்பொன் எங்கடா, தாடா.

சம்வாஹ.—இதோதருகிறேன் [மாதுரன் பிடித்திழுக்கின்றனன்]

தர்த்துர.—அடமூர்க்க! நான் பாராத தருணத்தில் அவனைவருத்தலாம். நான் பார்க்கும்போழ்து முடியாது.

[மாதுரன் சம்வாஹகனை இழுத்து முட்டியால் மூக்கிலடிக்கின்றனன்; சம்வாஹகன் மூக்கிலிரத்தம் வடிய அவன் மூர்ச்சித்துத் தரையில் வீழ்கின்றனன்; தர்த்துரன் இருவருடைய மத்தியிற்செல்லுகின்றனன்; மாதுரன் தர்த்துரனையடிக்கின்றனன்; தர்த்துரன் வதிலடி அடிக்கின்றனன்]

மாதுர.—அட அடதுஷ்டத்தேவடியாள் மகனே! இதன் பயனையநுபவிப்பாய்!

தர்த்துர.—அடமூர்க்க! வழியிற் போகிற என்னை யடித்தனை. நாளையதினம் இராஜகுலத்தில் வந்து அடி. அப்போதுபார்க்கலாம்.

மாதுர.—ஆகா, பார்ப்போமடா.

தார்த்துர.—எவ்விதம் பார்ப்பாயடா?

மாதுர.—[கண்ணிரண்டையும் திறந்துகொண்டு] இப்படிப்பார்ப்பேன், [என்றனன்]. [தார்த்துரன் மாதுரனுடைய இருகண்களிலும் மணலைவாரித்தூவிவிட்டுச் சம்வாஹகனை ஓடிப்போகும்படி சாடை செய்கின்றனன். மாதுரன் இருகண்களையும் கசக்கிக்கொண்டு பூமியில் விழுகின்றனன். சம்வாஹகன் ஓடுகின்றனன்]

தார்த்துர.—[தனக்குள்] பிரதான சபிகனுனமாதுரன் என்னால் விரோதிக்கப் பட்டனன்; இவ்விடத்திலிருத்தல் இனிச்சரியலல; ஆரியகன் என்கிற இடைப்பையன் சித்தர்களுடையசொற்படி அரசனுகிவிடுவான் என்று எனது பிரிய நண்பன் சார்விலகன் சொல்லியிருக்கின்றனன்; நமமைப்போன்றவர்கள் ஆரியகனைப் பின்றொடருகிறுர்கள்; ஆகையால் யானும அவனிடம் போவேன் [என்று போயினன்]

சம்வாஹ.—[அசசத்தோடு கொஞ்சதூரஞ் சென்றுபார்த்து] இதோ யாருடையவீடோ கதவு திறக்கப்பட்டிருக்கின்றது; இதோ பிரவேசிக்கிறேன். [பிரவேசித்து வசந்தசேனையைப் பார்த்து] ஆரியே! † சரணுகதிபண்ணுகிறேன்.

வசந்த.—அடைக்கலம் புகுந்தானுக்கு அபயங்கொடுத்தேன். சகி! தலைவாசற்கதவைச்சாத்து [சேடி அப்படி மூடுகின்றனள்] யாரிடத்தில் உமக்குப்பயம?

சம்வாஹ.—ஆரியே! கடன்காரனிடத்தில்.

வசந்த.—பாங்கி! நன்றாகக் கதவைச் சாத்தினையா?

சம்வாஹ.—[தனக்குள்] என்ன? கடன்காரர்களிடத்தில் என்னைப்போல இவளும் அச்சப்படுகினறனள்போலும. பின்வருமெறபடி தெளிவாய்க் கூறப்பட்டுளதன்றே!

---

† சரணுகதி = அடைக்கலம்புகுதல் "சரணுகதியாய்ச்சரண்சென்றடைந்தபின்" மணிமேகலை பவத்திறமறுகெனப் 5.

தன்வலி யுணர்ந்துபின் சும்மை தாங்குவான்
உன்னுமோரிடுக்கணே யுருன் விலங்குசூழ்
மன்பெருங்காட்டக முற்று வாழினுந்
துன்னருங்கேடுகள் சூழ கிற்றிலன் (14)

மாதுர.—[கண்களைத் துடைத்துக்கொண்டு † தியூதகரனைப் பார்த்து] அடா! தா, கொடு.

தியூத.— ஐயா! நாம் தர்த்துரனோடு சண்டை செய்துகொண்டிருந்த சமயத்தில் அவன் ஓடிவிட்டான்.

மாதுர.—அந்தச் சூதாடியின் மூக்கு கைமுட்டியா லிடிபட்டதில் உடைந்துபோயிற்று. ஆகையா லிரத்தஞ் சிந்தியிருக்கும் வழியை நாடிப்போவேம் [அவ்வழியேபோய்]

சூதாடி.—ஐயா வசந்தசேனை வீட்டிலவன் நுழைந்திருக்கிறுன்.

மாதுர.—பணம் நமக்குக் கிடைத்துவிட்டது. நிச்சயம்!

சூதாடி.—அரசன் அரண்மனைக்குப்போய் அறிவிப்போம் வா!

மாதுர.—இந்த அயோக்கியன் இங்கிருந்து கிளம்பி வேறிடத்துக்குப் போவான். ஆகையா லிவனைத் தகைந்து மறித்துப் பிடித்துவிடுவோம்.

(வசந்தசேனை மதனிகைக்குச் சாடை காட்டுகின்றனள்)

மதனி.—தாங்களெங்கிருந்து வந்தீர்களோ? தாங்கள் யார்? தாங்கள் யாரைச் சேர்ந்தவர்கள்? தங்கள் தொழிலென்ன? யாரிடத்திற்ருங்கள் அச்சமுற்றீர்கள்?

சம்வாஹ.—ஆரியையேகேளு; பாடலிபுரம் என்னுடைய ஜநநபூமி; யான் குடித்தனக்காரன் மகன்; ‡ ஸம்வாஹகவிர்த்தியாற் சீவிக்கிறவன்.

வசந்த.—நல்ல வித்தையை நீர் கற்றிருக்கின்றீர்.

---

† தியூதகரன்=சூதாடி.

‡ கால்கைகளைப்பிடித்து வருத்தம் நீக்குதல் சம்வாஹகத்தொழில்.

சம்வாஹ.—அதை வித்தை யென்று பயின்றேன்; அது யெனக்குச் சீவனோபாயமாயிற்று.

சேடி.—ஆரியரால மறுமொழி கூறப்பட்டது; மேலே.

சம்வாஹ.—பிரகு என் வீட்டிற்கு வருகிறவர்களிடத்திற் கேள்வியுற்றபடி, அரிய தேசங்களைக்காண விரும்பி இங்கு வந்தேன். இந்த உச்சயினியிற்பிரவேசித்து ஒரு ஆரியனுக்குப் பணிவிடை செய்துவந்தேன். எவர் அழகும், இன்சொலலும், கொடுத்துச்சொலலாமையும, அபகாரத்தை மறத்தலும், உடையவரோ!—மிகுத்துரைப்பதில் என்னை!—அவர் தாட்சணியத்தாற் றன்னையே பிறர்க்குரியவனென நினைப்பவர்; அடைக்கலமுற்றோரைப பாதுகாப்பவர்.

சேடி.—இப்போது ஆரியையுடைய மனத்தில் வாசஞ்செய்கிறவனுடைய குணங்களைத் திருடி உச்சயினியை யலங்கரிக்கிற இவர் யார்?

வசந்.—மதனிகே! நல்லது! யானும் இவ்விதமே நினைத்தேன்.

சேடி.—ஆரிய! மேலே சொல்லுக.

சம்வாஹ.—ஆரியே! இப்போது அவர் கருணையால் அளித்த கொடையினால்.—

வசந்த.—அவர செல்வ மழிந்து போயிற்று என்னை?

சம்வாஹ.—சொல்லாமலிருக்கும்போதே ஆரியையால் எவ்வாறு அறியப்பட்டது?

வசந்த.—இங்கு அறியவேண்டுவதென்ன! குணங்களுஞ் செல்வமுங்கூடியிருத்த லரிது; குடிக்கததகுதியற்ற குளங்களில் மிகுதியுந் தண்ணீர் நிறைந்திருக்கின்றது.

சேடி.—ஆரிய! அவர் பெயரென்ன?

சம்வா.—அம்மணி! பூமியிலுதித்த சந்திரன்போன்ற அவர் பெயரை யறியாதார் யார்? அவர் செட்டித்தெருவில் வசிக்கின்றனர். புகழுற்ற ஆரியசாருதத்தனென்பது அவர் பெயர்.

வசந்த.—[பெருங்களிப்போடு ஆசனத்தைவிட்டிறங்கி] இந்தவீடு தங்களுடையதே. சேடீ! இவருக்கு ஆசநங்கொணர்ந்துபோடு, விசிறி எடுத்துக்கொள்ளு. ஆரியருக்குக் களைப்புண்டாகியிருத்தல் போலும் [சேடி அவ்வண்ணஞ் செய்கின்றனள்]

சம்வா.—[தனக்குள்] சாருதத்தருடைய பெயரையுரைத்ததால் நமக்கு இவ்வளவு ஆதரவுண்டாயிற்றே! என்ன! நல்லது ஆரியசாருதத்தனே நல்லது! பூமியில நீ ஒருத்தனே உயிருடனிருக்கின்றவன். மற்றையோர் மூச்சை விடுபவர்களாகமாத்திரம் இருக்கின்றனர். [என்றுகூறிக் காலில்விழுந்து] இருக்கட்டும் ஆரியே! தாங்கள் ஆதநத்திலிருங்கள்.

வசந்த.—[ஆஸநத்தில் வீற்றிருந்து] ஆரியரே! இந்தத் † தனிகன் உமக் கெங்கிருந்து கிடைத்தனன்?

சம்வா.—

உலகிற்செல்வர் பலருளரா
　　லுற்றோர்தம்மை யாதரிக்கும்
வலியுற்றவனே நல்லனென
　　மதிக்கப்பெறுவா னண்ணிநலை
யலகின்மேமை யுடன்பூசை
　　யாற்றுனெவனோ வவன்றன்னை
நிலைகொள்பூசை யின்பயனை
　　நிலத்தோர் அறியாதவனென்பார். (15)

வசந்த.—மேலே சொல்லும்.

சம்வா.—அவருடைய கட்டளைப்படி சம்பளத்தோடு அவருக்குப் பரிசாரகஞ்செய்து கொண்டிருந்தேன். அவர் தன

† தனிகன்=கடன் கொடுத்தவன்.

மெல்லாமிழந்து கடத்தையைமட்டும் மீற்றுக்கொண்ட பின்னர், சூதாடிப் பிழைப்பவனாயினேன்; துர்ப்பாக்கியத் தால் சூதாடியிடத்திற் பத்துப்பொன் றோல்வியுற்றேன்.

மாதுர.—அம்மணீ! மோசஞ்செய்யப்பட்டேன்! திருடப்பட் டேன்!!

சம்வா.—இந்தச் சபிகன் தியூதகரன் இருவரும் என்னைப்பின் றொடர்ந்து வந்திருக்கின்றனர்; இதைக்கேட்டு ஆரியையே! உசிதப்படி செய்யுங்கள்!

வசந்த.—மதனிகே! வாசஞ்செய்யப்பட்ட மரமானது பட்டுப் போனவுடன் பறவைகள் நான்கு திசைகளிலும் அலைகின் றன. ஆதலாற் சேடி! நீ போய் அந்தச் சபிகத்தியூதகரர் கட்கு, "ஆரியர் கொடுக்கிறார்" என்று இந்தக் கடகத் தைக்கொடுத்துவா. [என்று கையிலிருந்து கடகத்தைக் கழற் றிச் சேடியிடங் கொடுக்கின்றனள்]

சேடி.—[வாங்கிக்கொண்டு] ஆரியையின் உத்தரவுப்படி [என்று சொல்லிச்சென்றனள்]

மாதுர.—மோசஞ்செய்யப்பட்டேன். அம்மணீ! திருடப்பட்டேன்

சேடி.—இவர்கள் உயரப்பார்த்துக் கொண்டு பெருமூச்செறிந்து கொண்டு ஒருவனுடன் ஒருவன் பேசிக்கொண்டு, வாயிற்ப டியில் கண்ணை வைத்துக்கொண்டு நிற்பதால் இவர்கள் தாம் சபிகதியூதகரர்களென்று யானெண்ணுகின்றேன். [அருகிற் சென்று] ஐயன்மீர்! வந்தனஞ்செய்கின்றேன்,

மாதுர.—உனக்கு க்ஷேமம்விளைக.

சேடி.—ஐயர்காள்! உங்களிற் சபிகன் யார்?

மாதுர.—

கலவிக்கண்ணேர் வடுவுற்ற
 † கடிகொள்விம்பக் கனியிதழாய் !
மெலியுமிடையாய் ! அனப்பேடு
 வெள்குநடையாய் ! மகங்கவருஞ்
சிலையம்பதுவோ மினிர்வாளோ
 தெளிநீர்க்கயலோ வெனுங்கருங்கண்
நிலவுகடைநோக் காலெவரை
 நெருங்கிப்பார்த்தே மொழிகின்றாய் ? (16)

சேடி.—இவ்விதம் பேசினீர்களாயின் நீவிர் தியூதகாரல்லீர் என்றெண்ணுவேனா. உங்கட்குக் கடனாளி யாரேனு மிருக்கிறானா ?

மாதுர.—இருக்கிறான். அவன் பத்துப்பொன் தரல்வேண்டும். அவனுக்கென்ன ?

சேடி.—அவன்பொருட்டு ஆரியை இந்த கைக்கடகத்தைக்கொடுக்கின்றனள். அல்ல அல்ல, அவரே கொடுக்கின்றனர்.

மாதுர.—[களிப்புடன் வாங்கிக்கொண்டு] “அடே உனக்குப் பிணை கிடைத்துவிட்டது. வா ! திரும்பவுஞ்சூதாடுவோம்” என்று யான் உரைத்ததாகச் சொல்லு [என்று மாதுரன் தியூதகரன் இருவரும் ஏகினர்]

சேடி.—[வசந்தசேனை யருகில்வந்து] ஆரியே ! சபிகன் சூதாடிஇருவருஞ் சந்தோடமுற்றுச் சென்றனர்.

வஸந்த.—அவர்கள் போகட்டும். இப்போது உறவினர் ஆறுதலடையட்டும்.

---

† கடி=புதுமை; “கடிமலர்” என்றதுபோல “கடியென்கிளவி,
 வரைவே கூர்மை காப்பே புதுமை
 விரைவே விளக்க மிகுதிசிறப்பே
 யச்சமுன்றேற் றாயீரைந்து
 மெய்ப்படத்தோன்றும் பொருட்டாகும்மே” தொல்காப்பியம்
 சொல்லதிகாரம், உரியியல் சூத்திரம் 87.

சம்வாஹ.—ஆரியே! இப்படியானால் இந்த வித்தை உனது பரிசனத்தின் கையகப்பட்டதாகப் பண்ணு தி.

வஸந்த.—ஆரிய! எவருக்காக இந்தவித்தை கற்கப்பட்டதோ! (இதற்கு முன்பு யாரிடத்திற் றொழிற்செய்து இருந்தனையோ) அவரிடத்திலேயே இந்த வித்தையை மறுபடியும் உபயோகிப்பாயாக.

சம்வாஹ.—[தனக்குள்] ஆரியையாற் புத்திசாலித்தன்மையுற்றுத் தடுக்கப்பட்டேன். எவ்விதம் இவட்குப் பிரதியுபகாரஞ் செய்வேன் [பகிரங்கமாக] ஆரியே! நான் இச்சூதின் அவமானத்தாற் பௌத்தசந்நியாசி யாகுவேன். "ஆதலாற் சம்வாஹகனுகவிருந்து, சூதாடியாகிப், பிறகு சாக்கியமுனிவனுயினன்" என்னும் இந்த எழுத்துக்கள் ஆரியையின் ஞாபகத்திலிருக்கட்டும்.

வஸந்த.—ஆரிய! மாரீசம வேணடாம!

சம்வாஹ.—ஆரியே! நிச்சயங்கொண்டேன் [என்று சிறிது தூரம் போய்]

பலர்பழிக்குஞ் சூதாட்டப் பற்றறுத்தேன் பாரத்
தலைமயிரைக் களைந்துபெருந் தவசியர்தம வேடம்
நிலையுறயான் றரித்திந்த நெடுவரசர் வீதித்
தலைவருத்த மின்றியிதோ சஞ்சரிப்பேன்றனே (17)

(திரைக்குள் கலகலவென்று கூச்சல்)

சம்வாஹ.—[செவியுற்றுக்கேட்டு] அட! என்னஇது [ஆகாயத்தில்] இந்த வசந்தசேனையினுடைய குண்டமோடகம் எனனுங் கொடியயானை கட்டுத்தறிநின்றும் வெளிப்பட்டுச் சஞ்சரிக்கிறதென்றுசொல்லுகிறீர்கள். அகோ! ஆரியையுடைய மதயானையைப் போய்ப்பார்ப்போம். அல்லது அதனாலெனக்கென்ன! எப்படித்தீர்மானித்தேனே அதையே பின்பற்றுவேன. [என்று சென்றனன்]

(பிறகு திரையைக் கிழித்துக்கொண்டு மகிழ்ச்சியோடு அழகிய உடைகள் தரித்துக் கர்ணபூரகன் வருகின்றனன்.)

கர்ணபூ.—ஆரியையெங்கே! ஆரியையெங்கே?

சேட.—அடதுஷ்ட! என்னடா அமர்க்களம்! எதிரில் நிற்கும் ஆரியையைக்கூடப்பாராமல் என்னடா?

கர்ணபூ.—[பார்த்து] ஆரியையே வந்திக்கிறேன்.

வஸந்த.—கர்ணபூரக! மலர்ந்த முகத்தோடிருக்கின்றனையே! என்னடா விசேஷம்?

கர்ணபூ.—[ஆச்சரியத்தோடு] ஆரியே! வஞ்சிக்கப்பட்டனை; இன்றுதினங் கர்ணபூரகனுடைய பராக்கிரமத்தை நீ பார்க்கவில்லையே.

வஸந்த.—கர்ணபூரக! என்னடா என்ன?

கர்ணபூ.—அம்மணீ! கேளுங்கள்! ஆரியையினுடைய குண்டமோடகம் என்கிற துஷ்டயானையானது, கட்டுத்தறியை முறித்து, யானைப்பாகனைக் கொன்று, பெரிய நடுக்கத்தை ஜனங்கட்குண்டுபண்ணிக்கொண்டு, இராசவீதியில் வந்தது. அப்போது ஜனங்களால் இந்தவிதங் கூச்சலிடப்பட்டது.

தீயகரிதா னிவ்விடத்தே
வருதல்காணீ ரோசிறுபி
ராயக்குழவி முதலோரை
யப்பாற்கொண்டே யகலுதிர் நீர்
காயுங்கனியுந் தருதருவின்
றலைமீதும்பொற் கடிமனையின்
மேயமேன்மா டந்தனிலும்
விரைவிற் சேர்ந்தே யுயிர்பெறுமின் (18)

மேலும்

சிலம்புகள் கலீலெனு மொலியைச் செய்கின்ற
நலமிகு மரதக நண்ணு † மேகலை
தலந்தனி லொப்பிலாத் தன்மைசான்ற வங்
குலமணி வளைகளுங் குலைந்து சிந்தின (19)

பிறகு கால், கை, தந்தம் இவைகளால், மலர்ந்த தாமரை ஒடையைப்போல, உச்சயினிபட்டணத்துட் புகுந்து, அந்தக் கெட்டயானையானது, ஒரு சந்நியாசியைப் பிடித்தது; தண்ட கமண்டலங்களை யிழந்த அந்தத் தவசியின்மீது துதிக்கை நீரைத்தெளித்து அவனைத் தந்தத்திற் றூக்கிப் போயிற்று; அதைச் சனங்கள் பார்த்துச் சந்நியாசியைக் கொல்லுகிறதென்று கூச்சலிட்டார்கள்;

வஸந்த.—[அவசரத்தோடு] அகோ பிரமாதம்! அகோ பிரமாதம்!

கர்ணபூ.—அவசரம்வேண்டாம். ஆரியையே கேளும். அறுபட்டு அலங்கோலமான சங்கிலியைத் தரித்துஞ், சந்நியாசியைத் தூக்கிக்கொண்டுமிருந்த அந்த யானையை, நான் பார்த்துக் கர்ணபூரகனுன என்னுல்,—அல்ல அல்ல, ஆரியையுடைய அன்னத்தையுண்டு வளர்ந்த ஆரியையின் இடதுகாலைப்போன்ற அடியேனுல்,—கடையிலிருந்து விரைவாக இருப்புலக்கை கொண்டுவரப்பட்டு, அந்தக் கொடிய யானையானது கூப்பிடப்பட்டது.

வஸந்த.—அப்பால்!

கர்ணபூ.— விந்தமா மலைமுக டென்ன வீறுகொ
டந்தியை மைந்தொடு பற்றித் தந்தியின்
றந்தமீ தேயுறு தவனைக் கைகளா
லுந்தியே விடுத்த னெனுவகை மீக்கொள (20)

வஸந்த.—நல்லகாரியஞ்செய்தனை. மேலே.

---

† மேகலையும் வளைகளுஞ்சிந்தின வெனமுடிக்க "எஞ்சுபொருட் கிளவி செஞ்சொலாயிற், பிற்படக்கிளவார் முற்படக்கிளத்தல்" என்றதனுல் மேகலையுமென்று உம்மை கொடுக்கப்படவில்லை தொல்காப்பியம், சொல்லதிகாரம் இடையியல் 36.

கர்ணபூ.—பிற்பாடு ஆரியே! நல்லகாரியஞ்செய்தாய் நல்லகாரியஞ்செய்தாய்! என்றுமட்டுஞ் சநங்கள் சொல்லிக்கொண்டு பாரத்தை மிகுதியாகக்கொண்ட கப்பற் சநங்கள் ஒரு பக்கத்திற் சேருதல்போல, உச்சயினிபட்டினச்சநங்களெல்லாருந்திரண்டு, நானிருந்தபக்கத்தில் வந்துசேர்ந்தார்கள்; மறுபடியுமொருமனிதன் ஆபரணஸ்தாநங்கள் சூனியமாகவிருத்தலைப் பார்த்து, உயரநோக்கிப் பெருமூச்செறிந்து, இந்த உத்தரீயத்தை என்மேலெறிந்தனன்.

வஸந்த.—கர்ணபூரக! இந்த உத்தரீயஞ் சாதிப்பூமணம் ஊட்டப்பட்டிருக்கிறதா இல்லையா என்று பார்.

கர்ணபூ.—ஆரியே! யானை மதஜலமணத்தால் அந்த வாசனையை யானறியக்கூடவில்லை.

வசந்த.—பெயரையாகிலும்பார்.

கர்ணபூ.—இந்தப்பெயரை ஆரியையாகிய தாங்களே யோசித்துப்பாருங்கள் [என்று அந்த உத்தரீயத்தைக் கொடுக்கிறான்]

வசந்த.—ஆரியசாருதத்தருடையது [என்று வாசித்து ஆசையோடெடுத்துத் தன்மீது தரித்துக்கொள்ளுகின்றனள்]

சேடி.—கர்ணபூரக! ஆரியைக்கு உத்தரீயம் அழகைத்தருகிறது.

கர்ணபூ.—ஆம், உத்தரீயம் நன்றாகவிருக்கிறது ஆரியைக்கு.

வஸந்த.—கர்ணபூரக! இது உனக்குஇனம் [என்று ஒரு ஆபரணத்தைக்கொடுக்கின்றனள்]

கர்ணபூ.—[தலை குனிந்து வாங்கிக்கொண்டு நமஸ்கரித்து] இப்போது ஆரியைக்கு உத்தரீயம் மிக நன்றாக விருக்கிறது.

வஸந்த.—கர்ணபூரக! இத்தருணத்தில் ஆரியசாருதத்தர் எங்கே?

கர்ணபூ.—இந்த மார்க்கமாக வீட்டுக்குப்போகக் கிளம்பினார்.

வசந்த.—தோழீ! மேல் உப்பரிகையிலேறி ஆரிய சாருதத்தரைப் பார்ப்போம் [என்றெல்லோருமேகினர்]

த்யூதகர சம்வாஹகமென்கிற இரண்டாமங்கம்
முற்றிற்று.

## மூன்றாவதங்கம்.

(பிறகு சேடன் பிரவேசம்)

சேடன்.—நற்குணன் பரிசந நட்பனுவனேல்
† ஒற்கமே யுறினுமா மதிப்பி லோங்குவான்
‡ வற்பகல் உலோபனற் செல்வம் வாய்ப்பினும்
|| அற்பிலா வவனுற வல்ல லாக்குமால் (1)

மேலும்,

பட்டிமே யெருது தன்பதிக்கண் அன்பிலாப்
§ பட்டிமை செய்மனே பாரிற் சூதனுங்
கட்டினி லடங்கு வாரல்லர் காண் ¶ பிறப்
பிட்டதீக் குணங்களு மிறுத லின்றரோ (2)

சாருதத்தர் பாட்டுக் கேட்கப் போய் நாழிகையாயிற்று; இரவிற் பாதிக்கு மேற் சென்றது; இன்னும் வரவில்லை; வெளிப்பக்கத்திற்போய்ப் படுத்துத் தூங்குவேன்.

(பிறகு சாருதத்தனும் விதூஷகனும் பிரவேசம்)

சாருத.—ஆ! ஆ! பாவன் ரயிபிலன் காநம் நன்றாகப்பாடினன். வீணையோ கடலிற் பிறவாத மாணிக்கம். ஏனெனில்:—

காமவேதனை யுற்றவர்க்கருஞ்சுக
க்காரிகை * குறிவைத்தான்
ருமதஞ்செயில் வருகையிலவன்றளர்
வகற்றிடும் பொருள்தாழாப்

---

† ஒற்கம்=வறுமை "இலம்பா டொற்க மாயிரண்டும் வறுமை" தொல்காப்பியம், சொல்லதிகாரம், உரியியல், சூத்திரம் 64.

‡ வற்பு=உறுதி. || அற்பு=அன்பு-வலித்தல் விகாரம்.

§ பட்டிமை=வியபிசாரம்.

¶ பிறப்பிட்ட தீக்குணம்=சநநத்தோடுற்ற தீயகுணம்.

* குறிவைத்தான்=அடையாளமிடப்பட்டவன்.

பூமி † விப்பிர லம்பமுற்றவர்க்கது
போக்கு மானினி யாசை
தாமுற்றோர்க்கது மிகுந்திடச்செய்களிப்
பாந்தகைத் தனிவினை (3)

விதூஷ.—ஓய் செல்லும் வீட்டிற்குப் போவேம்

சாருத.—ஆ ஆ! பாவ! ரயிபிலன் இன்புறப்பாடினன்.

விதூஷ.—எனக்கோவென்றால் இந்த இரண்டும் நகைப்பை விளைவிக்கின்றது; பெண்பிள்ளை வடமொழிகற்குதல், ஆண்பிள்ளை மெல்லிய குரலாற் பாடுதல்; பெண்பிள்ளை ஆரியபாஷைபடித்தல் தலையீற்றுப் பசுவிற்கு மூக்கணாங் கயிறுபோட்டு, அது சூ சூ என்று மூச்செறிதல் போலும்; ஆண்பிள்ளை ‡ காகலியிற் பாடுதல் வாடிய பூமாலையணிந்த கிழப்புரோகிதன் மந்திரஞ்செபித்தல்போலும்; எனக்கு நிச்சயமாக இன்பம் பிறக்கவில்லை!

சாருத.—நண்பனே! பாவ ரயிபிலன் இன்பம் பெருகத்தான் பாடினன்; நீ திருப்தியடையவில்லை.

இனியானபற் புகழ்ச்சிச்சொற்க
ளியம்பலாற் பயனென்றோமா
வநுராக மதுரமாற்றுஞ்
சமம்புடம் பாவ மன்றி
யுனுமனோ கரம்லளித
முவையுற ரயிபிலற்குட்
டுனுமொரு மடந்தைபாடி
னளெனத் தோன்றுகின்ற (4)

மேலும்

† விப்பிரலம்பம்=பிரிவு அல்லது சண்டை, அன்றியுஞ் சிருங்காரங் களிலொன்று.

‡ காகலி=மெல்லிய குரலாற் பாடுதல், சங்கீத சாத்திரத்திற் காண்க.

ஆரோகண வவரோகண முறைகளுந்
தந்திராதங் குரலொடு லயித்தலு
மாரோகணத்திற் றூரமெ னெச்சு
மவரோகணத்தில் விராமமென் மென்மையா
மூர்ச்சையு மாங்காங்கு நிறுத்துஞ் சம்யம
னம்மெனு நயமும் லளிதமு மிருவழி
தக்கினி லெச்சிற் சரிக்கு மிராகம்
பாடுஞ்செயல்கொளீஇப்பயநிகர் சொல்லான்
பாடியகாலைப் † பரிவுறக் கேட்டது
வேட்கையோடிந்த நொடியினுங்
கேட்பவன்போன்றே ‡ கேகமே கின்றேன். (5)

விதூஷ.—ஓ சகாவே! கடைத்தெருக்களில் நாய்களுந் தூங்குகின்றன. நாம் வீட்டிற்குப்போவோம் [முன்னேபார்த்து] சிநேகிதரே! பாரும் பாரும்! இந்தச்சந்திரனும் இருளிற்கு இடங்கொடுத்து ஆகாயமென்னும் மேலுப்பரிகையினின்றும் இறங்குகின்றனன்.

சாருத.—நீர் நன்றாகச் சொன்னீர்.

நீர்மூழ்குங் கரிவெளியி
னீட்டியவெண் கோட்டுநுதி
நேரவிருளிற் கிடத்தை
நீட்டிவளர் மதிப்பிள்ளை
யேருறத்தன் னிருபாலு
மிருநுனியோ டிப்போழ்தத்
தார் || மாகந் தனினின்றே
யத்தமந மாகின்றான் (6)

---

† பரிவு=இன்பம். ‡ கேகம்=வீடு.

|| மாகம்=ஆகாயம் " மாகம் நீண்டன குறுகிட நிமிர்ந்தன மரங்கள் " இராமாயணம், கிஷ்கிந்தாகாண்டம், நட்புக்கோட்படலம் 84. மஹாகம்=மாகம்.

விதூஷ.—ஓய்! இது நம்முடைய வீடு; வர்த்தமாநக! வர்த்தமாநக! கதவைத்திறவடா!

சேடன்.—ஆரிய மைத்திரேயருடைய குரல் கேட்கிறது; ஆரிய சாருதத்தன் வந்துவிட்டார்; அவருக்குக்கதவைத் திறக்கிறேன் [அவ்விதமே செய்து] ஆரியரே! வந்தனம்பண்ணுகிறேன். மைத்திரேயரே! வந்தனஞ்செய்கிறேன். இதோ விரித்திருக்கிற ஆஸனத்தில் இருவரும் உட்காருங்கள். [இருவரும் அபிநயித்துப் பிரவேசித்துட்காருகின்றனர்]

விதூஷ.—வர்த்தமாநக! கால் கழுவுதற்காக இரதனிகையை யழை.

சாருத.—[தயையுடன்] தூங்குகிறவர்களை எழுப்பினது போதும்.

சேடன்.—ஆரிய மைத்திரேய! நான் ஜலங்கொண்டுவருகிறேன். நீர் பாதங்களைக் கழுவும்.

விதூஷ.—[கோவத்துடன்] ஓ நண்ப! இந்தத்தாசிமகன் ஜலத்தை வைத்துக்கொள்ளுகிறானும். பிராமணனாகிய நான் கால் கழுவுகிறதாம்!

சாருத.—நண்ப மைத்திரேய! நீ ஜலத்தை வாங்கிக்கொள்; வர்த்தமாநகன் கால் கழுவட்டும்.

சேடன்.—ஆரிய மைத்திரேயரே! ஜலம் விடும் [விதூஷகன் அப்படியே செய்கிறான்] [சேடன் சாருதத்தன் பாதங்களைக்கழுவிவிட்டுப் பக்கத்திற்போய் நிற்கிறான்.]

சாருத.—பிராமணனுக்குப் பாதோதகம் கொடுக்கக்கடவது.

விதூஷ.—எனக்கென்னத்திற்குப் பாதங்கழுவுநீர்? அடிபட்ட கழுதைபோல் மறுபடியும் பூமியிற் கிடந்து நான் புரளவேண்டுவதுதானே.

சேடன்.—ஆரிய மைத்திரேயனே! நீர் பிராமணன் அல்லவோ

விதூஷ.—எல்லா நாகங்களுக்கும், மத்தியில் † டுண்டுமம்போல, எல்லாப் பிராமணர்களுக்கும் நடுவில் நானும் பிராமணனே.

சேடன்.—ஆரிய மைத்திரேய! அப்படியிருந்தாலும் [பாதங்களைக்] கழுவுகிறேன் [அவ்விதமே செய்து] ஆரிய! மைத்திரேய! இந்தத் தங்கப்பானை பகலில் என்வசம, இரவில் உமது வசம்; ஆகையால் வாங்கிக்கொள்ளும். [என்று கொடுத்துப்போய்விட்டாள்].

விதூஷ.—[வாங்கிக்கொண்டு] இது இன்னும் இருக்கிறதா? இந்த உஜ்ஜயினியில் ஒரு திருடன் கூட இல்லையா? தூக்கத்தைத் திருடுகிற இந்தத் தேவடியாள் மகளுடைய தங்கப் பானையை ஒரு திருடனுங் திருடிக்கொண்டு போகமாட்டானு? ஓ நண்பனே! இதை உட்கட்டிற் கொண்டுபோய் வைத்துவிடுகிறேன்.

சாருத.—

உட்கட்டிற் சேமித்த
  லுறுதகமி லந்தணனே!
‡ வட்ககன்ற தேவடியாள்
  மகள்பொருளா தலினிஃதை
§ அட்சியைப்போற் காப்பாற்றி
  யவளிடத்திற் கொடுக்கும்வரைப்
பெட்புடனே யுன்வசத்திற்
  பேணுதல்நின் கடனுமால் (7)

(பின்னர்த்தூக்கத்தில் "ஆரோகண அவரோகணமுறைமையும்" என்ற இவ்வங்கத்தின் 5-வது கவியைக்கூறுகின்றனன்.)

விதூஷ.—நீர் தூங்குகின்றீரா என்ன?

† டுண்டுமம்=நஞ்சில்லாப்பாம்பு.

‡ வட்கல் வட்கு என நின்றது, வெட்கமென்பது பொருள்.

§ அட்சி=கண்.

சாருத.—ஆமாம்.

கண்களோடு நித்திரை நெற்றிக்
கண்களினின்றே யிறங்குதல்கடுப்பக்
கண்ணினிற்படாம னிலையிலாக்கிழவுத்
தன்மைமானுடன் றன்பலமகற்றி
எண்ணுறப்பெருகு பான்மைபோலிந்த
நித்திரையெனது கண்களிற்படாமே
நண்ணுமென்வலியைத் தொலைத்தெனை நாடி
நிரம்பாநின்றது நனுவகன்றேனே (8)

விதூஷ.—ஆனாற்றூங்குவேம் [தூங்குகின்றனன்—பிறகு சர்விலகன் பிரவேசம்]

சர்வில.—

எனதுடலெளிதிற் புகும்வணமாக
என்கற்பிப்புப்பலங் கொண்டே
எனதுடலளவுக் கொத்தவோர்கன்ன
வாயிலையியற்றியென் னிருபால்
மனுபெரும்புவியில் உரைஞ்சிடும்படிமா
நச்சுநாகம்மெலி வுடலோ
டுனுமதன்சருமமஃதில் நின்றெவ்வா
றோடுமோஅவ்வணம் போவேன் (9)

[ஆகாயத்தைப்பார்த்துச் சந்தோஷத்தோடு] சந்திரன் அஸ்தமிக்கிறானா என்ன? அப்படியே.

காவலாளரிடம் பயந்த
கதியையுடையேன் பிறர்வீட்டை
மேவித்துளைக்குந்துணிவுற்ற
இணையில்வீரன் யான்மேக
வீவில்கூட்டத் தாலிருளான்
மிக்கமறைந்த வுடுக்கணங்கள்
பாவுமிரவின் றெனைத்தாய்போற்
பரிந்துமறைத்தல் பண்ணுகின்ற (10)

தோட்டத்திற்கு அருகிற் கன்னமிட்டு நடுக்கட்டில் நுழை ந்திருக்கின்றேன். இப்பொழுது உட்கட்டிலுந் துளைபோடு கிறேன் ஒகோ!

கனவினிற் பெருகுந் தன்மையையுற்றது
மனத்தினில் விகார முறுவுலகத்தினர்
தமைவஞ்சிக்குந் தகையினையுடையது
திருட்டினை யுலகோர் செப்புவர்வீரம்
அன்றெனை, அல்லதூஉ மிழிந்ததென்பரால்
எவ்வாறு வேண்டினும் அவ்வாறுரைக்குக
பழிப்பினை யுற்ற தாயினும்பாரிற்
† கழிதருஞ் சுவேச்சை யாகுமித்தொழில்
ஆதலா லொருவ னண்டையிலேகி
கைகுவித் தியற்று நொய்மை ஏவற்பணி
வையகத் திழைத்தல் மேன்மையன்றே
பாரதப் போரிற் ‡ பார்த்திவர்தங்களை
நித்திரை செயுங்கால் நேருற்றுக்கோறலின்
பொருட்டிந்த மார்க்கம் புகழ்பரித்தாமனு
லவலம்பிக்கப் பட்டதாதலிற்
றவறிலாச் § சந்தி ‖ சமைத்தறக்கதே (11)

இப்பொழுது எந்தப்பக்கத்திற் கன்னமிடலாம்?

நீரில்நனைந்து ¶ சிதிலமதாய்
நிமிர்ந்தசுவரிற் றேண்டுதலாற்
சேருமொலியைக் கொடுக்கிலதாய்த்
திருட்டுநூற்கு மாறிலதாய்ச்

---

† கழி = மிகுதி.

‡ பார்த்திவன் = அரசன்; பிருதிவிசம்பந்தமுடையவன் பார்த்திவன்; பூமியாள்வோன் என்பது பொருள். "படினும்படார் தவம் பாத் தண்பதுமிலர் பார்த்திவரீர்ந்து." திருநூற்றந்தாதி 89.

§ சந்தி = கன்னம். ‖ சமைத்தல் = செய்தல். ¶ சிதிலம் = பதனழிவு.

சாருமுப்பாற் கன்மெலிந்து
　　சாற்றுமாதர் தமையின்றி
ஆரும்பொருள்க ளகப்பட்டுமவ்
　　விடமேகன்ன மிடற்குரித்தே (12)

[சுவரைத்தடவிப்பார்த்து] தினந்தோறுஞ் சூரியனுற் காய்வுற்றும், நீரால் நனைந்துஞ்சிதிலமாகவிருக்கிற சுவரின் இந்தப்பாகமானது உப்பளறடித்து மிருக்கிறது, எலிப்பாழி மண்ணுங்குவிந்திருக்கிறது. ஆ ஆ! காரியம் பலிதமாகும் † ஸ்கந்த புத்திரருடைய மதக்கொள்கைகளின் சித்தியிலக்கணம் முதலில் இதே. வேலையாரம்பத்தில் எவ்வகைக் கன்னத்தை முதலிற் செய்யலாம்; பகவான் ‡ கநகசக்தியால் [இதைக்குறித்து] நான்குவிதமான சந்தி உபாயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன; எப்படியெனில்:—சுவர், சுட்டகற்களாகவிருந்தால் இழுத்துப்பிடுங்கல் வேண்டும்; பச்சைக்கற்களாக விருப்பின், உடைத்தல் வேண்டும்; மண் சுவராகவிருந்தாற் றண்ணீரால் நனைத்துக் கரைத்தல் வேண்டும். மரத்தாற் கட்டப்பட்டிருக்குமாயின், வெட்டல்வேண்டும் என்பவையே. இங்கே சுவர் சுட்ட கற்களால் வைக்கப்பட்டிருக்கின்றமையின், கற்களைப்பிடுங்கல் தான் உசிதம்.

§ பதுமம்வ்யா கோசம்வெப்புப்
　　பாற்கரம் பாலசந்த்ரம்
அதமுள வாவிவித்தீர்
　　ணத்தொடு சுவத்திகந்தாம்
உதவுபூ ரணகும்பம்மென்
　　முரைக்குமோ ரேழ்கன்னத்தி
விதமுதற வெத்தைச்செய்தா
　　லென்றிறம் புகழ்வார்பூவோர் (13)

---

† ஸ்கந்தபுத்திரர்=களவுமதத்தை நிலைநாட்டினோர்.
‡ கநகசக்தி=களவு நூலாசிரியர்.
§ பதுமம்முதல் ஏழுகன்னபேதம்.

ஆகையாற் சுட்டகற்களை யுடைய சுவரில் பூரணகும்பமா கிற கன்னமே மேலானது. அதையே செய்வேன்.

இரவினிற்பற்பல விடுகளுப்பான்
மெலிவுற்ற விடங்களில் விடமம்
பரவுகற்பனைசேர் கன்னங்களிட்டேன்
பாருறை மாந்தர்கள் மறுநாள்
வெருவுறீ இநோக்கி மிக்கவென்சமர்த்தை
மெச்சினர்பலரிது தீமை
தருமிகுதோட மென்றுரைத்தனராற்
றடுப்பவர் தரைமிசை யாரே (14)

வரந்தரு கார்த்தி கேயனே ! நம
† சரமிகு ககக சக்தியே ! நம
‡ திரப்பிர மணியதேவனே ! நம
§ விரமிகு தேவ விரதனே ! நம
தரமிகு யோகா சாரியே ! நம
$ நரலைப் பாற்கர நந்தியே ! நம
யோகாசாரியின் யோகங்கற்றவர்
தம்மின்யான்றலைமா ணாக்கனன்றே !
அருத்தியோடென்பாற் றிருத்தியையுற்று
யோகமை யொன்றினை யெளியே
ஞுகுல மகல வளித்தன ரன்றே (15)

மையையென் கண்களின் மார்பிற் றீட்டிடின்
மெய்யுடைக் காவலர் கண்ணில் வீழ்வெனோ !
வெய்தென வாளினு லென்னை வெட்டினு
மைய ! வென் மேனியி லிரண மாகுமோ ! (16)

[மையை நெற்றியிலிட்டுக்கொண்டு] ஓகோ கஷ்டம் ! அளவு கயிற்றை மறந்துபோனேன் ! [யோசித்து] இந்தப்பூணுநூலை

† சரம்=மூச்சு. ‡ திரம்=நிலை. § விரம்=வீரத்தின் குறுக்கல்.
$ நரலை=கடல்.

யளவுகயிறாக வைத்துக்கொள்ளுகிறேன். பூணூல் பிராமணனுக்கு மிக்க உபகரணதிரவியம்; முக்கியமாய் என் போன்றவனுக்கு; எப்படியெனில்:—

கன்னவா யளவுநூலா நகைகளைக் கழற்றும் வாசல்
துன்னிய கதவின்றாளைத் திறந்திடத் துணையாம் பாம்பின்
பன்னரு விடமேறுமற் பருவிரல் கையிற் சந்தி
னன்னரே கட்டற்காகு நான்புனை பூணுநூலே (17)

அளந்து தொழிலைத் தொடங்குவேன் [என்று அங்ஙனம் அளந்து] ஆ ஆ கஷ்டம்! என்னைப் பாம்பு கடித்துவிட்டதே! [பூணூலை விரலிற்சுற்றி, விடந்தலைக் கேறியதாக அபிநயித்து, உடனே சிகிற்சை செய்து] விடந்தீர்ந்தோனாகிவிட்டேன். [மறுபடி மீதிக்கன்னத்தைச்செய்து, பார்த்து] அடே விளக்கு எரிகின்றதே!

உரைகலி லுரைத்த தங்கரேக் கொப்ப
வரையிலா நான்கு திசையினும் வளைந்த
விரிகடி யிருளில் விளக்கொளி கன்னப்
புரைவழித் தோன்று கின்றதே போலும் (18)

[மறுபடியுங்கன்னமிட்டு] கன்னம் முடிவுற்றது; † பிரதி புருஷனைவிட்டுப்பார்க்கிறேன் [அவ்வகை செய்து] அடே ஒருத்தருமில்லை. கார்த்திகேயரே! நமஸ்கரிக்கிறேன், [வீட்டிற்குள் நுழைந்து பார்த்து] அடே! யாரோ இருவர் நித்திரை செய்கின்றனர்; இருக்கட்டும்; நான்றப்பித்துக்கொள்ளுதலின்பொருட்டு வாசற்கதவைத் திறந்து வைக்கிறேன்; பழைய வீடாதலின் கதவு கிறீச்சென்று கத்துகிறதே! கொஞ்சம் தண்ணீர் தேடுகிறேன்! நீர் எங்கே யகப்படும்? [இங்குமங்குந்தேடிச் சலங்கொணர்ந்து தெளித்து அச்சத்தோடு] தரையில் விழுந்தாலோசை யுண்டாகுமே! இருக்கட்

† பிரதி புருஷன்=போலி உருவம், தீங்கு வராமலிருக்க முன்னெச்சரிக்கையாக முதலில் விடப்படுகின்ற கருவி.

டும்; இப்படிச்செய்வேன் [பின்புறமாய்ப் பார்த்துக்கொண்டு கதவைத்திறந்து] இருக்கட்டும் இங்ஙனம் பார்ப்பேன்; இந்த ப்பயல்கள் பொய்த்தூக்கம் புரிகின்றார்களா உண்மையிற் றூங்குகிறார்களா? பரிசோதித்துப்பார்ப்பேன் [அச்சங்காட்டிப் பரீட்சித்து] அடே! நிஜமாகவே நித்திரைசெய்கின்றனர்; எப்படியெனில்—

ஐயமொன்று மிலேமூச்சு நன்றாய்ப் பேத
மன்றிவிடப் படுகின்ற தம்பகங்கள்
செய்கையற்று மூடலுற்ற விமைகள் கொட்டுஞ்
செயலொழிந்த தேகத்தின் சந்திபந்தம்
மையநழுவிப் படுக்கை யளவு மிஞ்சிப்
படுத்துறங்கு கின்றாரான் முடக்க மற்றுப்
பொய்மை யுறு தூக்கமெனில் விளக்கின் சோதி
பொறுத்திடுமோ கண்கண் முகங் கூசுந்தாமே. (19)

[நான்கு பக்கங்களிலும் பார்த்து] அடே என்ன! ஒரு மத்தளம்; அதோ ஒருமுக வீணை; அடே ஒரு வீணை; இதோ கெஞ்சிரா; அதோ புள்ளங்குழல்; இதோ புத்தகங்கள்; இது நட்டுவன் வீடா என்ன? பெரிய வீடாக இருக்கிற தென்றெண்ணியல்லவா நுழைந்தேன்; இவன் உண்மையாகவே தரித்திரனு? அல்லது திருடன், அரசன் இவர்களிடத்தில் அச்சமுற்றுத் திரவியத்தைப் பூமியிற் புதைத்து வைத்திருக்கிறானு? சர்விலகனென்னும் பெயர் படைத்த எனக்கும் பூமியிற் புதையலா? இருக்கட்டும்; இந்த விதையை யெறிவேன் [அவ்வகை யெறிந்து] விதை விருத்தியாகவில்லை. அட இவன் உண்மையில் வறிஞனே! ஆகட்டும் போகிறேன்.

விதூஷ.— [தூக்கத்தில் உளறுகின்றனன்] ஓ மித்திரா! கன்னம் போற்றோன்றுகிறது; கள்வன் போலும் தோன்றுகின்றது; ஆகையால் இந்தத் தங்கப்பானையை வாங்கிக்கொள்ளும்.

சர்வி.—என்ன! நான் உள்ளே நுழைந்திருத்தலை யறிந்து உண்மையிற்றரித்திரனாகி யிருக்கிறேனேயென்று என்னைப் புரளிபண்ணுகிறான் போலும்; இவனைக் கொல்லட்டுமா? அல்லது சபலனாகையாற் றூக்கத்திற் பிதற்றுகிறானா என்ன? [பார்த்து] அடே பழைய ஸ்நாநச்சவுக்கத்தில் முடியப்பட்டு விளக்கொளியில் மின்னுகிற இது நகைப்பாண்டந்தான். இருக்கட்டும்! வாங்கிக் கொள்ளுகிறேன். அல்லது என்னைப்போல் வருந்துகிற நற்குல ஜநங்களைப்பிடித்தல் நன்மையன்று, ஆகையாற் போகிறேன்.

விதூஷ.—ஓ மித்திரா! இந்தத்தங்கப்பாண்டையை நீர் வாங்கிக்கொள்ளும்! இல்லாவிடிற் பசுவினிடத்திலும் பிராமணனிடத்திலும் ஆசை மீறி நடந்த தோஷத்திற்குள்ளாவீர்!

சர்வி.—பூசிக்கத்தக்க பசுவினிஷ்டம், பிராமணனிஷ்டம் இவைகளைத் தாண்டி நடத்தல் தவறு. ஆகையாலிதை வாங்கிக் கொள்ளுகிறேன்; விளக்கோ எரிகின்றது. ‡ விளக்கோட்டுப்பூச்சி என்வச மிருக்கிறதல்லவா? அதை விடுகிறேன்; அதற்கு இதுதான் சமயம்; நான் விடப்போகிற இந்தப் பூச்சியானது விளக்கின்மீது பலவகையாக வட்டமிட்டுச் சுழலும்; இதன் இறகுக் காற்றாற்றீபம் அணைக்கப்பட்டு இருட்டுண்டாயிற்றன்றோ! அல்லது நான் பிரம குலத்திற் பிறந்தவனாதலின், அந்தக் குலத்தையே அந்தகாரஞ்சூழ்ந்ததுபோலாயிற்று; நானோ நான்குவேதம் பயின்றவரும், பிறர் பொருளைத் தானம் வாங்காதவருமான பிராமணனுடைய மகன்; என் பெயரோ சர்விலகன்; நான் தேவடியாள் மதனிகையின் பொருட்டுப் பாவச்செய்கை செய்யலுற்றேன்; இப்போது இந்த விப்பிரனுடைய அபிப்பிராயப் பிரகாரம் நடக்கிறேன் [என்று வாங்குவதற்காகக் கையை நீட்டுகிறான்.]

‡ முன்சாக்கிரதையாக களவுநூலிற் கூறியவண்ணஞ் செய்யும் உபாயங்களைத் "தந்திரகரணம்" என்றார் இளங்கோவடிகள். "தந்திரகரண மெண்ணுவராயி, னிந்திரன் மார்பத் தாரமு மெய்துவர்" சிலப்பதிகாரம் 16 கொலைக்களக்காதை வரிகள் 180, 181.

விதூஷ.—ஓ சிநேகிதா! உமது கைநுனி என்ன ஈரமாகவிருக்கிறது?

சர்வி.—ஓகோ என்ன அஜாக்கிறதை! தண்ணீரைத் தொட்டபடியாலென்னுடைய நுனிக்கை சீதளமாக விராகின்றது; இருக்கட்டும். கழுக்கட்டிற் கையை வைத்துக்கொள்ளுகிறேன்; [அவ்வண்ணங் கையை வைப்பதுபோல நடித்து இடதுகையைச் சூடுசெய்துகொண்டு வாங்குகின்றனன்.]

விதூஷ.—வாங்கிக்கொண்டீரா?

சர்வி.—பிராமணனுடைய கேட்டுக்கொள்ளுதல் மறுக்கத்தக்கதல்ல, ஆகையால் வாங்கிக்கொண்டேன்.

விதூஷ.—எல்லாச் சரக்குகளையும் விற்பனை செய்த வியாபாரியைப்போல, இப்பொழுது நான் சுகமாய்த் தூங்குவேன்.

சர்வி.—உத்தமவேதிய! நீர் ஒரு நூறு வருடந்தூங்கக்கடவீர். ஹா கஷ்டம்! தாசி மதனிகையின் பொருட்டுப் பிராமணகுலமானது பாவி நரகத்திற் றள்ளப்பட்டது. அல்லது நானே நரகில் விழுந்தேன்.

§ வேண்டாமை யாற்சாந்த மேவாத ஆண்மைதனைத்
தாண்டாத் தரித்திரத்தைத் தரையிகழ்தல் சரியாமே
தீண்டாத் திருட்டுவினை யினைத்திநம் நாணிந்தை செய்து
மீண்டுமதை நாணமொரீஇ வேட்கையொடுஞ் செய்தேனே.

இப்போது மதனிகையை அடிமையில் நின்றும் விடுத்தலினிமித்தம் வசந்த சேனை வீட்டிற்குப் போவேன் [கொஞ்சதூரஞ்சென்று பார்த்து] அடி ஓசைபோல; அடே! காவற்காரர்களோ? அல்லவோ? இருக்கட்டும். அசையாமல் நிற்கிறேன். அல்லது சர்விலகனாகிய நான் காவலாளியர்க்குப் பயப்படுவேனு என்ன! நான் எத்தகையானென்றால்:—

§ வேண்டாமை=வெறுப்பு.

பதுங்கிகின் ரோடுங் கதியினிற் பூனை,
பிடியுறு தோடலில் முடுகுள கலைமான்,
கைதவிர்த் தேகலின் மைமலி பருந்து,
விழித்திருப் போரைத் துஞ்சுகின்றோரைச்
சழக்கற அறிவதிற் பழக்கமார் சுணங்கன்,
ஊர்வதி லுரகம், உடை உருவங்களை
நேருற மாற்றலில் நிகரிலா மாயை,
பற்பல கலைகளி லற்புத நாமகள்,
இருளினிற் றீபம், எய்து † மாபத்தில்
§டுடுபமே, யகன்ற புடவியிற் குதிரை,
நீரினி லோடம், நெடுங்கதிப் பாம்பு,
துவளிலா நிலையில் அவனிதாங் குறுமலை,
வட்டமாய்ப் பறத்தலிற் றட்டிலாக் கலுழன்,
பூமியை நோக்கலிற் றோமிலா முயலே,
பிடிப்பு விடாமையிற் கடித்திடு செந்நாய்,
வாட்ட மிலாத வலத்திற்
காட்டினி லுறையும் ‡ கரிப்பகை போன்மே (21)

(இரதனிகை பிரவேசம்)

இரதனி.—ஐயய்யோ! முதற்கட்டின் வாசற்படியடியில் வர்த்தமானன் படுத்துத் தூங்கினான். அவனையுங்காணோம். நல்லது ஆரிய மைத்திரேயனைக் கூப்பிடுகிறேன் [என்று போகிறாள்]

சர்வி.—[இரதனியைக் கொல்ல எண்ணுகிறான்—பார்த்து] என்ன! பெண்பிள்ளையல்லவா! இருக்கட்டும் போவோம் [என்று போயினன்]

இரதனி.—[சென்று அச்சத்தோடு] ஐயகோ! நமது வீட்டிற் கன்னமிட்டுக்கள்வன் போகிறானே! இருக்கட்டும், மைத்திரேய

† ஆபத்து=மிகுதுன்பம். § டுடுபம்=ஓட்டை. ‡ கரிப்பகை=சிங்கம்.

ரிடஞ் சென்று அவரை யெழுப்புவேன் [விதூஷகனருகிற் சென்று] ஆரியமைத்திரேய! எழுந்திரும். நமது வீட்டிற் கன்னமிட்டுக் † களவாணி ஓடிப்போனுன்.

விதூஷ.—[எழுந்து] ஆ ஆ தேவடியாள்மகளே! என்னசொல்லுகிறாய்? திருடனை வைத்துவிட்டுக் கன்னமா ஓடிவிட்டது?

இரதனி.—நாசமுற்றுப்போவாய்! பரிஹாஸம் பண்ணினது போதும், இதை நீ பார்க்கவில்லையா?

விதூஷ.—ஓ தாஸிபுத்திரீ! மற்றொருவாசல் திறக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லுகின்றனை! ஓ மித்திரசாருதத்தரே! நமது வீட்டிற் கன்னம்வைத்துத் திருடன் சென்றனன்.

சாருத.—இருக்கட்டுங்காணும்; கேலிசெய்யாதீர்.

விதூஷ.—ஓய் கேலியன்று; நீரே பார்க்கலாம்.

சாருத.—எங்கே?

விதூஷ.—ஓய் இதோ.

சாருத.—[பார்த்து] ஆ ஆ! பார்த்தறகுக் கன்னவாசல் அழகாகவிருக்கின்றது, ஆச்சரியம்!

மேலிருந்து கற்பிடுங்கப் பட்டுச்சிக்கண்
மிகக்குறுகி நடுவகன்று பூர்ணகும்பம்
போல்விளங்குங் கன்னமதை யுற்றுநோக்கிற்
பூவுலகிற் றனக்கணுவும் பொருந்தாநட்பை
மாலுடனே யுற்றவன்றன் மனமந்தோநன்
குடைபட்டுவயங்குகின்ற தன்மை யொப்பக்
கோலமுள வெனதில்லுந் திருடன்றன்னுற்
கொடுமையதா யுடைபட்டுக் ‡ கோதைக்கொண்ட.

என்ன! இத்தொழிலிற்கூடச்சமர்த்தா?

---

† = களவாணி = திருடன், திசைச்சொல். ‡ கோது = குற்றம்.

விதூஷ.—ஓ மித்திர! இக்கன்னம் இரண்டுபேர்களால் வைக்கப் பட்டிருக்கலாம். ஒன்று புதிதாய் இந்த ஊருக்கு வந்த வன் செய்திருத்தல்வேண்டும்; அல்லது களவுத்தொழி லைக்கற்கிறவன் செய்திருத்தல் வேண்டும். ஏனென்பீரேல் உச்சயினீ நகரத்தில் இப்பொழுது நமது வீட்டின் செல்வ நிலைமையை அறியாதவர் யாவர்?

சாருத.—

தொழில் பயிலும் வேற்றூரான் கன்னந்தன்னைத்
தோண்டியுளன் செல்வமொரீஇக் கவற்சியின்றிக்
கழிதுயிலைப் புரிகின்றார் வீட்டாரென்னக்
கடுகளவு மறிந்திலனாய் வீட்டின் வாயில்
எழிலதனைக் கண்டு † சிர மவாவோடிந்த
இருங்கன்ன வாயில்விட்டு ‡ வீட்டிற்கேகி
§ நிழல்வெறுக்கை காண்கிலனாய் நிராசைகொண்டு
நெஞ்சுதளர்ந் தோடிவிட்டான் நேயா! கள்வன். (23)

இரங்குதற்குப் பாத்திரனை இத்திருடன் றனது தோழர் கள் அருகிற்சென்று "இந்த வியாபாரி மகன் வீட்டிற்குட் சென்றேன், ஒன்றுங்கிடைக்கவில்லை" என்று கூறுவானே!

விதூஷ.—ஓய் என்னகாணும் கள்ளப்பயலுக்காகக் கரைகின்றீர். வீடு பெரிதாகவிருக்கின்றது. இரத்தினப்பெட்டியாயினுந் தங்கப் பேழையாயினும் அடித்துக் கொண்டுபோய் விட லாமென்று அவன் எண்ணினன்போலும். [ஞாபகஞ்செய்து கொண்டு, துக்கத்தோடு] தங்கப்பானை எங்கே? [பிறகு ஞாபக முற்றுப் பகிரங்கமாக] ஓய் சிநேகிதரே! நீர் எப்போழ்தும் மைத்திரேயன் மூடன் மூர்க்கனென்று உரைப்பீர்! நான்

† சிரம்=நீண்டகாலம் (வடசொல்).

‡ வீட்டிற்கு என்றதில் கு, சாரியை.

§ நிழல் வெறுக்கை=செல்வம்—ஒரு பொருட்பன்மொழி," ஒருபொ ருளிரு சொற்பிரிவிலவரையார்" தொல்காப்பியம், சொல்லதி காரம், எச்சவியல் சூத். 64.

உமது கையில் அந்தச் சுவர்ண பாண்டத்தைக் கொடுத்த தானது மிகுந்த நன்மையாயிற்று; இல்லாவிடில் அந்தத் தேவடியாள்பிள்ளை அடித்துக்கொண்டே போயிருப்பான்.

சாருத.—ஓய் விளையாட்டு வார்த்தைகள் போதும்.

விதூஷ.—ஓய் நான் மூர்க்கனாக இருப்பினும் பரிஹாசஞ் செய்யத்தக்க காலமும் இடமும் எனக்குத் தெரியாதா என்ன?

சாருத.—எப்பொழுது?

விதூஷ.—ஓய் உமது கை சீதளமாக விருக்கிறதென்று நான் சொன்னேனல்லவா அப்பொழுது.

சாருத.— ஒர் வேளை இவ்வித மிருக்கலாம் [நான்கு பக்கத்திலுஞ் சுற்றிப்பார்த்து மகிழ்ச்சியோடு] சகாவே! அதிருஷ்டவசத்தால் உமக்கொரு பிரியமான சமாசாரஞ் சொல்லுகிறேன்.

விதூஷ.-அதையவன் திருடிக் கொண்டுபோகவில்லையா என்ன?

சாருத.—போய்விட்டது.

விதூஷ.—அங்ஙனமாயின் அது உமக்குச் சந்தோஷமா?

சாருத.—அவன் பிரயோசனமுற்றவனாகச் சென்றானன்றோ?

விதூஷ.—அது நம்மிடம் அடைக்கலம் வைக்கப்பட்டதல்லவா?

சாருத.—என்ன அடைக்கலம் வைக்கப்பட்டதா! [என்று மூர்ச்சிக்கிறான்.]

விதூஷ.—நீர் மூர்ச்சையில் நின்று தெளிவடையும், அடைக்கலப்பொருளைத் திருடன் கொண்டுபோய்விட்டால் எதற்காக நீர் மூர்ச்சிக்கவேண்டுவது?

**சாருத.**— [*மயக்கந்தெளிந்து*] நண்ப!

*உண்மையை நம்புவா ருலகி லியாவரே*
*நண்ணுறு துரும்பென † நாட்டுவா ரெனைக்*
*‡ கண்ணிலா வறுமையிக் காசினிக் கணே*
*எண்ணிலாச் § சங்கைக ளேயிழைக்குமே.* (24)

*விதியினு லென்பொருள் முற்றும் வீந்ததால்*
*அதிவலி யுற்றவூ ழங்குத் தங்கிலா*
*$ தெதிரிலா வெனதுநன் னடத்தையை யென்னுமத்*
*துதிபெறு பொருளையுஞ் சூறை கொண்டதால்.* (25)

**விதூஷ.**—*யார் கொடுத்தார்? யார் வாங்கினூர்? யார் சாட்சி? என்று யான் மறுத்துவிடுகிறேன்.*

**சாருத.**—*யான் இப்பொழுது பொய்யும் புகலுவேனே?*

*பிச்சையுக் காயினும் போரடைக்கலம்*
*வைச்சதைத் திரும்பநான் வழங்கலின்றியே*
*இச்சைகொள் நடத்தைக்கோ ரிழுக்கமாமிகு*
*|| கொச்சையார் ¶ மித்தியை கூறுவேனலேன்.* (26)

**இரதனி.**—*ஆரியை தூதையம்மாளிடத்திற் சென்று தெரிவிக்கிறேன். [என்று போயினள்]*

*(சேடியோடு சாருதத்தன் மனையாட்டி தூதை பிரவேசம்)*

**மனையா.**—*[வேகத்தோடு] அடிசேடீ! ஆரியமைத்திரேயரோடு எனது * பர்த்தா தீங்கற்ற தேகத்தோடிருக்கின்றனரா?*

---

† நாட்டல் = *தாபித்தல்.* ‡ கண் = *தாட்சிணியம், இரக்கம்.*

§ சங்கை = *ஐயம்.* $ எதிர் = *ஒப்பு.* || கோச்சை = *கீழ்மை.*

¶ மித்தியை = *பொய் "வினைவருமாறு மவைவெல்லுமாறு மித்தைச்சமய" திருநூற்றந்தாதி 90. மித்தை:—மித்தியா.*

* பர்த்தா = *கணவன்.*

சேடி.—அம்மணீ ! உண்மையாகவே ; ஆனால் தேவடியாள் உடைமைகள் திருட்டுப்போய்விட்டன.

(மனையாட்டி மூர்ச்சை யடைகின்றனள்)

சேடி.—ஆரியை தூதையே ! மூர்ச்சையைத் தீர்த்துக்கொள்ளுங்கள் !

மனையா.—[மூர்ச்சை நீங்கி] சேடீ ! எனது பர்த்தா உடம்பிற்குத் தீங்கில்லை யென்று செப்புகின்றனை. அவர் உடம்பிற்குக் கெடுதல் வந்தாலுங்குற்றமில்லை. அவர் நடத்தைக்குக் கெடுதி வந்து விட்டதே! இப்பொழுது உச்சயினியில் உள்ள மனிதர்கள் எனது எஜமான் ஏழைமையால் இவ் விதக் காரியம் இழைந்தானென்று சொல்லுவார்களே. [உயரப்பார்த்துப் பெருமூச்சுவிட்டு] பகவானே ! விதியே ! தாமரையிலைமீது விழுந்த நீர்த்துளிபோலச் சலித்துக்கொண்டிருக்கிற தரித்திரனுடைய அதிர்ஷ்டத்தில் நீவிளையாடுகிறாயே ! எனது தாய் வீட்டார் எனக்குக்கொடுத்த மாணிக்கமாலை ஒன்றுதான் மீதியிருக்கிறது ; இதைக் கொடுத்தாலும் எனது புருடன் மிக்க கவுரவத்தால் வாங்கமாட்டாரே. சேடியே ! ஆரியமைத்திரேயரை யழைத்துவா.

சேடி.—அம்மணி கட்டளைப்படி செய்கிறேன். [விதூஷகன் அண்டையிற் சென்று] ஆரியமைத்திரேய ! தூதையும்மைக் கூப்பிடுகின்றனள்.

விதூஷ.—அந்த அம்மாள் எங்கிருக்கின்றனள் ?

சேடி.—போம் ! அதோ.

விதூஷ.—[சென்று] உனக்கு மங்களம் உண்டாகட்டும்.

மனையா.—ஆரிய ! உமக்கு வந்தனம். கிழக்கு முகமாக உட்காரும்.

விதூஷ.—இதோ கிழக்குமுகமாக விருக்கின்றேன்.

மனை.—ஆரிய! இதை வாங்கிக் கொள்ளும்.

விதூஷ.—என்ன இது?

மனை.—நான் இரத்தின ஷஷ்டி விரதமெடுத்தேன். அதனிமித்தம் செல்வத்திற்கொத்த விதமாகப், பிராமணனுக்குத் தானஞ்செய்தல் வேண்டும். அது செய்யப்படவில்லை; அதற்காக இந்த இரத்தின மாலையை நீர் அங்கீகரித்தல் வேண்டும்.

விதூஷ.—[ஏற்றுக்கொண்டு] உனக்கு மங்களமுண்டாகுக. நான் சென்று என்னுடைய பிரியநண்பரிடத்திற் சொல்லுகிறேன்.

மனையா.—ஆரியமைத்திரேய! நான் நாணமுடையவளாகாமலிருக்கும்படி நீர் நடத்தல் வேண்டும் [என்று சென்றனள்]

விதூஷ.—[ஆச்சரியமுற்று] என்ன இவளுடைய பெருந்தன்மை! அம்மம்ம! வியக்கத்தக்கதே.

சாருத.—மைத்திரேயர் காலவிளம்பனஞ் செய்கின்றனர். மனத்துயரால் அகாரியஞ் செய்யாதிருத்தல் வேண்டுமே; ஓ மைத்திரேய! மைத்திரேய!

விதூஷ.—[வந்து] இதோ வந்தேன். இதை வாங்கிக்கொள்ளும் [என்று மாணிக்க மாலையைக் காட்டுகின்றனன்.]

சாருத.—இஃதென்னை?

விதூஷ.—ஓய்! ஒத்த பத்தினியை நீர் அடைந்ததினால் உண்டாகிய பலனிதுகாணும்.

சாருத.—எனது மனைவி யென்மீது இரக்கப்படுகின்றனள்போலும்; என்னை? ஆகஷ்டம்! இப்போதுதான் யான் றரித்திரனாயினேன்.

ஊழினு லிழந்த செல்வ
னுயின னெருமாதீயுந்
தாழ்விலாப் பணியாலந்தோ!
தாழ்ந்தநா னிரங்கப்பட்டேன்
வாழ்வுசெய் பொருளாலோது
† மனிதனும் பெண்ணுகின்முன்
கீழ்மைசேர் பெண்ணுமாணுக்
கிளர்கின்ற ளென்னேபாவம்! (27)

(அல்லது நானேழையன்று)

என்னிலைக் கியன்றவாறு
நடக்குமென் மனையாள்நாளும்
இன்னலிற் சுகத்தில் நீங்கா
தென்னுட னிருக்குநீநற்
பொன்னிலா மிடிக்கண்யாரும்
போற்றுதற் கரிதாமெய்ம்மை
யென்னுமிம் மூன்று மென்னை
விடாமலே யிருக்காநின்ற (28)

மைத்திரேய! இந்த இரத்திந ஆரத்தை எடுத்துக்கொண்டு வசந்தசேனையிடமேகிச் "சுவர்ணபாண்டம் என்னுடையதென்கிற நம்பிக்கையாற் சூதாட்டத்திலிழந்தேன்; அதற்கு ஈடாக இந்த இரத்திநாபரணத்தை ஏற்றுக்கொள்க" என்று நான் சொன்னதாகச்சொல்லும்.

விதூஷ.—ஓய் வேண்டாம். உண்ணவுமில்லை, அநுபவிக்கவுமில்லை, அற்பவிலையுள்ளது. திருடன் கொண்டுபோய்விட்டான். அதற்காக நாலு கடல்களின் ‡ சாரமாயிருக்கின்ற மணிவடத்தைக்கொடுக்கிறதா?

---

† மனிதன் = ஆண்மகனுக்காகுபெயர்.

‡ சாரம் = விலையுயர்ந்த தென்றபடி; அன்றியுஞ், சாரம் = திரவியம் "மாமணிச், சாரம்வைத்த வலயமொன்று தானுமுன்னர் வைக்கவே" பாரதம் சபாபருவம் சூதுபோர்ச்சருக்கம் 175.

சாருத.—தோழ ! இவ்வண்ணம் பேசவேண்டாம்.

எந்தநம்பிக்கை யாலிவ் வடைக்கலம்
வந்துவைத்தன ளோ அம் மடமகள்
அந்தநம்பிக்கை யின்பொருட் டேயணி
இந்த மாணிக்க மாலையை யீதலே. (29)

ஆகையால் நண்ப ! எனது சரீரத்தின்மேல் ஆணை. இந்த நகையை அவள் வாங்கிக்கொள்ளும்படி செய்யாமல் நீர் இங்குத் திரும்பிவரவேண்டாம். வர்த்தமாநக ! இந்தக்கன்னத்துவாரத்தைக் கற்களினால் நீ நன்றாய் மூடு. குற்றமானது மிகுந்த தோஷத்தையுடையது. மைத்திரேய நண்ப ! நீர் கவுரவமாகச் சொல்லுக.

விதூஷ.—ஓய் தரித்திரனாகிய யான் எப்படிக் கவுரவமாகச்செல்லமாட்டுவேன்.

சாருத.—தோழ ! நான்றரித்திரனல்ல [என்று " என்னிலைக்கியன்ற வாறு " இதன் 28 ங்கவியைக் கூறுகின்றனன்.] நீர் போம் யானுஞ் சுத்தஞ்செய்துகொண்டு சந்தியாவந்தநஞ் செய்கிறேன்.

(என்று எல்லாருஞ் சென்றனர்).

கன்னம் வைத்தல் என்னு மூன்றவதங்கம்

முற்றிற்று.

## நான்காவதங்கம்.

---

(சேடி பிரவேசித்து)

சேடி.—அம்மாள் ஆரியையிடத்திற்குப் போகும்படி கட்டளை யிட்டாள்; இதோ ஆரியை சித்திரப்பலகையின்மீது ஊன்றிய கண்களுடையவளாய் மதனிகையிடத்தில் ஏதோ பேசிக்கொண்டிருக்கிறாள். நான் அருகிற்போகிறேன் [என்று போகிறாள். முன்னர்க்கூறியபடி வசந்தசேனையும் இரதனிகையும் பிரவேசம்.]

வசந்த.—சகி மதனிகா! இந்தச் சித்திரத்திலிருக்கிற உருவஞ் சாருதத்தருடைய உருவத்தை ஒத்திருக்கின்றதோ?

மதனி.—நன்றாயொத்திருக்கின்றது.

வசந்த.—நீ எப்படியறிந்தாய்?

மதனி.—ஆரியையின் அன்பான பார்வை அதில் அழுந்தியிருத்தலால்.

வசந்த.—வேசைத்தொழிலில் விளைந்திருக்குந் தாட்சிணியத்தால் இப்படிச் சொல்லுகின்றனைபோலும்.

மதனி.—ஆரியே! வேசித்தொழில்பழகுஞ் சனங்களில் ஒவ்வொருவரும் பொய்த்தாட்சிணியம் பூண்பார்களா என்ன?

வசந்த.—தோழீ! பல ஆடவர்களுடைய பழக்கத்தாற் பரத்தையர்கள் பொய்த்தாட்சிணியம் புரிகின்றனர்.

மதனி.—யாதுகாரணம்பற்றி ஆரியையின் கண்ணும் மனமும் இதில் பிரியமுற்றிருக்கின்றனவோ அதைக்கேட்பானேன்.

வசந்த.—பாங்கீ! தோழிகள் என்னைப் பரிஹாஸஞ் செய்தற்கு நான் இடங்கொடேன்.

மதனி.—ஆரியே! அது அப்படியல்ல, பெண்பிள்ளைகள் சகிகளுடைய மநத்திற்கொத்து நடப்பார்கள்.

சேடி.—[அருகிற்சென்று] ஆரியே! வாசலில் திரைச்சீலையால் மூடுற்ற வண்டி ஒன்று வந்து நிற்கின்றது, ஆகையாற் போகலாம் என்று அம்மாள் கட்டளையிடுகிறாள்.

வசந்த.—சேடீ! ஆரிய சாருதத்தர் என்னை யழைத்து வரும்படி அனுப்பினாரா என்ன?

சேடி.—ஆரியே! பதினாயிரம் பொன் பெறத்தக்க நகைகளோடு வண்டியை எவர் அனுப்பியிருக்கிறாரோ!

வசந்த.—யாரவர்?

மதனி.—அரசன் மைத்துனரான ஸம்ஸ்தாநகர்.

வசந்த.—[கோவத்தோடு] சீ போ!! இனி இவ்விதம் என்னோடு பேசாதே.

சேடி.—கோபம் வேண்டாம் ஆரியே! சினம் வேண்டாம்; நான் சமாசாரங்கொணர்ந்தவள்தானே.

வசந்த.—நான் சமாசாரத்தையே கோவிக்கிறேன்.

சேடி.—நான் அம்மாளிடத்திற்போய் என்ன சொல்லுகிறது?

வசந்த.—இந்த விதமாகச் சொல்லு "நான் உயிருடனிருக்கவிரும்பினால் மறுபடி இவ்விதக் கட்டளையிடாமலிருக்கவேண்டும்" என்று எனது தாய்க்குச் சொல்லு.

சேடி.—தம்முடைய எண்ணப்படி [என்று சென்றனள்]

(சர்விலகன் பிரவேசம்)

சர்வில.—

இரவிற்கிழிவாந் † தோடமதை
யீய்ந்து தூக்கத் தினைவென்று

---

† தோடம்=குற்றம். வடசொல்.

பரவுமிராச சேவைசெயும்
பண்பார்மாந்தர் தமைச் † சயித்தே
‡ இரவின்கடைக்கா லெல்லுதயத்
தாலேமயங்கு § மிமகரன்போல்
விரவும்புவிக்கண் யானுமொளி
விலகும்புருட ஞயினனே (1)

மேலும

வெருவியோ வலதுமேய
வெறுப்பினே யானிற்குங்கால்
விரைவுட ஞெருவன்செல்லின்
ஐயமென் மனக்கண்மேவுந்
தரையினிற் றன்பாற்குற்றஞ்
சார்ந்தவன் அயலார்மீது
மருளொடு || மயிர்ப்புக்கோடல்
மணணவர் வழக்கமன்றே (2)

மதனிகையினிமித்தம் யானிக்கொடுஞ்செயலைச் செய்தேன்.

இருவர்கூடிப் பேசுமிடத்
தேகேனுண்பெண் ணிருக்குமிட
மருவல்புரியேன் காவல்புரி
மாந்தற்காணிற் கொல்லைவளர்
தருவைப்போலச் சலனமற்று
நிற்பேனுலகிற் சார்ந்தகங்குல்
இரவிவிளக்கும் பகற்போலென்
றனக்குச் சுகத்தை யீய்ந்திடுமால் (3)

(என்றுபோகின்றனன்)

---

† சயித்தல்=வெற்றிபெறல். வடசொல்.

‡ இரவின்கடைக்கால்=இரவின்முடிவின்கண் ; கால் ஏழுனுருபு.

§ இமகரன்=சந்திரன். || அயிர்ப்பு=சந்தேகம்.

வசந்த.—பாங்கி! இந்தச் சித்திரப்பலகையை எனது படுக்கை மீது வைத்துவிட்டு விசிறியை எடுத்துக்கொண்டு விரைவில் வா.

மதனி.—அம்மணி கட்டளைப்படி [என்று பலகையைக் கையிலேந்திச் சென்றனள்.]

சர்வி.—இதுதான் வசந்தசேனையின் கிரகம். இதற்குள் போகிறேன் [சென்று] நான் எங்கு மதனிகையைப் பார்க்கலாம். [கையில் விசிறியுடன் மதனிகை வருகின்றனள்].

சர்வி.—[பார்த்து] அடே! இதோ மதனிகை.

குணத்தினால் மதனையொன்றாள்
† கொம்மைநல் லழகால்வாய்ந்த
மணமலர் வாளியான்றன்
மனைவியென் ‡ றயிர்ப்புத்தந்தாள்
கணக்கிலாக் காமத்தீயாங்
கட்டழல் கதுவலான்மிக்
§ கணங்குமென் மனத்தைச் $ சந்தச்
சீதள மாக்கினளால் (4)

ஓகோ மதனிகே!

மதனி.—[பார்த்து] என்ன ஓகோ! சர்விலகன்.—சர்விலக! உமதுவருகை நல்வரத்தாகுக. எங்கு வந்தீர்?

சர்வி.—சொல்லுகிறேன். [என்று ஒருவருக்கு ஒருவர் ஆசையுற்றுப் பார்க்கின்றனர்.]

வசந்த.—மதனிகை தாமதிக்கின்றனள். இப்போது அவள் எங்கிருப்பாள். [சாளரத்தின் வழியாகப் பார்த்து] ஆ என்ன! எவனோ ஒரு ஆடவனோடு இவள் பேசிக்கொண்டிருக்கின்

---

† கொம்மை=இளமை. ‡ அயிர்ப்பு=சந்தேகம்.

§ அணங்குதல்=வருந்துதல். $ சந்தம்=சந்தனம்.

றனள். அன்புடன் சலனமன்றியிலிருக்கிற பார்வையால் விழுங்குபவள்போல அவனையே பார்த்துக் கொண்டிருத்தலால் இவன் இவளைச் சுவாதீனையாகப் பண்ணிக்கொள்ள விரும்புகிறானென் றெண்ணுகிறேன். ரமிக்கட்டும். ஒருவருக்கும் அன்பு அழியக்கூடாது. ஆகையால் இப்பொழுது நான் இவளையழைத்தல் சரியல்ல.

மதனி.—சர்விலக! சொல்லு [சர்விலகன் அச்சத்தோடு நான்கு பக்கங்களிலும் பார்க்கிறான்] சர்விலக! என்ன இது! அச்சமுற்றவன்போற் காண்கின்றனையே!

சர்வி.—உனக்கு ஒரு இரகசியம் உரைப்பேன். இங்கு ஒருவருமில்லையே?

மதனி.—ஆம் இல்லை.

வசந்த.—மிகுந்த இரகசியம்போற் றோன்றுகிறது, ஆகையாற் காதிற்படவில்லை.

சர்வி.—மதனிகா! உனது † நிஷ்கிரயங் கொடுத்துவிட்டால் உன்னை நீக்கிவிடுவாளா என்ன?

வசந்த.—என் சம்பந்தமான வார்த்தைபோலிருக்கிறது. சன்னற்பக்கத்தில் மறைந்திருந்து கேட்கிறேன்.

மதனி.—சர்விலக! நான் ஆரியையிடத்திற் சொன்னேன். அப்போது "எனக்கு இஷ்டமானால் எல்லாரையுஞ் ‡ சுவாதீனர்களாகச் செய்வேன்" என்று கூறினள். சர்விலக! என்னை ஆரியையிடமிருந்து விடுதலை செய்யத்தக்க திரவியம் உனக்கு எங்கிருந்து கிடைத்தது.

† நிஷ்கிரயம்=அடிமையிலே, வடசொல்.

‡ சுவாதீநம்=சுவயேச்சை, வடசொல்.

சர்வி.—

மா † கய மிடியினுல் வளையப் பட்டுகின்
மோகமா நட்பினுல் மூடப் பட்டயான்
‡ ஆகுல அச்சத்தாய் ! அல்வி வின்றியான்
§ சாகசஞ் செய்தெனுன் றன் பொருட்டினுல் (5)

வசந்த.—இவன் உருவம் நன்ருக விருப்பினும் இவனுடைய கொடுங்தொழில் எனக்குப் பயத்தைக் கொடுக்கின்றது.

மதனி.—சர்விலக! அற்பப்பொருளான பெண்பிள்ளையினிமித்தம் இரண்டைத்துன்பத்திற் குள்ளாக்கினை.

சர்வி.—என்ன என்ன ?

மதனி.—சரீரத்தையும் நடத்தையையும்.

சர்வி.—அடி மூடீ! திருட்டுச் செய்கையிற்றேவி யிலக்குமி வாசஞ் செய்கின்றனள்.

மதனி.—சர்விலக! குற்றமற்ற ஆசாரமுடையவன் நீ. எனக்காக இழிவான காரியம் பண்ணினை, ஆயினும் மிகக்கொடியசெய்கை ஒன்றையுஞ்செய்யவில்லையே ?

சர்வி.—

பூத்திருக்குங் கொடியிற்பூக் கொய்யேன் பூண்கொள்
பூவையர்கண் $ டிருட்டியற்றேன் பூத்தே வர்பொன்
|| ஆத்தையுட னபகரிப்பே னல்லேன் வேள்வி
யரும்பொருளை வவ்வேனஞ் செவிலித் தாய்கை

---

† கயமை=கீழ்மை.

‡ ஆகுலம்=துன்பம்.

§ சாகசம்=தீச்செயல். வடசொல்,

$ திருட்டி=பார்வை, "பூவையர்கண் திருட்டியற்றேன்"=பெண்களைக்கண்ணுல் நோக்குதல் இல்லாதவன் எனப் பொருள்கொள்க.

|| ஆத்தை=ஆசை ஆஸ்தா வடசொல்.

வாய்த்திருக்குங் குழவிகளைப் பூண்பெட் பாலென்
மனதாரத் தூக்கியயன் மறையே னென்றன்
காத்திரத்தாற் கள்ளர்தொழிற் பயின்றாலும்மென்
கடிமனமோ நடுவுநிலை கருதா நிற்கும் (6)

ஆதலால் வசந்தசேனையிடம் இவ்விதஞ்சொல்லுக.

சனமிதைக் காண்குதல் சரியன் றாயினு
முனதுடற் களவெடுத் திழைத்த தொப்பவே
மினுமரும் பணிகளை வேட்கை யோடு நீ
புனையென வேண்டினன் † என்பு கன்றிடு (7)

மதனி.—சர்விலக! ஆபரணங்களை மறைத்து வைத்திருத்தல் வேண்டும். இவளோ வசந்தசேனை. இவ்விரண்டும் பொருத்தமுறவில்லை. எங்கே அந்த ஆபரணத்தை எடு. நான் பார்க்கிறேன்.

சர்வி.—இதோ அந்த நகை [என்று நடுக்கத்தோடு கொடுக்கிறான்.]

மதனி.—இந்தப் பூண்முன்பு நான் பார்த்ததுபோலிருக்கிறது. ஆகையால் உனக்கு இது எப்படிக்கிடைத்தது சொல்லு.

சர்வி.—அதனால் உனக்கென்ன? வாங்கிக்கொள்ளு.

மதனி.—[கோவத்தோடு] என்னிடத்தில் உனக்கு நம்பிக்கையில்லாவிட்டால் எதற்காக என்னை விலைகொடுத்து மீட்கப் போகிறாய்?

சர்வி.—அடிகாலையிற் செட்டித்தெருவில் நான் இந்த விதமாய்க் கேள்வியுற்றேன். சாருதத்தனுடைய—[வசந்தசேனை மதனிகை யிருவரும் மூர்ச்சையுறுகின்றனர்.]

சர்வி.—மதனிகா! மூர்ச்சை நீங்குக. நீ இப்பொழுது.

துக்கத்தால் வாடிய ‡ சொக்குள அங்கமும்
பயத்தால் நடுங்கி மயக்குறு நயநமும்
உனடயஉன் றனையான் படிமனை யாட்டியா

† என=என் என்பதன் விகாரம். ‡ சொக்கு=அழகு.

ஆக்குதற் கெனுங்கால் நோக்குடல் நடுங்கினே !
மண்மலே மயிலே நிகர்த்தோய் !
என்மீ திரக்கம் இழைத்திலே யென்னே (8)

மதனி.—[மூர்ச்சை தெளிந்தெழுந்து] சாகசக்காரனே ! என்பொருட்டு நீ இந்த அகாரியத்தைச் செய்த அந்த வீட்டில் ஒருவனையுங் கொலைசெய்ததாவது தீங்கு செய்ததாவது இல்லையே ?

சர்வி.—அச்சமுற்றவன், நித்திரைசெய்பவன் இவர்களைச் சர்விலகன் அடிக்கிறதில்லை. ஆகையால் யாரொருவனையுங் கொலைபுரியவுமில்லை, துன்பஞ்செய்யவுமில்லை.

மதனி.—உண்மையா ? சர்விலக ! சத்தியமா ?

சர்வி.—சத்தியம்.

வசந்த.—[நினைவு வந்து] ஆச்சரியம் ! நான் இன்னும் உயிரோடிருக்கிறேனே !

மதனி.—பிரியம்.

சர்வி.—[பொறாமையோடு] மதனிகே ! என்ன பிரியமென்கின்றனை ?

நல்லவர் குலத்தே வந்துன்
நட்பினின் மாங்கட் டுண்டே
† அல்லவர் தொழிலைச் செய்தே
னங்கசன் வருத்தா நிற்குஞ்
சொல்லரு மியல்பைப் பெற்றே
னுயினு மானக் ‡ தூர்க்கேன்
மெல்லவென் பிரியையென்று
விழைகின்ற யயலான் றன்னை (9)

---

† அல்லவர் = தீயவர், நல்லவரல்லார் என்றபடி.

‡ தூர்த்தல் = செறுத்தல், அழித்தலெனு பொருளிலுபயோகம்.

(உட்கருத்தோடு)

குலமக னென்றுசொல் கோடிலா மரம்
பலபொருட் † பலங்களைப் படைத்து வாரிசூழ்
நிலமிசை வேசையாம் பறவையால் நிதம்
பலமுற வுண்டுபோம் பயனை யுற்றதே. (10)

காமத்தீ சுரதநற் சுவாலை காட்டியே
ஏமுறு மையலா மிந்தனங் கொளீஇப்
பூமியில் மாந்தர்தம் பொருளும் யௌவந
மாமிவை யாகுதி யடைத லுற்றதே. (11)

வதந்த.—[புன்சிரிப்போடு] காரணமின்றி யிவனுக்கிந்தக் கடுங் கோவம் விளைந்தது.

சர்வி.—எவ்வகையினும்.

பெண்ணினைப் பொருளினைப் பேணு மாந்தர்கள்
மண்ணினின் மூடர்க ளென்ற லென்மதம்
கண்ணுற வளைந்துசெல் கட்செவிக் கிணைப்
பண்மொழி ‡ மாதரும் பொருளும் ‡ பாறுவார். (12)

மாதர்மீ § தாதரம் வைத்தல் நன்கல
ஆதர முடையரை யவமதிப் பரான்
$ மாதர்கொள் மங்கைமாட் டன்பு கொள்ளலாம்
ஆதரமிலாளைவிட் டகறல் நன்றரோ. (13)

---

† பலம்=பழம். பிரயோசநம்.

‡ ‡ மாதர், பொருள் என்ற சொற்கள் இணைவிரவிச்சிறப்பாற் பாறு வார் என்ற உயர்திணைமுடிபேற்றன; "திங்களுஞ்சான்றோரு மொப்பர்" என்புழிப்போல "திணைவிரவெண்ணுப்பெயர் சிறப் பினு மிகவினு, மிழிவினு மொருமுடிபெய்துமென்ப" இலக்கண விளக்கம், சொல்லதிகாரம், பொதுவியல் சூத். 4.

§ ஆதரம்=ஆசை. "தூயவாதரந்துரப்ப தோராதரந்தோன்ற" இரா மாயணம், கிஷ்கிந்தாகாண்டம், மராமரப்படலம் 10.

$ மாதர்=அன்பு.

பொருளுக்கே யழுவர்நின்று
நகைப்பர்நற் புருடர்தம்மை
மருளுற நம்பச்செய்வர்
மற்றவர் நம்பமாட்டார்
இருளறு சீலந்தன்னற்
குலத்தினல் † ஏமாப்புற்ருேன்
வெருட்டரு மயானப்பூப்போன்
வேசையை விலக்கல்வேண்டும் (14)

மேலும்,

கடலலைபோ லலைந்திடுவார் மாலைத்தோன்றுங்
‡ கனலேகை யெனமுகூர்த்த காலநிற்கும்
விடஅநுரா கத்தினர்கள் செல்வமெல்லாம்
விழைவுடனே கொள்ளையிடு மனத்தார்மிக்க
அடர்புடனே பிழிந்தவலத் தகம்போற்செல்வம்
அழிந்தவனை யப்பொழுதே யகலாநிற்பர்
புடவிதனிற் சபலமுற்ருேர் பெண்களென்றே
போற்றுகின்ற பலபலநூல் புகலுங்கண்டாய்! (15)

ஒருவனை மநத்தினி லூன்று ஏார்கணல்
ஓருவனை யழைப்பரே யுனு § மதப் பெருக்
கொருவன்மாட் டின்புற விடுப்ப ருற்றவே
ருருவனை யுடலினு லாசை யோம்புவார் (16)

பின்வருகிறபடி ஒரு மகான் நன்ருகக் கூறியுள்ளார்

மலையுச் சிதனின் மரைபூத் திடுமோ
குலமாச் சுமைவே,சரிதாங் குறுமோ
பலபுற் சம்பாப் பயிரா கும்மோ
விலைப்பெண் சுத்தத் தினை மேவுவளோ? (17)

---

† ஏமாப்பு=செருக்கு.

‡ கனலேகை=மேகங்களா காயத்திற்படியுங்காலுண்டாகும் பற்பல உருவங்கள்.

§ மதப்பெருக்கு=சோணிதம்.

ஆ! கொடிய குணம்படைத்த சாருதத்தப்பயலே! நீ இனி இருக்கப்போகிறதில்லை [யென்று சிறிது தூரம் போகிருன்.]

மதனி.—[உத்தரீயத்தலைப்பைப் பிடித்து] அடே! சம்பந்தமின்றிப் பேசுபவனே! காரணமில்லாமற் கோவங்கொண்டாய்.

சர்வி.—காரணமில்லை என்கிருயே! என்ன?

மதனி.—இந்த நகைகள் ஆரியையுடையதல்லவா!

சர்வி.—அப்பால்.

மதனி.—இவைகளந்த ஆரியரிடத்திலடைக்கலம் வைக்கப்பட்டன.

சர்வி.—யாது நிமித்தம்?

மதனி.—[அவன் காதில்] இவ்விதமாக.

சர்வி.—[வெட்கமுற்று] ஹாஹாகஷ்டம்!

வேனிலில் வருந்தி நீழல் விரும்பிய வெளியேன்ருரு
மேனிமிர் கிளைக்கண்மேவு மிலைகளை வீழ்த்திக் கெட்டேன் (18)

வசந்த.—என்ன! இவனுந்துக்கப்படுகிருன்! அறியாமையால் இவன் இப்படிச்செய்தான்போலும்.

சர்வி.—மதனிகே! இப்பொழுது என்ன யோசனை?

மதனி.—இக்காரியத்தில் நீர் நிபுணரன்ரே!

சர்வி.—அங்ஙனமன்று இதோபார்.

பன்னூலும் பயிறலா லாண் மக்கள்பண் டிதர்களாவர்
பன்னூலும் பயிறலின்றிப் பெண்கள்பண் டிதைகளாவர் (19)

மதனி.—சர்விலக! என் வார்த்தைக்கு நீர் இணங்கு வீராயின் பெருமையுற்ற அவரிடத்தில் அதைக் கொண்டுபோய்க் கொடும்!

சர்வி.—மதனிகே! அவரென்னை அதிகாரிகளிடங் காட்டிவிட் டாலோ?

மதனி.—சந்திரனிடத்தில் வெய்யில் உண்டாகுமா!

வசந்த.—நல்லது! மதனிகே! நல்லது.

சர்வி.—மதனிகா!

எனக்கிந்தக் கள்ளச்செய்கை
யினிற் † றுக்கம் பயமுமில்லை
அனையவன் குணத்தை நீயிங்
கறைகுத லென்னோவிந்த
மனநடுங் குறுநீக்கன்ம
மாவெட்க மாற்றுகின்ற
தெனைநிகர் கொடியோர்க் கெந்தத்
தண்டனை விதியா ‡ னேந்தல் (20)

ஆயினும் நீ சொல்லுகிற உபாயம் நீதிக்கு ஒத்ததல்ல! வேறு தந்திரம் யோசிப்போம்.

மதனி.—இதோ வேறு ஒரு தந்திரம்!

வசந்த.—அஃதென்னை?

மதனி.—இந்த ஆரியையுடைய மனிதனென்று சொல்லிக் கொண்டு இந்த அலங்காரத்தை யவரிடங் கொண்டு போய்க்கொடுமே!

சர்வி.—அப்படிச் செய்வதாலுண்டாவதென்ன?

---

† "எஞ்சுபொருட் கிளவி செஞ்சொலாயிற், பிற்படக்கிளவார் முற் படக்கிளத்தல்" என்னுந் தொல்காப்பியம், சொல்லதிகாரம் இடையியல் 36ஞ் சூத்திரத்தால் "துக்கமும்" என்று உம்மை கொடுக்கவில்லை பயமும் என்றும்மை கொடுக்கப்பட்டது.

‡ ஏந்தல் = அரசன்.

மதனி.—நீயுங் களவு செய்தவனாகாய்; அந்த ஆரியருங்கடன் தீர்ந்தவராவர். ஆரியையும் அவளுடைய பூஷணங்களை யடைந்தவளாவாள்;

சர்வி.—இது பெரிய மாயச்செய்கையல்லவா?

மதனி.—அடே நீ கொண்டுபோ: இல்லாவிடில் இதுபெரிய கொடுஞ் செய்கையாக முடியும்.

வசந்த.—நல்லது மதனிகே! நல்லது! வேசையல்லாதவள்போற்பேசினை!

சர்வி.—

உனைமேவி நற்புந்தி
யுற்றனன்யா னிலவகன்ற
† கனையிருளிற் செல்வழியைக்
காட்டுபவ ரிதன்றோ. (21)

மதனி.—அங்ஙனமாயின், நீ இந்தக்காமதேவன் கிரகத்திற் சற்றிரு; நான் ஆரியையிடம்போய் நீ வந்திருத்தலை யுணர்த்துகின்றேன்.

சர்வி.—அப்படியேசெய்!

மதனி.—[சென்று] ஆரியே! ஆரியசாருதத்தரிடமிருந்து இங்கு ஒரு பிராமணன் வந்திருக்கின்றனன்.

வசந்த.—பாங்கி! அவரைச் சேர்ந்தவரென்று நீ எவ்வண்ணம் அறிந்தனை?

மதனி.—என் சம்பந்தமுள்ளவனை நான் அறியேனா என்ன!

வசந்த.—[தலையை யசைத்து நகைத்துத் தனக்குள்] மிகச்சரி! [வெளிப்படையாக] வரட்டும்!

† கனை = நிறைவு. "கனைகதிர்க்கடவுள்கண் விழித்தகாலையே" சீவக சிந்தாமணி, விமலையாரிலம்பகம் 55.

மதனி.—அம்மணி கட்டளையிட்டபடி [என்று சர்விலகனருகிற்சென்று] சர்விலக ! உள்ளேபோ !

சர்வி.—[சென்று வேறுபட்ட முகத்தோடு] உனக்கு மங்களமுண்டாகட்டும் !

வசந்த.—ஆரியரே ! வந்தனம்புரிகிறேன், உட்காரும்.

சர்வி.—"வீடு கலகலத்திருக்கிறபடியால் இந்தச்சுவர்ணபாண்டத்தை வைத்துக்கொண்டு காப்பாற்றல் மிகச் சிரமமாகவிருக்கிறது. ஆகையால் இதை வாங்கிக்கொள்ளும்" என்றுவியாபாரி விண்ணப்பஞ்செய்கிறார் [என்று மதனிகைகையிற் கொடுத்துவிட்டுப் புறப்படுகின்றனன்]

வசந்த.—ஆரியரே ! நான் வதிற் சொல்லுகிறேன். அதையுந் தாம் ஏற்றுப் போதல் வேண்டும்.

சர்வி.—[மனத்திற்குள்] அங்கு எவன் போவான் [வெளிப்படையாய்] வதிற் செய்தி என்ன ?

வசந்த.—மதனிகையைத் தாங்கள் பிரதிக்கிரகம் பண்ணவேண்டுவது.

சர்வி.—அம்மணீ ! ஒன்றுந் தெரியவில்லையே.

வசந்த.—எனக்குத் தெரியும்.

சர்வி.—என்ன ?

வசந்த.—"எவன் இந்த ஆபரணத்தைக் கொடுக்கின்றானோ அவனுக்கு மதனிகையைக்கொடு" என்று ஆரிய சாருதத்தர் சொல்லியிருக்கின்றனர். ஆகையால் இம்மதனிகையை அவரே தருகிறாரென்று தாம் அறியவேண்டும்.

சர்வி.—[தனக்குள்] அட ! இவளென்னையறிந்தனள் போலும், [வெளிப்படையாக] நல்லது ஆரியசாருதத்த ! நல்லது !

குணந்தனை யாடவர் கூடல் வேண்டுமாற்
குணத்தினாற் பெறுததொன் றில்லை † கூ வினிற்
குணமுளான் வறிஞனே யெனினுங் கூறுநற்
குணமிலாச் செல்வவா னொத்தல் கூடுமோ. (22)

மேலும்

குணத்தினில் முயற்சியைக் கூடல் வேண்டுநற்
குணத்தினால் யாவையுங் கூடு மேன்மைசேர்
குணத்தினன் மதிகுடி புக்கனன் நதி
‡ மணத்திடு § தாணுவின் மாமுடிக்கணே (23)

வசந்த.—யாரடா அங்கே! வண்டியோட்டி?

(சேடன் வண்டியோடு பிரவேசம்)

சேடன்.—ஆரியே! வண்டி $ தயாராகியிருக்கின்றது.

வசந்த.—ஸகிமதனிகே! என்னை உற்றுப்பார்! நீ தானஞ்செய்யப் பட்டனை. வண்டியிலேறு. என்னை உன் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளு.

மதனி.—[அழுது கொண்டு] அம்மணியால் விடப்பட்டவளாயி னேன் [என்று பாதங்களிற் பணிகின்றனள்]

வசந்த.—இப்பொழுது நீ என்னால் வணங்கத்தக்கவளாயினை. ஆகையாற்போ. வண்டியிலேறு. என்னைமறவாதே.

சர்வில.—உனக்கு மங்களம் உண்டாகுக, மதனிகே!

இவளைப்பாருன் றலையாலே
யிவள்கால்பணியிம் || மானினியால்
அவனிபுகழ ¶ 'வதூ' வெனும்பே
ரடைந்தாயன்றோ ஆயிழையே! (24)

(என்று மதனிகையோடு வண்டியிலேறிச் சென்றனன்)

---

† கூ=பூமி. ‡ மணத்தல்=கூடல். § தாணு=சிவன்.

$ தயார்=சித்தமென்றபொருளைத்தருந்திசைச்சொல்.

|| மானினி=பெண்மகள். ¶ வதூ=விவகாத்திற்குக் குறித்தகன்னிகை.

[திரைக்குள்] ஆரடா அங்கே ஆரடா அங்கே! இராச சம்ப ந்தி கட்டளையிடுகின்றனர். "அந்த ஆரியகன் என்னும் இடைப்பையன் அரசனுகப்போகிருன்" என்ற சித்தர்வா க்கியத்திலுண்டான நம்புதலால், அச்சமுற்ற அரசன் பால கனல் இடைச்சேரியிலிருந்து கொணரப்பட்ட ஆரியகன் கோரமான சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றனன், ஆகையால் அவரவர்களிடத்தில் விழிப்போடிருங்கள்.

சர்வி.—[கேட்டு] என்னே! எனது அன்பிற்குரிய தோழன் ஆரியகன் அரசன் பாலகனுற் காவற்படுத்தப்பட்டானு! குடும்பியாகிவிட்டேனே, ஆ கஷ்டம்! அன்றியும்

மாதரு நண்பரு மண்ணில் வாழுநர்க்
§ காதர மாயினு மன்பின் மேயநற்
கோதையர் தம்மினுங் கோணில் நண்பனே
பூதல மிக்கவன் என்னப் போற்றுமால் (25)

இருக்கட்டும் இதோவண்டியில் நின்றும் இறங்குவேன் [என்று இறங்கினன்]

மதனி.—[கண்ணீர் சொரிந்து கையைக்கூப்பினவளாய்] தாங்கள் சொல்லுகிறபடி கூடாது. ஆரியபுத்திரராகிய தாம் என்னைக்குருஜநங்களிடத்திற் கொண்டு விடுங்கள்.

சர்வி.—நல்லது மதனிகே நல்லது! என்மனம் மகிழும் வண்ணம் உரைத்தனை [சேடனைப்பார்த்து] பத்திரனே! சார்த்த வாஹ ரைபிலனுடைய வீட்டை நீ அறிவாயா?

சேட.—ஆம்.

சர்வி.—எனது காதலியை யழைத்துப்போய் அங்குவிடு.

சேட.—ஆரியர் ஆக்கினைப்படி யாகட்டுங்கோ.

---

§ ஆதரம்=ஆதாரம் என்றசொல்விகாரவகையால் ஆதரமென நின்றது.

மதனி.—ஆரிய புத்திரர் சொல்லுகிறபடியே! ஆரியபுத்திரராகிய தாங்கள் ஜாக்கிரதையாயிருத்தல் வேண்டும் [என்று சென்றனள்].

சர்வி.—நானிப்போது.

தனியுதய ணப்பெருமான் றனையேயோகந்
 தராயணன்போய் விடுவித்த தன்மைக்கொப்ப
உனுமன்பன் றனைவிடுக்கும் பொருட்டேயோங்கு
 புயவலியாற் பெருமையுற்ற † தாயத்தாரை
நனி ‡ விடரை மன்னவன்செய் யவமானத்தா
 னயங்கடந்த சினமுற்ற வேந்தன் சேடர்
எனுமிவர்க டமையிந்தக் கணமேகூட்டி
 யெழுப்பிவிடு வேனந்த விறைவன்மேலே. (26)

மேலும்,

இராகு கௌவிய திங்களை விடுத்தலே யேய
விரோத மையமென் றிவைகொடு வெளி § நிப மின்றிக்
குரோதத் தாலென நண்பனைச் சிறையிடு கொடியோர்
$ சரேலென் றேங்கிடத் தாக்குவென் றரையிடத் தன்றே (27)

(என்று சென்றனள்)

(சேடி பிரவேசம்)

சேடி.—ஆரியே! இப்பொழுது நீ பாக்கியசாலி. ஆரியர் சாருதத்தரிடமிருந்து ஒரு பார்ப்பான் வந்திருக்கின்றனன்.

வசந்த—இன்று மிக்க மநோகரமான நாள் ஆ ஆ! அடீ! மிகுந்த அன்போடு ‖ பந்துலரால் அவரை உள்ளே அழைத்து வரும்படி செய்.

சேடி.—எஜமானி கட்டளைப்படி [என்று போயினள்].

---

† தாயத்தார் = தாயாதர். ‡ விடர் = தூர்த்தர். § நிபம் = காரணம்.
$ சரேல் = விரைவைக்குறிக்கு மோரிடைச்சொல்.
‖ பந்துலர் = வேசை மகார், இவர்களினிலக்கணத்தை இதன் 28ஞ் செய்யுளிற்காண்க.

விதூஷ.—அட ஆச்சரியம் ஆச்சரியம்! அரியதவங்களைச்செய்து அதனால் வெறிகொண்ட புட்பகவிமானத்தின் மீது இராக்கத இராவணன் ஏகுகின்றான்; நானோ பிராமணன்; நான் அரியதவங்களைச் செய்யாவிடினும், நானும் நரமங்கையரோடு போகாநின்றேன்.

சேடி.—எங்கள் வீட்டு வாசலைப்பாரும்.

விதூஷ.—[பார்த்து ஆச்சரியமடைந்து] ஆ ஆ! நீர்தெளித்துப் பெருக்கி மெழுகப்பட்டிருக்கின்றது; பலவித மணமிருந்த புஷ்பங்களைத் தரையில் அழகாக தெளித்திருக்கின்றனர். ஆகாயத்தை எட்டிப்பார்க்கும் ஆநந்தத்தோடு மேல்நோக்கியிருத்தல் போல, வாசல் நிலை உயர்ந்திருக்கின்றது. தேவேந்திரனுடைய ஐராவதமென்னும் யானைத்துதிக்கையிலிருந்து தொங்குதல்போல, அசைகின்ற மல்லிகைப் பூமாலைகளாலலங்கரிக்கப்பட்டிராநின்றது. யானைத் தந்தத்தாற் செய்யப்பட்டிருக்கும் உயர்ந்த தோரணங்களுடன் விளங்காநின்றது. மேலான மாணிக்கச் செங்காந்தியுற்ற கைநுனியால், "இங்குவா" என்று அழைத்தல்போல் மாமணிகளின் சிவந்த ஒளியால் மின்னியுங் காற்றினலசைவுற்றுமிருக்கிற சௌபாக்கியமான கொடிகளாற் பிரகாசியாநின்றது. தோரணஸ்தம்பங்களின் மேடைகள் மீது வைக்கப்பட்டிருப்பவைகளாயும், பச்சைவர்ண மாந்தளிர்கள் சொருகப்பட்டிருப்பவைகளாயும் உள்ள, படிகமய மங்கலக் கலசங்களால் மனத்தைக்கவரும் இருபக்கங்களையுங் கொண்டிராநின்றது. பெரிய அசுரனுடைய மார்பைப் போற் பிளக்கக்கூடாததாகவும், வயிரங்களால் நெருங்க இழைக்கப்பட்டதாகவுமிருக்கிற, தங்கக்கதவோடு கூடியதாகவிருக்கிறது. என்ன ஆச்சரியம்! தரித்திரர்களுடைய மனத்திற்குத் துயரத்தை விளைக்கத்தக்கதாகவுமிருக்கிறது. வசந்த சேனையின் வீட்டுவாசல் அலங்காரமிது. நிச்சயமாக எல்லாமனிதர்களுடைய பார்வைகளையுங் கவர்ந்து இழுக்காநின்றது.

சேடி.—போம் போம் இது முதற்கட்டு. இதற்குட் செல்லும்.

விதூஷ.—[பிரவேசித்து] அட! புதுமை! இந்த முதற்கட்டிற் சந்திரன், சங்கம், தாமரைத்தண்டின் நூல் இவைகளுடைய நிறம் போன்ற காந்தியையும், இறைத்திருக்கும் பொடிகளின் வெண்மையையுந் தழுவிப்பலவகை இரத்தினங்கள் பதிப்புற்ற தங்கப்படிகளால் விளங்கும் உப்பரிகையின் பந்திகள் முத்தாரந்தரித்த படிக்கச்சாளரங்களென்னு முகமதிகளால், உச்சயினி நகரத்தை உற்று நோக்குதலையொத்திருக்கின்றன. துவாரபாலன், வைதீகன் போற் சுகமாய் உட்கார்ந்து நித்திரை செய்கின்றனன். தயிர்கலந்த சம்பா அரிசிப்பலிகளைக் காறைக் கட்டிகளென்றெண்ணிக் காக்கைகள் உண்ணவில்லை. மேலேபோவோம், காட்டு.

சேடி.—ஆரிய இது இரண்டாங்கட்டு இதில் நுழையும்.

விதூஷ.—[சென்று பார்த்து] ஆ ஆ அம்மம்ம! அருகில் வைக்கப்பட்டிருக்கும் பசும்புல், தவிடு, இவைகளையுண்டு கொழுத்தவைகளும், எண்ணெய் தடவப்பெற்ற கொம்புகள் படைத்தவைகளுமான வண்டிக்காளைகள் நிற்கின்றன. அவமானமடைந்த நற்குலத்தானைப்போல, இதோ ஒரு கார் எருமை மூச்சு விடுகிறது. உயுத்தஞ்செய்து வந்த மல்லனைப்போல இதோ ஆட்டின் கழுத்தைப் பிடிக்கின்றனர். இவிடத்திற் குதிரைகட்கு அவைகளின் மயிரை அலங்கரிக்கின்றனர். குதிரை இலாயத்திற் றிருடனைப்போல நன்றாய்க்கட்டப்பட்டிருக்கிற குரங்கொன்று. நெய்யிற்கலந்த சோற்றுக்கவளங்களை யானைக்கு ஊட்டுகின்றனரிதோ. காட்டு, மேலே செல்வேம்.

சேடி.—ஆரிய! செல்லுக செல்லுக, இது மூன்றாங்கட்டு. இதற்குட் போம்.

விதூஷ.—[சென்று] அகோ ஆச்சரியம்! இந்த மூன்றாங்கட்டில் நற்குலமாந்தர்கள் வந்தால், அவர்கள் வீற்றிருக்க நாற்காலிகளிடப்பட்டிருக்கின்றன. சூதாட்டப்பலகை மேற் பாதி

வரையில் வாசித்து நிறுத்திய ஒரு † காமநூல் விரித்து வைக்கப்பட்டிருக்கிறது. தோஷமற்ற நவமணிகளிழைப் புற்ற காய்களுடன் சூதாட்டப்பலகை ஒன்றிருக்கிறது. இங்கு மன்மதன் கலகத்தை அடக்கவல்ல தாஸிகளும். வயதில் முதிர்ந்த விடர்களும், பலவர்ணங்களால் எழுதப்பட்டிருக்கிற சித்திரப்பலகைகளைக் கையிலேந்தி அங்கும் இங்கும் உலாவுகின்றனர். மேலே காட்டடி!

சேடி.—இது நான்காம் கட்டு. இதற்குட்போம்.

விதூஷ.—[சென்று நோக்கி] ஓகோ! அற்புதம்! இந்த நாலாவது கட்டில் ‡ யுவதிகளாலடிக்கப்படும் மிருதங்கம் வாசிக்கப் படுதலால் மேகமுழக்கம்போன்ற கம்பீரமான நாதங்கள் விளைகின்றன. புண்ணியம் முடிந்தநட்சத்திரங்கள், ஆகாயத்தில் நின்று விழுதலை யொப்பக் கைத்தாளங்கள் போடப்படா நின்றன. வண்டுகளின் ஒலியை யொத்த புள்ளங் குழல்கள் நாதிக்கின்றன. பொறாமையாற் § பிரணய கலகமுற்ற காமினியை மடியில் இருத்தி நகக்குறி பதித்தல் போல, இங்கு வீணையானது மடியில் வைத்துக்கொள்ளப் பட்டு நகங்களால் மீட்டி வாசிக்கப்படுகிறது. இதோபூக் களிலுற்ற மதுவை யுண்டு வெறிகொண்ட வண்டுகளைப் போன்று, மிகமதுரமாகப் பாடிக்கொண்டு வேசைப்பெண்கள் நாட்டியம் புரிகின்றனர். சிங்கார ரஸ நடநங்கற்பிக்கப் படுகிறது. சாளரங்களிற் றண்ணீர்குடிக்கும் பாத்திரங்கள் கட்டித்தொங்குபவை, காற்றுவாங்குதல்போற் காணப்படுகின்றன. காட்டு! இதற்கப்பாற் போவாம்.

சேடி.—இதோ ஐந்தாங்கட்டு. போங்காணும்.

விதூஷ.—[பிரவேசித்துக்கண்ணுற்று] அடே! ஓகோ! ஐந்தாவது கட்டில் தரித்திரர்கட்கு ஆசையுண்டாக்கத்தக்க பெருங்காயம், நெய் இவைகளின் நறுமணம் வீசுகின்றது. நாறு

---

† காமநூல்=இரதிரகசியம் முதலியன.

‡ யுவதி=பதினாறு வயது பெண். § பிரணயகலகம்=ஊடல்.

வித வாசனைகளின் புகை வெளியிற் போகும் வாயிலாகிற முகங்களால் எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கிற பாகசாலை — சமையற்கட்டு — மூச்சுவிடல் போலிருக்கிறது. செய்யப்படுகிற பண்ணிகாரங்கள், உணவுகள் இவைகளுடைய மணம் எனது ஆசையைப் போக்காநின்றது. கசாப்புக்காரப்பயல் கத்தியாற்றுண்டித்த ஆட்டின் குடலைச் சீலைத்துண்டைப்போற் கழுவுகின்றனன். பலவித உணவுகளைச் சுயம்பாகி சமைக்கின்றனன். லட்டுகங்கள் [மோதகங்கள்] செய்கின்றனர். அபூபங்கள் [அப்பங்கள்] சுடப்படுகின்றன. இதோ சித்தஞ் செய்யப்பட்டிருக்கும் ஆகாரத்தை வியஞ்சனங்களோடு சாப்பிடும் என்று எனக்கு யாரேனும் பாதப்பிரட்சாளனஜலம் [கால் கழுவு நீர்] கொடுப்பார்களா? கந்திருவ அப்ஸர பங்கையர்களின் கூட்டம் நிகர்த்த அலங்கார யுவதிகளான தேவடியாள்களாலும் பந்துலர்களாலும் உண்மையிற் சுவர்க்கமே போற் காணப்படுகின்றது. அட! ஓய்! பந்துலர்களென்ற நீங்கள் யார்?

பந்துலர்.—நாங்களா?

அன்னியரில் லழையாமற் புகுவேம் அந்த
அன்னியர்வெண் சோறுண்டு கொழுப்பேம் நாணில்
அன்னியர்க்கு வேசையற்பாற் பிறந்தே மற்றும்
அன்னியர்தம் பெரும் பொருளைக் கவர்வேம் மான
அன்னியர்கள் நாணமுறுங் குணமே யுள்ளேம்
அன்னிகர்த்த இறையானைக் குட்டிக் கொப்பேம்
அன்னியர்க்குத் தொண்டுசெயுந் தொழிலே யுற்றேம்
அன்னியராற் பந்துலரென் றழைக்கப் பெற்றேம். (28)

விதூஷ.—மேலே காட்டு.

சேடி.—சுவாமீ! இஃது ஆறுங்கட்டு, இதிற் பிரவேசியும்.

விதூஷ.—[நுழைந்து பார்த்து] நீலமாணிக்கங்கள் பதிக்கப்பட்டிருக்கும் உயர்ந்த மாணிக்கத் தோரணங்கள் இந்திர நீலவில்லைப்போற்றோன்றுகின்றன; வைடூரியம், முத்தம், பவளம்,

புட்பராகம், இந்திரநீலம், பதுமராகம், மரகதம், † கற்கேதரகம், முதலிய இரத்தின விசேடங்களை ஓர் இடத்திற் சிற்பிகள் விலைமதிக்கின்றனர்; தங்கங்களில் மாணிக்கங்களைப்பதித்து இழைக்கின்றனர்; வைடூரியக் கற்களை உடைக்கின்றனர்; சங்கங்களைச் சேதிக்கின்றனர்; பவளங்களைச் சாணையிற்றேய்க்கின்றனர்; முத்துக்களைச் செம்பட்டு நூலில் ஆரமாய்க் கோவை செய்கின்றனர்; ஈரமான குங்குமங்களை புலர்த்துகின்றனர்; சந்தனம் அரைக்கின்றனர்; வாசனை கலக்கின்றனர்; கஸ்தூரியைப் பரத்துகின்றனர்; வேசையர், விட புருடர்கட்குப் பச்சைக் கர்ப்பூரத்தோடு தாம்பூலங் கொடுக்கின்றனர்; ஒருவரை யொருவர் கடைக்கண்களாற் பார்த்து நகைக்கின்றனர்; இடைவிடாமற் ‡ சீத்காரத்தோடு மதுபானம் பண்ணுகின்றனர். இதோ சேடர்கள், சேடியர், மகன், மனைவி, நண்பன் இவர்களை நீக்கிவிட்டுப், பானபாத்திரங்களில் மதுவை நிறைத்துக் குடித்த வேசையரால் விடப்பட்டவராகிக் குடிக்கின்றனர்; அப்பாற்காட்டு.

சேடி.—ஐயா! இதுதான் ஏழாங்கட்டு, உள்ளேபோம்.

விதூஷ.—[போய்ப்பார்த்து] இவ்வேழாங்கட்டில் நன்கமைந்த பட்சி வாடியில் இன்புற்றிருக்கின்ற மணிப்புறாவின் இணைகள் ஒன்றையொன்று முத்தமிட்டுச் சுகமநுபவிக்கின்றன; ததியோதநத்தால் நிறைந்த வயிற்றை யுடைய பிராமணனைப்போலக், கூட்டிற் குலாவுங்கிளிகள் வேதவாக்கியங்களை விளம்புகின்றன. தலைவன்றயவால் அச்சம் நீங்கிய வீட்டுவேலைக்காரியைப்போல, மதன நாகணவாய்ப்புட்கள் "குரு குரு" என்றொலிக்கின்றன. தாஸிப் பெண்களைப் போலப், பற்பல பழவர்க்கங்களைத் தின்று மெல்லிய குரலாற் குயில்கள் கூவுகின்றன; முளைகளிற் பறவைக் கூடுகள் தொங்குகின்றன; கவுதாரிகள் சண்டை போடுகின்

† கற்கேதரகம்=ஒருவித மாணிக்கம்.

‡ சீத்காரம்=வாயுறிஞ்சல், இதை மதனநூலிற் பரக்கக்காணலாம்.

றன ; சிச்சிலிக்குருவிகள் பேச்சுக் கற்கின்றன ; கூண்டி லுள்ள புறாக்களைச் சண்டையிடும்படி யனுப்புகின்றனர் ; இரத்திநங்களைச் சித்தரித்ததுபோல வீட்டுமயில்கள் நிரு த்தஞ் மாடுகின்றன ; அந்த நிருத்தநம் வெயிலிற் காய்ந்த மேன்மாடத்தை இறகுகளால் வீசுதல் போலக் காணப்படு கிறது ; சந்திர கிரணங்களே பிண்ட உருவைப் பெற்றது போல அரச அன்ன மிதுநங்கள் நாரியருடைய நடை யைத் தாம் கற்குதல் ஒப்ப அவர்களைப் பின்றொடர்கின் றன. வளர்க்கப்படுங் குருகுக் குருவிகள், அந்தப்புரத்துப் பேடிகளென்ன, அங்கும் இங்கும் அலைகின்றன ; ஆச்சரி யம் ! பல பட்சிஜாலங்களா லிவள் சூழப்பட்டிருக்கின்ற னள்; மெய்யாகவே தேவேந்திரன் நந்தநமென்னும் பூந்தோ ட்டத்தைப்போல் இந்தத்தாசிவீடு விளாங்காநின்றது. மேலே.

சேடி.—ஆரிய! இது எட்டாங்கட்டு. இதற்குட் செல்லும்.

விதூஷ.—[எதிப்பார்த்து] இவன்யார் ? பட்டு வஸ்திரந் தரித்து மேலும்மேலும் அளவிறந்த அலங்காரஞ் செய்துகொ ண்டு விளங்குகின்றான் ; அங்க ஈனத்தாற் றடுமாறி அங் கும் இங்கும் விழுந்தலைகிறான்.

சேடி.—ஐயா ! ஆரியையின் சகோதரன்.

விதூஷ.—இவன் என்னதபசு பண்ணி வசந்த சேனைக்கு உடன் பிறப்பாகச் சநித்தான். அல்லது.

தேசுளான் மநங்கவர் செயலன் றிப்பிய
வாசனை மரீஇயினன் எனினு மாந்தரார்
கூசுறு மயாநத்திற் † குலவு சண்பகக்
‡ கேசர மலரெனக் கிட்டு கின்றிலர். (29)

---

† குலவுதல்=கொண்டாடல்.

‡ கேசரம்=பூந்தாது.

[மற்றொரு பக்கத்திற் பார்த்து] சேடீ! இவள்யார்? பூப்போட்டபுடவை பூண்டிருக்கின்றனள்; எண்ணெயிட்ட பாதங்களிற் செருப்பணிந்து, உயர்ந்த ஆசநத்தில் வீற்றிருக்கின்றனளே!

சேடி.—ஆரிய! இவள் எங்கள் எசமானியின் றாயார்.

விதூஷ.—அசோ! † கபர்த்தகடாகினிபோல்! இவள் பானை வயிறு எவ்வளவு பெரிது! மகாதேவனைப்போன்ற இவளை முதலில் உள்ளே வைத்துப் பிறகு இந்த வீட்டின் வாசல் நிலை வைத்தார்களா என்ன?

சேடி.—தீம்புக்காரனே! இவ்வண்ணம் எங்களம்மானை இகழாதை. இவள் நாலாமுறைக் காய்ச்சலால் இளைத்துவிட்டாள்.

விதூஷ.—[சிரித்துக்கொண்டு] நாலாமுறைஜ்வரபகவானே! இந்த உபகாரத்தால் என்னையுங் கடாட்சித்தருளும்!

சேடி.—ஆசையற்றவனே! அழிந்து போவாய்!

விதூஷ.—[இகழ்ச்சியோடு] அடிதேவடியாள் மகளே! சூறும் வயிறு படைத்த இவளிறந்தால் நல்லதாகுமடி.

‡ சீதுசுரை யாசவங்க டினமுண்டு மத்தமிகு
வாதைபுரி யுங்களனை வையகத்தி லின்றிறந்தாற்
பேதையுரை செயலெவனோ! பெருநரியீ ரைஞ்ஞூற்றுக்
கோதநமா குவளென்றே யுன்னுவல்யா னன்னுதலே. (30)

---

† கபர்த்தகடாகினி—கபர்த்தகம்=சோகி, டாகினி=காளியேவல் புரிவாள், பலகறையாபரணமணிந்த பைசாசம் என்பது பொருள் "பேழ்வா யிடாகினி கால் தொழு தேத்திக் கையடை கொடுத்த வெண் ணிணவாய்க்குழவி" கல்லாடம் செய்யுள் 91. இடுபிணந்தின்னு மிடாகினிப் பேய் வாங்கி"சிலப்பதிகாரம் 9 கனாத்திற முரைத்தகாதை வரி 21.

‡ சீது, சுரை, ஆசவம்=இம்மூன்றுங்கள்ளின் பேதத்தைக்காட்டும் சொற்கள்.

இருக்கட்டும்; உங்கட்குக் கப்பல் ஓடுகிறதா என்ன?

சேடி.—ஐய! இல்லை இல்லை.

விதூஷ.—கேட்பானேன் இதை. மோகமான தெளிந்த நீருள்ள மதனக்கடலில், தனம், நிதம்பம், சகநம் இவைகளே அழகிய கப்பல்கள்; இவ்வண்ணம் வசந்தசேனையின் பல விர்த்தாந்தங்கள் படைத்த எட்டுக்கட்டு வீட்டைப்பார்க் கையிற் சுவர்க்கமே இங்கு வந்துற்றது போற் றோன்று கின்றது; இது சத்தியம்; விஸ்தரித்துச் சொல்லுகிறதற்கு என்படிப்பு போதாது. இஃதென்ன! தேவடியாள் வீடா? அல்லது குபேரனுடைய அரண்மனையின் ஓர் பாகமா? உங்களுடைய ஆரியை எங்கே?

சேடி.—ஆரிய! இந்தத் தோட்டத்திலிருக்கின்றனள். அங்குச் சென்றுபாரும்.

விதூஷ.—[போய்க்கண்டு] அடே! என்ன அற்புதம்! தோட்டத் தின் அழகு! ஆ ஆ! முறை பிறழாமற் பூத்த நானாவித விருட்சங்கள் ஒரு பக்கம்; எக்காலத்திலும் மரத்தடிக ளிற் பெண்களின் றொடை உயரத்திற்கு மட்டமான பட்டு † ஊஞ்சல்க ளொருபக்கம்; தங்கஊசி மல்லிகை, ‡ சேபா லிகை, § அதிமுக்தம், நவமல்லிகை, மல்லிகை, மாலதி, குரவகம் முதலிய புட்பசாதிகள் தாமாகவே கீழே உதிர் ந்து விழுந்திருத்தல், $ நந்தநவநத்தின் அழகை அற்பமாக்கி விட்டதுபோற் றோன்றுகிறது; உதிக்குஞ்சூரியன் ஒளியை ஒத்த, தாமரை, செவ்வல்லி யிவைகளால் ஓடை மாலைக் காலம் போற் காணப்படுகிறது;

---

† ஊசல் ஊஞ்சலெனவழங்கப்படுகிறது.

‡ சேபாலிகை=ஓர் நறுமணப்பூஞ்செடி, சேபாலிகி சேபாலிகா என்று வடமொழியில் வழங்குகின்றது.

§ அதிமுக்தம்=ஓர் பூங்கொடிவிசேடம், இது மாமரம் ஒன்றிலேயே படருமெனவும் இக்கொடியை மாமரத்தின் மனைவியென்றுங் கூறுவர்.

$ நந்தநவநம்=இந்திரன் பூந்தோட்டம்.

மேலும

போர்கடு வுற்றவோர் வீரன பொற்புடல்
சோரியாற் பூசிய தொப்பத் தூய்தளிர்
† தாரிவை புதுமையாய்த் தழைத்த ‡ காகொளி
நேருற வில்விடம் § நிலவு லுற்றதே (31)

இருக்கட்டும், உங்கள் தலைவி எங்கே?

சேடி.—ஆரியரே! கண்களைக்கீழ் நோக்கிப் பாரும். அதோ ஆரியை யிருக்கின்றனள்.

விதூஷ.—[பார்த்து அருகிற் சென்று] உனக்கு மங்களமுண்டாகுக!

வசந்த.—ஆ! மைத்திரேயர்! [எழுந்து] உமது வரத்து நல்வர வாகுக. இதோ ஆதநம, அதில இருக்குக!

விதூஷ.—நீயும் இரு, [இருவரும் இருந்தார்கள்]

வசந்த.—சார்த்தவாஹருடைய குமாரர் சுகமா?

விதூஷ.—க்ஷேமம் அம்மா!

வசந்த.—ஆரியமைத்திரேயரே!

குணத்தளிர் விநயக் கிளைமிகு மெய்வேர்
கூறுநற் பூசிதையென்னு
மணமிகு மலர்நன் னடைக்கனி நிறைந்த
வனமுள சாதுபா தபத்தை
தணியகில் லாத வேட்கையோ டவனிச்
சற்சநப் பறவைகள் நாளும்
அணுகியே வாழு கின்றவா? உரைத்தி
யாரிய விப்பிர நண்ப! (32)

† தார்=பூ.

‡ காகொளி=அசோகமரம். "விரைசெரி செயலைபிண்டி வேவுகா கொளிமூன்று x x x அசோகின் பேராம்" சூடாமணி நிகண்டு காகொளி எனக்குறுக்கல் பெற்றது.

§ நிலவல்=ஒளிசெய்தல்.

விதூஷ.—[மனத்திற்குள்] இக்கொடியாள் நன்கறிந்து சொன்னாள். [வெளிப்படையாய்] ஆம்.

வசந்த.—ஓய்! வந்த காரியம் என்ன?

விதூஷ.—பூசனைக்குரிய சாருதத்தர் கைகுவித்துக்கொண்டு இந்த விதமாய் உனக்கு விண்ணப்பஞ் செய்கின்றனர்.

வசந்த.—[கைகுவித்து] என்ன உத்தரவு அளிக்கின்றனர்?

விதூஷ.—"நம்பிக்கையாற் றங்கப்பானை தன்னுடையதென்று நினைத்துச் சூதாட்டத்தில் என்னால் இழக்கப்பட்டது; அரசனுடைய வேவுகாரனாகிய † சபிகன் போனவிடந் தெரியவில்லை"

சேடி.—அம்மணீ! நல்ல பாக்கிய சாலியானாய். ஆரியருஞ் சூதாடியாகிவிட்டனர்.

வசந்த.—[மனத்திற்குள்] ஆ! திருடன் கொண்டுபோயிருக்கையிலும் பெருந்தன்மையாற் சூதில் இழந்ததாகச் சொல்லுகிறார்; ஆகையாற்றான் இச்சிக்கப்படுகிறார்.

விதூஷ.—ஆகையால் அதற்கு வதிலாக நீ இந்த இரத்தின ஆரத்தை வாங்கிக்கொள்ளுதி.

வசந்த.—[தனக்குள்] அலங்காரத்தைக் காட்டுவோமா? [யோசித்து] அல்லது காட்டவேண்டாம்.

விதூஷ.—இந்த மாணிக்க மாலையை நீ வாங்கிக் கொள்ளமாட்டாயா என்ன?

வசந்த.—[புன்னகையோடு சகிமுகத்தைப் பார்த்து] மைத்திரேயரே! மாணிக்கமாலையை நான் எதற்காக ஏற்றுக்கொள்ளாமல் விரும்பேன்? [என்று வாங்கி யருகில்வைத்து, மனத்திற்குள்] பூவற்றுப் போயுங்கட்டு மாமரத்தில் நின்று தேன்றுளிகள்

§ சபிகன் = சூதாடிகளின் றலைவன்.

சிக்துகின்றன. [வெளிப்படையாக] ஆரியரே! பிரதோஷ காலத்தில் நான் பார்க்க வருகிறேனென்று அச்சூதாடி ஆரிய சாருதத்தருக்குச் சொல்லுங்கள்.

விதூஷ.—[தனக்குள்] அங்குப்போய் இன்னும் என்ன பெறவிரும்புகின்றனள் [வெளிப்படையாக] இருக்கட்டும்; சொல்லுகிறேன். [தனக்குள்] "இந்த வேசை நேசத்தைவிடும் என்று" [என்று போயினன்]

வசந்த.—சேடீ! இந்த ஆபரணத்தை வாங்கினை; சாருதத்தரைத்தினைக்கும்பொருட்டுச் செல்லுவேம்!

சேடி.—ஆரியே! பாரு, பாரு! இன்று மாரிகால மல்லாதிருப்பினும் மழை மூட்டமாகவிருக்கின்றது.

வசந்த.—

> மேகமுமிரவுவே மிகுக்க † விண்ணநீர்
> வேகமாய்ச்சந்ததம் பெய்க வேட்கையேன்
> ‡ நாகநேரன்பனை நாடிநன்மனம்
> ஏகலான் மற்றவை யெண்ணமுற்றிலேன். (33)

---

† விண்ணநீர் = மழைநீர், விண் = மழை. விண்ணவென்பதினீற்றகரம் ஆறுவதனுருபு "கங்குலும்பகலுங்கண்டு யிலறியாள் கண்ணநீர் கைகளாலிறைக்கும்" திருவாய்மொழி 7ம்பத்து 2 கங்குலும் 1.

‡ நாகம் = யானை.

மதனிகை சர்விலகனென்ற 4-வதங்கம்

முற்றிற்று.

## 5-வது அங்கம்.

(பீடத்திலிருந்து காமக்கவலையுடன் சாருதத்தன் பிரவேசம்)

சாருத.—[மேலேபார்த்து] அகால மேகாவர்த்தம் உண்டாகியிருக்கிறது! இதோ!

விண்ணுலாம பருவமிலா விண்குழாஞ் சிறைவிரித்த
கண்ணுலா மஞ்ஞைகளைக் களிப்பித்துக் கவர்மனத்தோ
டெண்ணியகல் வானெண்ண மேற்றவனங் கட்பிரித்துத்
தண்ணுலவு † கோங்காமி தன்னுளமுந் தகைந்தனவால். (1)

அன்றியும்,

நீர்நனை வுற்றகார் மேதியி னகடுந்
தாருண் ணழுபதச் சாயல னாவி
‡ வித்துரு வாகிற § உத்தரா சங்கம்
கொக்கின் குழுவாம் $ அக்கை பணிந்து
விளங்குறு கொண்டல வேற்றோ கேசவன்
றனைப்போல்வானிற் றுமிடைந் தனவே. (2)

கேசவன் வணம்போற் || காளிமை மேவிக்
கேழ்கிளர் வளைவுகொள் கொக்கின்
ஆசக லினமாம் வளைகளைப் பூண்டே
அவிர்தரு மினற்கொடி யென்னுங்
கோசிகந் தரித்துச் ¶ சவிமிகு கூர்மை
கூடிய * சக்கிர தாரி
யேசம மென்ன வகல்விணில் எழிலி
யிசையுற விசைந்தன வன்றே. (3)

---

† கோக்காமிதன்றுளமும்=ஆகாயத்தையுங்காமி உள்ளத்தையும்.

‡ வித்துரு=மின்னல்.

§ உத்தராசங்கம்=உத்தரீயம்.

$ அக்ஷ=சங்கு.

|| காளிமை=கருமை.

¶ சவி=ஒளி.

* சக்கிரதாரி=திருமால்.

வெண்பொனுருக்கிச் சாய்த்ததுபோல்
விரைவாய்மேகங் களிலின்று
மண்ணில்நாலுந் தன்மைகொளீஇ
வளருந்தடியென் விளக்கநுதி
கண்ணில்மறைந்து மப்பொழுதே
காணப்பட்டு மழைத்தாரை
விண்ணெண்சீலை நுனிசிதைந்து
விழுந்தாலொப்ப வீழ்ந்தனவால். (4)

சக்கரவாகம் இணைந்தனபோலுஞ்
† சதுத்திசைப்பறந்திடும் அனம்போற்
குக்கிகொள்மீனம் பேருடல்மகரங்
கூடிமெய்கலந்தன போலு
மிக்குமேன்மாடம் போன்றுமாமேகம்
‡ விவிதமா முருவங்கள் மேவி
எக்கிய § காலால் விண்மிசைச்சிதறிச்
சித்திரமெழுதிய போன்மே. (5)

$ நபமுகிற்றிருத ராட்டிரன்முகம்போ
னனியிருட் பிழம்பினில் நவிந்த
|| நிபமிலா வலத்துச் சுயோதனன்போல
நீள்களிச் ¶ சிகாவளங்களித்த
அபசயங் கவற்று லடைதருமன்போ
* லத்துவா னுற்றன குயில்கள்
தபந்தருங் கானிற் பாண்டவர்போலச்
சலித்தொளிந் துறைந்தன அனங்கள். (6)

[யோசித்து] மைத்திரேயன் வசந்தசேனையிடஞ் சென்று நேரமாயிற்று; இன்னும் வரக்காணேமே.

---

† சதுத்திசை = நாற்றிசை. ‡ விவிதம் = நானாவிதம்.

§ கால் = காற்று. $ நபம் = ஆகாயம். || நிபம் = உவமை.

¶ சிகாவளம் = மயில் "சிகியொடு குமலிதோகை சிகாவளஞ்சிகண்டி மஞ்ஞை" சூடாமணி நிகண்டு.

* அத்துவானம் = (என்பது கடைக்குறையாயிற்று) ஒலியற்றது, வழி,

(விதூஷகன் பிரவேசம்)

விதூஷ.—அட அப்பா! இந்தத் தேவடியாளுக் கென்ன ஆசை! என்ன தாட்சிண்ணியமில்லாமை! மறுபேச்சே யில்லையே; பலவிதமாக எவ்வளவோ நண்புடையவள் போலப்பேசி மாணிக்க மாலையை வாங்கிக் கொண்டனளே; ஆரியமைத் திரேயரே! சிரமபரிகாரஞ் செய்துகொள்ளு மென்றாவது, பாத்திரத்திற் றீர்த்தத்தையாவது பானஞ்செய்து விட்டுப் போமென்றாவது, அவள் இவ்வளவு செல்வமிருந்தும் எனக்குச் சொல்லவில்லை; இந்தத் தேவடியாள் மகள் தேவடியாள் முகத்தைக்கூட இனி நான் பார்க்கவேமாட் டேன்; [வெறுப்போடு] பின்வருகிற பிரகாரம் நன்றாய்க் கூறினர்; கிழங்கற்ற தாமரைத்தடாகம், வஞ்சகமற்ற வியா பாரி, திருட்டுச் செய்கையற்ற தட்டான், சண்டையற்ற கிராமத்தார்களின் கூட்டம், ஆசையற்ற வேசை, இவை கள் உண்டாதல் அரிது; நமது நண்பனிடஞ் சென்று இந் தத்தாசி நேசத்தில் நின்றும் அவரைப் பிரித்துவிடுகிறேன்; [போய்ப்பார்த்து] நமது சிநேகிதர் இதோ தோட்டத்தி லிருக்கின்றனர்; அவர் சமீபத்திற் போகிறேன் [சென்று] உம க்கு மங்களம் உண்டாகுக. நீர் அபிவிர்த்தியடைக!

சாருத.—[பார்த்து] அட! எனது சகா மைத்திரேயன் வந்துவிட் டனர். தோழ! உமது வரத்து நல்வரத்தாகுக, வீற்றிரும்.

விதூஷ.—இருந்தேன்.

சாருத.—பாங்க! அந்தச் செய்தியைச்சொல்லுக.

விதூஷ.—அந்தக்காரியம் நஷ்டமாகிவிட்டது.

சாருத.—மாணிக்கமாலையை யவள் வாங்கிக்கொள்ள வில்லையோ?

விதூஷ.—நாம் அவ்வளவு பாக்கியசாலிகளா? புதியதாமரை மலர்போன்ற அழகான கைகளைத் தலையின் மேற்கூப்பிக் கொண்டு வாங்கிக் கொண்டனள்.

சாருத.—அங்ஙனமாயின் "நஷ்டம் ஆகிவிட்டது" என்று ஏன் உரைத்தீர்?

விதூஷ.—என் காணும் நஷ்டமில்லை; உண்ணவில்லை குடிக்க வில்லை; கள்ளன் களவாண்ட அற்ப விலைபெறும் பொன் பாணைக்காக நாற்கடலின் ஸாரமான மாணிக்கமாலை தொலைந்து போயிற்றே!

சாருத.—நண்ப! அவ்விதங்கூறல் சரியன்று.

எந்தநம்பிக்கை யாலிவ் வடைக்கலந்
தந்துபோயின ளோவத் தடங்கணி
அந்தநம்பிக்கை யின்பொருட் டேயணி
இந்தமாணிக்கக் கோவையை யீதலே. (7)

விதூஷ.—ஓ மித்திரா! என்னுடைய துக்கத்திற்கு இரண்டாவது காரணம் ஒன்றுளது; தோழியர்க்கு இங்கிதங்காட்டிச் சீலை நுனியில் முகத்தைமறைத்தவளாகி என்னை ஏளனஞ் செய்தனள்; ஓய் நான் பிராமணன்; உம்மை நமஸ்கரித்து ஒன்று வேண்டுகிறேன். பலதுன்பங்கட்கு இடமான இந்தத்தாஸி சிநேகத்திலிருந்து உமது மநத்தைத் திருப்பிவிடும்; வேசையோ என்றால், செருப்புக்குட்புகுந்த பருக்கைக்கற்போலச் சிரமப்பட்டு நீக்கப்பட வேண்டுபவள்; மேலும் மித்திரா! தாசி, யானை, கணக்கன், சன்னியாசி, நம்பிக்கைத்துரோகி, கழுதை இவைகள் தங்குமிடங்களில் துஷ்டன்கூடத் தங்கமாட்டான்.

சாருத.—சகாவே! இப்போது தோஷங்களை யெல்லாஞ்சொன்னது போதும்; எனது நிலைமையே யென்னைத் தடைசெய்யா நின்றது, பாரும்.

இவுளி விரைந்தும் வலக்குறைவா
யிருங்காலேக விலைமாந்தர்
† திவளுந்தன்மை யெங்குறினுந்
திரும்பமனத்தைச் சேர்ந்திடுமால் (8)

---

† திவளுந்தன்மை = சபலசுவபாவம்.

அன்றியும் அன்ப !
கருதுஞ்செல்வ முடையானைக்
† காந்தையடைவா ளிம்மாதோ
‡ திருவாலடையத் தக்கவள்நற்
(தனக்குள்)
சீலத்தாலே பெறலாமோ
(வெளிப்படையாக)
அரிதாஞ்செல்வந் தன்னாலே
யன்றேயகற்றி விடப்பட்டேன்
§ சரசியவளு மென்னாலே
தணந்துவிடப் பட்டவளன்றோ ? (9)

விதூஷ.—[கீழேபார்த்துத்தனக்குள்] இவர்மேலே பார்த்துப்பெருமூச்சு விடுதலால் என்னாற்றடுக்கப்படுகிற இவருக்கு ஆசை வளரா நிற்கிறதென நினைக்கிறேன்; காமன் வாமனென்று நன்றாய்க்கூறப்பட்டுளது [வெளிப்படையாக] ஓய் நண்பற்றோரே ! "இன்று சாயுங்காலம் அங்கு வருகிறேனென்று சாருதத்தரிடஞ் சொல்லுக" என்று அவள்சொன்னாள். மாணிக்க மாலையோடு மனமகிழாமல் வேறு ஏதோ கேட்கும்பொருட்டு வரப்போகின்றனளென்று எண்ணுகிறேன்.

சாருத.—வரட்டும், தோழ ! சந்தோஷமாய்ப் போவாள்.

(சேடன் பிரவேசித்து)

சேட.—ஐயா ! அறியுங்க.

மழைபெய்யும் பொழுதெல்லாம்
வளைமுதுகு நனைகுதுங்க
குளிர்காத்து வீசுங்காற்
குலைஞ்சுமன நடுங்குதுங்க (10)

† காந்தை = மங்கை.
‡ திரு = செல்வம்.
§ சரசி = இனிய குணமுடையவள்.

(சிரித்துக்கொண்டு)

† ஏளுதுளை மூங்கிலைநான்
ஏ ! நண்டாய் ஊதுடுவேன்
ஏளுதந்தி யோடொலிக்கும்
ஏ ! ‡ வீணே வாசிப்பென்
நீளுகளு தைக்குரலால்
நிசப்பாட்டு கள்பாடிப்பென்
ஆளுகிண்ட தம்புரானு
நாரதனு மென்னெதிரோ (11)

ஆயை [ஆரியை] வஷந்தஸேனை உத்தரவு தந்தாங்கோ. "குமபீலகா! ஆய [ஆரிய] சாருதத்தனுக்கு நான் வரேணெண்டு சொல்லெண்டு;" ஆகையால் சாருதத்தரு வீட்டுக்குப்போரேங்க. [போய்ப் பிரவேசித்துப் பார்த்து] § இந்தாலே சாருதத்தரு தோட்டத்தில் இருக்கிண்டாரு, அந்தாலே அந்தக் கெட்ட பயலும்; அங்கே போவேன்; தோட்டத்தின் வளி சாத்தியிருக்கிறாங்கோ; இருக்கட்டும்; அந்தக் கெட்ட பயலுக்குச் சாடை காட்டுகிறேன்.

[என்று மணியாம் பருக்கையை எறிகின்றனன்]

விதூஷ.—அடேயாரடா? பிராகாரத்திற் சூழ்ந்திருக்கிற விளாம் பழம்போல் என்னைக்கல்லாலடிக்கிறான்!

சாருத.—தோட்டத்திலுள்ள உபரிகைமேல் விளையாடுகிற புறாக்கள் கல்லைத்தள்ளியிருக்கலாம்!

---

† ஏளுதுளைமூங்கில் = புள்ளாங்குழல்.

‡ வீணே = வீணை.

§ இந்தாலே அந்தாலே என்பன இடத்தை யுணர்த்துந்திசைச்சொற்கள். இழிசனர்மொழி. இதா, இந்தா என்று முக்காலத்தில் வழங்கி வந்தன போலும், "மாலைவெள்ளரு விசூடி மற்றிதா தோன்றுகின்ற" சீவகசிந்தாமணி, பதுமையாரிலம்பகம் 67.

விதூஷ.—தேவடியாள் மகனுன துஷ்டப்புருவே! நில்லு நில்லு; இதோ உன்னை இந்தத்தடியால் உபரிகையிலிருந்து நன்று ய்நைந்த மாம்பழம் போற் பூமியிற் றள்ளுகிறேன். [என்று தடியைத்தூக்கிக்கொண்டு ஓடலுற்றுன்]

சாருத.—[பூணூலைப் பிடித்துக்கொண்டு] சிநேகிதரே! இரும் இதனு லென்ன; அந்தப்பேதைப் புரு பெட்டையோடிருக்கட்டும்;

சேட.—என்ன இவன் புருவைப் பாக்கிருனேயன்றி யென்னை ப்பாக்கலே. இருக்கட்டும்; இன்னெருசில்லே வீசுகிறேன் [அவ்விதம் எறிகின்றனன்]

விதூஷ.—[சென்று நான்கு பக்கமும் பார்த்து] என்ன! கும்பீல கனு? அவன் சமீபத்திற் போகிறேன் [சென்று வழியைத்தி றந்து] அடகும்பீலக! உன் வருகை நல்வரத்தாருக.

சேட.—[பிரவேசித்து] ஐய! கும்படறேன்.

விதூஷ.—அடே! என்னமேகக்குழப்பம். இந்த இருட்டுக்கா லத்தில் எங்குவந்தாய்?

சேட.—அடே! இதோ இவன்.

விதூஷ.—யாரடா இவன் யார்?

சேட.—இதோ அவன்.

விதூஷ.—என்னடா தேவடியாள் மகனே! இப்போது பஞ்சக்கா லத்தில் கிழப்பிச்சைக்காரனைப்போல மேல்மூச்சு விட்டு க்கொண்டு, ஏ சா சா சா வென்று மூச்சுவிடுகிருய்!

சேட.—இந்திரன் யாகத்தில் அவிர்ப்பாகத்திற்கு ஆசைவைத்த காக்கையைப்போல நீ கா கா கா எண்டு கத்துகுறே.

விதூஷ.—அப்படியானுற் சொல்லுதி.

சேட.—[தனக்குள்] இருக்கட்டும்; இப்படிச் சொல்லுகிறேன்; [வெளிப்படையாக] அடே! ஒருகேள்வி கேட்கிறேன்.

விதூஷ.—நான் உன்றலையில் எனது காலைத் தூக்கிவைக்கிறேன்.

சேட.—அட! எந்தக்காலத்தில் மாமரந் துளுத்து மொட்டு விடும்?

விதூஷ.—அடதேவடியாள்மகனே! கோடைக்காலத்தில்.

சேட.—[சிரித்துக்கொண்டு] அடே அல்ல அல்ல!

விதூஷ.—[தனக்குள்] இப்போதென்ன சொல்லுவோம் [யோசித்து] இருக்கட்டும். சாருதத்தரிடம் போய்க் கேட்கிறேன். [வெளிப்படையாக] அடே! சற்று இரு! [சாருதத்தனிடஞ் சென்று] உம்மையொன்று கேட்கிறேன். எந்தக்காலத்தில் மாமரம் மொட்டு விடும்?

சாருத—மூர்க்க! வசந்தகாலத்தில்!

விதூஷ.—[சேடனருகிற்போய்]மூர்க்க! வசந்தகாலத்தில்!

சேட.—உன்னை மத்தொரு கேள்வி கேக்கறேன். மிகுந்த பணமுள்ள ஊர்களைக்காப்பாத்துகிறது எது காணும்?

விதூஷ.—அட! இராசமார்க்கம்.

சேட.—[பரிஹாஸத்துடன்] அட அல்ல அல்ல!

விதூஷ.—இருக்கட்டும், சந்தேகத்தில் வீழ்ந்தேன் [யோசித்து] சாருதத்தனைத் திரும்பக் கேட்கிறேன். [மீண்டுஞ் சென்று சாருதத்தனை அவ்வண்ணம் வினவுகின்றனன்]

சாருத.—நண்ப! சேனை.

விதூஷ.—[சேடனிடஞ்சென்று] அட தேவடியாள் பிள்ளையே! சேனை.

சேட.—இரண்டையும் ஒன்றாகக்கூட்டி உடனே சொல்லுங் காணும்.

விதூஷ.—சேனுவசந்தே.

சேட.—அதைத்திருப்பிச் சொல்லு.

விதூஷ.—[தேகத்தைத் திருப்பிக்கொண்டு] சேனுவசந்தே.

சேட.—அடே மூட ! பதங்களைத் திருப்பு.

விதூஷ.—[கால்பாதங்களைத் திருப்பிக்கொண்டு] சேனுவசந்தே.

சேட.—அடே மடையா ! எழுத்துள்ள பதங்களைத் திருப்பு.

விதூஷ.—[யோசித்து] வசந்த சேனு.

சேட.—அதோ அவள் வந்திருக்கிண்டாள்,

விதூஷ.—அதைச் சாருதத்தனுக்குத் தெரிவிப்பேன் [போய்] சாருதத்தரே ! உமது † தனிகன் வந்திருக்கின்றான்.

சாருத.—தனிகன் நமது குலத்தில் உண்டோ ?

விதூஷ,—எது குலத்தில் இல்லையோ அது வாசலில் இருக்கிறது ; வஸந்தஸேனை வந்திருக்கிறாள்.

சாருத.—மித்திரா ! என்னை ஏமாற்றுகிறாயா என்னை ?

விதூஷ.—என் சொல்லில் உமக்கு நம்பிக்கை யில்லாவிடில் இந்தக் கும்பிலகனைக் கேளும் ; அட தேவடியாள் மகனே ! கும்பிலக ! இங்குவா !

சேட.—[வந்து] ஆரிய ! வந்தனம் பண்ணுகிறேன்.

சாருத.—அட ! உன் வரத்து நல்லதாக ; வசந்தசேனை வந்திருக்கின்றாளா ? உண்மையைக் கூறு.

சேட.—அந்த வஸந்தஸேனை இதோ வந்திருக்கிறாள்.

சாருத.—[பெருங்களிப்போடு] அடே ! பிரிய வசநத்தைப் பயனற்றதாக நான் ஒருபொழுதுஞ் செய்யேன் ; இந்தப் பரிசைப் பெற்றுக்கொள் [என்று உத்தரீயத்தைக் கொடுக்கிறான்]

---

† தனிகன்=செல்வவான், கடன் கொடுத்தவன்.

சேட,—[வாங்கிக்கொண்டு நமஸ்காரஞ் செய்து சந்தோஷத்தோடு] ஆரியையிடஞ்சென்று தெரிவிப்பேன் [என்று போயினன்].

விதூஷ.—ஓய்! இந்த மேகஞ்சூழ்ந்த நாளில் அவள் எதற்காக இங்கு வந்திருக்கிறாள்; நீர் அறிந்தீரோ?

சாருத.—சிநேக! நன்றாய் விளங்கவில்லை,

விதூஷ.—நான் அறிவேன்; மாணிக்கமாலை குறைந்த விலையுள்ளது; தங்கப்பானை அதிக விலையுள்ளது, ஆகையால் திருப்தியுறாமல் மேலும் பெற வந்திருக்கிறாள்.

சாருத.—[தனக்குள்] மனக்களிப் போடு செல்வாள்.

(பிரகாசமான அபிசாரிகை வேஷத்தோடு மிக்க மோகத்தில் மூழ்கிய வசந்தசேனை குடைபிடிக்கிற சேடியோடும் விடனுடனும் பிரவேசம்)

விட,—[வசந்த சேனையைச்சுட்டி]

தாமரை காணுத் தனியிலக்குமி மன்
மதனது தகைமிகு † கருவி
கோமள ‡ குலப்பெண் சோகமா வசந்தன்
குளிர்மரம் பூத்தநன் மணப்பூ
காமனார் § சமயக் கூச்சமுற் றனளாய்க்
கடிகொளும் லீலையாய்ப் ₰ பதிகர்
தாமடி தொடர இரதிகேத் திரத்திற்
றனிதோ வருகிறா ளன்றே. (12)

வசந்த சேனா! பாரு பாரு.

† கருவி = ஆயுதம்.

‡ குலப்பெண்சோகம் = குலப்பெண்கட்குத்துயரம் விளைவிப்பவள்.

§ சமயம் = மதம்.

₰ பதிகர் = வழிப்போக்கர்.

விரகமுற்ற மங்கையரி னிதயம் போல
† விலங்கலுச்சி தொங்குமிகு கார்மே கங்கள்
‡ குரவையெனக் § குளிறுகின்ற $ கோடத் தாலே
குதுகலித்து விரைவாக மேன்மீ தோங்கும்
கரவற்ற வாயிரங்கண் மஞ்ஞை பச்சைக்
கலாபம்விரித் தாடுகின்ற தன்மை காணிற்
பரவலுறு மாகாயம் மணியா லாய
பருவிசிறி யால்வீசப் பட்டாற் போலும். (13)

அன்றியும்,

தாரைகளான் மோதுற்ற தவளை சேறு
தடவுசிறு முகத்தோடுந் தண்ணீ ருண்ணு
மூரிமயில் கத்துகின்ற கடம்புச் || சால
¶ முன்னெடுத்த விளக்கம்போ லொளியைத் தந்த
சீரகன்ற குலத்திழிந்தோன் முறைவைப் போலத்
திங்கண்மங்கு லான்மறைத்த லுற்றான் றீமை
சார்குலத்திற் சநித்ததையல் போலக் காந்துஞ்
* சபலைநில்லா தோரிடத்துஞ் சலியா நின்ற. (14)

வசந்த.—பாவ! நன்கு சொற்றனை! இவளோ!

ஓமூட! நிலைத்தபயோ தரங்கொ ளென்னோ
டுறுகாந்தன் புணர்ச்சியுறு நிற்குங் காலை
நீமூட வந்திவிட மெண்செய் கின்றாய்
நில்லடியென் றுரைப்பதுபோ னீளுங் கங்குல்
மோட்டி சக்களத்தி சினமே மேவித்
திரைகடற்போ லாகாயம் பிளக்க விம்மிப்
o போமாறு யான்புகுதா வண்ண மோங்கும்
புவிமிசைப்பற் பலதடைகள் புரிகின் றாளால். (15)

† விலங்கல்=மலை. ‡ குரவை=கடல்.
§ குளிறல்=ஒலித்தல். $ கோடம்=ஒலி. (வடசொல்)
|| சாலம்=மரம். ¶ முன்=மேல்.
* சபலை=மின்னல். o போமாறு=போகும்வழி.

விடன்.—இருக்கட்டும், இராத்திரியானவள் இவ்வண்ணம் நிந்தையடைக.

வசந்த.—பெண்டன்மையாற் பேதைமை யுற்ற இவளைப் பழித்தலாற்பயனென்ன? பாவ! பாரும்.

மாரிமழை பெய்திடுக மடமடவென் றதிர்க
மூரியிடி வீழ்ந்திடுக மோகமுறு பிரியற்ச்
சேரவெணு நாயகியின் சீதமுறு தாபம்
ஓரணுவெ னும்மள வுறூர்எனல் உரித்தே. (16)

விடன்.—வசந்தசேனையே! பாரு பார்; இதோமற்றொன்று.

காற்றினலலைக்கும் வேகமுந்தாரைக்
† கங்கபத் திரங்களுங் கலித்தல்
போற்றுபேரிகையும் பொன்னொளிமின்னற்
கொடியெனும் புனைபதா கையையு
மேற்றகார்மங்குல் பகைமிகவலியி
லிருநக ரேந்தலை யொத்த
‡ கீற்றிலாமதியின் § கரமெனுங்குழுவைக்
கேளறக் கவர்தலைப் புரிந்த. (17)

வசந்த.—இது சரி. இதோமற்றொன்று.

யூதபக்தி னிறமேவிக் கால்பூரித்தே
யுறத்தொங்கு மகடுமிகு மொலியுஞ்சால
சோதிமின்னலாற் பகத்தாற் ‡‡ சபளமுற்ற
தொன்மேகத் தான்முனமே துயருற்றேனுன்
நாதனைநீத் தகன்றிருக்குந் தையலார்க்கு
நனிசாவுப் பறைபோல நலமில்கொக்கு
தீ || திரணத் தினிலுப்பைத் தடவல்போலச்
சென்மழைநாள் மழைநாளென் றேசெப்புற்ற. (18)

† கங்கபத்திரம் = அம்பு. ‡ கீற்றிலாமதி = முழுச்சந்திரன்.
§ கரம் = கிரணம்; அரசிறை. ‡‡ சபளம் = பலவகைநிறம்.
|| இரணம் = புண்.

விடன்.—வசந்தசேனையே பாரு. இஃதிவ்வண்ணமே; மற்றொன்று பார்.

> † பலாகமெனும் வெண்டலைப்பா கையுமேலோச்சப்
> படுமின்னற் சாமரையும் படைத்தவானம்
> ‡ விலாழிமதம் பெருகுவெண்கோட் § டும்பலொப்ப
> மிகுகறுப்புப் படிவமுற விளைந்தாற்போலும். (19)

வசந்த.—பாவ! பாரும் பாரும்.

> ஈரமார் தமால விலைபோற் கறுத்த
> காரினஞ் சோதிச் சூரியன் றனைவிண்
> விழுங்கிய; கணையால் வீழ்த்தமாக் களபக்
> குழுவெனப் புற்றுக் $ குயின்றொ ரைகளாற்
> கரைந்தன; மாடம் விரைவொடு சரிக்குஞ்
> சாபலந் தங்கத் || தீபிகை கடுத்த;
> மதிநிலா ¶ மைந்தில் * பதிதனைப் படைத்த
> மங்கையை நிகர்ப்பப் பொங்குறு மஞ்சால்
> கரவொடு கவரப் பட்டது காணடி! (20)

விடன்.—ஓ வசந்தசேனை! பார் பார்.

> o மின்கச்சை யாற்பிணித்த
> வேழமென ஒன்றொடொன்று
> மென்மோதித் தாரைகளால்
> விளங்குகருஞ் * சீமூதம்

† பலாகம்=கொக்கு. ‡ விலாழி=யானைத்துதிக்கை நீர்.
§ உம்பல்=ஆண்யானை. $ குயின்=மேகம்.
|| தீபிகை=விளக்கு. ¶ மைந்து=வலி.
* பதி=கணவன்.

o மின்கச்சை=மின்னலாகிய கயிறு. கீழ்வயிற்றுக்கச்சை யென்றார் சிலப்பதிகார அரும்பதவுரை யாசிரியர். "கச்சை யானைப்பிடர் த்தலையேற்றி" சிலப்பதிகாரம், இந்திரவிழவூரெடுத்த காதை வரி 142.

* சீமூதம்=மேகம்.

பொன்னுலகாள் புருகூத
ஞனேகொடு பூமிதனைப்
புகழ்வெள்ளிக் கயிறுகளாற்
பொருந்தவிழுத் திடல்போலும். (21)

மேலும் பார்.

பெருங்காற்றாற் பூரித்த லுற்றதாயும்
பேரெருமைக் கூட்டமிகர் நீலமேவித்
திரமில்சல னம்பொருந்தி மின்னலாய
சிறகருள்ள தாயுமுள்ளே குழப்பலுற்ற
திரைகடனேர் † அம்புதங்கள் தம்மாலிந்தத்
திப்பியமா மணம்வீசும் புதுப்பைம்புற்கள்
பரவுபுவி மணிமயபா ணம்போற்றுரை
பலவீழ்த்திப் பிளந்திடுமோர் பண்பேபோலும். (22)

வசந்த.—வேறொன்று.

‡ சொக்குமயில் "கேகா" வென் றொலிகளாலே
துரிதமுடன் வாவாவென் றழைத்தலுற்றும்
கொக்கினங்கண் மீப்பறந்து பெட்பினோடு
கூடலுற்றும் பங்கயங்க டம்மைநீத்த
மிக்க § வக்கி ராங்கங்க ளெல்லையற்ற
வேதைகொடு நோக்குமொரு பார்வையுற்றுந்
திக்குகளை மைபோன் $ மே சகமாச்செய்து
|| செற்றொழுதி விண்ணகத்திற்செறிந்தேகின்ற. (23)

விட,—அது அவ்விதந்தான், ஆயினும் பாரு பாரு.

அசைவிலா வம்புயக் கானக் கண்களைப்
படைத்திராப் பகலிவை யற்றதா யொளிர்
மின்களாற் கணப்பொழு தளவு கண்கட்குக்

---

† அம்புதம்=மேகம். ‡ சொக்கு=அழகு.
§ வக்கிராங்கம்=அன்னப்பறவை. $ மேசகம்=கருமை.
|| செற்றொழுதி=மேகக்கூட்டம்.

காண்டல் காணப்ப டாமைக ளுடைய
இருணனி பெற்றே யிருந்திசா முகங்களை
மருவிய தாயும் மழைகளின் றுரை
யாகிய வீட்டி லமர்ந்த தாயும்
மா † வம் போதர மாமொரு ‡ தாமனை
உடையதாய்ப் பலபல வுருமே கங்கள்
எனுங்குடை கவித்த வெற்ற தாயும்
இருக்குமிவ் வுலக மிக்கணஞ் சேட்டை
யன்றியே நித்திரை யடைந்தது போலும். (24)

வசந்த.—இது இப்படியே ; பாரும் பாரும்.

தீயோர்க்கிழைத்த உபகாரச் செயல்போற்
சேண்மீன் மறைந்தனவால்
ஆயும்பதியைத் தணந்துறைமா னினிபோற்
றிசைக ளவிர்தலிலே
தோயும்வலாரி படைத்தீயிற் சுறுக்கா
யெரிக்கப் பட்டதனாற்
§ காயமுருகிக் $ கயவடிவாய்க் காந்தி
வீழா நின்ற தன்றே. (25)

எழுதல் தாழ்தல் களைத்தல் மழை
|| எக்கர் இருளின் குழா மிழைத்தல்
கழிநூதந ¶ மா டுற்றான் போற்
கணங்கள் பற்பல உருப் படைத்த. (26)

தடித்தங் குறலாற் றழலெரி போலும்
நரைப் * பக மேவலா னகைசெய லொத்தும்
தாரையாஞ் சரங்களாற் பாரினிற் பொழியு
மாகண்டலன் விலா லாடலை யெய்த்து

† அம்போதரம் = மேகம். ‡ தாமன் = வீட்டி லுடனுறைவோன்.
§ காயம் = ஆகாயம். $ கயம் = நீர்.
|| எக்கர் = சொரிதல். ¶ மாடு = செல்வம். * பகம் = கொக்கு.

மசைதரு மசனியா லரற்றலைக் கடுத்து
மெழுமகி லத்தாற் சுழற்சி யுறழ்ந்துங்
† காரகி மானுங் கார்கண் மிடைந்துங்
கரும்புகை சூழ்ந்தெனக் காணலுற் றனவிண். (27)

என்னருங் காதல னில்ல மேகுமென்
றன்னைநீ யசனியா லச்சத் தாழ்த்தினை
பன்னருந் தாரையாம் பரூஉக்கையாற் றொடத்
‡ துன்னினை நாணைத் துறந்தை கொல்வினே. (28)

இந்திர ! முன்னர் நின்றோ டாதியுற்
றிருந்தேனோ ? நீர்ப்
§ பிந்துடை மழையார்ப் பால்மால்
$ பேமுறக் கனையா நின்றாய்
சுந்தரத் துணைவற்றேடிச் செல்லுமென்
|| றுறையைச் ¶ சோரி
சிந்தியே தடுத்தலுன்றன் * செம்மைக்கிங்
கடுத்த தன்றே. (29)

கொவ்வையிதழ்ச் சசிகணவ ! கோதமனு
லகலிகையின் கூட்டான் முன்னர்
எவ்வணநீ வருந்தினையோ அவ்வணமே
யென்றுயர மிஃதெண் ணாயோ !
0 எவ்வமுறும் பிறர்வருத்த மறியாத
ஏந்தாலிக் கணமே யென்னை
* நொவ்வு செயுங் கொண்டல்களை
நொய்தினகற் றுதல்நினக்கு @ நோன்மைத் தாமே. (30)

---

† கார்அகி=கிருட்டிணசர்ப்பம். ‡ துன்னல்=நெருங்கல்.

§ பிந்து=துளி. $ பேம்=அச்சம்.

|| துறை=வழி. ¶ சோரி=மழை.

* செம்மை=அழகு, இங்குக்கௌரவத்திற்காகு பெயர்.

0 எவ்வம்=துன்பம். * நோவ்வு=வருத்தம்.

@ நோன்மை=பெருமை.

அன்றியும்,

சதமக ! முழங்குதி † சலத ரங்களின்
சிதருதி தாரையைச் சிதைவி லாயிரம்
அதிரிடி விடுக்குதி யன்பன் மாட்டுறுந்
தநிதனின் மகளிரைத் தடுத்தல் வல்லையோ ! (31)

பீடுறு கொண்டலே ! பெரி தொலிக்குதி
ஆடவர் கொடுமையார்க் தவர்க ளாதலின்
ஓடுறு தொழின்மிருத் தொளிசெய் மின்னலே !
தேடுறு சிறுமியர் ‡ சிறுமை தேர்ந்திலை. (32)

விடன்.—பவதிவசந்தசேனையே ! § உபாலம்பநம்போதும், மின்னல் உனக்கு உபகாரியல்லவோ !

$ வெண்களிறகல மேவிய தங்கக்
கயிறுவின் டொடிமலைச் சிகரம்
நண்ணிய தவளப் பதாகையிந்திரனார்
நடுமனை யொளிருநற் றீபம்
எண்ணுறு மிவையே யுவமையாய்க்கொண்டே
யிருந்திவி விளக்கிய மின்னல்
பெண்மணியே ! நின்காதல ¶ னகத்தைப்
பிழையறக் காட்டுகின்றது காண். (33)

வசந்த.—பாவ ! நீர் சொல்லுகிறபடி இதோ அவர் வீடு.

விடன்.—கலைகளெல்லாங் கற்ற உனக்கு உபதேசிக்கவேண்டுவதொன்றுமில்லை ; ஆயினுஞ் சிநேகமானது வார்த்தை சொல்லும்படி செய்கிறது ; அங்குப்போய் அதிகக்கோவம்பாராட்டாமலிருக்கக்கடவை.

† சலதரம்=மேகம், தடங்கனூனுருக்கொடு மீண்டனசலதரங்கள்.
சீகாழித்தல புராணம் நாட்டுச்சருக்கம் 2

‡ சிறுமை=துன்பம். § உபாலம்பநம்=நிந்தை.

$ வெண்களிறுஅகலம்=ஐராவதத்தின்மார்பு. ¶ அகம்=வீடு.

கோவத்தா லிரதிகெடுங் கோவமின்றேற் காமமிலே
கோவத்தைக் கொள்ளுதிநீ கோவமுறச் செய்குதிநீ
கோவமின்றி யடிக்கடிநீ குதுகலிப்பைப் பூணுதியாற
கோவமிலா அவன்றனக்குங் குதுகலிப்பை யூட்டுதியால். (34)

இருக்கட்டும்; இவ்வித மிலைப்பேன்; ஆரிய சாருதத்தரி டமிவ்விதஞ் சொல்லு.

† மலர்க்கதம்ப ‡ நீபமண மீஇக்கார் மேகம்
வழங்குங்கா லாசைகளிற் புடையா ளாகிச்
சலநனைந்த கூந்தலொடு மின்ன § லம்போ
தர $ வேற்று னடுக்குமுற்று நின்னைக்காணும்
நலவிருப்பா னின் || கேக மடைந்து ¶ பாத
சாலங்க ணொண்ணியநின் னனிச்ச மென்னச்
சலசப்போ தெனமெலிய பாதந் தம்மைச்
சார்ந்தபங்க மறக்கழுவா நின்றாள் பாவை. (35)

சாருத.—[கேட்டு] மித்திரா! இதென்ன வென்று அறிவாய்.

விதூஷ.—உமது உத்தரவுப்படி [வசந்தசேனை யண்டையிற்போய் ஆதரத்தோடு] உனக்கு மங்களமுண்டாகட்டும்.

வசந்த.—ஆரியரே! வந்தேன்; உமது வருகையும் நல்வரவே [விடனை நோக்கி] எனக்குக் குடைபிடிக்கிறவனுமாயிருக்கட்டும்.

விடன்.—[தனக்குள்] இந்தத்தந்திரத்தால் என்னைச் சாமர்த்திய மாயனுப்பினள். [வெளிப்படையாக] பவதி வசந்தசேனையே! அப்படியேயாகட்டும்.

மிருடம்ப மாயைவஞ்சம் பொய்வா றில்லம்
வேசைதரு கொடுமைகுடி யிருக்கும் வீடு
புகுமிரதி கேளிநிதம் புணருங் கோயில்
புகல்சுரத விழாப்பண்ட சாலை யென்னு

† கதம்பம்=வெண்கடம்பு. ‡ நீபம்=செங்கடம்பு.
§ அம்போதரம்=மேகம். $ ஏறு=இடி.
|| கேகம்=வீடு. ¶ பாதசாலம்=காற்சிலம்பு.

நகுமேவசைத் தொழி † லாவ ணத்திற் கென்று
நழுவலுறு கண்ணோட்டப் ‡ பணிகா ரத்தின்
§ பகர்தலுறு ¶ நிஷ்கிரய சித்தி ரஸ்து!
பரவுபெண்கள் சிகாமணியே பைம்பூங் கொம்பே!

வசந்த.—ஆரியமைத்திரேய! தமது சூதாடியெங்கே?

விதூஷ.—[தனக்குள்] ஓகோ! ஆச்சரியம்! சூதாடி என்று சொல்லுகின்றனளிவள்; அந்த வார்த்தை நமது நண்பனை யலங்கரிக்கின்றது. [வெளிப்படையாக] வசந்தசேனையே! அவ ரழிந்துபோன தோட்டத்திலிருக்கின்றனர்.

வசந்த.—ஆரியரே! உங்களழிந்த மரத் தோட்டம் எது?

விதூஷ.—வசந்தசேனையே! எந்த இடத்தில் உண்ணுதலில்லையோ; குடித்தலில்லையோ!

(வசந்தசேனை புன்சிரிப்புக் கொள்ளுகின்றனள்)

விதூஷ.—ஆகையால் நீ அங்குப் போகலாம்.

வசந்த.—[சேடியைப் பார்த்து] அங்குப்போய் நான் சொல்லவேண்டுவதென்னை?

சேடி.—சூதாடியே! பிரதோஷகாலஞ் சுகமாக விருக்கிறதா? என்று;

வசந்த.—எனக்குத்தைரிய முண்டாகுமா?

சேடி.—சமயத்திற் றைரியமுண்டாகும்.

விதூஷ.—பவதீ! பிரவேசிக்கலாம்.

---

† ஆவணம்=கடைவீதி.

‡ பணிகாரம்=பலபண்டம், பண்ணிகாரத்தின்றிருத்தல்.

§ பகர்தல்=விற்றல்.

¶ நிஷ்கிரயசித்திரஸ்து=விலையிலாபப்பேறுண்டாகட்டும் என்று அநுக்கிரகித்தபடி.

வசந்த.—[பிரவேசித்து அருகிற்சென்று பூக்களாலடித்து] அட! சூதாடியே! உனக்குப் பிரதோஷஞ் சுகமா?

சாருத.—[நோக்கி] அட! வசந்தசேனை வந்துற்றனள். [களிப்போடு எழுந்து] அடிகாதலீ!

நீண்டகன்ற கருங்கண்ணீ! நினைவொடியான் † சாக்கிரதம்
பூண்டிருக்குங் காலிங்கிப் போய்விடுமே பிரதோடம்
ஆண்டபெரு மூச்சதனோ லகன்றுவிடு நிசிநின்னோ
டுண்டுறலா லந்தியதே ஏகுகின்ற சோகமற்று. (37)

உன்வரத்து நல்வரவே! இதோ ஆசநம், வீற்றிரு.

விதூஷ.—இதோ பீடம், இதிலிரு.

(வசந்தசேனையுட்கார்ந்த பின்னர் மற்றையோரும் உட்கார்ந்தனர்)

சாருத.—நண்பரே! பாரும் பாரும்.

செவியுற்றுச் ‡ சென்னீர்வார் செங்கடப்ப மலராலே
§ துவிகுயங்க டமிலொன்று துதியிளமை யரசுற்ற
புவியாளும் பூவரசின் புதல்வனையே நிகராக
நவமுறுபே ரபிடேகந் தனைநண்ணி யிருக்கின்ற. (38)

ஓய் நண்பரே! வசந்தசேனையின் வஸ்திரங்கள் நனைந்திருக்கின்றன. வேறு ஆடையும் உத்தரீயமுங் கொடும்.

விதூஷ.—தாம் உத்தரவளித்தபடி.

சேடி.—ஆரிய மைத்திரேய! நீர் இரும். ஆரியைக்கு அடியேன் பணிவிடை செய்வேன் [அவ்வண்ணஞ் செய்கின்றனள்.]

விதூஷ.—[$ அபவாரிதத்தோடு] ஓய் மித்திரரே! இவளை ஒரு கேள்விகேட்கிறேன்.

---

† சாக்கிரதம்=விழிப்பு. ‡ சேல்நீர்=மழைச்சலம்.

§ துவி=இரண்டு.

$ அபவாரிதம்=ஒருபக்கத்திற்றிரும்பி முகத்தின் ஒருபக்கத்தை ஒரு கையால் மறைத்தல்.

சாருத—அப்படியே செய்க.

விதூஷ.—[வெளிப்படையாக] நிலாவில்லாத மேகமூடிய இந்த இருளில் யாதுகாரணம்பற்றி வந்தாய்?

சேடி.—ஆரியே! பிராமணன் கபடமற்ற வெள்ளை.

வசந்த.—அல்ல; சமர்த்தன் என்று சொல்லு.

சேடி.—அந்த மாணிக்க மாலையைப்பற்றித் தெரிந்துகொள்ள எங்கள் ஆரியை வந்திருக்கின்றனள்.

விதூஷ.—[†ஜநாந்திகத்தில்] ஓய்! முன்னமே நான் சொன்னேனே. இரத்திநாவலியின் விலைகுறைவு; சுவர்ணபாண்டத்தின் விலை அதிகம்; இவள் திருப்தியடையாமல் அதிமாக வாங்க வந்திருக்கின்றனள்.

சேடி.—அதானது ஆரியையாற் றன்னுடையதென்று சொல்லப்பட்டுச் சூதாட்டத்தில் இழக்கப்பட்டது. அரசன் வேவுகாரனாகிய சபிகன் போன விடந்தெரியவில்லை.

விதூஷ.—பவதீ! சொன்னதே சொல்லப்படுறது.

சேடி.—அவனைக்கண்டு பிடிக்கிறவரையில் இந்தத் தங்கப்பானையை வைத்திரும் [என்று காட்டுகின்றனள். விதூஷகன் உற்றுப் பார்க்கின்றனன்]

சேடி.—ஆரியரே! நன்றாக உற்றுப்பார்க்கின்றீரோ! முன்பு உமமால் இது பார்வையிடப் பட்டிருக்கிறதா என்ன?

விதூஷ.—வேலைத்திறமை கண்ணைக்கவருகிறது.

சேடி.—ஆரியரே! பார்வையால் மோசம்போனீர்; அதே தங்கப்பாண்டம் இது.

---

† ஜநாந்திகம்=எவனுடன் பேசப்படுகிறதோ அவனையன்றி மற்றை நாடக பாத்திரர்கட்குத் தெரியாதவண்ணமாய்ப் பேசுதல்.

விதூஷ.—[சந்தோஷத்தோடு] ஓய் மித்திரரே ! நமது வீட்டிலிருந்து திருடர்கள் அபகரித்துக் கொண்டுபோன தங்கப்பாளை இதுதான்.

சாருத.—மித்திரா !

அடைக்கலத்துக் கீடாக வளிக்கவெந்த வியாசமதைப்
புடவிதனில் நாமுன்னர்ப் புகுந்தெண்ணி னேமலைந்தே
அட ! விந்தப் போழ்தத்தே யாரர்ப முற்றநங்கண்
† கடிபொய்யோ மெய்யோயார் ? கண்டறிய வல்லார்காண்.(39)

விதூஷ.—ஓய் ஆப்தரே ! உண்மை ; எனது பிராமணத்தன்மையின்மேல் ஆணையிடுகிறேன்.

சாருத.—சந்தோஷம் ! சந்தோஷம் !

விதூஷ.—[ஜநாந்திகத்தில்] ஓய் ! எவ்விதம் இது உனக்குக் கிடைத்ததென்று கேட்கிறேன்.

சாருத.—என்னகுற்றம் ?

விதூஷ.—[சேடியின்செவியில்]இன்ன இன்ன விதமாகவோ ?

சேடி.—[விதூஷகன் காதில்] இன்ன இன்ன விதமாக.

சாருத.—என்ன சொல்லப் படுகிறது ? நாங்கள் நீக்கப்பட்டவர்களா ?

விதூஷ.—[சாருதத்தன்காதில்] இவ்வண்ணமென்று.

சாருத.—பத்ரே ! உண்மையில் அதே தங்கப்பாளையா இது ?

சேடி.—ஆரியரே ! அது தான்.

சாருத.—பத்ரே! பிரியசமாசாரஞ் சொன்னவர்களைப் பிரயோசநப் படுத்தாமல் ஒருபோதும் நான் விடுகிறதில்லை ; இந்த மோதிரத்தை இனாமாக வாங்கிக்கொள்ளு [என்று விரலில் மோதிரமில்லாமையை நோக்கி வெட்கமடைகின்றனன்].

---

† கடி = மிகுதி.

வசந்த.—[தனக்குள்] இதனால்தான் காமிக்கப்படுகின்றனே!

சாருத.—[ஜனாந்திகத்தில்] ஓ கஷ்டம!

† பூதியில் லவனுயிர் பொருந்தித் தங்கிலென்!
ஆதிதொட் டேவதில் நன்றி யாற்றுமோர்
‡ ஏதிலான் றினமுமாய் களிப்பு மிப்புவி
மீதினிற் பயனிலை யென்பர் மேலவா. (40)

இறகிலாப் பறவைகாய்ந்த
§ பாதப நிரலபொய்கை
வறிஞன்வெண் பலலில் நாகம
மண்ணினிற் சமமென் பாரால். (41)

சூனியவில்ல நீருமேகணி
துளிரிலே யற்றவோர் ‡‡ துருபக்
|| நிநதையுற்றோ றெப்பெனப்புகல்வர்
சேர்ந்துமுன் பாரத்தவ ராய
¶ மானவர் * சங்க மந்தனற்றனனை
மறந்தமா வறிஞர்கள் மகிழ்ச்சி
தானுறுபொழுதி லிவ்வண மபயனற்
றேகுமாற் றண்கடற் றரையில். (42)

விதூஷ.—ஓய் துக்கப்பட்டது போதும் [வெளிப்படையாகப்பரிகாச
த்தோடு] வசந்தசேனையே! எனது ஸ்நாநச் சவுக்கத்தைத்
தா?

வசந்த.—ஆரியசாருதத்த! என்னை இந்த மாணிக்கமாலையால்
அவமானஞ் செய்தல் அழகல்ல!

சாருத.—[வெட்கத்தோடு சிரித்துக்கொண்டு] வசந்தசேனா பாருபார்!

---

† பூதி = செல்வம். ‡ ஏதிலான் = வறிஞனென்றபடி.
§ பாதபம் = மரம். ‡‡ துருபம் = மரம்.
|| நிநதை = எளிமை. ¶ மானவர் = மனிதர். * சங்கமம் = கலப்பு.

உண்மையை நம்புவா ருலகி லியாவரே
நண்ணுறு துரும்பென நவிலு வாரெனைக்
† கண்ணிலா வறுமையிக் காசினிக் கணே
யெண்ணிலாச் ‡ சங்கைக ளேயிழைக்கு மால். (43)

விதூஷ.—அடியே! நீ இங்கு நித்திரை செய்யப்போகின்றனையா என்ன?

சேடி.—[சிரித்துக்கொண்டு] ஆரியமைத்திரேய! நீர் வெள்ளையென்பதை இப்பொழுது நீரே வெளியிடுகின்றீரே!

விதூஷ.—ஓ சிநேகித! சுகத்திலிருக்கிற மாந்தர்களை வெருட்டும் பொருட்டு, இந்த மேகம் மறுபடியும் மிகுதியுற்ற மழைத் தாரைகளால் பிரவேசியாநின்றதுபோலும்.

சாருத.—நீர் நன்குரைத்தீர்.

திங்களுக்கோர் தீங்குற்ற தெனக்கண்ணீர்
சேண்சொரித லொப்பச் சேற்றிற்
றங்கு § மரை முளையெழல்போற் றாரைமங்கு
லைப்பிறித் தரைக்கண் வீழும். (44)

$ பலராம னுடைநிறத்தைப் படைத்த கொண்மூ
பாருலகிற் பெரியார்நன் மனமே போல் || நின்
மலமாயுந் தடாவிரைவின் பகிழ்ந்த தாயும்
மால்தோழன் ¶ காண்டீவன் கணையே போல
வலமாயு மலிந்தமழைத் தாரை தம்மை
வானுலகத் தினையோம்பு வானோர் கோமான்
அலகின் * முத்த பண்டாரஞ் சொரிந்ததென்ன
அவனிமகண் முதுகுளையப் பொழியா நின்ற.

---

† கண்=தாட்சணியம். ‡ சங்கை=சந்தேகம்.
§ மரை=தாமரை, முதற்குறை.
$ பலராமன்உடைநிறம்=பலராமன் வஸ்திரநிறங்கறுப்பென்ப.
|| நின்மலம்=அழுக்கின்மை. ¶ காண்டீவன்=அருச்சுனன்.
* முத்தபண்டாரம்=முத்துப்பொக்கசம்.

காதலீ! பாரு பாரு!

† தமாலப் பொடியின் ‡ சாய லளாவிச்
சமாநந் தழீஇய வொன்றுட னொன்று
குழுமிய மழைபான் மெழுகுத லுற்றுஞ்
சீத நறுமணஞ் செறிதலை யேற்று
§ மாசுகந் தன்னால் வீசுத லுற்றும்
விளங்கு விசும்பைத் துளக்கிய மேகம்
புணர்ச்சி விருப்புங் குணச்சஞ் $ சலைகள்
ஆதர மிகுத்த அங்கனை மார்கள்
தாமே போந்துதங் காதலர்த் தழுவல்
போலவே யாலிங் கநத்தைப் புரிந்த. (46)

(வசந்தசேனை சிருங்கார பாவத்தை வெளிப்படுத்திச் சாருதத்தனை யாலிங்கனஞ் செய்கின்றனள்)

சாருத.—[கைதொட்டுப் பயின்றானாகித் தானுந்தழுவி]

மேகமே! நீகம்பீர மேவியே முழங்குவாய் விண்
ணேகுநின் அநுராகத்தா லோபதன் பிழை யுற்ற
தேகமென் கைதொட்டின்றுப் பயிறலாற் சிலிர்த்தரோமம்
மோகமு மிகுத்ததீப மொய்யமல ரனலா யிற்றே. (47)

விதூஷ.—தேவடியாள் மகனாகிய || துர்த்திநமே! நீ இப்போது ¶ அநாரியனாக விருக்கின்றனை; வசந்தசேனையை மின்னலால் அச்சஞ் செய்கின்றனையே!

சாருத.—நண்ப! உபாலம்பநஞ் செய்யாதீர்!

---

† தமாலம்=பசிலை. ‡ சாயல்=நிறம்.
§ ஆசுகம்=காற்று. $ சஞ்சலை=மின்னல்.
|| துர்த்திநம்=மேகக்குழப்பம். ¶ அநாரியன்=இழிந்தோன்.

என்போ லியராற் பெறலரிய
இளையாள் தழுவுந் திருவுற்றேன்
மன்னே யிந்தத் துர்த்திநா
ளுண்டு † மழைத்து மின்னுகவே. (48)

அன்றியும் அன்ப!

தம்மிலம் புகுந்தகாமத் தையலார் தங்கண்மேக
அம்பினு னனைந்துசீத மரியபொன் னங்கந்தம்மைத்
தம்மணி சடலத்தோடு சாரயார் தழீஇக்கொண்டாரோ
இம்மணி லவாவாழ்காலம ஈடில்பே றுற்றதாமால். (49)

பிரியே! வசந்த சேனையே!

தூண்டலைச் சலிக்கும் போதிகை யீறு
பூண்டவி தாநம் ‡ பொதிர்வுற் றிருப்பினு
நிலையுற் றதுபூம் பொலிவுள வோவியந்
தனைதசுவர் பூசிய சுதைமிக வெடித்துக்
§ கனந்தரு நீரால நனைவுற் றதுகாண். (50)

[மேல் நோக்கி] அட! இந்திரதநுசு; சுந்தரீ! பாரு பாரு.

இந்திரவில் லெனுநீல அங்கைதனைத் தூக்கி
இருண்மேக $ வநுவதனு விருஞ்சபலை || தாலு
முந்துறவே நீட்டியகி லம்மொடு விசுப்பு
முட்டின்றிக் கொட்டாவி விடுத்தலையே நிகர்க்கும்.(51)

ஆகையால் வா உட்கட்டுக்குட் போவேம் [என்று எழுந்து செல்கின்றனன்]

---

† மழைத்தல்=மழைபெய்தல், அரும்பிரயோகம். “மழைத்தவிண் ணகமெனமுழங்கிவானுற” இராமாயணம, கிஷ்கிந்தகாண்டம், சம்பாதிப்படலம் 1.

‡ பொதிர்வு=மிகுதல். § கனம்=மேகம்.

$ அநு=கதுப்பு. || தாலு=நாக்கு.

பணைக்கண் வீழிற் †றாரம் பாதபச்
சினையிடை ‡மந்திரஞ் சிலையி §லுருட்சந்
தண்ணீரச் $சண்டமிவ் வணைஞ் சங்கீதம்
வீணைகண் மீட்டலை மேவுதல் போலத்
தாளத்தை யொப்பக் காளமா மேகத்
தாரைகள் கீழிற் சார்ந்தன மாதோ. (52)

(என்று எல்லோரும் எழுந்து சென்றனர்)

---

† தாரம் ‡ மந்திரம் § உருட்சம் $ சண்டம் = இந்த நான்கும் இசைநூலிற்கூறிய உச்சநீச ஒலிகள்; இசைநூலிற் பரக்கக்காண்க.

துர்த்திநம் என்ற ஐந்தாமங்கம்

முற்றிற்று.

## 6-வது அங்கம்.

---

(சேடி பிரவேசம்)

சேடி.—என்ன! ஆரியை இன்னும் விழித்துக்கொள்ளவில்லை! இருக்கட்டும் போய் எழுப்புவேன் [என்று போகிறாள் சரீரத்தை போர்த்தவளாய்த் தூக்கத்தோடு வசந்தஸேனை பிரவேசிக்கின்றனள்.]

சேடி.—[நோக்கி] ஆரியே! எழுந்திரும்; பொழுதுவிடிந்தது; எழுந்திரும்.

வசந்த.—[விழித்துக்கொண்டு] இராத்திரியே பொழுதுவிடிந்து போயிற்று என்னே?

சேடி.—இது எங்களுக்கு உதயகாலம்; ஆரியைக்கோ இது இராக்காலம் போலும்!

வசந்த.—உங்கள் சூதாடி எங்கேயடி?

சேடி.—ஆரியையே! வாத்தமானனுக்கு உத்தரவளித்துவிட்டு ஆரிய சாருதத்தர், புஷ்பகரண்டக மென்கிற பூந்தோட்டத்திற்குப் போயிருக்கின்றனர்.

வசந்த.—என்ன உத்தரவு கொடுத்து?

சேடி.—இரவில் வண்டியைப்பூட்டு, வஸந்தசேனை போகட்டுமென்று.

வசந்த.—பாங்கி! நான் எங்குப்போக வேண்டுவது?

சேடி.—ஆரியே! சாருதத்தர் இருக்குமிடத்திற்கு.

வசந்த.—[சேடியைத்தழுவிக்கொண்டு] பாங்கி! இரவில் அவரையான் நன்றாய்ப் பார்க்கவில்லை; ஆகையால் இன்று நேரிற் பார்க்க விரும்புகிறேன்; நான் இரண்டாங்கட்டில் இருக்கின்றேனா என்ன?

சேடி.—நீ இரண்டாங்கட்டில் மட்டுமல்ல, எல்லா ஜநங்களு டைய மனத்திலும் பிரவேசித்திருக்கிறாய்.

வசந்த.—சாருதத்தருடைய பரிஜநங்கள் எல்லாருந்தூக்கப்படு கிறார்களா என்ன ?

சேடி.—தூக்கிப்பார்கள் தான்.

வசந்த.—எப்போழ்து ?

சேடி.—ஆரியை போன பிறகு.

வசந்த.—ஆயின், நான்தான் முதலில் துயரப்படவேண்டும் [மரியாதையோடு] சேடீ ! இந்த மாணிக்கமாலையை வாங்கிப் போய் என் சகோதரி ஆரியை தூதையிடங்கொடுத்து "நான் ஸ்ரீ ஆரிய சாருதத்தருடைய குணத்தில் ஈடுபட்ட தாஸி ; அப்படியே தங்கட்கும் ; ஆகையால் இந்த இரத்தி னமாலை தங்களுக்கே † கண்டாபரணமாக இருக்கட்டும்" ; என்று சொல்லு.

சேடி.—ஆரியே ! இதற்காக ஆரியசாருதத்தர் தூதையைக்கோ விப்பாரே.

வசந்த.—போ ! போ ! கோவிக்கமாட்டார்.

சேடி.—[வாங்கிக்கொண்டு] தம்முடைய உத்தரவுப்படி [என்றுபோ ய்த்திரும்பிவந்து] ஆரியே ! "உனக்கு ஆரிய புத்திரரால் பிரி யத்தோடு கொடுக்கப்பட்டது ; அதை நான் வாங்குதல் சரியல்ல ; ஆரியபுத்திரர்தான் எனக்கு மேலான ஆபரண மென்று நீ அறிந்துகொள்ளல வேணடும்," என்று ஆரி யை தூதை சொல்லுகின்றனள்.

(பிறகு குழந்தையை எடுத்துக்கொண்டு இரதனிகை பிரவேசம்)

இரதனி.—குழந்தாய் ! வா ; வண்டியை வைத்துக்கொண்டு விளையாடுவோம்.

---

† கண்டாபரணம்=கழுத்திலணியும் நகை.

குழந்தை.—[சிணுங்கிக்கொண்டு] ரதனிகே! எனக்கு ஏதுக்கு இந்த மண வண்டி? அந்தத் தங்கவண்டியைத்தா.

இரதனி.—[துக்கத்தோடு பெருமூச்சு விட்டு] குழந்தாய்! நமக்குத் தங்க வியவகாரமேது! உன் அப்பா மறுபடி செல்வம் படைத்தபிறகு, தங்கச் சகடம்வைத்து விளையாடலாம்; இவனை எங்காயினுங் கொண்டுபோய் விளையாட்டுக்காட்டு கிறேன். [போய்] ஆரியே! வந்தனம் பண்ணுகிறேன்.

வசந்த.—இரதனிகே! இது யாருடைய குழந்தை? ஆபரணங்கள் அணிந்திராவிட்டாலுஞ், சந்திரனைப்போல முகத்தோடுங்கூடியிருத்தலால் என்மனம ஆநந்தமடையாநின்றது.

இரதனி.—இவன் ஆரியசாருதத்தருடைய மகன்; ரோஹஸேநன் என்று பெயர்.

வசந்த.—[கைகளை நீட்டி] வாடா என்குழந்தாய்! என்னைக்கட்டிக்கொள்ளு [என்று மடிமீதிருத்தி] இவன் தகப்பன் சாயலைக் கொண்டிருக்கின்றனன்.

இரதனி.—உருவம் மாத்திரமல்ல, குணமும் என்றெண்ணுகிறேன்; இவனால் ஆரிய சாருதத்தா தன் ஆத்மாவை ஆறுதல் பண்ணிக்கொள்ளுகின்றனர்.

வசந்த.—இவன் ஏன் இப்பொழுது அழுகின்றனன்?

இரதனி.—அடுத்த வீட்டுக்குழந்தை தங்க வண்டி வைத்து விளையாடினான்; அதை வாங்கித் தரும்படி இவன் என்னைக் கேட்டனன்; நானிந்த மண்வண்டி தயார்செய்து கொடுத்தேன்; "இரதனிகே! இந்த மண்வண்டி யெனக்கு என்னத்துக்கு? அந்தத் தங்கவண்டியைத் தா" என்கிறான்.

வசந்த.—ஐயோ! இவனும் அயலார் செல்வத்தில் அழுகின்றனன்; பகவானே! காலமே! தாமரை யிலையில வீழ்ந்த ஜலத்துளிபோல மனிதர்களுடைய அதிர்ஷ்டத்தில் விளை

யாடுகின்றனையே! [என்று கண்ணீர் சொரிந்து] அழாதை, தங்க வண்டியை வைத்து விளையாடுவாய்.

குழந்தை.—ரதனிகே! யாரிவள்?

வசந்த.—உன்றகப்பன் குணக்கடலிற் குளித்த தேவடியாள்.

இரதனி.—பாலா! இந்த ஆரியை உனக்குத்தாய் முறை.

குழந்தை.—ரதனிகே! நீ பொய் சொல்லுறையே. இவள் எங் கம்மாளானால் இவள் நகைகள் போட்டிருக்காளே?

வசந்த.—குழந்தாய்! உனது அழகிய வாயால் மிக்கதுயரம் விளைவிக்கத்தக்க வார்த்தை சொல்லுகின்றனை [தனது ஆப ரணங்களைக் கழற்றியழுதுகொண்டு] இதோ நான் உன் தாயாகி விட்டேன்; இந்த நகைகளை யெடுத்துக்கொண்டு தங்க வண்டி பண்ணிக்கொள்ளு.

குழந்தை.—போடிநீ; நான் வாங்கேன்; நீ அழுறையே!

வசந்த.—[கண்ணீரைத்துடைத்துக்கொண்டு] குழந்தாய்! நான் அழவில்லை; போய் விளையாடு. [நகைகளை மண்வண்டியின் மீது போட்டு] குழந்தாய்! தங்கவண்டி பண்ணிக்கொள்ளு.

(என்று குழந்தையை ஏந்தி இரதனிகை சென்றனள்)

(வண்டி மூக்கணையிலேறிச் சேடன் பிரவேசிக்கின்றனன்)

சேட.—ரதனிகே! ரதனிகே! மற்றொரு வாசற்படி யோரத்தில் மூடப்பட்டிருக்கிற வண்டியைக் கொணர்ந்து, ஆயத்தமாய் நிறுத்தியிருக்கிறே னென்று ஆரியை வசந்தசேனைக்குச் சொல்லு.

(இரதனிகை பிரவேசித்து)

இரதனி.—ஆரியே! பக்க வாசலில் வண்டி சித்தமாகியிருக்கிற தென்று வர்த்தமானகன் சொல்லுகின்றனன்.

வசந்த.—சேடீ! கொஞ்சமிருக்கட்டும்; நான் அலங்கரித்துக் கொள்ளுகிறேன்.

(இரதனிகை போய்)

இரதனி.—வர்த்தமாநக! ஆரியை ஆடையாபரணங் தரித்துக் கொள்ளுகின்றனள்; சற்றுப்பொறு.

சேட.—ஓகோ! வண்டி மெத்தையை மறந்து போனேனே! அதை எடுத்து வருகிறேன்; இந்த எருதுகள் மூக்குக்கயிற்றுக்குப் பயந்தவைகள் அல்ல; இருக்கட்டும், வண்டியோடு போய்வருகிறேன்.

(என்று சேடனேகினன்)

வசந்த.—சேடீ! என் ஆபரணங்களை எடுத்துவா; அலங்கரித்துக்கொள்ளுகிறேன் [என்று அலங்கரித்துக்கொண்டிருக்கின்றனள்]

(வண்டியிலேறிக்கொண்டு ஸ்தாவரகனுகிய சேடன் பிரவேசம்)

ஸ்தாவர —"வண்டியைக்கொண்டு புஷ்பகரண்டக மென்கிற பாழுந்தோட்டத்திற்கு வா விரைவாக" என்று இராசா மச்சான் ஸம்ஸ்தானகன் எனக்கு உத்தரவு கொடுத்தான்; இருக்கட்டும்; அங்கே போறேனா; காளைகளே! ஹை ஹை! அங்கே போங்க. [கொஞ்சதூரம் போய்ப்பார்த்து] அடே அடே! வளி விடுங்க, வளி விடுங்க [செவிகொடுத்து] என்ன சொல்றீங்கோ? யாருடைய வண்டி இது? என்று?—இது அரசன் மச்சான் ஸம்ஸ்தானகன் வண்டி, சீக்கிறம் வளி விடுங்க [பார்த்து] இதோ சூதாடிவிட்டு ஓடுற சூதாடிப்பயல், சபிகளைப்போல என்னைப்பாத்துக்கிட்டு, விரைவாகத் தன்னைமூடிக்கிட்டு, வேறு வளியாய்ப் போய்விட்டான்; இவன் ஆராக இருக்கலாம்? நமக்கு ஆகவேண்டுவதென்ன? சலுதியிற்பொறேன்; அடே! அடே! காட்டுப்புறத்தாங்களே! வளி விடுங்க, என்ன சொல்றீங்கோ! கொஞ்சம் நில்லுங்க, வண்டியுருளையைத் தூக்கு எண்டா சொல்றீங்கோ! அடே! நான் அரசன் மச்சான் ஸம்ஸ்தானகனுடைய சூரன்; வண்டியுருளையைக் கிளப்புவேனு? அல்லது இவன் ஒண்டியாக விருக்கிண்டான்; பாவம்! [அப்படியே செய்கி

றுன்] இந்த வண்டியை ஐயசாருதத்தனுடைய பக்கவாச லில் நிப்பாட்டறேன் [என்று போயினன்]

சேடி.—ஆரியே! வண்டியுருளேச் சத்தங் கேட்கிறது; வண்டி வந்துவிட்டது.

வசந்த.—சேடீ; போ! என்மனம் பதைக்கிறது; பக்கவாசல் வழியைக்காட்டு.

சேடி.—ஆரியையே! போங்கள் போங்கள்.

வசந்த.—[போய்] சேடீ! நில்லு நில்லு.

சேடி.—அம்மணி கட்டளேப்படி [என்றுபோயினள்]

வசந்த.—[வலதுகண் துடிப்போடு வண்டியிலேறி] என்ன வலக்கண் துடிக்கின்றதே! ஆரிய சாருதத்தருடைய தரிசனமானது அபசகுநத்தை நீக்கிவிடும்.

(ஸ்தாவரகனுகிய சேடன் பிரவேசித்து)

சங்கடங்கள் எல்லாம் நீங்கிட்டது, இப்பொளுது நான் போறேன். [என்று வண்டியிலேறி யசைத்துப்பார்த்துத் தனக்குள்] வண்டிபாரமாகவிருக்குது; அல்லது வண்டியுருளே யைக் கிளப்பினேனே; அதனுல் வண்டி பாரமாகத்தோத்துது; இருக்கட்டும், பாக்கறேன்; மாடுகளே! போங்க போங்க.

(திரைக்குள்)

அடே அடே! துவாரபாலர்களே! அவனவன் கோட்டையிற் சாக்கிரதையாக விருங்கள்; அந்த இடையப்பையல் சிறைச்சாலேயை உடைத்துக், காவலாளியைக்கொன்று, விலங்கை முறித்துத், தப்பியோடுகிறுன்; அவனேப்பிடியுங்கள் பிடியுங்கள்!

(ஆரியகன் திரையைக் கிழித்துக்கொண்டு ஒருகாலில் விலங்குடன் முக்காடிட்டுப் பிரவேசித்துப்போகிறுன்).

சேடன்.—[தனக்குள்] பட்டணத்திற் பருத்த கலகம் உண்டாகி யிருக்குது; ஆகையால் சீக்கறம்போறேன் [என்று போய் விட்டனன்]

ஆரியகன்.—

பகைகொளீஇ யரசன் பருவிலங் கிடலாற்
பந்தனை யுற்றயான் படைத்த
மிகுதுயர்க் கடலைத் தாண்டியே காலில்
விசித்தசங் கிலியெனும் பாசம்
இருத்திட லெண்ணிக் காலொடு பிணிப்பை
யீர்த்தவ னாகியே யின்றுப்
புகுமொரு கட்டு நீங்கிய யானை
போலவே போகுகின் றேனே. (1)

ஓகோ! நான் சித்தர்வசநத்நா லுண்டாகியிருக்கிற அச்சத்தால், இராசா பாலகனு விடைச்சேரியிலிருந்து கொணரப் பட்டுக், கொடுமையான சிறைச்சாலையில் விலங்கிடப் பட்டிருந்தேன்; அதிலிருந்து சர்விலகன்றயவாற் சிறை நீங்கினேன். [கண்ணீர் சொரிந்து]

என்விதி யிந்த வண்ணமா யிருப்பி
னென்னுடைக் குற்றம்யா திவனு
லன்றையே யடவி யானைபோற் கட்டை
யடைந்தனன் றெய்வத வூழை
என்னவா றேனு மழித்த லெங் ஙனமா
மிரும்புவி யிராசனை யெவரு
மன்னரே வணங்கல் தகுதியா மவனை
நான் பகைத் திடனடு வலவே. (2)

துர்ப்பாக்கியமுடைய யான் எங்குப்போவேன்! [பார்த்து] இதோ யாரோ ஒரு சாதுவுடைய மூடப்படாமலிருக்கிற வீட்டின் பக்கவாசல் :—

இவ்வீடோ விடிந்துளதா லிருங்கதவு தாளின்றி
ஒவ்வுசந்தி நழுவியுள துறுமிந்த வில்வாழ்வோன்

கவ்வைதரு முன்னூழாற் கதுவலுற்ற வென்னைப்போல்
† எவ்வமிகுத் தேயிவிட மேக்கமுளா னிச்சயமே! (3)

இதிற் பிரவேசித்துச் சற்றிருப்பேன்.

[திரைக்குள்] மாடுகளே! நடங்க நடங்க! [ஆரியகன் கேட்டு] அட! வண்டி இந்தப்பக்கமே வருகிறது போலும்.

தருமபேறற்றோன் சகடமிது
சழக்க ரிதன்மீ தேறூர்வெண்
ணைகயார் நயமை யேற்றிவர
நாடும் மிதுவோ நளிசெல்வ
மிகவும் படைத்தார் தமக்குரித்தென்
விதியின் வலியா லொருவருமே
புகுதாவண்ண மெனறனுக்கே
போற்றுந் தெய்வ மாற்றியதோ. (4)

(வண்டியோடு வர்த்தமானகசேடன் பிரவேசித்து)

வர்த்தமாந.—ஆச்சரியம! நான் வண்டிமெத்தையைக் கொண டாந்தேன்; ரதனிகே! வண்டிதயாராயிருக்கிறது; ஏறிப்பு ட்பகரண்டமென்னும, பானுந்தோட்டத்திற்குப்போவலாம் எண்டு ஆரியவசந்தசேனைக்குச் சொல்லு.

ஆரியகன்.—[கேட்டு] இது தேவடியாள் வண்டி; வெளியிற் போகிறது; இருக்கட்டும; இதில் ஏறிக்கொள்ளுகிறேன். [என்று மெல்லச் செல்லுகின்றனன்]

சேட.—[செவியுற்றுக்கேட்டு] என்னடா! தண்டைச்சத்தம்! ஆரி யை வந்துவிட்டாள் போலிருக்குதே! ஆரியே! இந்தக் காளைகள் மூக்கணுங்கயத்துக்கு அடங்காது; பின்புறமாக வே நீங்க ஏறுங்க [ஆரியகன் அப்படியே செய்கின்றனன்]

சேட.—அடியைத்தூக்கி வைச்சத்தினுல் ஆடிக்கொண்டிருந்த தண்டைச்சத்தம அடங்கிட்டுது; வண்டி கனமாக விருச்

† எவ்வம் = துன்பம்.

குது; ஆசையால் இப்பொழுது ஆரியை எறியிருக்கலா மெண்டு எணணுறேன்; ஆதலால் போறேன்; மாடுகளே! ஹைஹை.

(வீரகன் பிரவேசித்து)

வீரக.—அடே அடே! சய! சயமாக! சந்தநக! மங்கள! புட்ப பத்திரன் முதலானவர்களே!

எனனடா நீஙகள் சுமமா
இருக்கினறீர் இடையபபையல
மன்பெரு விலங்கைபபோக்கி
வளிதப்பி ஒடாகினடான. (5)

அடலே! நீ கீழ்வாசலிலிரு; நீ மேக்குவாசலில்; நீ தெக்கு வாசலில்; நீ வடக்கு வாசலில; இந்த மதளின்மேலேறி நான் சந்தனகனோடு போய்ப்பாக்குறேன்; வாடா சந்தனக! வா இங்கிட்டாலே வாடா.

(சந்தனகன் பிரவேசித்து அவசரத்துடன்)

அட அட! அரச லச்சுமி யசலா
ஙிடமபோ காமலே தைரிய மேற்றுத்
தடபுட லோடு சடுதியில் வாங்கோ
மடமட வருந்தி வளிபிடித் திடுங்க. (6)

மேலும்,

நீடுதோட் டங்க ணெடுஞ்சவை வளிகள்
கூடுபட் டணங்கள் கொள்கடைத் தெருவு
மாடிடைச் சேரி மற்றுமே † ஐயப்
பாடுள இடத்திற் பறநது தேடுங்க. (7)

வீரக! நீவெளி காண்பதை யெல்லாம்
ஒர்பொய் யின்டி யுரத்திச் சொல்லு!

---

† ஐயப்பாடு = (ஒருசொல்) சந்தேகம், "ஐயப்பாடறுத்துத்தோன்றும முகனூரரங்கமன்றே" திருவாய்மொழி, முதலாயிரம், திருமாலை 15.

ஆரடா ! அந்த இடைப்பயல் விலங்கைக்
கோரமா யுடைச்சுக் கொண்டு போனவனே ? (8)

சந்தனக னுயிரோடே யிருக்கும் போளது
சார்ந்த இடைப்பையனையார் கொண்டு போனான் ?
சந்திரனார் நாங்கிலுஞ் சூரியனு ரெட்டில்
தரைவந்த செவ்வாயோ அஞ்சாம் வீட்டில்
புந்தியுள்ள ராசாசென் மத்துக் காறிற்
பொல்லாத சனியனென்ப தான வீட்டில்
இந்தவிதமாக விந்த ஊரிலி யாவர்க்
கிருக்குதடா இதைப்பார்த்திச் சணமேசொல்லு.

வீரக.—அட ! சந்தனக !

உன்மனத்தி லாணைவச்சே னேடுமந்த
இடைப்பயலை விரைவா யாரோ
† இன்னுகொண்டு போகிண்டா னடேஇந்தச்
சூரியனார் ஆகா மத்தில்
உன்னுமொரு சரிபாதி உதிப்பதற்கு
முன்பேயுவ் விடையப் பையன்
தன்னையிரு பிளவாகப் பிளந்திடுவே
னன்வீர கன்றான் அணடோ. (10)

சேட.—மாடுகளே ! ஹை ஹை !

சந்தன.—

அரைசவீ தியிலோர்வண்டி அளகாக மூட்டம் பெற்று
விரைவொடு போகுதப்பா வினவுயா ருடைய தெண்டே.

வீரக.—[பார்த்து] அடே ! வண்டியோட்டி ! இந்த வண்டியை ஒட்டாதே ; இந்த வண்டி யார் ? இதில் யார் ஏறியிருக்கிறாங்கோ ? எங்கே போகுது ?

சேட.—இது ஆரிய சாருதத்தர் வண்டி ; இதில் ஆரியை வசந்த

---

† இன்னு=இன்று, இசைசசொல்.

சேனே சவாரிபோருங்கோ; சாருதத்தருடைய புட்பகரண்டமென்கிற பாருந் தோட்டத்திற்கு விளையாடப்போருங்கோ.

வீரக.—[சந்தனகன் அண்டையிற் போய்] "ஆரியசாருதத்தர் வண்டி; வசந்த சேனே ஏறியிருக்கிருள்; புஷ்பகரண்டகப்பாருந் தோட்டத்திற்குப் போகுருள்" என்று வண்டியோட்டி சொல்றுன்.

சந்தன.—அப்படியானல் போகட்டும்.

வீரக.—பார்க்கப்படாமலா?

சந்தன.—ஆமாம்.

வீரக.—யார் நம்பிக்கையின் பேரில்?

சந்தன.—ஐயசாருதத்தருடைய.

வீரக.—அந்தச் சாருதத்தன் யாரு? வசந்தசேனே யாரு? இப்படிப் பாக்கப்படாமற் போறத்துக்கு.

சந்தன.—அட! ஆரியசாருதத்தனே உனக்குத் தெரியாது; வசந்தசேனேயையுந் தெரியாது; ஆரிய சாருதத்தனேயும் வசந்தசேனேயையும் நீ அறியாயானல், ஆகாயத்தில் நிலவோடுகூடிய சந்திரனேயும் நீ அறியாய்!

குணமதில் மறைகுல வொழுக்கி லம்புவி
மணிற்றுய ருற்றவர் வந்தடைக் கலம்
நணுகிடிற் காப்பவர் நாலு சாகரம்
இணையெனு மவரையா ரறிய வில்லேயே. (12)

தன்னேயே நிகர்தனி வசந்த சேனேயுந்
தன்னேயே தானிகர் சாரு தத்தனும்
உன்னுமிவ் விருவரும் ஓய்! இப் பட்டினந்
தன்னிலே பூசனே சமைக்கத் தக்கவர். (13)

வீரக.—அடே! சந்தனக!

சாருதத்தன் றனிவசந்த சேனைதம்மை யறிவெனடா
பாரிலிராசர் பணிவந்தாற் பார்! அப்பனையு மறந்திடுவேன்.

ஆரியகன்.—[தனக்குள்] ஒருவன் எனக்குப் பழைய பகைவன்; மற்றொருவன் பழைய மித்திரன்!

† மணஞ் ‡ சிதையென் பவற்றினுறு
§ வன்னியொன்றே யானாலுங்
குணம்வேறா காதிருத்தல்
கூடிலதீ யஃதேபோல்
எனுமரசன் னொருகாலத்
தேவுதலுற் றாரெனினுங்
குணத்திலிவ ரொப்புமையைக்
$ கொஞ்சமுந்தாங் கொண்டிலரோ. (15)

சந்தன.—இராச காரியத்தில் நீ கவலைகொண்டவன்; சேனாதிபதி; ஆகையால் இராசாவுக்கு உன்னிடத்தில் மிகுந்த நம்பிக்கையுண்டு; இதோவண்டிமாடுகளை நான் பிடிச்சுக்கொள்ளுகிறேன்; பார்.

வீரக.—நீயும் இராசாவுக்கு நம்பிக்கையான சேனாதிபதி; ஆகையால் நீயே பாரேன்.

சந்தன.—நான் பாத்தால் நீ பாத்தாப்போலாமா?

வீரக.—நீ பாத்தால் ராசாபாத்ததுபோல.

சந்தன.—அட! நுகத்தடியைத் தூக்கு.

(சேடன் அவ்வண்ணஞ் செய்கிறான்)

ஆரியக.—[தனக்குள்] காவலாளிக ளென்னைப் பார்ப்பார்களோ!

---

† மணம்=கலியாணம். ‡ சிதை=ஈமவிறகு. § வன்னி=நெருப்பு.
$ கொஞ்சம்=சிறுமை, கிஞ்சித் என்றபதத்தின் மரூஉ; திசைச்சொல்லுமாம்.

அபாக்கியனாகிய யான் ஆயுதமில்லாதவனாக விருக்கிறேன்; அல்லது.

வீமனேர்வினை செய்குவெ னிப்பொழு
தேமனாயுத மாமென கைகளே
பூமன்போரினிற் பொன்றுதன் மேலதே
† சேமமன் றயலார்கையிற் றீர்தலே. (16)

அல்லது நடிப்புக்கு இது சமயமல்ல.

(சந்தனகன் வண்டியிலேறிப் பார்க்கின்றனன்)

ஆரியக.—அடைக்கலம் புகுந்தேன்.

சந்தன.—அடைக்கலமான உனக்கு அவையந்தந்தேன்.

புகல்புகுந்தவனைக் கைவிடுமவனைப்
புகள்மிகு விரலக்குமியாள்
அகல்கிலாநண்பருறவினரகல்வ
ரவமதியடைவனெப் பொழுதும். (17)

பருந்தால் துரத்தப்பட்ட ஓர் குருவி, குருவிபிடிப்பவன் கையில் அம்புட்டாப்போல, இடைப்பயலான ஆரியகன் இவாள் கையில் அம்புட்டிருக்கான் [யோசித்து] இவன் குற்றமற்றவன்; அடைக்கலம் புகுந்தான்; ஆரிய சாருதத்தன் வண்டியிலேறி யிருக்கிறான்; எனக்குப்பிராணதானஞ் செய்த ஆரியசர்விலகனுடைய சிநேகிதன்; ஒருபக்கத்தில் இராசாவுடைய உத்தரவு; இப்பொழுது நான் என்ன செய்தால் நல்லதாகவிருக்கும்? அல்லது வருவது வரட்டும்; தலைப்பிலே அவையங்கொடுத்தேன்.

அறம்பிறர்க்கே யுதவிபுரிந்
தச்சமுற்றார்க் கருளீய்ந்தோன்

† சேமம்=இன்பம், "சேமமேவேண்டித் தீவினைபெருக்கித் தெரிவை மாருருவமே மருவி" பெரியதிருமொழி, முதற்பத்து 1. வாடினேன். 3.

மறநாச முற்றிடினு
மண்ணிலவர்க் கதுகுணமாம். (18)

[அச்சத்தோடு மிறங்கி] ஆரியகன் பார்க்கப்பட்டான், [என்று பாதி சொல்லி] இல்லை; ஆரியை வசந்த சேனை பார்க்கப்பட்டாள்; "இது யுக்தமல்ல; இது உங்களுக்குச்சரியல்ல, இவ்விதம் ஆரிய சாருதத்தரை அபிசரிக்கப்போகிற யான் இராஜமார்க்கத்தில் அவமானஞ் செய்யப்படுகிறேன்" என்று அவள் சொல்லுகின்றனள்.

வீரக.—சந்தனக! இது சங்கதியிலெனக்குச் சந்தேகமுண்டாச்சுது.

சந்தன.—என்னடா உனக்குச் சந்தேகம்?

வீரக.—

அவசமொடு சொற்குளறி
ஆரியகற் பார்த்தெனென
இவனுரைத்துப் பினர்ஆரி
யைவசந்த சேனையெண்டாய். (19)

இதுதான் எனக்குச் சந்தேகமடா!

சந்தன.—அடே! அடே! உனக்கு அவநம்பிக்கை யென்னடா? நாங்கள் தெற்கத்தியாருங்க; தெளிவாய்ப் பேசத்தெரியாதவங்க; † கஷ, கத்தி, கட, கட்டோபில, கருநாட, கர்ண, பிராவரண, திராவிட, சோள, சீன, பர்ப்பர, கேர, காண, முக, மதுகாதம், முதலிய மிலேச்ச சாதி மனிதர்களுடையபலபல தேச பாஷைகள் தெரிந்தவங்க நாங்க; பார்க்கப்பட்டான், ஆரியன், ஆரியை எண்டு இட்டமானபடி பேசுவோம.

வீரக.—நானும் பாக்கறேன்; இது இராசாகட்டளை; நான் இராசாவுக்கு நம்பிக்கைக்காரன்.

---

† கஷமுதல்மதுகாதமீருயுள்ளவைகள் மிலேச்சர்வாழ்நாடுகள்.

சந்தன.—என் மேல் இராசாவுக்கு நம்பிக்கையில்லையா என்ன ?

வீரக.—இது அரசகாரியமல்லவோ ?

சந்தன.—[தனக்குள்] ஆரிய இடைப்பையன் ஆரிய சாருதத்தருடைய வண்டியிற் போகுமுனெண்டால், சாருதத்தனைத் தண்டிப்பாங்களே ; இதுக்கென்ன உவாயம் ? [யோசித்து] கருநாடகக் கலகஞ் செய்யுறேன் ; [வெளிப்படையாக] அட வீரக ! சந்தனகனுகிய நான் பாத்த பிறகு நீயும் பாக்கிறேன் எங்குருயே ! நீ யாரடா ?

வீரக.—அட ! நீ யார் ?

சந்தன.—கிரம்ப மரியாதையோடு வெகுமானமு மடைந்ததனுல் உன் சாதியைக் கூட மறந்து போனுயோ ?

வீரக.—அட என்சாதி யென்னடா ?

சந்தன.—அதை எவன் சொல்லுவான் ?

வீரக.—நீ சொல்லுடா !

சந்தன.—இல்லை ; சொல்லமாட்டேனடா.

உன்சாதி நானறிவேன்
உரைசெய்யேன் † ரோக்கியனுன்
என்மனத்தி லிருக்கட்டும்
‡ விளாம்பழத்தை யுடைப்பதிலென் ? (20)

வீரக.—சொல்லுடா சொல்லு.

(சந்தனகன் சாடை காட்டுகின்றனன்)

வீரக.—அட ! என்ன இது ?

---

† ரோக்கியன்=யோக்கியன், இழிசனர்மொழி.

‡ விளாம்பழத்தை * * * வெளிப்படையாக தெரியுமென்றல் கருத்து.

† தேஞ்சகல் கத்தரிக்கோல்
சிறந்தகைக் கொண் ‡ டாண் பிள்ளை
§ ஆஞ்சுச்சிக் குடுமிவைப்பா
யடசேறு பதியா னுயே ! (21)

வீரக.—அடசந்தனக ! வெகுமான மடைந்தவன் நீயும் ; உன்சாதியை நீ நினைக்கவில்லை.

சந்தன.—சந்திரனைப்போலச் சுத்தனுன சந்தனகன் நான், யென் சாதி யென்னடா ?

வீரக.—அதை யார் சொல்லுவான் ?

சந்தன.—சொல்லடாசொல்லு.

(வீரகன் சாடை காட்டுகின்றனன்)

சந்தன.—என்னடா இது ?

வீரக.—அட ! கேளு கேளு.

துன்முகனே ! உன்ஆயா பேரிகை $ தூ உன்னப்பன்
வன்மைகொளுந் தம்பட்டம் ¶ மறுவஅண்ணன் சக்கிலியன்
உன்சாதி ‖ மவாச்சுத்த முள்ளதியா னறிவெனடா
மன்சேறு பதியாகி வந்துவிட்டாய் நீயுமடா. (22)

சந்தன.—[கோவத்தோடு] நான் சந்தனகன், சக்கிலியன்தான் ; வண்டியைப் போய்ப் பாரு.

வீரக.—அட ! வண்டிக்காரா ! வண்டியைத்திருப்பு ; பாக்கிறேன். [சேடன் வண்டியைத்திருப்புகின்றனன் ; வீரகன் வண்டிமீதேறிச்செல்லுகின்றனன் ; சந்தனகன் விரைவாய்ச் சிண்டைப் பிடித்துத், தரையிற் றள்ளிக், காலாலுதைக்கிறுன்]

---

† கத்தி தீட்டப்படுகின்ற கல்.

‡ ஆண்பிள்ளைகட்கு எனக்குவ்வுருபுவிரிக்க.

§ ஆஞ்சுச்சிக்குடுமி = ஆய்ந்துதலையிற்குடுமியை.

$ தூ = காறி உமிழ்தற்குறிப்பு. ¶ மறுவ = மறுபடி. ‖ மவா = மகா.

வீரக.—[கோவத்தோடெழுந்து] அடலே! உன்னை நான் நம்பி அரசன் † அலுவலாக இருக்கின்ட பொளுது, விரைவிற் சிண்டைப்பிடித்து உதைத்தாய்; இதோ கேளு; நீதிச்ச வைநடுவில் உன் உடலை நாலு துண்டுகள் செய்கிறேன்; செய்யாமே விட்டால் நான் வீரகனல்ல.

சந்தன.—அடே! அரசன் அரண்மனைக்குப்போ; நீதிச்சவைக்கு த்தான் போ; நாயையொத்த உன்னால் என்னடாமுடியும்?

வீரக.—அப்படியே! [என்று சென்றனன்]

சந்தன.—[நாலுபக்கமும் பார்த்து] அட! வண்டிக்காரா! போடா; "சந்தனகன் வீரகன் இவர்களாற் பார்க்கப்பட்டு வண்டி போகிறது" என்று யாராவது கேட்டாற் சொல்லு; ஆரியே வசந்தசேனை! இதோ ஒரு அடையாளந் தருகிறேன் உனக்கு [என்று கத்தியைக்கொடுக்கிறான்]

ஆரியக.—[கத்தியை வாங்கிக்கொண்டு களிப்போடு தனக்குள்]

வலந்தரு வாளொன்றுற்றேன்
வலதுதோள் துடிக்கப்பெற்றேன்
நிலத்தெலா நன்றே ஒகோ!
நிச்சயங் காக்கப்பட்டேன். (23)

சந்தன.—ஆரியே!

இற்றைநா ளுன்னையாளென்
றேற்கின்றேன் மறுத்திடாதே
மற்றுநம் புதல்கொள்சந்த
னகன்றனை மனத்துள் வைத்தி
உற்றபே ராசை தன்னா
லுரைக்கின்றே னல்லநாளு
முற்றுநஞ் சிநேகத்தாலே
மொளிந்தன னிந்தப்பேச்சு. (24)

† அலுவல்=காரியம், தேசிகச்சொல்.

ஆரியக.—

*சந்திர சீலமேய சந்தனக னிப்போழ்து*
*மந்திர தெய்வந்தன்னுன் மனமகிழ் துணைவனுனன்*
*முந்தவே சொற்றசித்த மொழியிவ்வா றிருக்குமாயிற்*
*சந்தனகச் சீரானைத் தனிமனந் தனில்வைப்பேனுல்.*

சந்தன.—

*சும்ப நிசும்பர்த் தொலைத்த தேவி*
*அம்பிகை யாளப் பகையை வீட்டுக*
*பிரமன் விட்டுணு † பிஞ்ஞகன் றிங்க*
*‡ ளரிகு ரியனு மபையம் அருள்க.* (26)

*(சேடன் வண்டியோடு சென்றனன்)*

சந்தன.—[*திரைச்சீலையைப் பார்த்து*] *அடே! வெளிப்பட்டிருக்கிற எனது பிரியமுள்ள தோளன் சர்விலகன், இவன் பின்றேற் போயிருக்கிண்டான்; இருக்கட்டும், பிரதாந சேனுபதியும் இராசனுக்கு நம்பிக்கை யுள்ளவனுமான வீரகன் நமக்குப் பகைவனுனன்; நானும் மக்கள் உடன்பிறந்தார்களோடு மிவனைச்சேருவேன்.* [*என்று ஏகினன்*]

வண்டிமாற்றம என்கிற ஆறவதங்கம்

முற்றிற்று.

---

† பிந்நகன் = சிவன் "உழையை நோக்கும் பிஞ்ஞகன் மயல்யாதென வுரைக்கேன்" ஸ்ரீபாகவதம், 8-ஸ்கந்தம், மோகினியுருக்காட்டிய அத்தியாயம் 8.

‡ அரி = ஒளி, "அரிகிளரி புணரிமாறேரைம்மை யிந்திரன் கால் காந்தி," நிகண்டு.

(பிறகு சாருதத்தனும் விதூஷகனும் பிரவேசிக்கின்றனர்)

விதூஷ.—ஓய்! பாரும் பாரும்; புஷ்பகரண்டகமென்னுஞ் † சீர்ணோத்தியாநத்தின் அலங்காரத்தை.

சாருத—மித்திரா! அது அவ்வண்ணமே; மேலும்.

மரங்கள் செட்டிகள் மலர்பல பண்டம்போல் வயங்கப்
‡ பிரசம வேந்திறை பெறுமவர் பெட்பினிற் சரித்த. (1)

விதூஷ.—வேலை செய்யப்படாமலே அழகுவாய்ந்த கன்மேடை மீது உட்காரும்.

சாருத.—[உட்கார்ந்து] நண்ப! வர்த்தமாநகன் தாமதிக்கின்றான்.

விதூஷ.—வசந்தசேனையை விரைவி லழைத்துக்கொணரும்படி அவனுக்குச் சொல்லி யிருக்கின்றேன்.

சாருத.—அவன் றாமதிப்பானேன்?

முன்னேகுஞ் § சாகாடு மெதுவாய்ச் செல்ல
மருங்கொதுங்கும் படிமொழிந்து தாழ்கின்றானோ?
$ அன்னுருளை யொடிந்தவற்றை த்தூக்கி விட்ட
தால்விளம்ப மாயிற்றோ? ஏற்றின் ¶ றாம
|| முன்னறுந்து போயிற்றோ? தறித்துச் சாய்த்த
முதுமரத்தை வழியகற்றச் சொலிகின்றானோ?
* கொன்பகடு தமைமெல்ல மெல்ல ஒட்டிக்
கொண்டுவரு கின்றனனோ? @ பாணிப் பென்னே? (2)

---

† சீர்ணோத்தியாநம்=பாழுந்தோட்டம். ‡ பிரசம்=வண்டு.
§ சாகாடு=வண்டி. $ அன், சாரியை. ¶ || தாமமுன்=கயிற்றின்றுனி.
* கோன்=அச்சம். @ பாணிப்பு=தாமதம்.

(வண்டிக்கு ளொளிந்திருக்கிற ஆரியகனோடு சேடன் வருகின்றனன்)

சேட.—மாடுகளே! ஹை ஹை; நடவுங்க.

ஆரியக.—[தனக்குள்]

அரச † னுழையர் தமைக்காணி
லச்சங்கொள்வேன் கால்களிலே
பெரியவிலங்குற் றிருத்தலினாற்
பிறழுநடையேன் ‡ கொடிகூண்டின்
மருவிவளர்க்கப் படுங்குயிற்போன்
மாண்டான்பாண்டின் மீதேறித்
தெரிதறவிர்த்தே மறைவாகச்
செல்லாநின்றே னின்றேயான். (3)

ஆ! ஆ! நகரத்திலிருந்து நெடுந்தூரம் வந்துவிட்டேன்; இந்த வண்டியில் நின்றும் இறங்கித், தோட்டத்தில் மறைந்துகொள்ளட்டுமா? அல்லது வண்டியின் எஜமானைப் பார்க்கட்டுமா? அன்றேல் தோட்டத்தில் மறைதல் வேண்டாம்; அடைக்கலம் புகுந்தவரிடத் தில்அன்புடையானென்று சாருதத்தனைச் சொல்லுகின்றனர்; அவரை நேரிற் கண்டு போகிறேன்.

துக்கக்கடற்கண் வீழ்ந்தெழுந்த
§ துரிதன்றனையச் சாதுமக
மிக்கக்களித்து விழைவரென்மெய்
$ மேலோன்றன்னால் நிலையுற்ற. (4)

சேடன்.—இதோ தோட்டம், இதிற் பிரவேசிப்பேன் [சென்று] ஆரிய மைத்திரேய!

விதூஷ.—ஓய்! உமக்கொரு சந்தோஷ சமாசாரஞ் சொல்லுகி

† உழையர்=சேவகர். ‡ கோடி=காக்கை.

§ துரிதன்=பீடையுற்றவன், $ மேலோன்=சர்விலகன்.

றேன்; வர்த்தமாநகன் ஒருவார்த்தை சொல்லுகிறான்; வசந்தசேனை வந்திருப்பாள்.

சாருத.—சந்தோஷம! சந்தோஷம்!

விதூஷ.—தேவடியாள் மகனே! ஏனடா தாமதம்?

சேட.—ஆரிய மைத்திரேய! கோவம் வேண்டாங்க; வண்டிமெத்தையை மறந்திட்டேன்; அதை யெடுக்கப்போய்த் திரும்பி வந்தேன்; நாளியாச்சுங்க!

சாருத.—வர்த்தமாநக! வண்டியைத் திருப்பு; நண்ப! மைத்திரேய! வசந்த சேனையை இறக்கும்.

விதூஷ.—அவள் கால் விலங்கிடப்பட்டிருக்கிறாளா என்ன! அவள் தானாக இறங்கமாட்டாளோ? [எழுந்து வண்டியைத் திறந்து] ஓய்! வசந்த சேனையல்ல, வசந்தசேனனல்லவா இருக்கிறான்.

சாருத.--மித்திரா! பரிகாசம் வேண்டாம்; சிநேகந் தாமதத்தைத் தாங்காது; நானே இறக்கிவிடுகிறேன் [என்று எழுந்தான்]

ஆரியக.—[பார்த்து] இவரே வண்டிக்கு எஜமானன்; கேவலங் காதுக்குமட்டுமன்று; கண்ணிற்கும் அழகானவர்; ஆ! ஆ! காப்பாற்றப்பட்டேன்.

சாருத.—[வண்டியி லேறிப் பார்த்து] அடே! இவன்யார்?
யானைத் துதிக்கை யனைய கைகளுங்
கானுறை சிங்க மொப்ப வுயர்ந்து
பருத்த புயங்களும் பார்போ லகன்றே
ஒத்த மார்பு மோடி † யான்று
செக்கச்சேந்து சலிக்குங் கண்களும்
உடையவிக் குரிசில் யாவன்? இவனுக்
கியல்பல் லாத ‡ அயப்பா சங்கால்
உற்றுள னாழே! கொடியை! நீயே! (5)

---

† ஆன்று=அகன்று. ‡ அயப்பாசம்=இரும்பு விலங்கு,

யாரையா நீர் ?

ஆரியக.—கோபால குலத்தனான ஆரியகன் யான்; உம்மைச் சரண் புகுகின்றேன்.

சாருத.—அரசன் பாலகனாற் கால் விலங்கிடப்பட்டு ஆயர்பாடி யினின்றுங் கொணரப்பட்டவனா ?

ஆரியக.—ஆம் ஆம் !

சாருத.—

விதியாலெனது விழிக்கெதிரின்
மேவிநின்ற யென்னுயிரைப்
† பதியாலிழுக் கினும்பாதம்
பற்றுமுன்னைப் பாரில்விடேன். (6)

(ஆரியகன் ஆநந்த மடைகின்றனன்)

சாருத.—வர்த்தமாநக ! இவர் விலங்கை வெட்டு !

சேட.—எசமாங்களிட்டப்படி [என்று அவ்விதஞ் செய்து] சுவாமீ! விலங்கை வெட்டிட்டேன்.

ஆரியக.—இப்போது சிநேகமென்ற விலங்காற் பலமாய்த் தளைய ப்பட்டேன்.

விதூஷ.—நீர் விலங்கை மாட்டிக் கொள்ளும்; இவன் விடுவிக்க ப்பட்டனன்; இப்போழ்து நாம் போவேம்.

சாருத.—சீ ! பொறு.

ஆரியக.—சகாசாருதத்தரே ! நான் மித்திரத் தன்மையாலிவ்வ ண்டியி லேறினேன்; அதைப்பொறுத்தருளுக !

சாருத.—தாமாகவே செய்த தங்கள் நட்பால் அலங்கரிக்கப்பட் டவனாயினேன்.

---

† பதி = அரசன்,

ஆரியக.—உம்மிடம் விடைபெற்றுச் செல்ல விரும்புகின்றான்.

சாருத.—போங்கள்!

ஆரியக.—நல்லது, இறங்குகின்றேன்.

சாருத.—சகாவே! இறங்காதீர்; இப்பொழுதுதான் விலங்கு நீங்குதலையுற்ற உமக்கு, நடத்தல் பிரயாசமாக விருக்கும்; இந்த இடத்திற் சநங்கள் அதிகமாக சஞ்சரிக்கின்றமையால் வண்டி நம்பிக்கையை விளைக்கும்; ஆகையால் வண்டியிலேயே போம்.

ஆரியக:—தாங்கள் கட்டளையிட்டவண்ணம்.

சாருத.—சேமமா யுறவினர்ச் சேருதி நின்றே!

ஆரியக.—ஆமென துற்று ணீ ரன்றோ?

சாருத.—நாம்படை நட்பின் ஞாபகம் பேணுதி!

ஆரியக.—தாமே தம்மை மறப்பவ ருண்டோ?

சாருத.—† தூம்புறு மும்மைச் சுரர்காத் தளிக்குக!

ஆரியக.—காமுறு மும்மாற் காத்தலை யுற்றேன்!

சாருத.—தோமிலூ மும்மைத் தொடர்ந்தோம பிற்று

ஆரியக.—‡ நேமமார் காரண நீர்தா மன்றோ? (7)

சாருத.—பாலகன் கிளம்பிப் பெரிய கவலையை விளைத்தற்கு முன்னர், தாங்கள் விரைவிற் போங்கள்.

ஆரியக.—இந்தவிதம் மறுதடவை பார்ப்பேன் [என்று சென்றனன்]

சாருத.—

நரபதிக்குப் பெருங்குற்ற நாமிழைத்திங் குறலன்றோ
புரிவிலங்கைப் பாழ்ங்கிணற்றிற் போடாசர் கண் § சாரர்.

---

† தூம்பு=அருவழி, ஆரியகன் மறைந்து செல்கிறதலிற் றூம்பு என்னப்பட்டது. ‡ நேமம்=நிச்சயம். § சாரர்=ஒற்றர்.

(இடதுகண் துடித்தலைக் காட்டி)

பன்னருங் காதலி தன்னைப் பார்க்கிலே
னென்னிடக் கண்ணிதோ துடித்த லெய்ந்ததா
லென்மனங் காரண மின்றியே துய
† ரன்வய முற்றதா லாவ தென்னையோ? (9)

வாரும் போவேம் [சென்று] என்ன எதிரில் அமங்களகரமா னசணக தரிசநமாகிறது [யோசித்து] இவனிந்த வழியாய்ப் பிரவேசிக்கட்டும்; நாம் வேறுமார்க்கமாய்ச் செல்வேம்.

(என்று போயினன்)

ஆரியக அபஹரணம் என்கிற ஏழாவதங்கம்

முற்றிற்று.

† அன்வயம் = தழுவுகை "அறத்தொடுந் தொடர்ந்திலோரை, அன்வயித் தோருந்தீய அவுணரல்லாரையெல்லாம்" இராமாயணம், உயுத்தகாண்டம், இரணியன்வதைப்படலம், செய்யுள் 136.

# எட்டாவதங்கம்.

(பிறகு நனைந்த காஷாயத்தைக் கையிற்கொண்டு
பௌத்த சந்நியாசி பிரவேசிக்கின்றனன்)

சந்நியாசி.—அறிவினர்காள்! தருமத்தை விருத்தி பண்ணுங்கள்.

வயிற்றினைச் சுருக்கித்தியாக
    மாகுமோர் டமானத்தாலுந்
துயிலினை நீக்கிநல்ல
    விழிப்பினாற் றூயோராவிர்
செயிர்தரு விடமப்பஞ்சேந்
    தியமெனுந் திருடர்நீவிர்
சயமுறப் பன்னாளீட்டுந்
    தருமத்தைக் கவர்வாரன்றே. (1)

மேலும் எல்லாம் நிலையற்றவை யென்றறிந்து தருமங்களை
ச்சரண்புகுந்தேன்.

ஐம்புல னவித்தார்யாரே
    அவிச்சையை மாய்த்தார்யாரே
வெம்புமிவ் வுடலந்தன்னை
    விழைவொடு காத்தார்யாரே
வம்பகங் காரச் † சண்டா
    ளன்றனை மடித்தார்யாரே
நம்புமம் மாந்தர்விண்ணோர்
    நல்லுல கடைவார்திண்ணம். (2)

† அகங்காரத்தைச் சண்டாளனென்றது இருமைப்பயன்களையுங் கெடுக்குங் கொடுமைபற்றி. இங்ஙனங்கூறுதல் ஆன்றோர் வழக்கு "அழுக்காறென வொருபாவி" என்றும் "இன்மையென வொரு பாவி மறுமையும்" என்றுந்திருவள்ளுவர் கூறியிருத்தலைக்காண்க. திருவள்ளுவர் குறள் அழுக்காறாமை 8. நல்குரவு 2. இக் கருத்துப்பற்றியே பஞ்சேந்தியமெனுந் திருடரென்னப்பட்டது.

முண்டன † முற்றவுத்த
    மாங்கமு முகமு மந்தோ!
‡ முண்டன மாகவில்லை
    யுள்ளமுண் டிதத்தா லென்னே!
முண்டன மாந்தருள்ள
    முகக்குமேன் மொழியு மற்றை
முண்டனத் தாலெஞ்ஞான்று
    முடிவறு பயனுண் டாமால். (3)

இந்தக் கந்தை கஷாயத்தில் நனைக்கப்பட்டுளது; அரசன் மைத்துனனுடைய பூந்தோட்டத்திற் சென்று, குளத்திலி தைக் கழுவிக்கொண்டு, விரைவிற் போய் விடுகிறேன். [போய் அவ்விதம் செய்கின்றனன்]

[திரைக்குள்] நில்லடா! துஷ்டசமணக! நில்லு.

சந்நியாசி.—[பார்த்துப் பயத்துடன்] ஆச்சரியம்! இதோ அரசன் மைத்துனன் சம்ஸ்தானகன் வந்து விட்டான்; ஒரு துறவி குற்றஞ்செய்தால், எந்தெந்த இடங்களில் சன்னியாசிக ளைப் பார்க்கிறானோ, அவர்களையெல்லா மூக்கணாங்கயிற்று மாடுகள் போல, மூக்கிற் கயிற்றைக் கோத்து இழுத்துக் கொண்டு போவானே! கதியற்ற நான் இப்பொழுது யாரை ச்சரணமடைவேன்! அல்லது, வந்திக்கத்தக்க புத்தனே எனக்குக்கதி.

(கையிற்கத்தி தாங்கிய விடனோடு சகாரன் பிரவேசிக்கின்றனன்)

சகார.—கெட்டசமணக! நில்லடா நில்லு! கள்ளுக்குடிக்கிறவர் கள் நடுவில், சிவப்பு முள்ளங்கியைத் திருடுதல் போல, உனது தலையைத் திருகிப் பறிக்கிறேன் [என்று அடிக்கின்ற னன்]

---

† உத்தமாங்கம்=தலை.

‡ உள்ளமுண்டன மாகவில்லை, மற்றையமுண்டனங்களாற் பயனிலை யென்றுபொருள்கொள்க.

விடன்.—கலியாணமாகாதவள் மகனே! ஆசையகற்றிக் காவியுடை தரித்த தவசியை யடித்தல் தருமமல்ல; இவனால் நமக்கென்ன? இதோ சுகமாய் அடையத்தக்க உத்தியாநவநமிருக்கிறது; பார்.

புகல்புகுந் தவர்க்கே யபயம தளித்துப்
பூரித்த மாந்தர்போற் றருக்கள்
மிகவிளங் கியதாய்த் தீயவர் மநம்போல்
விண †ப வாரணம் பெறுதாய்
‡ நகநிக ரேந்தல் வசமுறுப் புதிய
விராச்சியம் போன்மென நாடும்
§ பிகமகிழ்ந் துறையும் பூம்பொழிற் பெருமை
பேசவும் வல்லுநர் யாரே! (4)

சந்நியாசி.—வாருங்கள்! உபாஸக! தயை செய்யுங்கள்.

சகார.—பாவ! பாரு பாரு; என்னை வைகிறான்.

விடன்.—என்ன சொல்லுகிறான்?

சகார.—உபாசகனென் றென்னைச் சொல்லுகிறான்; நான் அம்பட்டனா என்ன?

விடன்.—சமணக உபாசகனென்றுன்னைத் துதிக்கிறான்.

சகார.—சமணக! துதி துதி!

சந்நியாசி.—நீ தன்னியன்; நீ புண்ணியசாலி.

சகார.—பாவ! தன்னியன், புண்ணியசாலி யென்றென்னைச் சொல்லுகிறானே! நான் என்ன சாருவாகனா? கோஷ்டகனா? கும்பகாரனா?

விடன்.—$ காணேலிமாத:! நீ தன்னியன், நீ புண்ணியவானென்று உன்னைத் தோத்திரமல்லவா செய்கிறான்.

---

† அபவாரணம்=மறைவு, மூடுதல். ‡ நகம்=மலை. § பிகம்=குயில்.
$ காணேலிமாத:=கலியாணமாகாதவள் மகன்.

சகார.—பாவ ! இவன் எதற்காக இங்கு வந்தான் ?

சந்நியாசி.—இந்தக்காவித் துணியைக்கசக்கும் பொருட்டு.

சகார.—அட ! தீயசமணக ! என்னுடைய மச்சானுன சகோதரி கணவனுல், எல்லாத்தோட்டங்களுக்கும் மேலான இந்தப் புட்பகரண்டகோத்தியாநம் எனக்குக் கொடுக்கப்பட்டது; இங்கே நாய் நரிகள் தண்ணீர் குடிக்கின்றன; மனிதனுக விருக்கிற நான்கூட இதில் தலைமுழுகுகிறதில்லை; அந்தத் தடாகத்தில் நீ உன்னுடைய பழைய † குலித்த, ‡ யூஷ கிறமுற்ற தீய நாற்றக் காவித் துணியைக் கழுவுகிருய்; உன்னை ஒரே அடியாக இப்போது அடிக்கிறேன்.

விடன்.—காணேவிமாத: ! இவன் சமீபகாலத்திற் றுறவியானு னென்று நான் எண்ணுகிறேன்.

சகார.—பாவ ! நீ எப்படி யறிந்தாய் ?

விடன்.—இங்கு அறிய வேண்டியது என்னை ? இதோ பாரு.—

சிகையிழந் துச்சி பொன்னிற மேற்ற சிறந்தசெங்
காவிசே ருடையால்
§ யுகமுறு தோள்கள் வடுப்பட வில்லை யுடைபுயக்
தங்குகின் றில $ கோ
சிகந்தனைக் காவி யூட்டவு மறியான் ¶ சிற்றின
முன்னரே துறவு
புகுந்தன னிவனென் றெண்ணுகின் றனன்யான் பூமியா
ளரசன்மைத் துனனே ! (5)

---

† குலுத்தம், குலித்தம்=கொள்ளு.

‡ யூஷம் அல்லது யூஷ: = பட்டுப்பூச்சிக்கு உணவான மரம். *The Indian mulberry tree.*

§ யுகம்=இரண்டு, யுகளத்தினடு க்குறையாகக்கொள்க.

$ கோசிகம்=ஆடை.

¶ சிற்றினம்=சின்னுள். சில் தினம் எனப்பிரிக்க.

சந்நியாசி.—உபாஸகரே! அவ்விதமே! சமீப காலத்திற்றான் நான் றவஸியாயினேன்.

சகார.—ஏனடா நீ பிறந்தது முதற் றுறவியாகப் போகவில்லை? [என்று அடிக்கிறான்]

சந்நியாசி.—பகவானே! உன்னைப் பணிகிறேன்.

விடன்.—இந்தத் துறவியை ஏன் அடிக்கிறாய்? விடு, விடு, அவன் போகட்டும்.

சகார.—அடே! நில்லு யோசிக்கிறேன்.

விடன்.—யாரோடு?

சகார.—என் மனத்தோடு.

விடன்.—ஐயோ! போகவில்லையே!

சகார—புத்திரக! இருதய! பட்டாரக! மகவே! இந்தச் சமணன் போகலாமா இருக்கலாமா? [தனக்குள்] அவன் போகவும் வேண்டாம், இருக்கவும் வேண்டாம்; இங்கேயே சீக்கிரம் விழுந்து சாகட்டும்.

சந்நியாசி.—புத்தபகவானே! உம்மை நமஸ்கரிக்கிறேன்; உம்மிடம் அடைக்கலம் புகுகின்றேன்.

விடன்.—போகட்டும்.

சகார.—ஒரு ஏற்பாட்டின் பேரில்!

விடன்.—என்ன ஏற்பாடு?

சகார.—சேற்றை வாரித் தண்ணீரிற் போடவேண்டும், அது கலங்கக்கூடாது; அல்லது நீரை எடுத்துச் சேற்றிற் போடவேண்டியது.

விடன்.—அட! என்ன புத்தி ஈனம்!

பொய்த்தொழிற் கன்னேர் பொறையுடை யுடலென்
மொய்த்திடு புலாலான் மூடிய மரமாந்
தத்திடு மூர்க்கர்த் தாங்குத லாலே
இத்தகை பாரம் ஏய்ந்துள தம்மா! (6)

(சந்நியாசி கோ! என்று கதறுகின்றான்)

சகார.—என்ன சொல்லுகிறான்?

விடன்.—உம்மைப் புகழுகிறான்.

சகார.—புகழு, புகழு, மேலும் புகழு! [அப்படியே செய்து துறவி வெளியிற் போய்விடுகிறான்]

விடன்.—காணேலிமாத:! தோட்டத்தின் அழகைப் பாரு.

மதுமிகு கனிகள்கந்த
மலர்களான் மலிந்து மிக்கப்
புதுமணப் பூவின்சும்மை
பொறுக்கிலாக் கொடிகள் சூழும்
முதுபல தருக்கள்வேந்தன்
முறைமையா லளித்தல் பெற்று
வதியுமில் வாழ்வார்ப் போல
மகிதலச் சுகந்துய்க் கின்ற. (7)

சகார.—நண்பர் அழகாகச் சொல்லுகிறார்.

நாறும்பல்பூப் பூத்திடலா னளிகொள்
ஞால மழகுற்றக்
கூறும்பலபூச் சும்மையதாற் கோடார்
துருமம் வளைவுற்ற
ஏறுங்கொடியிற் றொங்குகின்ற யிடிம்புக்
குரங்கு பலாப்பழம்போற்
றேறும்புகழ்நட்டோயெற்குத் தினமுந்
தோன்று நிற்கின்ற. (8)

விடன்.—காணேலிமாத:! இந்தக் கல் மேடையில் இருப்பேம்.

சகார.—இதோ உட்கார்ந்தேன் [என்று விடனோடு உட்காருகிறான்] பாவ ! இந்தச் சமயத்திலும் வசந்தசேனையை நினைத்துக் கொண்டிருக்கிறேன்; கெட்டவன் வார்த்தையைப்போல, என் மனத்தை விட்டு விலகுகிறாளில்லை.

விட.—[தனக்குள்] அவள் அவ்விதம் † திரஸ்காரஞ் செய்தாலும், இவன் அவளையே நினைத்திருக்கிறான். அல்லது.

பெண் ‡ பரி பவமுறும் பேதை யாடவர்
எண்ணுறு மன்மதன் வருத்த ஏங்குவார்
அண்ணல்கொ ளாடவர் தம்மை யம்மதன்
நண்ணுத லிலாதவ னாக வாகினான். (9)

சகார.—பாவ ! வண்டியைக் கொண்டு வாச் சேடனுக்குச் சொல்லி நெடுநேரமாயிற்று; இன்னும் வரவில்லை யென்று நீண்டகாலமாய்ப் பசியடைந்தவனானேன்; மத்தியானமாதலால் நடந்துபோகக்கூடவில்லை; இதோ பாரு, பாரு.

சினங்கொண்ட வானரம்போற்
சேண்டலையிற் சூரியனை
எனமுகத்தாற் பார்த்தலிங்கே
யேலாதே யேலாதே
தனம்பெரிய நூறுமக்கள்
தமையிழந்த காந்தாரி
தனைநிகரப் பூமியது
சாலவெப்பந் தாங்கியதே. (10)

விட.—அஃது அப்படியே!

---

† திரஸ்காரம்=மறுத்தல்.

‡ பரிபவம்=அவமானம் "பறித்தபோதென்னை யந்தப்பரிபவமுதுகிற் பற்ற" இராமாயணம், யுத்தகாண்டம், கும்பகருணப். 17.

உண்டபுற் கக்கி யுறுமா நீழல்
தூங்குகின்றன † தொறு ஏங்கிய மிருகம்
தாகத்தாற் கொதிக்குந் தடநீ ருண்டன
சந்தாபந் தரலாற் ‡ றாரையில் மாந்தர்
நடந்திலர் பூமி நனிவெப் புறலால்
உன்னிய சேடன் நின்பெரு வண்டியை
ஓரிடம் நிறுத்தி யாறுவான் போன்றே. (11)

சகார.—பாவ !

என்றலை யொளித்த திரவியின் பாதந்
தன்றிய பறவை § சகுனி $ சகுந்தம்
மரக்கிளை ஒளிந்தன மனிதர் மாந்தர்கள்
உரமிகு வெப்பம உட்டினம் நீளம்
ஆகிய மூச்சைச் சுவாசத்தை விட்டுக்
கேகத்தில் வீட்டிற் கிரகமில் லத்தில்
இருந்தவ ராகி யெல்லை வெய்யிலை
வருந்தியே போக்கிக் கொள்ளுகின் றனரே. (12)

பாவ ! இன்னும் அந்தச் சேடன் வரவில்லை; பொழுது போக்காக, வேடிக்கையாக ஏதேனும் பாடுகிறேன் [என்று பாடுகிறான்] பாவ ! பாவ ! நான் பாடியதைக்கேட்டீரா ?

விட.—சொல்லுவானேன் ; நீ கந்திருவனன்றோ ?

சகார.—ஏன் நான் கந்திருவனாகமாட்டேன் ?

காயஞ்சுக்குக் கொடிவேலி
கண்டத்திப்பிலி வெண்காயம்
நேயமிகுத்த சீரகந்தா
நீர்வாழ்முத்தக் காசுள்ளி

† தொறு=பசுக்கூட்டம். ‡ தாரை=வழி. § சகுனி=கூகை.

$ சகுந்தம்=நீர்வாழ்பறவை 'நிந்தையில் சகுந்தங்கள் நீளம் நோக்கின' இராமாயணம், அயோத்தியாகாண்டம், சித்திரகூடப்படலம் 41.

ஆயும்பற்பல் மணப்பொருள்க
ளனைத்துமுண்டே வளர்ந்திடுமெற்
கேயுமுடம்பு கட்டழகு
மின்பும்பெறுதா என்றேழு! (13)

பாவ! இன்னும் பாடுவேன் [என்று பாடுகின்றனன்] பாவ! பாவ! நான் பாடினேனே, கேட்டீரோ?

விட.—கேட்பானேன், நீ கந்திருவனல்லவோ?

சகார.—ஏன்காணும் நான் கந்திருவனு கேன்?

† காயம்மிளகுப் பொடிகலந்து
காரெண்ணெய்நெய் தமிழ்ப்பொரித்த
ஆயுங்குயிலா னுண்டவன்யான்
அழகன்குரலின் பனிக்காதோ? (14)

பாவ! இன்னுஞ் சேடன்வரக் காணோமே!

விட.—நீ கவலையற்றிரு, அவனிப்போது வருவான்.

(வண்டியில் வசந்தசேனையோடு சேடன் பிரவேசிக்கிறான்)

சேட.—ஐயோ! அச்சமாக விருக்குதே! சூரியன் உச்சியில் வந்திட்டானே! இராசா மச்சான் சம்ஸ்தானகன் என்னைக் கோவியாமலிருக்க வேண்டுமே! ஆகையாற் சீக்கிரம் ஓட்டுகிறேன்; ஹை, ஹை; மாடுகளே! போங்க.

வசந்த.—ஐயய்யோ! இந்தப்பேச்சுக்குரல் வர்த்தமானனுடைய தல்லவே! என்ன இது? தன்னுடைய வண்டிக் காளைகளைக் களைத்துப்போயின என்று நீக்கி, ஆரிய சாருதத்தர் வேறுவண்டியெருதுகளும் வண்டிக்காரனும் அனுப்

---

† காயம்=வெள்ளுள்ளி யென்றார் சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர் "காயமுங்கரும்பும் பூமலிகொடியும்" சிலப்பதிகாரம் 25 காட்சிக்காதை 45ம் வரி.

பிறாரா என்ன? எனது வலதுகண் துடிக்கிறது! என் மநம நடுங்குகிறது! திசைகளெலலாம பாழாக விருக்கின றது! யாவும என் மநததிறகு விபரீதமாக விருக்கினறன.

சகார.—[வண்டியுருளைச சததமகேட்டு] பாவ! பாவ! வணடிவந் தான.

விட.—எப்படியறிந்தாய்?

சகார.—பாவ! பாரக்கவிலலையா? கிழபபன்றிபோலக் குரகுரச் சததந தெரியுதே!

விட.—[பார்த்து] செவவையாகப் பார்த்தேன்; அதோவருகிறான்.

சகார.—புததிரக! சேட! ஸ்தவரக! வநதையோ?

சேட.—வநதிடடேன்.

சகார.—வணடியும வநததா?

சேட.—வநதிடடது.

சகார.—மாடுகள் வந்ததா?

சேட.—வநத.

சகார.—நீயும வந்தாயா?

சேட.—[சிரிததுக்கொணடு] எசமாங்களே! வநதிட்டேன்.

சகார.—வணடியை உள்ளே கொண்டுவா.

சேட.—எநத வளியாலே?

சகார.—மதிள்மேலாலே.

சேட.—மாடுகள் சாவும், வணடியுமஉடையும், நானுமஇறபபேன்!

சகார.—அட! நான அரசன மைத்துனன; மாடுகள் செததால் வேறு மாடுகள் வாங்குவேன; நீ செத்தால வேறொரு வண்டியோட்டி வருவான;

சேட.—இதெல்லாம் ரொம்பச்சரி; நான் செத்தாற் றங்களுக் காகவேண்டுவதென்ன ?

சகார.—எல்லாந் தொலையட்டும்; மதிள் மேலாகத்தான் வண்டி யை உள்ளே கொண்டுவரவேணும்.

சேட.—வண்டியே! தொலைந்து போ! உன்னுடைய எசமா னோடு தொலைந்து போ! வேறு வண்டி வரட்டும்; எசமா னிடத்திற் போய்ச் சொல்லி டுறேன் [பிரவேசித்து] ஐயோ! உடையலையே! சுவாமீ! இதோ வண்டி வந்தி ட்டது.

சகார.—மாடுகளறுந்துபோகவில்லையா? கயிறுகள் செத்துப்போ கவில்லையா? நீயும் உடைந்துபோகவில்லையா?

சேட.—இல்லையே!

சகார.—பாவ! வாரும்; வண்டியைப்பார்ப்போம்; பாவ! நீரே எனக்குப் பரமகுரு; பாரும். ஆதரவோடு, உள்ளே முன்பு உட்கார்ந்து நீர் ஏறும் முதலில் வண்டியில்;

விட.—அப்படியே ஆகட்டும் [என்று ஏறுகின்றனன்]

சகார.—இல்லை நில்லும்; ஏறப்போநீர் முதலில்; உங்கள் அப் பன் வீட்டு வண்டியா? எஜமான் வண்டிக்கு நான்; வண் டியில் ஏறுவேன் முதலில் நான்;

விட.—நீர் தானே அவ்விதஞ் சொன்னீர்!

சகார.—அப்படிச் சொன்னாலும் நான், ஏறவேண்டுந் தாங்கள் முதலில், என்று சொல்லவேண்டுவது கடமை நீருடையது அல்லவா?

விட.—நீர் ஏறவேண்டும்.

சகார.—ஏறுவேன் இதோ நான்; ஸ்தாவரக! சேட! குழந்தாய்! திருப்புவண்டியை.

சேட.—[வண்டியைத்திருப்பி] ஏறலாம் எசமாங்க.

சகார.—[எதிப்பார்த்து பயந்து உடனே இறங்கி விடனுடைய கழுத்தைக்கட்டிக்கொண்டு] பாவ! பாவ! செத்தாய், இறந்தாய், மாண்டாய்! வண்டியில் ஒரு இராட்சசியோ, திருடனே இருக்கிறது; இராட்சசியானல் நம்மைத்திருடிவிட்டாள்; திருடனுக விருந்தால் நம்மிருவரையும் உண்ணுவான்;

விட.—பயப்பட வேண்டாம்; வண்டியில் இராட்சசப் பெண்ணின் சஞ்சாரமேது? பட்டப்பகலிற் சூரிய காந்தியால் மழுங்கிய கண்களையுடைய நீர், சட்டை பூண்ட கஞ்சுகன் சாயையைக்கண்டு, கலங்கினீர் போலும்.

சகார.—சேட! ஸ்தாவரக! குழந்தாய்! உயிரோடு இருக்கிருயா?

சேட.—இருக்குறேன்.

சகார.—பாவ! ஏறிக்கொண்டிருக்கிருள் வண்டியில் ஒரு பெண் பிள்ளை.

விட.—பெண்பிள்ளையா?

† மாதரை நோக்குறில் மலர்க்கண் கூசுமால்
மேதையர் பழக்கமே மேவினேன் மழை
வேதையாற் கண்முகிழ் வீதிக் ‡ கோவெனக்
கோதறு சென்னியைக் குனித்துச் செல்லுவேன்.

வசந்த.—[ஆச்சரியத்தோடு தனக்குள்] என்ன? என்கண்களுக்குத் துன்பம் விளைவிக்கிற அரசன்மைத்துனனே? ஆகையாற் பாக்கியமழிந்த உயிர்மேல் ஆசை யற்றவளாயினேன்; துர்ப்பாக்கியமுற்ற யான் இங்கு வந்திருத்தல், களர்நிலத்தில்விதைத்த விதை பிரயோசனப்படாதது போலாயிற்று; இப்போது யான் யாது செய்வேன்!!

---

† மாதர் = அன்னியப் பெண்மகளிரைச் சுட்டிற்று.

‡ கோ = பசு.

**சகார.**—பாவ! இந்தக் கிழட்டுச் சேடன் பயந்து கொண்டு பார்க்க மாட்டேன் என்கிறான் வண்டியை; பாவ! பாரும் நீர் வண்டியை.

**விட.**—குற்றமென்ன? நல்லது அப்படியே யாகட்டும்.

**சகார.**—நரிகள் பறக்குது; காக்கைகள் ஓடுது; பாவரைக்கண்களால் சாப்பிட்டுப், பல்லுகளாற் பார்க்கப்படுகிறதற்கு முந்தி ஓடிப்போறேன்.

**விட.**—[வசந்தசேனையைக் கண்டு துக்கத்தோடு தனக்குள்] அட! மான் புலியைப் பின்தொடருகிறதே! ஐயோ! கஷ்டம!

† சரமதி நிகர்நிறந் தாங்கி வெள்ளொளி
விரவு ‡ வா லுகக்குவை மீதிற் றூங்குறும்
அரசமா வனத்தைவிட் § டாங்குப் பேடைசால்
விரைவொடு காக்கையின் மேவ லுற்றதால். (16)

[இரகசியமாய்] வசந்தசேனையே! இது நன்கல்ல! உன்னுடைய குணத்திற்கு ஒத்ததன்று!

ஆதியின் மானத்தானி யவமதித்தனை யென்றாலுந்
தாதுசேர் பணைப்பெட்பாலுன் றாய்வச மாணைப்போலும். (16½)

**வசந்த.**—இல்லை, இல்லையென்று தலையை யசைக்கின்றனள்.

**விட.**—

மேதக வில்லாவேசைத் தன்மையா லிந்த ¶ வீதம்
போதர லுற்றாயென்று புரிகுழால்! எண்ணுகின்றேன். (17)

யான் முன்னமே யுனக்குச் சொல்லியுள்ளேன் அன்றோ? ஆசையுற்றவன், ஆசையற்றவன் என்று இருவரையும், நீ சமமாகப் பார்க்கவேண்டியவளென்று உனக்கு முன்பே சொல்லியிருக்கிறேன்.

---

† சரமதி = மாரிக்காலச்சந்திரன். சரம், மாரிக்காலத்தைச் சுட்டிற்று.

‡ வாலுகக்குவை = வெண்மணற்குன்று. § ஆங்கு = அசை.

¶ வீதம் = விதம், நீட்டல் விகாரம்.

வசந்த.—வண்டி தடுமாற்றத்தால் வந்துவிட்டேன்; உம்மிடஞ் சரணுகதை யாயினேன்.

விட.—அஞ்சாதை; பயம்வேண்டாம்! இருக்கட்டும்; இவனை வஞ்சிக்கிறேன். [சகாரன் அண்டையிலேகி] கலியாணமாகாதவள் மகனே! அங்கு இராட்சசியே இருக்கின்றனள்; இது உண்மை;

சகார.—பாவ! பாவ! அங்கு இராக்கதப் பெண்ணிருந்தால் உம்மையேன் திருடவில்லை? திருடனுல் உம்மையேன் தின்னவில்லை?

விட.—அதைப்பார்ப்பதால் நமக்காவ தென்ன? தோட்டத்தின் வழியே காலநடையாகப் போய், உச்சயினிபட்டணத்தை யடைவோம்; அதனுற்குற்ற மென்ன?

சகார.—அப்படிச்செய்வதால் உண்டாவ தென்ன?

விட.—அதனுற்றேகபலமடையும்; மாடுகட்குத் தொந்தரை யில்லை.

சகார.—அப்படியே யாகட்டும்; ஸ்தாவாகா! சேடா! கொண்டு போ வண்டியை; நில்லு, அல்ல நில்லு. நடந்தேபோகிறேன் தேவதைகளுக்கும் பிராமணர்களுக்கும் முன்பாக, அல்ல அல்ல; ஏறிக்கொண்டுபோகிறேன் வண்டியில்; என்னைப் பார்த்தெல்லோரும் அரசன் மைத்துனன் பட்டாரகன் போகிறுன் அதோ என்று சொல்லுவார்களல்லவா!

விட.—[தனக்குள்] விஷத்தை அமிருதமாக்குதல் மிக அரிது; நல்லது இவ்விதஞ் சொல்லுவேன் [வெளிப்படையாக] கலியாணமாகாதவள் மகனே! அந்த வசந்தசேனை உன்னையடைய வந்திருக்கின்றனள்.

வசந்த.—சாந்தம் பாவம்! சாந்தம் பாவம்!

சகார.—[ஆநந்தத்தோடு] பாவே! பாவே! மேலான மனிசன் நான், வாசுதேவனுன என்னையா?

விட.—ஆம அபபடியே !

சகார.—அப்படியானால் வந்துவிட்டது எனக்கு அபூர்வமான அதிருஷ்டம்; கோவமூட்டப்பட்டாள் என்னால் அந்தக் காலத்தில்; இப்போது அவள் கால்களில் அவளைத்திருப்தி செய்கிறேன்.

விட.—நன்றாய்ச் சொன்னான்.

சகார.—இதோ விழுகிறேன் அவள் பாதங்களில் [என்று வசந்த சேனையிடஞ்சென்று] தாயே! அம்பிகையே! கேளு என் விண்ணப்பத்தை.

ஆன்றநற் கண்ணியுன் னடிகளில் வீழ்வேன்
தோன்று மோர்பத்துச் சுடாகக முடையோய்!
வெள்ளிய பற்கள் விளங்குநல வாயோய்!
உண்மையி லுன்னைக் குமபிடு கின்றேன்
மன்மத பீடையால் வருத்தினே னுன்னை
என்மீ திரக்கம் வைத்தவை பொறுபபாய்!
ஓ † வர காத்திரி! யுன்றன் பணிவிடை
தீவிர மாகச் செய்பவ னானே. (18)

வசந்த.—[கோவத்தோடு] கெட்டவார்த்தைகள் பிதற்றுகின்றனை! [என்று காலாலுதைக்கின்றனள்]

சகார.—[கோவமுற்று]

எத்தலை யம்பிகை தாயிவர் தம்மால்
முத்த மடைந்தது முன்சுரர் வணங்கா
தெத்தலை யத்தலை யிருங்கட நரிகள்
‡ சத்தகல் சவத்தைத் தாளி னுந்தல்போல்
இத்திந மிவள்கா லுதைத்தலை யுடைத்தே. (19)

---

† வரகாத்திரி = மேலானசரீரமுற்றவள்.

‡ சத்து = உண்மை, சிவனுக்கொரு பெயர்.

அட! ஸ்தாவரக! சேட! இவளை எங்கடா தேடிப் பிடித்தாய்?

சேட.—பட்டக! இராசவீதி காட்டுவண்டிகளாற் றடைபட்டிருந்தது; அப்பொழுது சாருதத்தருடைய தோட்டத்தில் வண்டியை நிறுத்திவிட்டு, அங்கு இறங்கி வண்டியுருளையைப் புரட்டிக்கொண்டிருந்தேன்; அதற்குள் வண்டியிலிவள் தட்டுக்கெட்டு ஏறிவிட்டாள் என்று எண்ணுகிறேன்.

சகார.—என்ன வஸந்தசேனையா வந்துவிட்டாள்? என்னை அபிசரிக்க அல்லவா? இறங்கு இறங்கு; இறங்கு என் வண்டியை விட்டு; நீ அந்தத் தரித்திர சார்த்தவாகன் மகனை அபிசரிக்கிறாய்; உன்னை என் மாடுகள் சுமக்கிறது; இறங்கடீ! இறங்கு, கருப்பதாசி! இறங்கு இறங்கு.

வசந்த.—"ஆரிய சாருதத்தரை அபிசரிக்கிறாய்" என்றுரைத்தது சத்தியமே; அந்த வசனத்தாலலங்கரிக்கப்பட்டவளானேன்; இப்பொழுது எது சம்பவிக்குமோ அது சம்பவிக்கட்டும்.

சகார.—

ஈரஞ்சு நகமெனு மிருங்கருங் குவளை
மண்டலக் கைகள் வளரொரு நூறு
அடிகளடிப்பதில் வருந்திறம் வாய்ந்தன
ஆகையால வாலியி னன்புள மனைவி
தலைநிறை மயிரைச் சடாயு பற்றியே
இழுத்ததை யொப்பவுன் னோர்மிகு முடம்பை
சகட்டிலினின் றீர்த்துச் சணமிழுப் பேனே. (20)

விட.—

பொழிற்றலைக் கொடித்தளிர் புகுந்து கிள்ளுதல்
† விழுமமன் றுலகுளோர் மெச்சு நற்குணை

† விழுமம்=நன்மை, சீர்மை 'வினையன் றாயன் விழுமியன் வென்றியன்' இராமாயணம், அயோத்தியாகாண்டம், மந்தரைசூழ்ச்சிப் படலம், செய்யுள் 18.

அழகுறு வனிதைகா ளகம் பறியே
பழுதற ஏாக்கைபா ரதனிற பணபல. (21)

ஆனைகட்டி ... ழூம்; நான் அவளை இறக்கி விடுகி றேன்; வசந்தசேனை ... [வசந்தசேனை இறங்கி யோர தனியிடத்திலிருக்கின்றனர்]

சகார.—ஏனென்றால் என் சொல்லை யிவள் மதிக்காமையால, அப்போது கிளம்பிய எனது கோப நெருப்பானது, இவள் காலுதைத்தால் கொளுந்து விட்டு இப்போது எரியுது; ஆகையால் இப்போது இவனுக்கு இப்படிச் சொல்லுகி றேன் [வெளிப்படையாய்] பாவ பாவ!

புகுமொரு நாயநாளும்
பொருந்தில் லகலந்தன்னுண்
மகிமைசேர் ஞாத்தியம்
வகைப்பெற வேண்டுமாயின்
தொகுமிரு புலனை யுண்டு
சுருசுரு சுகக்குருவென்
றகமகிழ் தாங்கத்தக்கோரா
யிருக்கவே வேண்டுமாயின்.— (22)

விட.—அதனாலென்ன?

சகார.—செய்; எனக்குப் பிரியமானதை.

விட.—அகாரியத்தைத் தவிர வேறு எதைச் சொன்னாலுஞ் செய்வேன்.

சகார.—பாவ! அகாரிய மென்கிற நாற்றமேயில்லை; ராட்சசி யே இல்லை.

விட.—ஆனாற் சொல்லு.

சகார.—வசந்த சேனையைக் கொல்லு.

விட.—[இரண்டு காதுகளையும் பொத்திக்கொண்டு]

பாலைப்பெண் ணகர்க்கணியம் பரத்தை யேனும்
பரத்தையர்க்கு மாறான பண்புற்றா ளாய்ச்
சாலவுப சாரஞ்செய் தன்மை மேவிச்
சழக்கற்ற நாரியிவட் கொன்றே னாயின்
மாலுற்ற வெத்தெப்பந் தனிலே யேறி
மறுமையெனும் பரலோகத் தினுக்கே செல்லுஞ்
சேலுற்ற மாநதியார் நீரைத் தாண்டுஞ்
செயலுடையே னருகவல்யான் செப்பா யந்தோ!

சகார.—நான் தருகிறேன் தெப்பம் உனக்கு; மேலும் மனிதர் சஞ்சாரமற்ற தோட்டத்தில் இவளைக் கொல்லுவா யா னால் யார் பார்க்கப்போகிறார்கள் உன்னை?

விட.—

என்னையுற்று நோக்குமவர் பத்துத்திக்கோ
டிருவனதே வதைகளிரா விளக்குந்திங்கள்
தன்னிகரில் கிரணமுற்ற சண்டன் றூய
தருமமெங்குங் கலந்துநிற்குந் தனியாகாயம்
உன்னுகின்ற பொருளெனுமம் மநமாஞ்சான்றிவ்
வுலகத்தோ ரெஞ்ஞான்றும் புரியாநின்ற
பன்னுபல புண்ணியபா வங்கட்கென்றும்
பரமார்த்த சாட்சியெனப் பகரும்பூமி. (24)

சகார.—துணியைப் போட்டு மூடிக்கொல்லேன்.

விட.—மூட! எறிந்து விட்டபயலே!

சகார.—இந்தக் கிழப்பன்றிப் பயல் பாவத்திற்குப் பயப்படுகிறா னே! இருக்கட்டும்; ஸ்தாவரகச் சேடனை நல்லவார்த் தை சொல்லிப் பார்ப்போம்; குழந்தாய்! ஸ்தாவரக! சேட! தங்கக் கடகங்கள் தருகிறேனடா;

சேட.—நானும் நல்லாய்ப் போட்டுக்கிடுறேன்.

சகார.—நீயிருக்கத் தங்கப் பலகை செய்து தருவேன்.

சேட.—ஆவட்டும்; நல்லா அதில் உட்காந்திடுவேன்.

சகார.—என் எச்சில் எல்லாம் உனக்குக் கொடுக்கிறேன்.

சேட.—நான் நல்லா உண்டிடுவேன்.

சகார.—சேடர்களுக் கெல்லாம் உன்னை எசமானுக்குறேன்.

சேட.—பட்டக! நான் அப்படியே யாகுறேன்.

சகார.—நான் ஒரு பேச்சுச் சொல்லுறேன். மறுத்திடாதே?

சேட.—கெட்டவேலை தவிர மற்றெல்லாஞ் செய்வேன்; பட்டக!

சகார.—கெட்டவேலை நாற்றமே யில்லை.

சேட.—பட்டக! சொல்லுங்க.

சகார.—இந்த வசந்தசேனையைக் கொல்லு.

சேட.—தயை செய்யவேணும் எசமானே! அநாரியனான என்னால் இந்த அம்மாள் வண்டி தடுமாற்றத்தாற் கொண்டு வரப்பட்டாள்.

சகார.—அட! சேட! என் அதிகாரம் உன்னிடத்திற்கூடச் செல்லாதா என்ன?

சேட.—தாங்க என்ரேவத்துக்கு எசமான்றான்; என் நடத்தைக்கல்ல; ஆகையால் எசமான் தயை செய்யவேண்டும்; தயை செய்யவேண்டும்; எனக்குப் பயமாக யிருக்குது.

சகார.—என் சேடன் நீ; யாரிடத்திற்பயம் உனக்கு.

சேட.—எசமானே! பரலோகத்தினிடத்தில்!

சகார.—யாரடா அவன் பரலோக மென்பவன்?

சேட.—பட்டக! பாவ புண்ணியங்களின் முடிவே.

சகார.—புண்ணியத்தின் முடிவென்ன?

சேட.—எசமாங்க தங்கத்தால அலங்கரிக்கப்பட்டிருக்கின்றீங்களே, இதுதான் புண்ணியத்தின் முடிவு.

சகார.—பாவத்தின் முடிவென்ன.

சேட.—என்னைப்போல அயலாருடைய அன்னத்தை உண்டுக்கிட்டிருப்பதே; ஆகையால கெட்டகாரியத்தற்றுணியேன.

சகார.—அடே! நீசாகமாட்டாயா? [என்று பலவிதமாக அடிக்கின்றனன்]

சேட.—எசமான கொல்லுங்க; கெட்டகாரியஞ் செய்யேன்.

தீவினை வசத்தினாற் சென்பத் தொண்டனாய்ப்
பூவினிற் பிறந்தமன்ன புன்மைத் தொண்டினை
மேவுமா றின்னுநான் விலைக்குவாங் கொணா
ஞமெவன்றோ? பழித்தொழி லொற்றுமேவ னேனே. (25)

வசந்த.—பாவ! பாவ! சரணம சரணம.

விட.—கருணைவிமாத:! பொறுபொறு; ஸ்தாவரக! நன்று நன்று.

அவமதிக்கு நிலையுள்ளான நீசனீனன
அடித்தொண்டு புரிபவனே யெனினுமேலாம
† பவனமெனும பரலோகப் பேறடைய நயக்கும
பண்புடையா னியனவனே தலைமை யுற்றான
தவக்தருமவ் வுலகத்தை விரும்பவிலலை
‡ தழலதருமா பாவத்தை வளர்த்துச் சாற்றும்
உவமையறும அறந்துறந்த சகாரன போல
ஓதுகின்ற நாசமுறா உலகோ ரெனமேன! (26)

மேலும்,

இவன்றலைவ னவன்றொழும்ப னெனினுஞ் சொல்லு
மியன்செல்வ மவனுக்கில் லிதுதா னன்றன்

---

† பவனம்=வீடு. ‡ தழல்=நெருப்பு, நரகத்திற்காகுபெயர்.

உவத்திருவோ சேடனுக்கின் றடிமைச் சேட!
தலைவனிடு கட்டளைநீ கேட்பா யலலை
புவனமெலாங் கொள்ளைகொளும புலாதிர் காலன்
† புல்லிடுக்குக் கண்டவிடம் புகுவா னுசி
பவனியு ளோர் தமையென்றுங் கருணை யின்றி
‡ அலகோட்டுந் தீவினைக்கு ளழுத்தாநின்றான். (27)

சகார.—[தனக்குள்] இந்தக் கிழட்டு நரி [விடன்] பாவத்திற்குப் பயப்படுகிறான்; இந்தக் § கருப்பதாசன் [சேடன்] பரலோகப் பயங்கொண்டாடுகிறான்; நானோ அரசன் மச்சான்; வரபுருஷன்; மனிசன்; யாருக்குப்பயம் எனக்கு [வெளிப்படையாக] அடே கருப்பதாச! சேட! போநீ; வீட்டிலே போய்ச் சுகமாகத் தனிச்சு இரு.

சேட.—எசமானுத்தரவுப்படி [வசந்தசேனை யருகிற்சென்று] ஆரியே! என்னாற் செய்யத்தக்கது இவ்வளவுதான். [என்று போயினன்]

சகார.—[துணியைத் தூக்கிக் கட்டிக்கொண்டு] நில்லு! வசந்தசேனை! நில்லு; கொல்லுகிறேன்.

விட.—ஆ! ஆ! என்முன்னர் கொல்லப்போகின்றனையா என்ன? [என்று கழுத்தைப்பிடிக்கிறான்]

சகார—[பூமியில் வீழ்கின்றனன்] பாவர் எசமானனை யடிக்கிறார் [என்று பாசாங்கு பண்ணுகிறான், கொஞ்சம் மூர்ச்சை தெளிந்தவன்போல்]

---

† புல்லிடுக்கு=சிறுதுளை, இடுக்கு, திசைச்சொல் "ரந்த்ராநுஸாரி" என்று முதல்நூலார் மொழிந்ததற்கு இயைய இடுக்குக்கண்டவிடம்புகுவான், என்றும்.

‡ அலகோட்டும்=எண்ணற்ற. (அலகு=எண்) "அலகோட்டு பெருங் கருணைத்தந்தையைச் சூழ்ந்தேற்றது மொன்றமையாதென்றே" திருநாகைக் காரோணபுராணம், கடவுள் வாழ்த்து 2.

§ கருப்பதாசன்=பிறவிதொட்டு அடிமையானவன்.

என்றன் மாங்கிஷம் நெய்யொடெலும்பிவை
தின்று நன்று கொழுத்தனை சிறியோய்!
ஒன்று காரிய முற்றுழி ஓ! மநங்
கன்றி யென்பகை யாயினை காண்டியால். (28)

[யோசித்து] இருக்கட்டும், ஒருதந்திரம் பண்ணுகிறேன்; இந்தக்கிழநரி தலையை யாட்டிச் சாடை செய்கிறான்; இவனைப்போகவிட்டு வசந்தசேனையைக் கொல்லுகிறேன்; இப்படியிருக்கட்டும்; [வெளிப்படையாக] பாவ! நான் உமக்குச் சொல்லினேனே; பெரிய விளக்குத்தண்டுக்கு நிகரான குலத்திற் பிறந்த நான், இந்தக் கெட்ட தொழில் செய்வேனு என்ன? இவளை இந்த மாதிரி உடன்படுத்திக் கொள்ளவல்லவோ இவ்விதஞ் சொன்னேன்காணும்.

விட.— குலத்தைக்கூறிற் பயனென்னை?
கோளில்சிலங் காரணநன்
னிலத்தின்முள்ளிச் செடிமிகவு
நீண்டுகிளைத்த வியல்பாமே. (29)

சகார.—இவள் உமக்கு முன்பு வெட்கப்படுகிறாள்; அதனால் அங்கீகரிக்கமாட்டே னென்கிறாள் என்னை; ஆதலாற் போம்; ஸ்தாவரக சேடன் என்றால் அடிபட்டுப் போயிட்டான்; அவன் எங்காயினும் ஓடிப்போவன்; பாவ! அவனைப் பிடித்துவாரும்.

விடன்.—[தனக்குள்]
என்முன்னர் வசந்தசேனை
யியக்கத்தா லிணையின் மூர்க்கன்
றன்னொடுங் கூடாளிங்குத்
தனிதத் . லிவளை விட்டே
யென்னிடத் தேகாநிற்பே
னேகயாய்த் தனித்த காலை
யுன்னரு நாணநீத்த
லுறுகாமக் குண்டா மன்றோ! (30)

[வெளிப்படையாக] இப்படியே யிருக்கட்டும், நான் போகிறேன்.

வசந்த.—[உத்தரீய நுனியைப் பிடித்து] உம்மைச் சரண்புகுந்ததாகமுன்னரே சொற்றேனே!

விட.—வசந்தசேனையே! பயம் வேண்டாம், பயம் வேண்டாம். காணேலிமாத:! வசந்தசேனையை உன்னிடம் அடைக்கலம் வைக்கிறேன்.

சகார.—ஆமாம்; என்னிடத்தில் அடைக்கலமாக இருக்கட்டுமிவள்.

விட.—சத்தியமா?

சகார—சத்தியம.

விட.—[சிறிதுதூரஞ்சென்று] அல்ல; நான் போன பிற்பாடு இந்தக் † கயவாளிப்பயல் இவளைக்கொல்லுவான்; ஆகையால் யான் மறைவிலிருந்து இவளை யாது செய்கிறான் என்று பார்க்கிறேன். [என்று மறைந்திருந்தனன்]

சகார.—இருக்கட்டும், கொல்லுகிறேன்; அல்லது மிகக்கபடனான அந்தப்பார்ப்பாரக் கிழநரி, ஒருவேளை மறைந்து நரி வஞ்சனை செய்வான்; ஆகையால அவனையேய்க்கிறதற்கு இப்படிப்பண்ணுகிறேன். [பூக்களைப் பறித்துத்தன்னை யலங்கரித்துக்கொண்டு] வாசு வாசு! வசந்தசேனையே! வா!

விட.—அடே காமியாயினன்; அப்பா!! கவலை நீங்கிற்று [என்று சென்றனன்]

சகார.—

பொன்மிகத் தருவே னின்சொலுஞ் சொலுவேன்
புகலுமுண் டாசணி தலையால்
உன்னடி தொழுவே னுமிகு மழகால்
ஒளியினல் மேம்படு பல்லோய்!

---

† கயவாளி=கீழ்மகன், திசைச்சொல்.

எளினுநீ யென்பா லன்பிலா யாளு
யிருமபுவி யாடவர் வணங்கல்
நவரிதவ வரிதி லரிதலோ விஃதை
நாரியே ! யோர்கிலை மாதோ. (31)

வசந்த.—அதிற்சந்தேக மென்ன ? [தலைகுனிந்தவளாகிப் பின்வரு கிற இரண்டு கவிகளையுங் கூறுகின்றனள்]

பழிப்புற்ற குணமுடையாய் ! சயமை யுற்றாய்
பல்லோருஞ் சீசியென் றிகழ்ந்தற் கொத்த
சழக்குநிறை யுளமுடையாய் † தாலத் தென்னைத்
தனவாசைக் குட்படுத்தத் தலைப்பட் டாயே
பழக்குற்ற நற்சரிதப வனப்புப் பூத்துப்
பரிசுத்த வுடலமுற்ற பதுமந் தன்னை
முழக்குற்ற கீதத்தா லிசையே பாடு
மொய்பிரச மெக்காலுந் தணவா தன்றோ ? (32)

ஆடவன வறிஞனே யெனினு மந்தமும்
நீடுமார் குணமுளா னென்னிற் பேணுவார்
‡ சேடுள கணிகையர்க் கழகு செவ்வியுங்
கூடுறு மியையுளோர் தம்மைக் கூடலே. (33)

மேலுங்கட்டு மாமரத்தைக் கட்டித்தழுவினவர்கள் முரு ங்கை மரத்தைத் தழுவுவார்களா ? நான் சம்மதிப்பேனல் லேன்.

சகார.—வேசிமகளே ! தரித்திர சாருதத்தனைக் கட்டுமாமரமா கவும், என்னை முருங்கைமரமாகவும, பண்ணினாய் ; என் னைக் கவியாணமுருங்கை மரமாகவாகிலும் பண்ணவில்லை; என்னை அலட்சியஞ் செய்து இந்தமாதிரி பேசினாய் ; நீ இப்பொழுது சாருதத்தனை நினைத்துக்கொள்ளு.

† தாலம்=பூமி.
‡ சேடு=இளமை. “சேட்டினஞ் செழுங்கயல் காப்பச்செய்தவிற்” சீவகசிந்தாமணி, பதுமையாரிலம்பகம், செய்யுள் 58.

வசந்த.—மாத்திலேயே எப்போதும் வசிக்கிறார்; அவரை நினையாதிருத்த லெங்ஙனங்கூடுமே?

சகார.—உன்னையும் உன்மாத்தி லிருப்பவனையுஞ் சேர்த்து இப்பொழுது அடிக்கிறேன்; அந்தத் தரித்திர சார்த்தவாகன் மகனிடத்திற் காமங்கொண்டவளே! நில்லு.

வசந்த.—சொல்லு, சொல்லு, மறுபடியுஞ்சொல்லு; அவ்வெழுத்துக்கள் புகழத்தக்கவைகள்.

சகார.—அந்தத் தேவடியாள் மகன்றரித்திர சாருதத்தன் உன்னை வந்து காக்கட்டுமே.

வசந்த.—என்னையவர் பார்ப்பாராயிற் காப்பார்.

சகார.—

சக்கிரனு வல வாலி பிள்ளையா?
நக்கும கேந்திர னுவரம் பையின்
கருவுறு மகனெனுங் கால நேமியா?
சக்குசு பந்துவா? சார்வ பௌமனும்
உருத்திர தேவனு? உயர் துரோணனுர்
பெருமகன் சடாயுவா? துந்து மாரனு?
அருஞ்சா ணக்யனு? அலதிரிசங்கே? (34)

இவர்களாலும் உன்னைக் காப்பாற்ற முடியாதடி.

பாரத யுகத்திற் சாணக் கியன்பகர் சீதைமாதை
நேருற வடித்தாற் போலு நீள்துரோ பதையைமூக்கின்
கூரினுற் சடாயு பற்றிக் கொன்றது போலுமுன்னைக்
கார்நிறக் கூந்தல பற்றிக் கொல்லுவென்காண்டிகாண்டி. (35)

வசந்த.—ஆ! தாயே! எங்கிருக்கின்றனை? ஆ! ஆரியசாருதத்த! மனோரதம் பூர்த்தியாகாமலே யான் ஆபத்தை யடையாநின்றேன்; ஆகையால் இரைந்து கதறுகிறேன்; அல்லது "வசந்தசேனை பெருங்குரலில் அழுகிறாள்" என்றல்

வெட்கத்திற் கிடமன்றோ ! ஆரிய சாருதத்தர் பொருட்டு நமஸ்கரிக்கிறேன் ;

சகார.—ஆ! இன்னும் அந்தப்பாவிபெயரையே இந்த வேசிமகள் பேசுகிறாள். [என்று அவள் கழுத்தைப்பிடித்து நெரிக்கிறான்] நினை, வேசிமகளே ! நினையடி !

வசந்த.—ஆரிய சாருதத்தனை நமஸ்கரிக்கின்றேன்.

சகார.—கருப்பதாசியே ! சாகு சாகு [என்று அவள் கழுத்தை நெரித்துக் கொல்லுவதாய்ப் பாசாங்கு செய்கிறான் ; வசந்தசேனை மூர்ச்சையுற்று அசைவற்றுப்பூமியில் விழுகிறாள்]

சகார.—

எல்லையில் தோஷம் புல்லிய பேழை
சன்மார்க்க மறியாத் துன்மார்க்க வீடு
தாழ்மையைச் சார்ந்தவள் சாரு தத்தனைக்
கூடுதற் காசை கொண்டவள் கால
வசந்தா லென்பால் வந்த விவளை
யென்புய வீரதை யென்னென் றுரைப்பேன்
மூச்சொன் றின்றி முற்றுமி றந்தனள்
சிறந்த பாரதத்திற் சீதை சாநகி
இறந்தது போலிவ ளிறந்தன ளின்றே. (36)

நான்மய லுற்று மிவண்மய லுற்றிலள்
என்பெருஞ்சி னத்தாற் கொன்றன னிவளைப்
பாழ்த்த தண்டலையிற் பரூஉக்கயி றதனால்
† அருட்டியே யின்று வெருட்டின னிவளை
என்னருஞ் சோதர னென்னுடை யப்பன்
துரோபதைத் தையல் போன்ற என்னுயி
என்பணி யதனால் வஞ்சிக்கப் பட்டனர்
இக்கணம் யான்செய் புத்திர சூரத்
தன்மையை யவர்கள் தாம்பார்த் திலரே ! (37)

† அருட்டி = சாக்கிரதையாகவிருந்து.

நல்லது அந்தக் கிழநரியொத்தவன் வந்திடுவான்; ஆகை யால் கொஞ்சம் ஒதுங்கியிருக்கிறேன் [என்று அப்படிச் செய்கிறான்]

விட.—ஸ்தாவரக சேடனை நான் நல்ல வார்த்தை சொல்லி யழைத்து வந்தேன்; இப்போது அந்தக் கலியாணமா காதவள் மகனைப் பார்க்கிறேன். [கொஞ்சதூரம் போய்ப்பா ர்த்து] அட! வழியில் ஒரு மரம் விழுந்து கிடக்கின்றது; இதனாலே ஒரு பெண் கொலையானாள் போலும்; ஓ! பாவிமரமே! உன்னாலே இந்தக் கெட்டகாரியஞ் செய் யப்பட்டதே, என்னை? பாவியாகிய நீ விழுந்து கிடந்த லாற் பெண் கொலையைப்பார்த்து நாங்கள் மிகவும் தாழ் ந்தவர்களாயினோம்; இஃதொரு அவசகுனம்; நிச்சயமாக வசந்த சேனையின் பொருட்டு என்மனஞ் சங்கை யுறுகி ன்றது; எவ்விதத்திலுந் தேவதைகள் நன்மையையே செய்வார்கள். [சகாரனருகிற் சென்று] கலியாணமாகாதவ ள்மகனே! இதோ ஸ்தாவரக சேடனை நல்லவார்த்தை சொல்லியழைத்து வந்தேன்.

சகார.—பாவ! உமது வருகை நல்வரவாகுக; குழந்தாய்! சேட! ஸ்தாவரக! உன் வருகையும் அப்படியே.

விட.—எனது அடைக்கலத்தைத் திரும்பக்கொடு.

சகார.—என்ன அடைக்கலம்?

விட.—வசந்தசேனை.

சகார.—போய்விட்டாள்.

விட.—எங்கே?

சகார.—உமது பின்னால்.

விட.—[யோசித்து] அவளந்தத் திக்கிற்போகவில்லையே.

சகார.—நீர் எந்தத்திக்கின் வழியாகப்போனீரும்?

விட.—கிழக்குத்திக்கின்,—

சகார.—அவள் தெற்கே போனாள்.

விட.—நான் மேற்கிற் போனேன்

சகார.—அவள் வடக்கிற் போனாள்.

விட.—மிகத்தடுமாறிப் பேசுகிறாய்; என் மனம் பதைக்கிறது; நிஜத்தைச் சொல்லு.

சகார.—என் இரண்டு கால்களையும் உமது தலையில் வைத்துச்சொல்லுகிறேன்; உமது மனதைத் திடப்படுத்திக்கொள்ளும்; அவளைக் கொன்றுபோட்டேன்.

விட.—[எண்ணிறந்த துயரத்துடன்] நிச்சயமாய் நீ கொன்றனையா?

சகார.—என் சொல்லை நீர் நம்பாவிட்டால், இராசன் மைத்துனன் ஸம்ஸ்தானகனுடைய சூரத்தனத்தைப்பாரும் முதலில் [என்று காட்டுகிறான்]

விட.—ஆ! தௌர்ப்பாக்கியனான யான் அதனுஞ் செய்யப்பட்டவனாயினேன். [என்று மூர்ச்சித்து விழுகிறான்]

சகார.—ஈ யியியி! பாவர் இறந்தார்.

சேட.—பாவரே! ஆறுதலையடையுங்க; ஆறுதலை யடையுங்க; நான் விசாரியாமல் வண்டியைக் கொண்டாந்தபடியால், முதலில் இவளை நான் கொன்றவனாகுறேன்.

விட.—[மூர்ச்சை தெளிந்து சோகத்தோடு]

கண்ணோட்டக் கடல்வறந்த கவினிரதி
தன்றேய மகன்றாள் அ! ஆ!
வண்ணவணி கலக்கணியே! மதிமுகத்தாய்!
வளர்லீலா ரசங்கால் சோதீ!

எண்ணுமியற் குணநிதியே! இளநகைசேர்
வாலுகமே! என்னைப் போன்றோர்
கண்ணிடமே! மதன் † கூல நற்சவுபாக்
கியக்கடையே! ‡ நலிவுற் றாயே. (38)

[கண்ணீர் சொரிந்து] கஷ்டம்! ஓகோகஷ்டம்!

என்ன காரியஞ் செய்தனை யித்தனை
மன்னி வாழ்ந்தவிம் மாநகரின் றிரு
தன்னில் வேறிலாப் பாவியுன் றன்மையால்
என்ன பாவம்! இறந்தழி வுற்றனள். (39)

[தனக்குள்] அடே! இந்தப்பாவி ஒருக்கால் இந்தத்தீமைச் செய்கையை என்மீது ஏற்றுவான்; நல்லது இவிடம் விட்டுப்போவேன்.

(என்றுபோகிறான், சகாரன் றொடர்ந்து பிடிக்கின்றனன்)

விட.—சண்டாளா! என்னைத் தொடாதை; உன் வியவகாரம் போதும்; நான் போகிறேன்.

சகார.—அட! வசந்தசேனையைக் கொன்றாய்; இந்தப்பழி என் மேற் சொல்லிவிட்டு எங்கேபோகிறாய்? இப்போது நான் கதியற்றவனானேனே.

விட.—கெட்டபயலே!

சகார.—

§சதநூறு பணந்தருவேன் றங்கமிகத் தருவேன்
உதவுகஹா வணந்தருவேன் வோடினமுந் தருவேன்
இதுகுற்றம் வாழிடமா மெனதுபராக் கிரமம்
பதிமனிதர் எல்லாரும் பார்த்தறியக் கடவீர்! (40)

† கூலம்=கடைவீதி. ‡ நலிவுறல்=அழிவுபடல்.

§ சதநூறு என்ற கவியிலுள்ள பணம், தங்கம், கஹாவணம், வோடினம் என்பவை அக்காலத்து வழங்கிய நாணயங்களின் பெயர்கள்.

விட.—சீச்சீ! நீயே வைத்துக்கொள்ளு.

சேட.—பொறுமை! பாவம்! பாவம்!

(சகாரன் சிரிக்கின்றனன்)

விட.—

களிப்புறேவினி நகுதலைவிலக்குதி
கனல்மிக ரவமாகங்
கிளைகொள்கீழ்மையே யுற்றநின்பிரியமோ
கெட்டது சீச்சீயுன்
அளியில் கேண்மையை விரும்பிலன்முறிந்தவில்
லனையகிர்க் † குணமேய
களவ! உன்னைநீத் திக்கணமேயய
லேகுவ னிதுகாண்டி. (41)

சகார.—பாவ! பாவ! தயவுபண்ணும்; தயவுபண்ணும்; வாரும். தாமரை யோடையில் விளையாடுவோம்; வாரும்.

விட.—

பதிதனலே னின்னுறவாற் பதிதனென்றும்
பாரிலநா ரியனென்றும பலலோரென்னை
மதிப்பகன்று நினைக்கின்றார் மாதைக் கொன்றாய்
மாரிலத்திற் பெண்டிர்மிகச் சங்கித் துன்னை
மதுபமுணு மதுச்சொரியு மலர்போற் கண்ணின்
வாரகடையா ளேக்குகின்ற ரையோ நின்னை
மதிகெட்டு நண்ணியநா னெவ்வா றுன்பின்
‡ மட்கிமநம் வெட்காமல் வருவேனந்தோ. (42)

[கருணையுடன்] வசந்தசேனையே!

மாவடி வழகி! மறுசன் மந்தனிற்
றேவடியா ளுறு சென்ம முறாதை
பூவினி னற்சரி தங்குண முடையாய்!
§ ஓவலின் மேற்குலத் தேயுறக்கடவை. (43)

† துணம்=பண்பு, நாண்கயிறு. ‡ மட்கல்=ஒளிகெடல்.
§ ஓவல்=ஒழிதல்.

சகார.—புஷ்பகரண்டக மென்கிற பூந்தோட்டத்தில் வசந்த சேனையைக் கொன்றுபோட்டு எங்கே யோடுகிறாய் வா [சேடனைப்பார்த்து] எனது தங்கச்சி புருசனிடத்திற் பிராது கொடு [என்று விடனைப் பிடித்துக் கொள்ளுகிறான்]

விட.—அட போக்கிரி! நில்லு. [என்று கத்தியை உருவுகின்றனன்]

சகார.—[அச்சமுற்று அப்பால் விலகி] என்ன? அச்சமாகவாவிருக்கிறது? ஆனால் போம்.

விட.—[தனக்குள்] இனி இங்கிருத்தல் சரியல்ல; நல்லது, எந்த இடத்தில் ஆரிய சர்விலகன், சந்தனகன் முதலானவர்கள் இருக்கின்றனரோ அங்குப்போய்ச்சேருவேன் [என்று போயினன்]

சகார.—செத்துப் போடா! அட ஸ்தாவரக! குழந்தாய்! நான் செய்தது எப்படி?

சேட.—எசமானே! பெரிய கெட்ட செய்கை செய்தீங்கோ.

சகார.—அடசேட! கெட்ட செய்கை யென்று ஏனடா சொல்லுகிறாய்? இதோ செய்கிறேன் [பலவகை யாபரணங்களையுங் கழற்றி] இந்த நகைகளைப் பெற்றுக்கொள்ளு; நான் உனக்கே தந்திட்டேன்; அலங்கரித்துக் கொள்ளும போதெல்லாம் என்னுடையதாக விருக்கட்டும; இது என்உத்தரவு.

சேட.—எசமானே! தங்களுக்குத்தான் இவைகள் நல்லாயிருக்குங்க; இவைகளால் எனக்கென்ன?

சகார.-ஆனால்போ; இந்த எருதுகளை யழைத்துக்கொண்டு, என் அரண்மனை வாசலிற்போய் நான் வரும்வரையில் நில்லு.

சேட.—எசமான் உத்தரவுப்படி [என்று சென்றனன்]

சகார.—தன்னைக்காக்கும் பொருட்டுப் பாவர் போய்விட்டார்; கண்ணில் அகப்படாமற் போய்விட்டார்; சேடனையும் எனது அரண்மனை மேல்மாடியில் பாரமான விலங்கிட்டு

வைத்து விடுகிறேன்; இப்படி இரகசியம் வெளிப்படாது; ஆகையாற் போகிறேன்; அல்லது அவளைப்போய்ப் பார்க்கிறேன்; இவள் செத்துப்போனளா? அல்லது மறுபடியுங்கொல்லுகிறேன். [போய்ப் பார்த்து] அட முழுதுஞ்செத்தாள்; நல்லது, உத்தரீயத்தால் இவளை மூடுகிறேன்; அல்லது இதில் பேர் முத்திரை யிருக்கிறது; யாரேனும் ஆரிய புருடன் அறிந்து கொள்ளுவான்; இருக்கட்டும், இதோ காற்றுற் குவிக்கப்பட்டிருக்கிற காய்ந்த இலைச்சருகுக் குவியலில் இவளைமூடுகிறேன்; இருக்கட்டும். [அவ்விதஞ் செய்து யோசனை பண்ணி] இவ்விதஞ் செய்கிறேன்; இப்பொழுது நியாயசபைக்குப் போய்ப்பிரியாது எழுதிக்கொடுக்கிறேன்; பணத்தின் நிமித்தஞ் சார்த்தவாகன் மகன் சாருதத்தன், என்னுடைய புஷ்பகரண்டகமென்கிற பழூந் தோட்டத்திற்குட் புகுந்து, வசந்தசேனையைக்கொன்று விட்டானென்று.

சுத்தமா நகரிற் றுரிசொடு மாவை
மொத்தி வதைத்தலை யொப்ப முளைத்த
சத்துரு சாரு தததனைச் சாவக்
குத்து முபாயங் கூடுவெ ஞனே. (44)

இருக்கட்டும, போகிறேன் [என்று போய்ப்பார்த்து அச்சத்தோடு] அம்மம்ம! எங்கெந்த வழியிற் போனாலும், அந்த அந்த வழியிலெல்லாங், கஷாயத்தில் நனைத்த காவித்துணியை யேந்தினவனாக இந்தத்தீயசமணகன் வருகிறான்; இவன் என்னால் மூக்கு உடைக்கப்பட்டு வெருட்டிவிடப்பட்டவன்; ஆகையால் என்பேரில் இவனுக்குப் பகையுண்டு; எப்போதாவது என்னைப்பார்த்து "இவனாற் கொல்லப்பட்டாள்" என்று சொல்லுவான்; எப்படிப் போகலாம? இருக்கட்டும்; பாதி இடிந்து விழுந்திருக்கிற மதிளின் பேரில் ஏறிப்போய் விடுகிறேன்.

இலங்கா நகரில் விண்ணிற் பூமியிற்
பாதாளத் தறு மான சிகரத்தின

மகேந்திரஞ் சென்றது போல நான் மிக்க
விரைவாய்ச் சீக்கிரம் ஓடுகின்றேனே. (45)

(என்று போயினன்)

(திரையைப்பீறிக்கொண்டு சம்வாஹகனுகிய சந்நியாசி பிரவேசிக்கிறுன்)

சந்நியாசி.—இந்தக் காஷாயத்துண்டத்தைக் கழுவினேன்; இதை ஒரு மரக்கிளையில் மாட்டிக்காய வைக்கலாமா? இங்கே குரங்குகள் கிழித்துவிடுமே! பூமியில் உலர்த்துவோமா? தூசிகள் ஓட்டுமே! எவ்விடத்தில் விரித்துக் காயவைக்கலாம்? [பார்த்து] இங்குக்காற்றூற் குவிக்கப்பட்டிருக்கிற இலைச்சருகுக்குவையில் விரிக்கிறேன் [அவ்வண்ணஞ்செய்து] புத்ததேவனை வந்திக்கிறேன்; [என்றுட்காருகிறுன்] நல்லது புண்ணிய எழுத்துக்களை உச்சரிக்கிறேன். [என்று இவ்வங்கத்தின் 1, 2, 3. பாடல்களைச் சொல்லுகின்றனன்] அல்லது புத்தோபாசிகையாகிய வசந்தசேனைக்கு, எதுவரை யான் பிரத்தியுபகாரஞ் செய்யவில்லையோ, அதுவரை எனக்கிந்தச் சுவர்க்க வியவகாரம் வேண்டாம்; சூதாடிகளிடமிருந்து பத்துப்பொன்னுக்காக வசந்தசேனை யென்னை விடுவித்தனள்; அதனுல், அவளால் நான் விலைக்கு வாங்கப்பட்டவனுயினேன்; சருகுக்குவியலில் மூச்சு விடுகிறது போற் காணப்படுகிறதே! அன்றியும்

காற்றினில் வெயிலிற் காய்ந்த † சீவரந்தான்
போற்றியநீரி னனைந்த பொற் பிலைகள்
‡ ஆற்றினி னெருங்கிக் கிடக்கின் றமையாற்
சாற்றுறு சலநந் தானுற் றதுவோ. (46)

---

† சீவரம்=செந்நீலப்பட்டை, முற்காலத்திற் சமணகத்தவசியர் இந்தச் சீவரந்தரித்திருந்தனரென்று தெரியவருகிறது. "சீறுலாவிய தலையினர் நிலையிலாவமணர்கள் சீவரத்தார்" திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரம், திருக்கீழ்வேளூர் பதிகம் 10.

‡ ஆறு=வழி.

சந்நியாசி.—ஒரு பெண்ணின் நல்ல ஆபரணங்கள் அணிந்த கையொன்று வெளியிற் றெரிகின்றது; அட மற்றொருகையும் [பலவிதமாகவுற்றுப் பார்த்து] இந்தக்கை நான் பார்த்த கை போலிருக்கிறது; அல்லது யோசனையேன்! நிச்சயமாக எனக்கு அபயமளித்த கைதானிது; சத்தியம்! நல்லது, பார்க்கிறேன். [இலைகளை விலக்கிப் பார்த்துத் தெரிந்துகொண்டு] அந்தப் புத்த உபாசிகைதான் [வசந்தசேனை நீர்குடிக்க விரும்பினள்] என்ன! தீர்த்தபானம் விரும்புகிறாள்; குளம தூரத்திலிருக்கின்றதே! இப்போது யாது செய்வேன்! இருக்கட்டும்; இந்த வஸ்திரத்தை யிவள் மேற் பிழிகிறேன் [அப்படியே செய்கிறான், வசந்தசேனை தெளிந்து எழுந்திருக்கின்றனள்; சந்நியாசி வஸ்திரத்தலைப்பால் விசிறுகின்றனன்]

வசந்த.—ஆரியரே! நீர்யார்?

சந்நியாசி.—புத்தோபாசிகை பத்துப்பொன் கொடுத்து என்னை வாங்கிய ஞாபகம் உண்டாக வில்லையோ?

வசந்த.—நினைவு வந்தது; ஆனால் ஆரியர் சொன்னபடியல்ல; யான் இறந்திருப்பேனாயின் நன்மையாக விருக்கும்.

சந்நியாசி.—புத்தோபாசிகையே! இஃதென்னை?

வசந்த.—[அளவற்ற துயரத்தோடு] வேசைத்தொழிலை யடுத்தகாரியமிது.

சந்நியாசி.—புத்தோ பாசிகையே! இந்த மரத்தின்மீதிற் படர்ந்திருக்குங் கொடியைக் கையாற் பிடித்துக்கொண்டு எழுந்திரு, எழுந்திரு! [என்று கொடியை வளைக்கின்றனன், வசந்தசேனை கொடியைப்பிடித்துக்கொண்டு எழுந்திருக்கின்றனள்]

சந்நியாசி.—இந்தப் பௌத்த மடத்தில் எனது புண்ணிய சகோதரி யிருக்கின்றனள்; அங்குச் சிரமபரிகாரஞ் செய்துகொண்டபிற்பாடு, புத்தோபாஸிகை வீட்டிற்குப் போகலாம்; ஆகையால் புத்தோபாஸிகை மெல்ல மெல்லப்

போங்கள். [என்று இவனும் பின் செல்லுகின்றனன், பார்த்து] ஓ ஆரியர்காள்! வழிவிலகுங்கள்; வழிவிடுங்கள்; இவள் † தருணி; இவன் சந்நியாசி; என்றல் தருமத்திற்கு ஒத்ததே.

அரசகுலத் தாயென்னே! ஐவகையா மிந்தியங்கள்
கரமிரண்டு காலொன்று ‡ கரணமொன்றை யடக்கியவன்
§ நரலைவளை யம்புவியில் நல்லநா ளுருவளூற்
பரவுலக மவணங்கைப் படலென்று நிச்சயமே. (47)

(என்று சென்றனன்)

வசந்தசேனை வதம் என்னும் எட்டாவதங்கம்.

முற்றிற்று.

---

† தருணி=பதினாறு பிராயத்திற்குமேல் முப்பதுக்குட்பட்டவள்.
‡ கரணம்=அந்தக்கரணம். § நரலை=கடல்.

## ஒன்பதாவதங்கம்.

(பின்னர் சோதநகன் பிரவேசிக்கின்றனன்)

**சோத.**—நீதியதிபர்கள் எனக்கு உத்தரவிட் டிருக்கின்றனர்; "அடே சோதநக! நியாய சபைக்குப்போய் ஆசநங்களை ஆயத்தப் படுத்திவை" என்று; ஆகையால் நியாய சபையை ஆயத்தப்படுத்துகிறேன். [போய்ப்பார்த்து] இதோ அதிகார மண்டபம்; இதில் நுழைவேன். [பிரவேசித்துக் கூட்டி, நாற்காலிகளைப் போட்டு] நியாயஸ்தலத்தில் ஒருவருந் தங்காமற் செய்தேன்; என்றால் நாற்காலிகள் போடப் பட்டன; இதை நியாயாதிபர்க ளிடந் தெரிவிப்பேன். [சற்றுதூரம்போய்ப்பார்த்து] கெட்ட துன்மார்க்கனான அரசன் மச்சான் இதோ வருகிறானேயென்ன! அவன் கண்ணிலகப்படாமற் போவேன் [என்றுதனித்த ஓரிடத்தில் நிற்கின்றனன்]

(அங்கே தடபடமுடுக்கு வேஷத்தோடு சகாரன் பிரவேசம்)

**சகார.**—

நீர் அப்பு வாரிதண்ணீர்
  நீரினில் மூழ்கினே †னேர்
சேருகந் திருவர்போலச்
  சிறந்தவங் கங்கள் மேவி
நாரிபெண் பாவைபூவை
  நங்கைமங் கையர்க ளோடு
காருறு பொழில்பூந்தோட்டங்
  கடுத்த ‡வுய் யானத் துற்றேன். (1)

---

† ஏர்=அழகு.

‡ உய்யானம்=உத்தியாநவநம், சோலை, "உய்யானத்தினுறுதுணை மகிழ்ச்சியும்" சிலப்பதிகாரம், ஊர்காண்காதை, 127-ம் வரி, அரும்பதவுரையிற் காண்க.

ஓர்கண முடிச்சு மறுகணஞ் சொருக்கே
ஓர்கணக் தொங்க லோர்கணங் குடுமி
ஓர்கணங் † கொய்த லோர்கண ‡ முச்சி
இவ்வண மாக விலங்குமென் குஞ்சி
சித்திர னலதுவி சித்திர னரசன்
மைத்துனன் வாசு தேவனு னானே. (2)

மேலும், கஞ்சக் குவியலில் அகப்பட்ட புழு வெளியிற் புறப்பட வழி தேடுதல் போல, நான் தப்பித்துக்கொள்ள ஒரு பெரிய வழியைக் கண்டுகொண்டேன்; ஆகையால் இந்தப் பழியை யார் தலையிற் சுமத்தலாம் [ஞாபகம் வந்து] ஆமாமா; நினைவு வந்தது; இந்தப்பழியைத்தரித்திர சாருதத்தன் றலையிற் போடுகிறேன்; அன்றியும் அவன் றரித்திரன்; அவனுக்கு ஏது சொன்னுலுந்தகும்; நல்லது நியாயசவைக்குப் போய் முதலிற் பிரியாது எழுதிவைக்கிறேன்; எப்படியென்றுற் சாருதத்தன் வசந்தசேனையை யடித்துக்கொன்றுன் என்று; ஆகையால் நியாய சவைக்குப்போகிறேன் [கொஞ்சதூரம் போய்ப்பார்த்து] இதோ நியாயசபை; இதற்குட்போகுவேன் [பிரவேசித்துப்பார்த்து] நாற்காலிகளைப் போட்டிருக்கிறுர்கள், என்ன? நியாயாதிபதிகள் வரும்வரை யிந்தப் புல்லு மேடையி லிருப்பேன்; ஒரு முகூர்த்தம இவிடத்திற் காத்திருப்பேன். [அப்படியே காத்திருக்கிறுன்]

சோதந.—[வேறொரு வழியாகப்போய் எதிரிற்பார்த்து] அதோ நியாயாதிபதிகள் வருகிறுர்கள்; நான் அருகிற் போகிறேன் [என்று போகிறுன்]

(§ சிரேஷ்டி $ காயஸ்தர்கள் புடை சூழ நியாயாதிபதி பிரவேசம்)

† கோய்தல்=கததரித்துவிடுதல்.

‡ உச்சி=உச்சிக்குடுமிக்காகுபெயர்.

§ சிரேஷ்டி } $ காயஸ்தர் } =அரசாங்க நீதித்தலத்தில்வெவ்வேறுவகை உத்தியோக முற்றேர்.

நியாயா.—ஓசிரேஷ்டி, காயஸ்தர்காள்!

சிரே
காய } —ஆரியர் ஆக்ஞையருளுக.

நியாயா.—மனிதர் வியவகாரத்திலேயே மநத்தைச் செலுத்து பவர்களாதலின், அவர்களுடைய மநோபாவத்தைக்கண்டு பிடித்தல் நியாயாதிபதிகட்குப் பிரயாஸமாக விருக்கிறது.

உன்னிரு வாதியர் பன்னரு நீதித்
தலைவர்க டம்பால் நிலைமெய் மறைத்து
நியதியை யடுக்காச் செய்தியைப் புகலுவர்
ஆசை சினம்பகை யாதியின் மூழ்கித்
தன்புற மயற்புற மென்பதால் வளர்ந்து
வருபல தோட மரசனை யடையும்
மிகுத்துரைத் தலின்ற் புகும்பய னென்னே?
நீதிவி சாரகர் குணத்தாற் பயனிலை
ஓதப வாதமே யுறுமெளி தாகவே. (3)

நீதியைத் துறந்து நீள்சினங் கொண்டு
சத்திய மறந்து குற்றமே விளைத்துக்
கூறுகின்ற னர்மாச் சீரிய ரேனுந்
தன்புற மெதிர்ப்புறத் தவறுக டழீஇ
நன்மையில் வழீஇ நடுக்குறு நவையை
நீதித்தலைவர் மாட் டுரைசெயா தந்தோ!
பாவம் இயற்றும் பண்பின ராவர்
மிகுத்துரை யாடலிற் புகும்பய னென்னே!
நீதிவி சாரகர் குணத்தாற் பயனிலை
யோதப வாதமே யுறுமெளி தாகவே. (4)

ஏனெனில் நீதித்தலைவ னிவ்வண மிருத்தல் வேண்டும்.

நூல்களில் வல்லோ னுனிக்கரு வஞ்சந்
தேர்ந்தறி திறத்திற் கூரிய னுகவுஞ்
சொல்வன்மை யுற்றோன் சுடுசின மற்றோன்
நண்பன் பகைவன் நண்ணு மிவர்வயின்

சமமாய் நடக்குந் தன்மையை யுடையோன்
வாதத்திற் கேற்ற மறுமொழி நுவலும்
வன்மைய னாகி வறிஞரை யோம்பித்
தீயரைத் தேய்க்குந் திறனனி வாய்ந்தோன்
புண்ணியந் தழீஇ யுலோபம தொரீஇ
ஆதிமுதனிச மறியுஞ் சமர்த் தன்
றலைவன் கோவந் தணிக்கு மியலா
னாகுதல் நீதி யதிபர்க் கழகே. (5)

சிரே
காய }.—ஆரியராய தங்களுடைய குணத்திற்குங் குற்றங்கூற லாகுமா? அங்ஙன மாயின் சந்திரிகையில் இருளிருக் கிறதென்று சொல்லலாமே.

நியாயா.—அடே! சோதநக! நீதிச் சபைக்குப் போகும் மார்க் கத்தைக்காட்டுதி.

சோதந.—சுவாமீ! வாங்கோ வாங்கோ! [என்று சென்றனர்]

சோதந.—இதுதான் நியாயசபை; இதற்குள் எசமாங்க போக லாம்.

(எல்லாரும் பிரவேசிக்கின்றனர்)

நியாயா.—அடே! சோதநக! வெளியிற் போய் யார் யார் காரிய மாக வந்திருக்கின்றனர் என்று அறிந்துவா.

சோதந.—சுவாமி கட்டளைப்படி [என்று வெளியிற்போய்] ஆரியர் களே! யார் யார் காரியமாக வந்திருக்கிறுங்களென்று எச மான் கேட்கிறுங்கோ.

சகார.—[களிப்போடு] நீதித்தலைவர் வந்துவிட்டனராம் [டம்பத் தோடு போய்] நான் வரபுருஷன், மனிதன், வாசுதேவன், அரசன்மச்சான், அரசாட்சிமைத்துனன், காரியமுள்ள வன்.

சோதந.—[அவசரத்தோடு] முதன் முதற் காரியமுள்ளவன் அர சன் மச்சான்: நல்லது ஆரியரே! ஒரு முகூர்த்தம இரும்;

நீதியதிபரிடந் தெரிவிக்கிறேன். [போய்] ஆரியர்களே! இராசாமச்சான் காரியார்த்தி; பிரியாது கொடுக்கவந்திருக்கிறார்.

நியாயா.—முதன் முதல் அரசன் மைத்துனனா காரியார்த்தி? என்ன! இவன் காரியமாக வந்திருத்தல், சூரியோதயத்திற் கிரகணம் பிடிப்பதுபோல, ஒரு பெரிய தீங்கு விளைப்பதைத் தெரிவிக்கிறது; சோதநக! இன்றைய வியவகாரம் வியாகூலத்தைத் தரும்; அடே! வெளியிற் போய் "உம்முடைய வியவகாரம் இன்று விசாரிக்கப்படமாட்டாது" என்று சொல்லு.

சோதந.—எசமான் உத்தரவுப்படி [என்று வெளியிற்சென்று சகாரன் அருகிற்போய்] ஆரிய! இப்போது போம்; உம்முடைய வியவகாரம இன்று விசாரிக்கப் படமாட்டாதென்று நியாயாதிபதி சொல்லுறாங்க.

சகார.—[கடுங்கோவத்தோடு] ஓ! ஓ! என் வியவகாரம் இன்று பார்க்கப்படமாட்டாதா? அத்திம்பேராகிய, அத்தானாகிய, அரசன், உலகத்தை யாளுகிறவனாகிய என் அக்காள் கணவனுக்குச் சொல்லி, அத்திகையாகிய என் உடன் பிறந்தாளுக்கும் உரைத்து, இந்தநியாயாதிபதியைத் தள்ளிவேறொரு நீதிபதியை நேமிக்கும்படி செய்கிறேன். [என்று போகஎத்தனிக்கிறான்]

சோதந.—அரசாங்க மச்சானே! ஒரு முகூர்த்தம் இரும்; அதற்குள் நியாயாதிபதிக்கு அறிவிக்கிறேன் [நியாயாதிபதியருகிற்போய்] இந்த அரசாங்க மச்சான் சினத்தோடு பேசுறான் [என்று அவன் உரைத்தவண்ணஞ் சொல்லுகிறான்]

நியாயா.—இந்த மூர்க்கன் சொல்லவுந் துணிந்தவன்,—இந்த மூர்க்கன் சொற்படி நடந்தாலும் நடக்கும்; அடே! சொல்லு, "உம்முடைய வியவகாரம் பார்க்கப்படும், வாரும" என்று.

சோதந.—[சகாரனிடம் போய்] ஆரியரே! நீதியதிபர் சொல்லு கிறார். "வாரும் உம்முடைய வியவகாரம் பார்க்கப்படும்" என்று; ஆகையால் ஆரியர் பிரவேசிக்கலாம்.

சகார.—முதலிற் பார்க்கப்படமாட்டாதென்றும், பிறகு பார்க் கப்படு மென்றுஞ் சொல்லுகிறான்; ஆகையால் நீதிபதி க்கு என்னிடத்தில் அச்சமிருக்கிறது; நான் எது சொ ல்லுவேனோ அவைகளை யெல்லாம் நம்பும்படி செய் வேன்; இருக்கட்டும்; பிரவேசிக்கிறேன் [என்று பிரவேசி த்து அருகிற் சென்று] நமக்கு மங்களம் உண்டாகட்டும்; உமக்குச் சுகம் தருவேன்; அல்லது கொடுக்கமாட்டேன்.

நியாயா.—[தனக்குள்] காரியமுள்ளவர்கள் † ஸ்திரஸம்காரம் உடையவர்களன்றோ! [வெளிப்படையாக] வாருங்கள்; இரு ங்கள்.

சகார.—ஆம், இந்தப் பூமி யென்னுடையது; எனக்கு இஷ்ட மான இடத்தில் உட்காருவேன்; [சிரேஷ்டியைப் பார்த்து] இதோ இங்கே உட்காருவேன் [சோதககனைப் பார்த்து] இப் படி உட்காருகிறேன். [நியாயாதிபதிதலையிற் கையை வைத்து] இதோ உட்காருகிறேன் [என்று தரையிலிருக்கிறான்]

நியாயா.—தாங்கள் காரியார்த்தியா?

சகார.—ஆமாம்.

நியாயா.—அந்தக் காரியத்தைச் சொல்லுங்கள்.

சகார—காரியத்தைக் காதிற் சொல்லுகிறேன். இந்த விதம் பெரிய விளக்குத்தண்டு போன்ற உயர்ந்த குலத்திற் பிற ந்தவன் நான்.

என்றகப்பனவ் வரசற்கு மாமனா ரியம்பும்
என்றகப்பற்கவ் வரசனு மருமக னின்னும்

---

† ஸ்திரஸம்ஸ்காரம் = நீண்டஞாபகம்.

என்சகோதரி கணவனித் தராதலத் திராசா
மன்னன்மைத்துனன் † சியாலகன் மகானினி யானே. (6)

நியாயா.—எல்லாந் தெரிந்து கொண்டவனுயினேன் [என்று எட்டாவதங்கத்திற் "குலத்திற்கூறிற்பயனென்னே" என்ற 29 ங்கவியைக்கூறுகிறுன்] ஆகையாற் காரியத்தைக்கூறும்,

சகார.—இதோ சொல்லுகிறேன்; நான் எப்பிழை செய்தாலும் என்னை யொன்றுஞ் செய்யமாட்டார்; ஆகையால் என் பேரில் சந்தோஷம் வைத்திருக்கிற என் சகோதரி ஆமடையானுல், எனக்கு விளையாடவும், காக்கவும், எல்லாப் பூந்தோட்டங்களுக்கும் மேலான புஷ்பகரண்டகம் என்னும் பூந்தோட்டங் கொடுக்கப் பட்டிருக்கிறது; அங்கே ஒவ்வொரு நாளும் பார்க்கிறது, காயவைக்கிறது, சுத்தம் பண்ணுகிறது, கொழுப்பேற்றிக் கொள்ளுகிறது, அறுக்கிறதுகளுக்காகப் போகிறதுண்டு; கீழே வீழ்ந்து கிடக்கிற ஒரு பெண் தேகத்தைத் தெய்வயோகத்தாற் பார்க்கிறேன்; பார்க்கவில்லை.

நியாயா.—விழுந்து கிடக்கிற பெண் யாரென்றுதெரிகிதா?

சகார.—ஒய்நீதிபதியே! எனக்கு ஏன் தெரியாது? இப்படிப்பட்ட பட்டணத்திற்கு அலங்காரம் போலப்பலபல நகைகள் தரித்திருந்த வசந்தசேனை, யாரோ ஒரு சண்டாளனுல் அற்பப்பணப்பொருளுக்காகப் பாழான புஷ்பகரண்டகமென்கிற பழைய தோட்டத்தில், அவளை வரும்படிசெய்து கைகள், கயிறு, பலாத்காரங்களாற் கொல்லப்பட்டாள்; என்னுல் அல்ல [என்று பாதி சொல்லுகையில் வாயை மூடிக்கொண்டனன்]

நியாயா.—அகோ! நகரக் காவலாளர்களுடைய அஜாக்கிரதை! ஓசிரேஷ்டி காயஸ்தர்களே! "என்னுல் அல்ல" என்று

† சியாலகன்=மச்சான்.

இவர் சொன்ன வியவகார பதத்தை முதலில் எழுதிக்கொள்ளுங்கள்.

காய.—ஆரியர் உத்தரவுப்படி [என்று அதை யெழுதி] சுவாமீ! எழுதியாயிற்று.

சகார.—[தனக்குள்] ஆச்சரியம்! அவசரப்படுகிற பிச்சைக்காரனைப்போல், என்னை நானே கெடுத்துக்கொண்டேன்; இருக்கட்டும், இப்படிச் சொல்லுகிறேன் [வெளிப்படையாக] அகோ! நீதிபதியே! நானே பார்த்தேன் என்று சொல்லுகிறேன். என்ன கோலாகலம் பண்ணுகிறீரே? [என்று எழுதியதைக் காலாலழிக்கிறான்]

நியாயா.—பணத்தின் பொருட்டுக் கை, கயிறுகளாற் கொல்லப்பட்டாளென்று நீர் எவ்வித மறிந்தீர்?

சகார.—ஓகோ நிச்சயம்! பாழாகவும் வெறுமையாகவு மிருக்கிற கழுத்தாலும், நகைகள் பூணுமிடங்களில் அவைகளில்லாமலிருத்தலாலும், நினைக்கிறேன்.

சிரே } காய }.—சரியாகத்தானிருக்கிறது.

சகார.—அதிருஷ்டவசத்தால் எனது உயிர் திரும்பிவந்ததடா அப்பா!

சிரே } காய }.—இவ்வியவகாரம் யாரைப் பிடிக்கிறது?

நியாயா.—அது விஷயத்தில் வியவகாரம் இருவகை.

சிரே } காய }.—என்னென்ன?

நியாயா.—சொல்லையவலம்பித்தும், அருத்தத்தை யவலம்பித்தும் வியவகாரங்கள் இருவகை; சொல்லை யவலம்பித்திருத்தல், வாதி பிரதிவாதிகளுக்குள்; பொருளை யவலம்பித்திருத்தல் நீதித்தலைவன் புத்தியால் ஊகிக்கப்படுவது.

சிரே } .—வியவகாரம் வசந்தசேனையின்றாயை யவலம்பிக்கிறது.
காய }

நியாயா.—ஆம் ஆம்; அடசோதகக! வசந்தசேனையின் மாதாவைப் பயமுறுத்தாமல் அழைத்துவா.

சோதக.—அப்படியே [என்று வெளியிற்போய் வசந்தசேனையின் றாயோடு வந்து] ஆரியே! போம்! போம்!

தாய்க்கிழவி.—என்பெண் சுகமநுபவிக்கக் காதலன் வீட்டிற்குப் போயிருக்கிறாள்; இந்தச் சிரஞ்சீவி "நீதித்தலைவர் அழைக்கிறார் வா" என்று சொல்லுகிறான்; என்மனம் பதைக்கிறது! ஆரிய! நீதிச்சவைக்குச் செல்லும் வழியைக் காட்டு.

சோதக.—ஆரியே! வா! வா! [இருவரும் போகின்றனர்] இதோ நீதிச்சவை, இதற்குள் ஆரியைபோகலாம் [என்று இருவரும் பிரவேசிக்கின்றனர்]

தாய்க்கிழவி.—[கிட்டப்போய்] பூசனைக்குரிய தங்கட்குச் சுகம் உண்டாகட்டும்.

நியாயா.—அம்மா! உன் வரத்து நல் வரத்தே, உட்காருக!

தாய்க்கிழவி.—அப்படியே [என்று உட்கார்ந்தாள்]

சகார.—[வைதுகொண்டு] வந்தாயா கிழமுண்டை! வந்தையா கிழட்டுமுண்டை!

நியாயா.—ஓகோ! நீ வஸந்தஸேனையின் தாயா?

தாய்க்கிழவி.—ஆமாம்.

நியாயா.—அப்படியானால், வசந்தஸேனை இப்பொழுது எங்கே போனாள்?

தாய்க்கிழவி.—சிநேகிதர் வீட்டிற்கு.

நியாயா.—அவளுடைய அந்தச்சிநேகிதர் பெயர் என்ன?

தாய்க்கிழவி.—[தனக்குள்] ஐயய்யோ! இது பெரியவெட்கத்திற் கிடமாச்சே! [வெளிப்படையாய்] இதைச் சாதாரண சநங்கள் கேட்கலாம்; நீதியதிபர் கேட்கலாமா?

நியாயா.—வெட்கப்படாதே! உன்னைக் கேட்டல் வியவகார நிமித்தம்.

சிரே காய }.—வியவகாரத்திற்காகக் கேட்கிறோம்; குற்றமில்லை, சொல்லலாம்.

தாய்க்கிழவி.—என்ன? வியவகாரமா? அப்படியானால் எஜமான்கள் கேளுங்கள். அவர் சார்த்தவாக விநயதத்தருடைய பேரன்; சாகரதத்தருடைய புத்திரன்; ஆரிய சாருதத்தரென்ற நற்பெயருடையவர்; செட்டித்தெருவில் வசிக்கிறார்; அங்கு என் குழந்தை யௌவன சுகத்தை யனுபவித்துக்கொண்டிருக்கிறாள்.

சகார.—ஆரியர்களே! கேட்டீர்களா? இந்த எழுத்துக்களை எழுதிக்கொள்ளுங்கள்; என் விவாதம் இப்போது சாருதத்தனோடு.

சிரே காய }.—சாருதத்தன் சிநேகிதன் என்று சொல்லுவதிற் குற்றமொன்று மில்லையே!

நியாயா.-இந்த வியவகாரஞ் சாருதத்தனைப் பொறுத்திருக்கிறது.

சிரே காய }.—அப்படியே.

நியாயா.—தனதத்தனே! வஸந்தஸேனை ஆரிய சாருதத்தன் வீட்டிற்குப் போனாளென்று, வியவகாரத்தினுடைய முதல் பாகத்தை எழுதிக்கொள்ளும்; என்னை? ஆரிய சாருதத்தரைக் கூட நாம் அழைக்கவேண்டுமா? அல்லது வியவகாரம் அவரை அழைக்கும்படி செய்கிறதே! அடே!

சோதநக! போய் ஆரிய சாருதத்தரை நிர்ப்பந்தமில்லாமலும், அவசரப்படுத்தாமலும, அவர் மனத்தை வருத்தாமலும், மரியாதையாகவும், ஆதரவோடும், நியாயாதிபதி தங்களைப் பார்க்கவேண்டுமென்று சொல்லுகிறார், என்று அழைத்து வா!

சோதந.—எஜமான் கட்டளைப்படி [என்று போய்ப்பிறகு சாருதத்தனுடன் பிரவேசித்து] ஆரியரே! போங்கள், போங்கள்.

சாருத.—[யோசித்து]

என்குலஞ் சீலமன் கறிந்த வேந்தனுந்
தன்வயின் வரவழைக் கின்ற தன்மையை
யுன்னவி லொருபொலாங் குறுத னிச்சய
மென்மன ங்கருத்துற வெண்ணு கின்றதால். (7)

(மனத்திற்குள் யோசனையோடு)

விலங்கைத் தறித்து விட்ட வொரு
விர்த்தாந் தந்தா னெட்டிய தோ?
இலங்கு சகடந் தனில் வந்தோ
னென்று வெளிதில் விடு பட்ட
நவிகொள் செய்தி † யொற்றனைக் கண்
ணுக வுடைய நரேந்தி ரற்குச்
சொலிவிட் டனரோ? இங்ஙன மத்
தோன்ற லழைக்குங் காரண மென்! (8)

அல்லது, யோசனை செய்வானேன்? நீதிஸ்தலத்திற்கே செல்லுகிறேன் [வெளிப்படையாய்] அடே! சோதநக! நீதிஸ்தலத்திற்குப் போகிற வழியைக்காட்டுதி!

சோதந.—வாங்கோ! வாங்கோ! ஆரியரே! [என்று போகின்றனர்]

---

† ஒற்றன்=தூதன், ஒற்றர் அரசற்குக் கண்ணென்பதை அடியில்வரையப்பட்டிருக்குந் திருக்குறளானுணர்க "ஒற்றுமுறைசான்ற நூலு மிவையிரண்டுந், தெற்றென்க மன்னவன்கண்" திருக்குறள் ஒற்றாடல் 1.

சாருத.—[பயமுற்று] என்ன மற்றொன்று ?

காக்கை கரைந்து கூவுதலுங்
 கடிகொளரசன் பணியாளர்
நோக்கிப் பல்காற் கூவுதலு
 நுதிகொளொரு வாயசவிர்
நோக்கந் துடியா நிற்றலையு
 நுணுக்கத்துடனே யாயுங்காற்
றுக்குஞ் செயலசா ரவசகுநந்
 தமியேன்றன்னை வருத்துகின்றன. (9)

சோதந.—ஆரியர்களே ! போங்க ! நிர்ப்பந்தமின்றி அவசரப் படாமற்போங்க !

சாருத.—(சிறிதுதூரஞ்சென்று, முன்னர்ப்பார்த்து)

ஈரமற் றுலர்ந்தவோர் மரத்தின் மீதிருந்
தார்கருங் காகமெல † வலரி நோக்கிய
கார்மலி யெனதிடக் கண் ‡டுடித்தது
கோரமின் றுறுவதி லையங் கொண்டிலேன். (10)

[அப்பால் மற்றொரு திக்கைப்பார்த்து] அடடா! இதோ ஒரு பாம்பு !

என்மீ தூன்று பார்வையொடு
 மிரு § நீலாஞ்ச னத்திரளொளி
துன்னிநீண்டு துடிப்புற்ற
 நாவுஞ்சுவேத நானெயிறு
மன்னியுயிர்ப்பாற் பூரிக்கும
 வளைந்தவயிற்றோ டெறுவழிக்க

† அலரி=சூரியன்.

‡ துடித்தது=விரைவுபற்றி வந்தகாலவழுமைதி— "வாராக்காலத்து நிகழுங்காலத்து, மோராங்குவரூஉம் வினைச்சொற்கிளவி, யிறந்தகாலத்துக்குறிப்பொடுகிளத்தல், விரைந்தபொருள வென்மனார் புலவர்" தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல், சூத் 44.

§ நீலாஞ்சநம்=கண்ணிலெழுதப்படு மொருவகை மை.

ணின்னல்புரிமா நாகமிருங்
கோவத்தோடென் மேல்விழுமால். (11)

மேலும் இதோ

புலிக்கணீரஞ் சிறிதுமிலை
காலூந்தரையிற் பொறுத்தலிலை
நவமாயிடக்கண் டோள்பலகா
ணடுங்கித்துடிப்புற் றனபுள்ளொன்
றவசம்பெருகக் கூவலுற்ற
தந்தோ ! விவையோர் பெருங்கோரத்
துவஞ்சேர்மரணம் வருமென்றே
சொல்லுமயிர்ப்புத் தோய்ந்திலனால். (12)

எவ்வகையினுந் தேவதைகள் நன்மையையே அருளுவார்கள்!

சோதந.—போங்க! ஆரியரே ! போங்க! இதோ நீதிச்சவை ; இதற்குள்ளே போங்க ;

சாருத.—[பிரவேசித்து, நான்கு பக்கங்களையும் பார்த்து] நியாயசபையின் அழகு ஆச்சரியம் ! இங்கோ என்றால்.

சிந்தையை யெண்ணித் திநம † தின் மூழ்கு
மந்திரியர் மலி வாரி தூதராந்
திரையுஞ் சங்கமுந் திகழ்சா ரணரா
முதலையு மகரமு மிவுளி யானையென்
றரந்தைசெய் செந்துவு மான்ற பல்லொலிப்
பருந்தும் படைத்துப் பகர்கா யஸ்தர்
பாந்தள்கள் வாழும் பாழியென் றுரைக்கு
நீதிச் சுவட்டுத் தடமென நிலைஇய
சவைபல தீய பிராணிகண் மரீஇய
கருங்கட லிகர்த்த காட்சியுற் றதுவே. (13)

---

† வாரியென்றதைக் குறித்த அது என்னுஞ்சுட்டு "முற்படக்கிளத்தல் செய்யுளுளுரித்தே" என்னுந் தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம் 39ஞ் சூத்திரத்தான்முன்வைக்கப்பட்டது.

இருக்கட்டும்! [என்று நுழைந்து தலையிலடித்துக்கொண்டு யோசனையோடு] ஆ! ஆ! இதோ மற்றொன்று.

இடக்கண் துடித்த திருந் † கோடி கூவிய
தடக்க னுரகந் தகையா நின்ற
திடமார் தெய்வஞ் செருக்கில் லேனுக்
கடலில் சேம மாற்றுந் தானே. (14)

நியாயா.—இதோ அந்தச் சாருதத்தர்!

முகமிமிர்ந்த நாசிகையங் கடையகன்ற
கண்களிவை முருகிற் கொண்டு
புகுமிந்த விலக்கணமே யவதூறு
புகல்பவற்குப் ‡ புலமீ யாதாற்
பகடுபசு குதிரைநரன் படைத்தபடி
வக்கியைந்த பண்பெந் நாளு
மகிதலத்தி னழுவாதென் றுரைப்பர்பல
நூல்பயின்ற வல்லோ ரம்மா. (15)

சாருத.—ஓ! நியாயாதிபரவர்கட்கு மங்கலம் உண்டாகுக! சேவகர்காள்! நீங்கள் சேமமா?

நியாயா.—[அவசரத்தோடு] ஆரியருடைய வரத்து நல்வரத்தாகுக! அடசோதநக! ஆரியருக்குப்பீடம் எடுத்து வந்துபோடு!

சோதந.—[ஆதரங்கொணர்ந்து] இதோ நாற்காலி, ஆரியர் அதன் மீது வீற்றிருத்தல் வேண்டும். [சாருதத்தர் உட்காருகிறார்]

சகார.—[சினத்தோடு] அட! பெண்கொலை புரிந்தவனே! வந்தாயா; வந்தாயா! விவகாரம, அகோ! மிக நன்றாகவிருக்கின்றது; நியாயமாக விருக்கிறது; தருமமாக இருக்கிறது;

---

† கோடி=காக்கை "கூகாய் நினதடல் காண்பேன் விடியிற் கோடி முன்னமே" வெங்கைக்கோவை 210.

‡ புலமீயாது=இடங்கொடாது. புலம்=இடம்.

பெண்கொலை செய்தவனுக்கு நாற்காலி கொடுப்பதானது. [கருவத்தோடு] இருக்கட்டும்! கொடுங்கள்.

நியாயா.—ஆரியசாருதத்தரே! தமக்கு இந்த ஆரியையுடைய மகளுடன் சம்பந்தமாவது, நட்பாவது, பிரியமாவது உண்டா?

சாருத.—யாருடைய?

நியாயா.—இவளுடைய [என்று வசந்தசேனைதாயைக் காட்டுகிருர்

சாருத.—[எழுந்து] ஆரியே! வந்தனம பண்ணுகிறேன்.

தாய்க்கிழவி.—குழந்தாய்! சிரஞ்சீவியாகவிருக்கக்கடவது. [தனக்குள்] அந்தச் சாருதத்தா இவரா? எனது மகளுடைய யௌவனம் நல்ல இடத்திலே உபயோகிக்கப்பட்டது.

நியாயா.—ஆரியரே! தாஸி உமது காதலியா?

சாருத,—[வெட்கப்படுகிருர்]

சகார.—

பொய்யான நடத்தையைநீ வெட்கத்தாலும்
பொருந்தச்சத் தாலுமறைக் கின்றாய்போலும்
மெய்யாகப் பணத்தாசை மேயநீயே
மிகுகொலையைச் செய்துபின்னர் மறைக்கின்றாயே. (16)
அட்டமில்லாத பட்டசா என்ப
திம்ஃதன்றே. (17)

சிரே காய }.—ஆரியசாருதத்தரே! சொல்லுங்கள்; வெட்கம் வேண்டாம்; இது வியவகாரமல்லவோ?

சாருத.—[வெட்கத்தோடு] ஓகோ! நீதித்தலைவர்களே! தாஸி யென்னுடைய சிநேகிதையென்று நான் எவ்விதஞ் சொல்லக்கூடும? யௌவநங் குற்றஞ் செய்ததாகுமே யன்றி நடத்தையல்லவே!

நியாயா.—

விசாரணை மிக்க † விக்கிர முடையது
மனக்தனி லுறைபு மான மகற்றும்
உண்மையை யுரையும் ஊக்கமேவும்
இவ்விட மித்தியை ஏற்ற வில்லையே. (18)

வெட்கம் வேண்டாம்; உம்மை வியவகாரம் கேட்கிறோம்.

சாருத.—நீதியதிபரே! யாருடனா எனக்கு வியவகாரம்?

சகார.—[படாடோபத்தோடு] அடே! என்னோடு வியவகாரம்.

சாருத.—உன்னுடன் எனக்கு வியவகாரஞ் சகிக்கக் கூடியதல் லவே.

சகார.—அடே! பெண்கொலைகாரா! அப்படிப்பட்ட பல மாணிக்க நகைகளைப்பூண்டவளான வசந்தசேனையைக் கொன்று போட்டு, இப்பொழுது நிறைந்த கபடத்தால் மறைக்கிறாய்!

சாருத.—பயனற்ற வார்த்தை சொல்லுகிறவனல்லவா நீ.

நியாயா.—ஆரிய சாருதத்த! இதுபோதும்; உண்மை சொல் லும்; தாசி யுமதுகாதலியோ?

சாருத.—அப்படியே.

நியாயா.—ஆரியரே! வசந்தசேனை யெங்கே?

சாருத.—அவள் வீட்டிற்குப போயினள்.

சிரே } .—எப்படிப்போனாள்? எப்பொழுது? யாருடன்?
காய }

சாருத.—[தனக்குள்] என்ன? ஒருவருக்குந் தெரியாமல் இரகசியமாகப் போனாளென்று சொலலலாமா?

---

† விக்கிரம்=தடை.

சிரே. } காய. }.—ஆசிரியரே! சொல்லுமையா.

சாருத.—வீட்டிற்குப் போனாள்; வேறு யாது சொல்லுகிறது?

சகார.—புஷ்பகரண்டக மென்னும், என்னுடைய பழைய தோட்டத்திற்குள், புகுத்தப்பட்டவளாகிப், பணத்தி னிமித்தங் கை, கயிறு, பலாத்காரம் இவைகளாற் கொலை செய்யப் பட்டாள்; வீட்டுக்குப்போனாளென்று, அடே! பொய் சொல்லுகிறாய் இப்போது.

சாருத.—ஆ! ஆ! அருத்தமில்லாமற் பேசுகிறவனே!

இதற்கிடையிற் † சாடாக்ர பக்கம் போல
இருமேக மழைநின்னை நனைத்த தில்லை!
இதுபொய்! நற் பனிக்கால ‡ இண்டை யொப்ப
இயல்நினது வதநமொளி யிழந்த தின்றே. (19)

நியாயா.—[குறிப்பாக]

மேருவினை நிறுத்தல்கடல் கடத்தல்மிகு கால்பற்ற
னேருமிந்தச் சாருதத்த அந்தணனை நிந்தித்தல். (20)

(வெளிப்படையாக)

உத்தமசாரு
தத்தருமிந்த
மித்தைகொள் காரி
யத்தைச் செய்வரோ? (21)

(இவ்வங்கத்தின் "முகநிமிர்ந்த என்ற 15ங் கவியைச் சொல்லுகிறார்)

சகார.—வியவகாரம் பட்சபாதத்தோடு பார்க்கப்படுகிறது.

நியாயா.—சீ! மூர்க்க!

---

† சாடாக்ரபக்கம்=காடையின் மேற்புற இறகு; சாஷம்=காடை.

‡ இண்டை=தாமரை, இங்குப் பூவிற்காகு பெயர்.

ஈனா ! நீவேதப் பொருளுரைக்கின்ற
யிசைத்தநின் நாவிழவில்லை
ஊனமிலுச்சிச் சூரியனுக்கு
முன்கணுங் கெடவில்லையெரிந்து
மேனிமிர்தீயி லிடுகினையைகவெங்
தழிந்திலை மேனாடைமேவு
மானமார்சாரு தத்தனையடைந்தாய்
மகிதல நினைவிழுங்கிலதே. (22)

ஆரியசாருதத்தர் அகாரியஞ்செய்வார் என்றல் எங்ஙனம் ?

அணிமணி தவிர்த்தம் போநிதி யுறையும்
பயமிகப் பெருக்கி யயலவர் வேண்டா
தரும்பொரு ளெவனு லளிக்கப்பட்டதோ
அவன்சீர்த் திக்குறை யிடமா வானோர்
பகையிலார் பொருளை நகக்கவ ரும்பொருட்
டிவ்வகைப் பாவ மியற்றுவானலனே. (23)

தாய்க்கிழவி.—[சகாரனைப்பார்த்து] நாசமாகிப்போவாய் ! அந்தக் காலத்தில் எவன் அடைக்கலம் வைத்த தங்கப்பானையை இரவில் திருடன் கொண்டு போயினன் என்று, அதற்குப் பதிலாக நாலு சமுத்திர சாரபூதமான மாணிக்க மாலையைக் கொடுத்தானோ, அவனிப்போழ்து அற்ப உடைமைக்காக அகாரியத்தைச் செய்வானோ ? ஓ ! என்மகளே ! வாடி என் குழந்தாய் ! [என்று புலம்புகின்றனள்]

நியாயா.—ஆரிய சாருதத்தரே ! அவள் கால் நடையாய்ச் சென்றனளா ? வண்டியிற்போனளா ?

சாருத.—என் முன்பாகப் போகவில்லை ; ஆகையால் அவள் வண்டியிற் போனளோ, பாதசாரியாய்ப் போனளோ, யானறியேன்.

(வீரகன் மிகுந்த கோவத்தோடு பிரவேசிக்கிறான்)

வீரக.—

காலுதை பட்டவ மானங் கண்டபின்
சாலுறு பகையினைத் தாங்கி வன்றுயர்
மாலலை கடலினின் மாழ்கு வேற்கிராக்
காலமெவ் வண்ணமோ கழிந்து சென்றதே. (24)

ஆகையால் நீதிச்சபைக்குப் போகிறேன் [என்று பிரவேசித்து] ஆரியமிசிரர்களுக்குச் சுகமுண்டாகட்டும்.

நியாயா.—நகரக் காவலாளி வீரகன்! வீரக! நீ வந்த காரியமென்ன?

வீரக.—ஈ ஈ ஈ! ஓ! ஓ! விலங்கை முறித்து ஓடினகாலத்தில், ஆரியகனைத் தேடிக்கொண்டு போகையில், மூடப்பட்ட வண்டி ஒன்று போகிறதென்று விசாரித்துத் தேடிப்பார்த்து, அடே! நீ பார்த்தாய் நான் பார்க்க வேண்டுமென்று சொல்லும் பொழுது, சந்தனகமகத்தரகன் உதைத்தான்; இதைக்கேட்டுத்தாங்கள் தீர்மானித்தல் வேண்டும்.

நியாயா.—அடே! அது யார்வண்டி யென்று அறிந்தாயா?

வீரக.—இந்த ஆரிய சாருதத்தருடையது; வசந்தசேனையேறிப் போனாள்; கிரீடைக்காக புஷ்பகரண்டகமென்னுந் தோட்டத்திற்குப் போகிறாளென்று வண்டிக்காரன் சொன்னான்.

சகார.—ஐயர்களே! கேட்டீர்களா?

நியாயா.—

† சவியொளி மிகுத்தவெண் சந்திரன் னிரா
குவின்வினை தன்பினுற் ‡ கோட்ட முற்றனன்
குவிகரை யிடிந்துமேல் வீழ்தலாற் § குசங்
கவின்மிகு தெளிவொரீஇக் $ கலுழி மேயதே. (25)

---

† சவியொளி=ஒரு பொருட்பன் மொழி. ‡ கோட்டம்=கோணல். § குசம்=நீர். $ கலுழி=கலங்கல்.

அடவீரக! இங்கு உன் வியவகாரத்தைப் பின்னர் விசாரிப்போம்; நீதிச்சபை வாசலிற் கட்டியிருக்குங் குதிரைமே லேறிப், புஷ்பகரண்டக மென்னப்படுஞ் சீர்ணோத்தியானத் திற்குப்போய், ஒருபெண் இறந்து கிடக்கின்றனளா என்று பார்த்துவா.

வீரக.—எசமான் கட்டளைப்படி [என்று வெளியிற்போய்ப் பிறகு பிரவேசித்து] அங்கே போனேங்க; புலால் புசிக்கும் விலங்குகள் ஒரு பெண பிரேதத்தைத் தின்னுகின்றதைப் பார்த்தேனுங்க.

சிரே<br>காய }—பெண்பிரேத மென்று நீ யெவ்வித மறிந்தனை?

வீரக.—மிச்சமாகிக் கிடந்த கை, கால், தலைமயிர் இவைகளால் அறிஞ்சேங்க.

நியாயா.—அடே! உலகவியவகாரம் விபரீதம்! சீ கெட்டது!

எவ்வளவு நிபுணதையோ டிஃதைவிசா ரணைசெயுந்தோ
றவ்வளவு சங்கடங்க ளடைகின்ற விவகாரங்
கவ்வையுறு பொய்மெய்யைக் கண்டறிதன் மிகவரிது
கவ்வளக்கர்க் † கபிலையெனக் கவின்புந்தி யழுந்தியதே. (26)

சாருத.—[தனக்குள்]

பூமலருங் காற்பிரசம் புகுந்துண்ணச் சஞ்சரிகங்
காமுற்று மொய்த்தலெனக், கடல்ஞாலக் கண் ‡ மனிதன்
§ பேமிகுத்த தீமைபல பெருகிவரி லதுவழியே
தோமிகுத்த பல்வேறு சங்கடங்க டோற்றுமன்றே. (27)

நியாயா.—ஆரிய சாருதத்த! நிஜத்தைச் சொல்லும்.

---

† கபிலை = பசு. ‡ மனிதனுக்கென்று குவ்வுருபுவிரிக்க.

§ பேம் = அச்சம்.

சாருத.—

*தீமையுளா னயலவர்பா லழுக்கா றுற்றோன்*
*செறியாசை யாற்குருட னுனோன் வேற்றூர்*
*† மாமைகெடக் கோறலின்மா லாஞ்சை யுள்ளோன்*
*மற்றவன்றன் பிறவிதொட்டு மருவா நிற்குந்*
*தோமிருத்த தோடத்தா லெதுசொற் றாலுந*
*துகடூர வதையங்கீ கரித்த னன்றோ ?*
*பூமிதனி லவனபுகன்ற ‡ பரிவா தத்தைப்*
*புரைதீர விசாரணையைப் புரிதல நன்றே.* (28)

*மலர்கொய்வான் கொடியையவளைத் திழுத்துக் கொய்ய*
*மனஞ்சகியா யானோர்பெண் கலுழுங் காலைப்*
*பொலன்வண்டி னிறகர்நிறம பூண்டு நீணட*
*புனைகூநதற் பற்றியவட் கொலை செய்வேனோ ? (29)*

சகார.—*ஓகோ ! நீதியதிபரவர்களே ! தாங்கள் பட்சபாதமாக வியவகாரத்தைப பார்க்கிறீகளே ! என்ன ? இன்னும் அழிநத ஆசையையுடைய சாருதத்தன் நாற்காலியிலிருக் கிறானே !*

நியாயா.—*அடசோதநக ! இவ்வண்ணஞ்செய.* [*சோதநகன் அவ் விதஞ் செய்கின்றனன்*]

சாருத.—*விசாரியுங்கள் ! ஒநீதியதிபர்காள் ! விசாரியுங்கள் !* [*என் றுநாற்காலியில் நின்று மிறங்கித் தரையிலிருக்கின்றனன்*]

சகார.—[*தனக்குள் மிகுந்த களிப்போடு கூத்தாடிக்கொண்டு*] *ஓகோ ! என்னாற் செய்யப்பட்ட பாதகம், இவ்விதம அன்னியன் றலையிற் றள்ளப்பட்டது ; சாருதத்தன் அருகில் நானும் உட்காருகிறேன்.* [*அவ்விதஞ்செய்து*] *சாருதத்தா ! என் னைப்பாரு, சொல்லு "என்னாற் கொல்லப்பட்டாள்" என்று சொல்லேன்.*

---

† மாமை=அழகு. ‡ பரிவாதம்=பழிசசொல்.

சாருத.—ஓ நீதியதிபர்களே! [என்று இவ்வங்கத்தின் "நீமையுளான்" என்ற 28ங்கவியைச் சொல்லுகின்றனன்.—பின்னர் பெருமூச் சோடு தனக்குள்]

என்பெருந் தோழமை மைத்திரேயவோ!
அன்புவே றியர்குலத் துதிந்த † ஆட்டியே!
உன் ‡ புன்னு கந்தவி ருரோக சேனவோ!
என்பெருந் துயரினைக் காண்கிலீர் எனே! (30)

அயலவரா பதமேவி னந்தோ! § நீ நாடோறுங்
கயமைகொடு பொய்மகிழ்ச்சி கருத்துமூழ்ந்து கொண்டனையே.

வசந்தசேனை யிடமிருந்து சமாசாரந் தெரிந்து வரவும், வண்டியின் பொருட்டும், மைத்திரேயரை யனுப்பினேன்; ஆபரணங்களையு மவளிடங் கொடுக்கும்படி கொடுத்தேன்; அவரின்னுந் தாமதம் புரிகின்றனரோ! என்ன!

(ஆபரணத்தோடு விதூஷகன் பிரவேசிக்கிறான்)

விதூஷ.—ஆரியசாருதத்தர் ஆபரணங்களை யென்வசங் கொடுத்து இவ்வண்ணஞ் சொன்னார்; என்னவெனில்.—"ஆரிய மைத்திரேய! வசந்தசேனையாற் குழந்தை உரோகசேனன் பூஷணங்களால லங்கரிக்கப்பட்டு அவன் றாயிடம னுப்பப்பட்டனன்; அவளிடத்தில் ஆபரணங்களைக் கொடுத்துவிடும்; திரும்பவாங்காதையும்" என்று; வசந்தசேனையிடம் போவேன் [சிறிது தூரஞ்சென்று ஆகாயத்தைப்பார்த்து] ஓ! பாவரைபிலன்! ஒபாவரைபில! யாதுகாரணத்தால் மனஞ்சலிக்கும் வருத்த முற்றவராகக் காணப்படுகிறீர்? [செவிகொடுத்துக் கேட்டு] என்ன சொல்லுகிறீர்? பிரியநண்பனுன சாருதத்தர் நியாயசபைக்கு அழைக்கப்பட்டிருக்கிறு ரென்று? அது சின்னக் காரியமாகவிராது [யோசித்து] அதற்குப் பிறகு வசந்தசேனையிடம்

† ஆட்டி=பெண். ‡ புன்னுகம்=ஓர்விதநாகம்.

§ நீ, யென்றது சகாரனை.

போகிறேன்; இப்போது நியாயத் தலத்திற்குப்போவேன் [கொஞ்சதூரம் போய்ப் பார்த்து] இதுதான் நீதிச்சபை; இதோ அதிற்பிரவேசிப்பேன் [பிரவேசித்து] நீதியதிபரவர்கட்குச் சுகமுண்டாகக்கடவது; எனது அன்புற்ற நண்பரெங்கே?

நியாயா.—இதோ இருக்கின்றனர்.

விதூஷ.—நண்ப! உமக்கு நன்மையுண்டாகட்டும்!

சாருத.—உண்டாதல் வேண்டும்!

விதூஷ.—நீர் க்ஷேமமா?

சாருத.—அதுவும் உண்டாக வேண்டும்.

விதூஷ.—ஓ நண்ப! எதுநிமித்தம் நீர் மிக்க துயரமுற்றவராகக் காணப்படுகிறீர்? எதற்காக இங்கு வரவழைக்கப்பட்டீர்?

சாருத.—மித்திரா!

பரவுலக மறியாத பாவியெனுற் பெண்ணே
விரவிரதி யோசேடம் விளம்புவ னிப்பாவி. (32)

விதூஷ.—என்ன? என்ன?

சாருத.—[காதில்] இவ்விதமாய்.

விதூஷ.—இப்படிச் சொல்லுகிறவன் எவன்?

சாருத.—[இங்கிதத்தாற் சகாரனைக் காட்டுகின்றனன்] இந்த அயோக்கியன் காரணபூதன்; காலன் இவன் மூலமாய்ச் சொல்லுகிறான்.

விதூஷ.—[குறிப்பாய்] வீட்டிற்குப் போயினளென்று ஏன் சொல்லக்கூடாது?

சாருத.—சொல்லியுங் காலவித்தியாசத்தால் அங்கீகரிக்கப்படவில்லை.

விதூஷ.—ஒகோ! ஆரியர்காள்! உச்சயினி பட்டினத்தில் மடம், தேவா கோயில, தோட்டம், யாகத்தமபம, தடாகம, கிணறு முதலியன எவனால அமைக்கப் பட்டுள்ளனவோ, அவைகள் எவனால அலங்கரிக்கப் பட்டிருக்கின்றனவோ, அவன தரித்திரனாகி விட்டாலும, அறபப்பண வாசையால இப்படிபபட்ட கொடிய செய்கை செய்வானு? அடே! அடே! அவிசாரிமகனே! அரசன மைத்துனனே! ஸம்ஸ்தானகனே! கொண்டிக்காரனேயே! சாங்களுக்குச் சங்கடஞ் செய்யுங்கொடிய தடியனே! பல பல நகைகளால் அலங்காரமுற்ற குரங்கே! என்முன்பாகச் சொல்லு; சொல்லடா; பிடித்து இழுத்தால், தளிாகளுக்குக் கேடுண்டாகுமென்று பயந்து, மலலிகைக் கொடியைக்கூட இழுத்து, எனது நண்பர் பூப்பறிக்கத்துணியார்; அவர் இந்தவிதம் இமமை மறுமைக்கு இடையூறுன காரியம எப்படிச்செய்வார்? இருடலே! அட! கூட்டிக்கொடுப்பவள் மகனே! நில்லு; உன மனமபோலக் கோணியிருக்கிற இந்தத் தடியால், உனது தலையை நூறு துண்டங்களாகும்படி உடைக்கிறேன்.

சகார.—[கோபத்தோடு] ஆரியர்களே! கேளுங்கள், கேளுங்கள்; எனக்கு விவாதமோ, வியவகாரமோ அது சாருதத்தனோடு; இந்தக் காக்கையின் கால்போன்ற மஸ்தகத்தை, சிரத்தை, தலையை, மண்டையையுடைய இவன் என்தலையை நூறு துண்டங்களாக எதற்காக உடைக்கப் போகிறுன்; அட வேண்டாம்; தேவடியாள் மகனே! துஷ்டப்பயலே!

[விதூஷகன் தடியை எடுத்துக்கொண்டு முன் சொன்னபடி சொல்லுகிறுன்; சகாரன் எழுந்து சினத்தோடு அடிக்கிறுன்; விதூஷகன் வதிலடிக்கிறுன்; ஒருவனை யொருவன் அடிக்கையில், விதூஷகனுடைய கழுக்கட்டிலிருந்து ஆபரணங்கள் விழுந்தன]

சகார.—[அவைகளை யெடுத்துப்பார்த்து, அசசத்தோடு] ஆரியர்களே! பாருங்கள்! பாருங்கள்! இவைகள் அந்த இரங்கத்தக்கவளுடைய நகைகள் [சாருதத்தனைக் குறிப்பிட்டு] இந்த அறபப்

பணவாசையால் இவன் கொன்ருன்; அவள் கொல்லப்பட்டாள் [நீதியதிபர்களெல்லோருந் தலைகுனிந்திருந்தனர்]

சாருத.—[குறிப்பாக]

இத்தருணம் பகிரங்க மேற்றவிந்த நற்கலன்கள்
செத்தநம விதித்தளர்வாற் சேரவிழுந் தனநழுவி
நத்துநமாற் ருங்கவொரு நச்சுநிகர் கேடெற்கே
யித்தரையில் விளைந்ததென லெந்நாளுநிச்சயமே! (33)

விதூஷ.—உண்மையை யேன் உரைக்கவில்லை?

சாருத.—நண்ப!

அரசன்கண் ணேக்ககன்ற தானுண்மை காணுதே
தரையிலெளி மைபுகன்ருற் ருழ்வாய மரணமுறும். (34)

நியாயா.—கஷ்டம்! ஐயோ கஷ்டம!!

செவ்வாய் பகைவன் குரு வலிமை
சிதறி வருந்து மொரு மனிதற்
கொவ்வாத் தூம கேதுவைப் போ
லொருகோ ளங்ஙன் உதித்தது காண். (35)

சிரேகாய.—[பார்த்து வசந்தசேனையின் ருயை நோக்கி] இந்தத் தங்கப்பாளையை, அது தானு அல்லவா என்று, பார்!

தாய்க்கிழவி.—இது அதுபோலிருக்கிறது; ஆனுலது வல்ல.

சகார.—ஆம்! நீ கிழக்குட்டி; கண்களாற் சொல்லுகிருய்; வாயால் மறைக்கிருய்.

தாய்க்கிழவி.—பாழாப்போவாய்! சீ போ!

சிரேகாய.—இது அது தானு அல்லவா என்று சாக்கிரதையாகச் சொல்லு.

தாய்க்கிழவி.—ஆரியரே! தட்டானுடைய புத்திசாலித்தனம் பார்வையை இழுக்கிறது; ஆனுலது வல்ல.

நியாயா.—அம்மா! இந்த நகைகளை நீ அறிவாயோ?

தாய்க்கிழவி.—நான்தான் சொல்லுகிறேன்; இல்லை, இல்லை; எனக்குத் தெரியவில்லை; அல்லது ஒருவேளை யெங்கள் நகைகளைப்போலச் செய்திருக்கலாம்.

நியாயா.—ஓய் சிரேஷ்டியே! இதோபாரும்.

ஒன்றைப்போன்ற பலபொருள்க
ளுலகத்துளவா மிறைத்தபல
நன்றுவடிவங் குணமிவைநன்
னயநந்தம்மாற் காணுற்ற
அன்றேயவைபோற் செய்கின்று
ரன்றோசிற்பர் † ஒருவந்தம
என்றுங்கைலா கவந்தனக்கே
யியலபாய்க் காணப் படுகின்ற. (36)

சிரே
காய }.—இவைகள் ஆரிய சாருதத்தருடையவைகளா?

சாருத.—அல்ல, அல்ல.

சிரே
காய }.—ஆனால் யாருடைய நகைகள்?

சாருத.—அந்த அம்மாளுடைய மகளுக்குச் சொந்தம்.

சிரே
காய }.—இவைகள் அவளை எவ்விதம் நீங்கின?

சாருத.—இவ்விதம்; ஆம், இவ்விதம்.

சிரே
காய }.—இப்பொழுது உண்மையைச் சொல்லும்; பாரும் இதோ, இப்பொழுது பாரும்.

---

† ஒருவந்தம் = ஒன்றைப் போலிருத்தல்.

*சத்தியத்தாற் சுகஞ் சாரு மென்றுமே*
*சத்திய முரைப்பதிற் றவ றணுக்கிடா*
*சத்திய மிரண்டெழுத் துடைய தாயினுஞ்*
*சத்திய மித்தையாற் சற்றும் போர்த்திடேல்.* (37)

சாருத.—*நகைகள்! நகைகள்! யானறியேன்! எங்கள் வீட்டிலி ருந்து கொணரப் பட்டவைக ளென்று யானறிவேன்.*

சகார.—*தோட்டத்தில் அவளை யழைத்து நீயே கொல்வினாய்; இப்போது பெரிய கபடத்தோடு மறைக்கிறாய்;*

நியாயா.—*ஆரிய சாருதத்த! உண்மையை யுரையும்!*

*இன்றுனதே ரங்கமிசை யிருங்கொடிய கசைதான்*
*றுன்றுமெங்க ளாணையினாற் சொல்லுநிசத் தினையே.* (38)

சாருத.—

*பாவமற்ற குலத்துற் பவித்தநான்*
*பாவியல்ல மாபாவியென் றெண்ணிடிற்*
*பாவமற்றவ னென்றெளியேன் புகல்*
*† பாவத்தாலுறு மோர்பய னென்னையே?* (39)

*[தனக்குள்] வசந்தசேனையைப் பிரிந்து நானிருப்பதிற் பய னில்லை [வெளிப்படையாக] ஓகோ! அதிகமாகச் சொல்லு வதிற் பலனென்ன?*

*இருமையு மிழுக்குநின்ற வெனறனு லருமைமேய*
*சுரிகுழற் றோகைசேடஞ் சொலலுவா னிதோநிற்கின்றான்* (40)

சகார.—*கொலையுண்டாள்! அடே! நீ சொல்லு. "நான் கொன் றேன்" என்று.*

சாருத.—*நீயே சொல்லினையே!*

சகார.—*பட்டாரகர்களே! கேளுங்கள்! இவனாற் கொலையுண்*

---

† பாவம்=உட்கருத்து, அபிப்பிராயம் "என்னபாவ மற்றென்னை யின்றென் சொலாதுலகே" பாரதம், தற்சிறப்புப்பாயிரம் 3.

டாள்; இவனுற்றான்; இந்தத் தரித்திர சாருதத்தனுக்குச் சரீரதண்டனையை விதியுங்கள்.

நியாயா.—சோதனக! அரசன் மைத்துனன் சொல்லுகிறபடி; ஓ சேவகர்களே! சாருதத்தனைப் பிடியுங்கள். [சேவகர் பிடிக்கின்றனர்]

தாய்க்கிழவி.—ஆரியர்களே! தயவுசெய்யுங்கள், தயவு செய்யுங்கள்! ஆசை யழிந்தவனே! அந்தக் காலத்தில், அடைக்கலம் வைத்த பொன்பானையை இராத்திரி திருடர்கள் கொண்டுபோனதற்காக, நாலு சமுத்திர சாரமான மாணிக்க மாலையை எவன் கொடுத்தானோ, அவனா இப்பொழுது அற்பப் பொருளுக்காக, இந்த அகாரியத்தைச் செய்வானா? ஓ மகனே! வாடியென குழந்தாய்! [என்று புலம்புகிறாள்] கொல்லப்பட்டவள் என மகள்; அவளோ கொலையாளுள்; இந்தச் சிரஞ்சீவி உயிருடனிருக்கட்டும்; அல்லாமலும் வியவகாரம் வாதி பிரதிவாதிகளுக்குள்; நான்வாதி; ஆகையால் இவரை விட்டுவிடுங்கள்.

சகார.—சீ போடீ! கருப்பதாசி; இதனாலுனக்கென்னடி?

நியாயா.—ஆரியைபோகலாம்; ஓ சேவகர்களே! இவளை வெளியிற் கொண்டுபோங்கள்.

தாய்க்கிழவி.—ஆ குழந்தாய்! மகனே! [என்று அழுது சென்றனள்]

சகார.—[தனக்குள்] இவனுக்குத்தக்கபடி நான் செய்தேன்; இனிப்போகிறேன். [என்று போயினன்]

நியாயா.—ஆரிய சாருதத்தரே! தீர்மானித்தல் என் காரியம; மற்றவை அரசனைச்சேர்ந்தவை; ஆயினும் அரசன் பாலகனிடத்தில் இதை விக்ஞாபநம் பண்ணும்.

அல்லலேற்ற விப்பாதக வந்தணற்
கொல்லலஞ்ஞாய மலமநு கூறினர்
புல்லுமிப்புவி யின்றிவன் புத்திரன்
செல்வத்தோடு மகற்றுதல் சீர்மைத்தே. (41)

சோதந.—எசமான் கட்டளைப்படி [என்று சென்று திரும்பி வந்து கண்ணீர் பெருக] ஆரியர்களே! அங்குப்போனேன். "அற்பப் பணவாசையால் எவன் வசந்தசேனையைக் கொன்றானோ, அவன் கழுத்தில் அந்த ஆபரணங்களைப் போட்டுத், தம்பட்டமடித்துத் தெற்கு மயானத்திற் கொண்டுபோய், அவனைக்கழுவேற்றுங்கள்! மற்றை யாரேனும் இவ்விதத் தீச்செய்கை செய்தா லவனுமிவ்விதக் கொலைத் தண்டனையை யடைவான்" என்று அரசன் பாலகன் சொல்றாங்கோ.

சாருத.—ஆ! ஆ! அரசன் பாலகன் விசாரியாமற் செய்கின்றவன்.

வியவகாரப் பெருந்தீயில் மே † வுழையர் தாம்வீழ்த்த
கயவரச ரிரங்கத்தக் கவரென்றல் காணிசமே. (42)

மேலும்

வெண்காகம் போலரசன் ‡ விதித்தனகள் நிந்திக்கும்
பண்பினரா லநகர்பல்லா யிரமாந்தர் பகர்கொலையை
உண்டார்க ளென்பதென்றோ வோதங்கொள் கடற்பாரி
லுண்கின்றா ருண்பார்கள் ஓ கொடிது கொடிதம்மா. (43)

மித்திரமைத்திரேய! போ, நான் சொன்னதாக முதலில் அம்மாவை நமஸ்கரி; எனது குமாரன் உரோகசேனனைக் காப்பாற்று.

விதூஷ.—வேரற்ற பிறகு மரம் எப்படிக் காக்கப்படும்?

சாருத.—அப்படிச் சொல்லாதையும்.

பேண்பரலோ கம்புகுந்தோர் பிரதிகிருதி புதல்வனெனக்
காணுலகத் தினருரைப்பர் கட்டுடனென் மீதெந்த

---

† உழையர்=உத்தியோகஸ்தருக்காகுபெயர்.

‡ விதித்தனகள்=விகுதி மேல் விகுதி பெற்றது. 'கற்றனங்கள் யாவுமுடன்கற் பனகளெல்லாம்' சீவகசிந்தாமணி, கனகமாலையாரிலம்பகம் 239.

*மாண்டவன்பு வைத்தனேயோ மற்றுமந்த வன்பதனைக்*
*கோணிலுரோ கச்சேனக் குழவியிடங் கூட்டுகவே.* (44)

விதூஷ.—*ஓ மித்திர ! நான் கண்பனுகவிருந்து உன்னைப் பிரிந்தும் உயிரசுமந்திருக்கின்றேனே !*

சாருத.—*உரோகசேனனைக் கொணர்ந்து எனக்குக் காட்டும்.*

விதூஷ.—*சரி அப்படியே !*

நியாயா.—*அடசோதநக ! இந்தப்பயலை வெளியிற்கொண்டுபோ. [சோதநகன் அவ்வண்ணஞ் செய்கின்றனன்] யாரடா அங்கே ! சண்டாளர்கட்குக் கட்டளையிடு [என்று சாருதத்தனை நிறுத்தி மற்ற இராஜமனிதர்களெல்லாரும் போயினர்]*

சோதந.—*ஆரியரே ! இப்படி வாரும்.*

சாருத.—*[சோகத்தோடு இவ்வங்கத்தின் 30, 33, 34 பாடல்களைச் சொல்லுகின்றனன்.—[ஆகாயத்தில்]*

*என்னுடல் புகும்வா ளென்பதை நோக்கிப்*
*பன்னரு நச்சு நீர்துலை பாவகன்*
*என்னுமிப் பொருளா லென்னுடை வழக்கை*
*விசாரித்தல் வேண்டு மென்று விண்ணப்பம்*
*பண்ணியும் பகைவன் பகர்மொழி கேட்டே*
*அந்தணனுய வெனைக் கொலை விதித்தனை*
*ஆவோ உனது புத்ர பவுத்திர*
*ராதிய ரோடு மழுந்துதி நரகே.* (45)

இதோவந்தேன் *[என்று எல்லோரும் சென்றனர்]*

வியவகாரம் என்னும் ஒன்பதாவதங்கம்
முற்றிற்று.

## பத்தாவதங்கம்.

(சண்டாளர் இருவராற் பின்றொடரப் பட்டுச் சாருதத்தன் பிரவேசிக்கிறான்)

சண்டாளர்.—

கட்டுதல் கட்டிக் கொண்டு போதல்
முதலிய ஒன்பான் கொலைகளில் வல்லேம்
நுவலொரு கொடியிற் கழுத்தினை யறுத்தல்
மற்றொரு கொடியிற் கழுவி லேற்றுதல்
உறுமிவை செய்யுந் திறமை யுள்ளேம்
காரண நீங்கள் காண வில்லையே? (1)

ஓ ஆரியர்களே! எட்டிப்போங்க, எட்டிப்போங்க, இவர் தான் ஆரிய சாருதத்தர்.

† கரவீரத் தார்பூண்டு காதகரோம்
மிருவர்கையிற் பட்டானாகி
விரவுதயி லங்குறைந்த விளக்கதுபோற்
படிப்படியா மெலிகின்றானால். (2)

சாருத.—[துயரத்தோடு]

விழிநீர்ப்பெருக்கா னனைந்துசிறு
துகளைமேவி மயானப்பூக்
கழிசெஞ் சாந்த மணிந்துபெருங்
கயமைமேய என்னுடலை
நிழல்செய் மரத்தி லிருந்துகளி
நிரம்பிக்கூவுங் ‡ கரும்பிள்ளை
வழுவில் பலிபோற் கூடியுண
மனத்திலுனுநின் றதுபோலும். (3)

---

† கரவீரம்=அலரி. அரளியென இக்காலத்து வழங்காநின்றது போலும்

‡ கரும்பிள்ளை=காக்கை. 'கரடம்வாயச மரிட்டங்கரும்பிள்ளை கொடியேகாகம்' சூடாமணிநிகண்டு.

சண்டாளர்.—ஆரியர்களே! பாதை விடுங்க, வளிவிடுங்க.

தூயவராம் பறவைகள்வாழ்
சுகபுருட விருட்சமிவன்
ஏயெம்வா ளறுக்குந்தலை
யேனின்று பார்க்கீங்கோ. (4)

அடசாருதத்தா! வாங்காணும வா.

சாருத.—மனிதர்களுடைய பாக்கியத்தின் வியாபாரம் மனத்தால் நினைக்கத்தகாததன்றோ? நான இந்தக்கதி யானேனே!

உடன்முழுது மரத்தச்சந் தநச்சாந்தை யுறபபூசிக்
கடிகுழுமபார கைகள்பட்ட வடையாளங் கண்டுமிகு
பொடிமயமா †வுறத்தெளிந்துப புருடவுருப் பொருந்தியநான்
மடிமிகுத்த பசுப்போல வையகத்தின மரீஇயினனே. (5)

[எதிரிற்பார்த்து] அம்மம்ம! நரமனிதர்களுக்குள் என்னதாரதம்மியம்! [சோகத்தோடு].

இந்நகரத் துறுமாந்த ரிச்சண்டா ளர்ப்பார்த்தே
என்னையிவன் சீசீயென் றிருகண்ணீர் வாரவிட்டே
என்னுயிரைக் காப்பாற்று ‡மீடிலராய் நாவாலே
மன்னுசுவர்க் கம்பெறுக எனவாழ்த்து கின்றனரால். (6)

சண்டா.—ஆரியர்களே! என் பாக்கிறீங்க, போங்க, போங்க.

இந்திரற் கொண்டுபோ தலையு மோர்பசு
§செந்துவை யீனலுஞ் சேண்மீன் வீழ்தலு
$முந்திநோர் மேலவர் உயிரை நீத்தலும்
இந்தநாற் செய்கைகள் காண லீனமே. (7)

முதற்சண்டா.—அடே! ஆகிந்தா! பாரு பாரு.

---

† மா=பொடி. ‡ ஈடு=வலி.

§ சேந்து=சீவப்பிராணி, கன்றிற்காகுபெயர். $ உந்தி=கடல்.

நகர்க்கின்றி யமையாத நற்புருடன் காலன்
றருகட்ட ளைப்படிக்குத் தனிக்கோற லுறுங்கால்
மிகு † நபந்தா னழுதிடுமோ ! மேகமிலாக் காலும்
புருமிடிதான் விண்ணின்றும் பூதலத்தில் விழுமோ. (8)

இரண்டாவது சண்டா.—அடே ! கோஹா !

‡ அண்டமளவில்லை மழையற்றவதி னின்று
மண்டு § வெடிவீழவில்லை மங்கையர்க ளாய
கொண்டல்களினின்றலை குலாவுகடல் நேருங்
கண்டலமிருந்துகய $ தாரை கலுழ்கின்ற. (9)

மேலும்

போந்திவற் கொலைசெயக் கொண்டு போகையின்
மாந்தர்கள் கண்ணநீர் மறுகிற் றோய்தலால்
நீந்தலில் தூளிகள் நிரம்பி யெங்கணுஞ்
¶ சாந்திரங் கிளம்பிமேற் சாரவில்லையால். (10)

சாருத.—[பார்த்து, துயரத்தோடு].

மேல்வீட்டி லுறுபெண்கள் சாளரத்தின் வாயில்வெளி
மால்வதந நீட்டியகோ ! சாருதத்த ! எனமாழ்கி
நீலநிற வண்டுநமன் நேருமிரு கண்களினூற்
சாலவிடுப் பாராவி சாலிநிறை கால்வாய்போல். (11)

சண்டா.—வாடா அடே ! சாருதத்தா வா ! தம்பட்டங்கொட்டிப்பயிரங்கப் படுத்தவேண்டிய இடம் இது ; அடே ! பறைகொட்டு ; சொல்லக்கடவதை உரத்திச்சொல்லு.

சண்டா.—கேளுங்க ஐயர்களே ; கேளுங்க ; இவன் யாவாரிவிநயதத்தனுடைய பேரன் ; சாகரதத்தனுடையமவன் ; ஆரியசாருதத்தனெண்டுபேரு ; தீவினைசெய்த இவன், கொஞ்சம் பணஆசையால், புப்பகரண்டகமென்னும் பாழுந்தோட்டத்தில், வசந்தசேனையெண்ட வேசியைஅளைச்சுக்

† நபம்=ஆகாயம். ‡ அண்டம்=ஆகாயம். § வெடி=இடி.
$ கயம்=நீர். ¶ சாந்திரம்=நெருக்கம்.

கிட்டுப்போய், கை, கயிறு, வலக்காரத்தால் கொலை செய்திட்டான்; தடையத்தோடு அகப்பட்டுக்கிட்டான்; தானும் ஒப்புக்கொண்டான்; இவனைக்கொலை செய்யும்படி இராசாபாலகன் கட்டளையிட்டாங்க; இனியாராவது இரண்டு உலகத்தடையான இந்தத்தொழிலைச் செய்வாரானால், அவனையும் இராசாபாலகன் இப்படியே தண்டிப்பாங்க.

சாருத.—[சோகமுற்றுத் தனக்குள்].

முன்னரே நூறுவேள்வி முடித்தரும் தூய்மை மேய
வென்பெருங் குலந்தனிபாக சாலையி லிருக்கின் கோஷந்
துன்னிய யான்சாகுங்கால் றூர்த்தரால் கொலையே சால
மன்னிய களக்கணந்தக் குலங்கோட மீஇயிற் றுலோ. (12)

[துயரத்தோடு செவிகளைப் பொத்தி] ஆ காதலி! வசந்தசேனா!

மதியொளிநேர் வெண்மைமரீஇ வனப்புமிகு நகைமயிலே!
துதிதுகிரின் வணவதரந் † தூயோட்ட முடைக்குயிலே!
‡ பதவதனா மிர்தநுகர்ந்து பரவசத்தைப் படைத்தந்தோ!
அதியபவா தக்கடுவை யச்சமொடும் பருகுவெனோ! (13)

சண்டா.—அங்கிட்டாலே போங்க. ஐயமே! வளிவிடுங்க.

இவன்றுணை மணிக்கட
லிவன்றுய ருவர்க்கரை
இவன்வசு மிகுகலன்
இவன்னக ரிழந்தான். (14)

மேலும்,

புவியிலெலா மாந்தர்களும் புகலின்பந் நுகர்போ
தவர்பாலன் பொடுமனித ரருங்கவலை யடைவார்
கவியிடரை யுற்றவர்பாற் கடுகளவா யினுந்தயவாய்த்
தவறகன்ற வன்பாற்றுந் தன்மையுளா ரிலையே. (15)

சாருத.—[நாற்றிசைகளையும் பார்த்து].

---

† ஓட்டம்=மேலுதடு. ‡ பதம்=அழகு.

† அணிநிலையி லிருப்பவர்கட் கயலினரும் உறவே
திணியிடரை யுற்றவனைச் சிநேகிதரும் விடுவார்
மணிலெனது நட்பினர்கள் வதநமிகப் போர்த்தே
எணியகன்றோ! நெடுந்தூர மேகலுற்றார் என்னே! (16)

சண்டாளர்.—எல்லோரையும் விலக்கிட்டோம்; இராசவளிபாளாக்கிவிட்டோம்; இவனுக்குக் கொலைக்குறிபோட்டுவா.

சாருத.—[பெரு மூச்செறிந்து] ஒன்பதாவது அங்கத்திலுள்ள 33, 34 கவிகளைச் சொல்லுகின்றனன்.

(திரைக்குள்)

ஆ! அடே! அப்பா! சாருதத்தா!

சாருத.—[கேட்டு, துக்கத்தோடு] ஓ! உங்கள் குலத்திலுயர்ந்தவர்களே! எனக்கொரு உபகாரம் நீங்கள் செய்யவேணும்.

சண்டாளர்.—நாங்கள் உமக்குச் செய்யத்தக்கது என்னகாணும்?

சாருத.—சாந்தம்! பாவம்! ஆய்ந்து பாராமையுந் துராசாரமுமுடைய பாலகனன்றோ சண்டாளன்; நிற்க, பரலோக நிமித்தம் எனது மகனைப் பார்க்கவேண்டும்; அதற்காக உங்களைவேண்டுகிறேன்.

சண்டாளர்.—அப்படிச் செய்யுங்காணும்.

(திரைக்குள்)

ஆ! அப்ப! ஆ! பிதாவே.

சாருத.—[கேட்டுச் சோகமுற்று] ஓ! உங்கள் குலத்திலுயர்ந்தவர்களே! நீங்கள் எனக்கொரு உதவி செய்யும்படி வேண்டுகிறேன்.

சண்டாளர்.—ஓ பட்டினத்துச் சநங்களே! ஒரு சணப்பொழுது

---

† அணிநிலை = அழகியநிதி:—அதாவது செல்வப்பேறு.

இடங்கொடுங்க! இந்த ஆரியசாருதத்தன் மவன் மூஞ்சியில் விளிக்கட்டும்; [திரையைப் பார்த்து] ஐயரே! இங்கு வாங்க, இங்கு வாங்க, வாடா குளந்தை! வா!

(பிறகு குழந்தையை எந்திக்கொண்டு மைத்திரேயன் பிரவேசிக்கின்றனன்)

விதூஷ.—சீக்கிரம் வா; சீக்கிரம் வா! உன் தகப்பனைக் கொலை செய்யக் கொண்டுபோகின்றார்களே!

குழந்தை.—ஆ! அந்த! ஆ! அப்பா!

விதூஷ.—ரமித்திரா! நான் உம்மை எங்குப் பார்ப்பேன்?

சாருத.—[குழந்தையையும் நண்பனையும் நோக்கி] ஆ குழந்தாய்! ஆ மைத்திரேய! [துயரத்தோடு] ஆ! கஷ்டம்!

விதியினுறு மறுவுலகில் விளம்பிக்கு நெடுங்காலம்
அதிதாக முற்றிருப்பே னஃதென்னே யென்பீரேல்
பிதிர்க்களிக்கு † நிவாபோதகம் பெரிய மீனுறையு
ததிரூழும் ஞாலத்திற் றமியேற்கு வறிதன்றே! (17)

குழந்தைக்கு யான் யாது கொடுப்பேன்?

[தன்னைப்பார்த்துத்தன் பூணு நூலையும் பார்த்து] ஆம், என்னிடத்தில இதுதானிருக்கின்றது.

வெண்முத்தம் பொன்னின்றி வேதியர்கள் பூணிஃது
விண்டேவர் பிதிராபெற வவிர்ப்பாகம் வீசுவதே. (18)

(என்று எக்ஞோபவீதத்தைக் கொடுக்கின்றனன்)

முதற்சண்டாளன்.—வாடா, சாருதத்தா! வா.

2வது சண்டாளன்.—அடலே! ஆரிய சாருதத்தரை மரியாதமிண்டி அழைக்கிறை; அடலே! இதோ பாரு.

† நிவாபோதகம்=பிதிரர்கட்குத்தாகம் நீங்க அளிக்கு நீர்.

மாணவன்ற னற்கால மடிகிறதா யினுமல்எல்
தான்கட்டி லடங்காத தனிச்சிங்க வேறேபோல்
† வாளேறு போன்றவிதி மானிடர்க ளியாவரையு
நுனமொடு தலையடைய நுந்தல்செயா நின்றதுகாண்.

(அல்லாமலும்).

இவனுடன் முழுதுஞ் சோர்வுற் றேர்சிரந் தாழ்வுற் றுலு
மவனியிற் குறறமயாதோ ! அம்புலி யிராகுக் கோளால
‡ இவவுறக் கவர்தலான்மற் றிவ்வுல கத்தார் தங்கட்
கவன்மிக வணங்கத்தக்கோ னல்லனு யேகின் றனே. (20)

குழந்தை.—அடே ! அடே ! சண்டாளாகளே ! என் அப்பாவை எங்கே கொண்டுபோறையள் ?

சாருத.—குழந்தாய் !

கரவீர மாலைகண்டங் கழுவொரு தோளிற் றூங்கி
பரிவுசெய் சோகநெஞ்சிற படைத்தயான் § பசுபந் தக்குக்
$ கருமைகொ ளாடுகொண்டு போதல்போற் கொலைக் களத்துக்
கிருமையு மிழநததாலே யீர்த்தெனை யேகா நின்றூர். (21)

சண்டாளர்.—குளந்தையே !

புலையர்குலத் திற்பிறந்தே மெனினு நாங்கள்
புலையரல்லேம் ‖ புலவர்தமக் கிடும்பை யாற்றும்
நிலைமையுற்றோ ரெவரவரே நிலத்தில நாளும்
நீங்காத பாவியராய் ¶ நீச ராவார். (22)

குழந்தை.—என் அப்பாவை யேன் கொல்லுறீர் ?

சண்டாளர்.—ஓ சிரஞ்சீவி ! இந்தக்காரியத்தில் இராசாவுடைய கட்டளையே குறறவாளி ; நாங்களலல.

---

† வானேறு=இடி. ‡ இவவு=இழிவு. § பசுபந்தம்=ஓர்வகை யாகம்.
$ கருமைகொளாடு=காராடு. ‖ புலவர்=பெரியாருக்காகு பெயர்.
¶ நீசர்=சண்டாளர்.

குழந்தை.—என்னைக் கொல்லு; என் அப்பாவை விடு.

சண்டாளர்.—சிரஞ்சீவியே! இப்படிச் சொல்லுகிற நீ சிரஞ்சீவாயாக இரு.

சாருத.—[கண்ணீர் சொரியக் குழந்தையைக் கழுத்திலணைத்து]

முதுநாட்டின் முழுப்பயனும் புதல்வன் செல்வன்
முழுமிடிய னிருவருக்குஞ் சமமே யன்றிச்
சந்தமல † உசீரமல தனியா வாசைத்
தடமார்பிற் றழுவவுறும் பொருளாமன்றே. (23)

(என்று இவ்வங்கத்தின் 21வது செய்யுளைக் கூறிப் பின்னர் இவ்வங்கத்தின் 16வது செய்யுளை சொல்லுகின்றனன்)

விதூஷ.—ஓ சண்டாளர்களே! அன்பன் சாருதத்தனை விட்டு என்னைக் கொல்லுங்கள்.

சாருத.—சாந்தம், பாவம்! [பார்த்துத் தனக்குள்] இப்பொழுது அறிகிறேன். [என்று இவ்வங்கத்தின் 16வது செய்யுளின் பிற்பாதியை யுரைக்கின்றனன், பின்னர் வெளிப்படையாக இவ்வங்கத்தின் 11வது கவியைக் கூறுகின்றனன்)

சண்டாளர்.—எட்டிப்போங்க, ஆரியர்களே! எட்டுங்க.

கூவத்திற் கயிறறுந்த தங்கச் செம்பு
குளிர்நீரின் மூழ்குதல்போ லபவா தத்தாற்
‡ சீவபற் றொழிந்தவிந்த மனிதன் றன்னைச்
சீர்பதியீர் ஏனீங்கள் பார்க்கின் றீரே? (24)

சாருத.—[சோகத்தோடு] இவ்வங்கத்தின் 13ங்கவியை யுரைக்கின்றான்.

இரண்டாவது சண்டா.—அடே! மறுபடியுங் கொலையைப் பயிரங்கப்படுத்து [முதற்சண்டாளன் அவ்விதஞ் செய்கின்றனன்].

---

† உசீரம்=சந்தநத்திற் கலக்கப்படும் ஓர் நறுமணப்பூஞ்செடியின் வேர், வெட்டிவேருமாம். சந்தனக்கலவை யென்பாருமுளர்.

‡ சீவப்பற்று=உயிராசை.

சாருத.—

துயரத்தான் மாயடாது தொன்னிலையின்
றிழிந்ததனாற் சொலுயபேறிபபோழ்
துயிரிழக்க வருங்கொலையே உவரிந்த
அறிக்கையிடல உளந்துக னெறும்
பயிலவிலாப் பெருமபீழை விளக்கின்ற
பைந்தொடியங் கருங்கட் பாவை
யயிலிடத்தி லெனகையாற் கொலையுணடா
ளெனக்கேட்க லாயிற்றேலோ! (25)

(பின்னர் உபரிகையில் விலஙகிடப்பட்டிருந்த ஸ்தாவரகன் பிரவேசிக்கிறான்).

ஸ்தாவர.—[பகிரங்கப் படுத்தலைக் கேட்டுத்துயரக்குறிகளோடு] என்ன! நிரபராதியான சாருதத்தனைக் கொலை செய்கிறாங்களே! என எசமான எனகரு விலங்கிட்டிருக்கிறான; இருக்கட்டும; கத்துகிறேன; கேளுங்கள் ஆரியர்களே! கேளுங்கள், பாவியாகிய நான் வண்டி மாறாட்டத்தாற், புஷ்பகரண்டகமென்கிற பாளுந்தோட்டத்திலிருந்து, வசந்த சேனையைக்கொண்டாங்தேன்; அப்போழுது என்னிடத்திற் பிரியம்வைக்கவில்லையா எனறு கை, கயிறு. வலக்காரங்களால் அவளை என் எசமான் கொலை பண்ணினான்; இந்த ஆரியரால் அல்ல; என்ன! நீண்ட தூரமாக இருத்தலால ஒருவன காதிலும படவிலலை; இப்போது என்ன செய்வேன்! நான் கீளே விழுகிறேன் [யோசித்து] இந்த மாதிரி பண்ணினால் ஆரிய சாருததத்தனைக் கொல்லமாட்டாங்க; இருக்கட்டும, இந்த மாடியிலிருந்து இடிந்த சன்னலின் வழியாக நான் கீளே விழுகிறேன்; நான சாதல் நல்லது; நல்ல குலத்திற் பிறந்தவைகளாகிற பறவைகட்கு, வாசஸ்தான மரமாகிய ஆரியசாருதத்தர் இறத்தல, ஏற்றதல்ல; இந்த மாதிரி நான் செத்தால் எனக்குப் பரலோகங்கிடைக்கும். [இவ்விதமவன் விழுந்து] யானிறக்கவில்லை; ஆச்சரியம! விலங்கும் முறிந்திட்டது; சண்டாளன் அறிக்கை செய்யுஞ் சத்தத்

சாருத.—[இரக்கத்தோடு] அடைக்கலம் புகுந்தவனுக்கு அபயங் கொடுத்தேன்.

சர்வில.—[கோவத்தோடு] ஆ! ஆ! இவனைச் சாருதத்தன் பக்கலிலிருந்து அப்புறப்படுத்துங்கள் [சாருதத்தனைப்பார்த்து] இந்தப் பாவியை யாது செய்யலாம் சொல்லும்.

இவன்றனை யிறுக்கிக்கட்டி
யீர்த்திடலாகுங் கொல்லோ?
இவன்றனைக் கடிப்பானையை
யேவிட லாகுங் கொல்லோ?
இவன்றனைக் கொடியசூலத் †
தேற்றிட லாகுங் கொலலோ?
இவன்றனை வாளாலவெட்டி
யிழுத்திட லாகுங் கொல்லோ? (53)

சாருத.—நான் சொல்லும் வண்ணஞ் செய்வீரா?

சர்வில.—அதிலென்ன சந்தேகம்!

சகார.—பட்டாரக! சாருதத்த! பாதம் புகுந்தேன்; என்னைக் காப்பாற்றும், காப்பாற்றும்! உமக்கு எது தகுதியோ அதைச்செய்யும; இனி இவ்விதஞ் செய்யேன்.

[திரைக்குள்] நகரமாந்தர்காள்! சொல்லுங்கள்; எதற்காக இந்தப் பாவி உயிருடனிருக்கின்றனன்—[வசந்தசேனை சாருதத்தன் கழுத்திற் போட்டிருநத கரவீரமலர் மாலையைக கழற்றிச சகாரன் கழுத்திற் போடுகின்றனள்].

சகார.—கருப்பதாசிமகளே! தயைசெய், தயைசெய்! இனிக் கொல்லேன், ஆகையால் என்னைக்காத்தருள்.

சர்வில.—அடே! அடே! கொண்டு போங்கள்! ஆரியசாருதத்தரே! இந்தப்பாவியை யாதுசெய்யலாம்! கட்டளையிடும்.

† சூலம்=கழுமரத்திற்காகுபெயர்.

தைத் தேடிப்போகிறேன் ; [பார்த்துப்போய்] அகோசண்டாளர்களே ! பாதைவிடுங்க, பாதைவிடுங்க.

சண்டாளர்.—அடே ! வழிவிடக்கேக்கிறியே ; நீ யாரு ?

ஸ்தாவ.—இவன் முன்சொன்ன ——— இந்த அடையாள வாக்கியங்களைச் சொல்லுகிறான்.

சாருத.—

பிழைப்பில்லா நமபாசப் பிணிப்புடன்யான் † பேதுறுகால்
மழையின்றிச் சோர்பயிர்க்கு மைம்மேகம் போல்வந்தான்.

நீங்கள் கேட்டிலிரோ ?

சாவதி லச்சமோ ரணுவுஞ் சார்கிலேன்
‡ யாவுமென் சீர்த்திமா நிந்தை யண்ணிய
பூவினிற் சுத்தரு மெற்குப் புத்திரன்
கூவியே பிறந்தது போலுங் § கூற்றமே. (27)

அன்றியும்

யான்பகைத் திடலுறுதா
னற்பமும புந்தி யில்லான்
றான் $ சடுக் கோற்போல் நிந்தை
யாளனாற் பழிப்புச் சார்ந்தேன். (28)

சண்டாளர்.—சாவரகா ! நீ சொல்றியே, அது சத்தியமா ?

சேடன்.—சத்தியம் "ஒருத்தருக்கும் நீ சொல்லாதே" என்று என்காலில் விலங்கிட்டு, என்னை மாடியில் வச்சிருந்தான்.

சகார.—[பிரவேசித்துக் களிப்போடு]

கைப்பும் புளிப்புங் கலந்த மாங்கிஷங்
கறிகள் குழம்பு பலவகை மச்சஞ்
சம்பா அரிசிச் சாதஞ் சக்கரைப்
பொங்கலெலாமென் னிலிற் புசித்தேனே. (29)

† பேது=மதிமயக்கம். ‡ என்சீர்த்தியாவும் எனக்கூட்டுக.

§ கூற்றம்=சொல், இங்குஸ்தாவரக சேடன்———அடையாள வாக்கியங்களைச் சுட்டிற்று. கூற்று, அம்சாரியை யென்பாருமுளர்.

$ கடுக்கோல்=நஞ்சுதோய்ந்த அம்பு.

[காதுகொடுத்துக்கேட்டு] உடைஞ்ச வெங்கலம் போலக் கணகணவென்று சண்டாளர்களுடைய பேச்சுக்களுங் கேன்க்கிறதுகள்; ஆகையால் தரித்திர சாருதத்தனைக் கொலைக்களத்துக்குக் கொண்டு போகிறார்களென்று எண்ணுகிறேன்; ஆகையால் நான் போய்ப் பாக்கறேன்; சத்துருப்பயல் சாதல் எனக்குச் சந்தோசம்; பகையாளி கொல்லப்படுவதை எவன் பார்க்கிறானோ, அவனுக்குக் கண்வலி வராது என்று எனக்குக் கேள்வி; கஞ்சுக்குவைக்குள் அகப்பட்ட புழுவைப்போல, வழிதேடிக் கொண்டிருக்கையில் அந்தத் தரித்திர சாருதத்தனை நாசம் பண்ணினேன்; இப்பொழுது என்மேல் மாடி உப்பரிகையிலேறிக்கொண்டு நான் செய்த பராக்கிரமத்தைப் பார்க்கிறேன்; [அப்படியே செய்து பார்த்து] ஹீ! ஹீ! ஹீ! அந்தத் தரித்திர சாருதத்தனைக் கொலைக்களத்துக்குக் கொண்டுபோகிறான்; அதற்கு இவ்வளவு சநக்கூட்டமா! எந்த வேளையும் மேலான வனாகவும், எசமானாகவு மிருக்கிற என்னை யொத்த மனிதன் கொலைக்காகக் கொண்டுபோகப்பட்டால் அந்தச் சமயத்தில் இன்னும் எவ்வளவு கூட்டங்கூடும்! [பார்த்து] என்ன! இவன் புதுக்காளைபோல் அலங்கரிக்கப்பட்டுக் கொண்டு போகப்படுகின்றனன்; இப்பொழுது யாது காரணத்தால் என்னுடைய மாடிப்பக்கத்திற் சத்தம் நின்றுவிட்டது? நிறுத்தப்பட்டது [பார்த்து] என்ன! ஸ்தாவரக சேடன் இங்கில்லை; இந்தப்பயல் இவிடத்தை விட்டுப் போனால் இரகசியத்தை வெளிவிடுவானே! ஆகையால் அவனைத்தேடுறேன் [என்று இறங்கிப்போகிறான்]

சேட.—[பார்த்து] எசமாங்களே! இதோ அவன் வந்திட்டான்.

சண்டாளர்.—

எட்டுங்க வேகு மிவ்வளி விடுங்க
சட்டமேய் கதவைச் சாத்துங்க நாவைக்
கட்டுங்க தீமை கனிந்த கொம்புகொள்
துட்டமாக் காளை தொடர்தல்கண் டிலிரோ! (30)

சகார.—அடே! பாதை விடுங்க (அருகிற் சென்று) ஸ்தாவரக! சேட! புத்திரக! வா, போவோம!

சேட.—ஈ ஈ ஈ; கொடியவரே! வசந்தசேனையைக்கொன்றும், மரந்திருத்தியடையவில்லையா? அப்பொழுது அடுத்தவனை அஞ்சு கற்பகமரங்கள் போலாதரிக்கும ஆரிய சாருதத்தனை அழித்துப்போடத் தீர்மானித்தீரோ?

சகார.—மாணிக்கக்குடம்போன்ற நான பெண் கொலை செய்வேனு?

எல்லோரும்.—அதோ! உன்னுற் கொலையுண்டாள்; ஆரியசாருதத்தனுல அலல.

சகார.—இந்தவிதஞ் சொன்னவன் யார?

எல்லோரும்.—[சேடனைப்பார்த்து] இதோ இந்தச் சாது.

சகார.—[தனக்குள் பயங்கொண்டு] ஐயய்யோ! ஐயய்யோ! ஸ்தாவரகசேடனை நான் சரியாய் விலங்கிடவில்லை; நான் செய்த கெட்ட செய்கைக்கு இவன் சாட்சியாச்சே! [யோசித்து] இப்படிச்செய்கிறேன் [வெளிப்படையாக] ஓய் பட்டாரகர்களே! பொய், இந்தச்சேடன் தங்கத்தைத் திருடினுன்; அதற்காக நான் அடிச்சேன்; கொல்லினேன்; விலங்கிட்டேன்; இவன்எனக்குப்பகை; இவன்சொல்லுகிறது உண்மையாமா? [இரகசியமாய்ச் சேடனுக்குக் கைக்கடகத்தைக் கழற்றிக்கொடுத்து, மெல்லியகுரலோடு] ஸ்தாவரக! சேட! குழந்தை! இதை வாங்கிக்கொண்டு, வேறு விதமாகச்சொல்லு.

சேட.—[வாங்கிக்கொண்டு] பட்டாரகர்களே! பாருங்க, பாருங்க, எனக்குத் தங்கத்தைக் கொடுத்து மயக்குகிறுர்.

சகார.—[கடகத்தைப் பிடுங்கிக்கொண்டு] இதுதான் அந்தத்தங்கம், இதற்காகத்தானிவனைத் தொழுவிலிட்டேன் [கோவத்தோடு] ஓ சண்டாளர்களே! இவனை நான் தங்கசாலையில் வேலையில் வச்சேன்; இவன் தங்கத்தைத் திருடினுன்; கொல்லி

னேன்; அடிச்சேன்; உங்களுக்கு நம்பிக்கை யில்லாவிட்டால் அவன் முதுகைப்பாருங்கள்.

சண்டாளர்,—[பார்த்து] நண்டாய்ச் சொல்லினர்; கோவம் உள்ளவன் எதுதான் செய்யான்!

சேட.—ஐயய்யோ! சேவைத்தொழில் இப்படியாகவா விருக்குது? நிசத்தை ஒருத்தரும் நம்பார் [துயரத்தோடு] ஆரிய சாருதத்தரே! என்னுலானது இவ்வளவே [என்று பாதங்களில் விழுகிருன்]

சாருத.—[துக்கத்தோடு]

இழிவுற்ரூன்மாட் டிரக்கமுற்ரூ
 † யேதொன்றில்லா தீங்குற்ற
வழுவில்கிளைஞ! புண்ணியனே!
 மருதென்சொல்லை யெழுந்திருநீ
பழுதுபடைத்த வெனைவிடுப்பான்
 பாரமுயற்சி புரிந்தனையால்
நழுவில்விதிதா னண்ணவிலை
 நட்டோய்! நன்கே யாற்றினையே. (31)

சண்டா.—பட்டகரே! இந்தச்சேடனை யடித்து வெளிப்படுத்துங்க.

சகார.—அடே! தொலைந்து போடா! தொலை [என்று வெளியில் வெருட்டுகிருன்] அடே! சண்டாளர்களே! ஏன் தாமதஞ்செய்கிறீர்கள். இவனைக் கொல்லுங்கள்.

சண்டா.—அவசரப்படாமல் நீங்களே கொல்லுங்க.

குழந்தை.—அடே சண்டாளா! என்னைக்கொல்லு; என் அப்பாவை விடு.

சகார.—இவன் மகனேடும் இவனைக்கொல்லுங்கள்.

---

† ஏது = காரணம்.

**சாருத.**—இந்த மூடனுக்கு எல்லாந்தரும், குழந்தாய்! உனது அம்மாளிடம் போ!

**குழந்தை.**—நான போய் என்ன செய்கிறது?

**சாருத.**—

இக்கணமே யிப்பூணு நூலை யேற்றே
யில்லேகி யுனையீன்றா ளிடத்தில் வைகு
நக்குமெனைத் தந்தையென வுற்ற காலே
நாடுகின்ற தோடமுனை நலியா தன்றோ? (32)

நண்ப! இவனை யழைத்துப் போ.

**விதூஷ.**—ஓ மித்திரா! உம்மைவிட்டுப்பிரிந்தும் நான் உயிரைச்சுமப்பேனென்று எண்ணுகிறீரா என்ன?

**சாருத.**—சகாவே! சுவேச்சையாக விருக்கிற நீ பிராணத்தியாகஞ் செய்தல சரியல்லவே!

**விதூஷ.**—[தனக்குள்] இது யுக்தமே; பிரியநண்பனைப் பிரிந்து சீவனைத்தாங்கியிருக்க நான் சக்தனல்லேன்; ஆகையாற் பிராமணியிடத்திற் குழந்தையை விட்டு, என் பிராணத்தியாகஞ் செய்து, எனது நண்பனைப் பின்றொடருவேன் [வெளிப்படையாக] ஓ மித்திரா! சீக்கிரங் கொண்டுபோய் விடுகிறேன்; [என்று கழுத்தைக் கட்டிக்கொண்டு பிறகு காலில் விழுகிறான்; குழந்தையும் அழுதுகொண்டு விழுகிறான்]

**சகார.**—என்னடா! மகனுடன் சாருதத்தனைக் கொல்லச்சொன்னேனே!

**சாருத.**—[அச்சப்படுகிறான்]

**சண்டாளர்.**—மகனோடு சாருதத்தனைக் கொலலுதலுக்கு இராசா கட்டளையில்லை; வெளியிற் போடா குளந்தாய்! வெளியிலேபோ. [என்று வெளிப்படுத்துகின்றனர்.] பகிரங்கப் படுத்தவேண்டிய இடங்களில் இது மூன்றாவதிடம். (மறுபடியும் பறையடித்துப் பிரசித்தப் படுத்துகின்றனர்]

சகார.—[தனக்குள்] என்னமனிதர்கள், சநங்கள் நம்பவில்லையே! [வெளிப்படையாக] அட சாருதத்தப்பயலே! இந்தப்பட்டணச்சநங்கள் நம்பவில்லை. "நான்தான் வசந்தசேனையைக் கொன்றேன்" என்று உன்னுடைய சொந்த நாவினாற் சொல்லடா! [சாருதத்தன் மௌனமாக விருக்கிறான்] அடே! சண்டாளமனுசா! இந்தச் சாருதத்தப்பயல் சொல்லமாட்டான்; தம்பட்டமடிக்கும் பழைய மூங்கிற்கோலால் அவனையடித்துச் சொல்லும்படி செய்.

சண்டாளர்.—[அடிக்கும் பொருட்டுக் கையை ஓங்கி] அட! சாருதத்தா சொல்லு.

சாருத.—[துயரமடைந்து]

துயரெனு மகாதத் தெண்டிரை வீழ்ந்துந்
துணுக்கம துற்றிலேன் மனத்தி
லுயர்புவி மாந்த ருரையப வாத
† வுதாசந னெரிக்கிற னதுவே
பயந்தரு கின்ற பாரினி லென்றன்
பண்மொழிப் பாவையை யானே
உயிரறக் கொன்றேன் என்றுரை யாட
வுற்றதா லென்விதி யென்னே. (33)

சகார.—[மறுபடி] அட! சண்டாளமனுசா! இந்தச் சாருதத்தப்பயல் சொல்லமாட்டான்; தம்பட்டமடிக்கும் பழையமூங்கிற்கோலால் இவனை யடித்துச்சொல்லும்படி செய்.

சாருத.—ஓ நகரவாசிகளே! [என்று ஒன்பதாமங்கத்தின் "பரவுல கமறியாத" என்ற 32ம் பாடலையும் "இருமையுமிழந்து நின்ற" என்ற 40ம் பாடலையுஞ் சொல்லுகின்றனன்]

சகார.—கொல்லப்பட்டான்.

சாருத.—அப்படியே யிருக்கட்டும்.

---

† உதாசநன்=நெருப்பு, வடசொல், அவிர்ப்பாகத்தை யுண்பவனென்பது பொருள்.

முதற்சண்டா.—அடே! இன்று கொலைசெய்யும் முறை உன்னது.

2வது சண்டா.—அடே! உன்னது.

முதற்சண்டா.—அடே! சீட்டுப்போட்டுப்பார்ப்பம் [என்று பலவாருகச சீட்டுப்போட்டுப் பார்த்து] அடே! கொல்லுகிற முறை என்னதாகவிருந்தால், இவன் ஒரு முகூர்த்தகாலமிருக்கட்டும்.

2வது சண்டா.—யேனடா?

முதற்சண்டா.—"அட! அப்பா வீரக! உனக்குக் கொலைசெய்யும் முறை வந்தால் சீக்கிரங்கொல்லாதே" என்று என் அப்பன் சுர்க்கத்துக்குப் போனபொளுது சொல்லிருரு.

2வது சண்டா.—அடே! என்ன காரணத்துக்காகவடா?

முதற்சண்டா.—ஒருக்கால், எவனுவது நல்லவனெருவன் பணத்தைக் கொடுத்துக் கொலைக்குள்ளானவனை மீட்பான்; ஒருவேளை ராசாவுக்குப் பிள்ளை பிறக்கும்; அந்தப்பிள்ளையின் சுகத்திற்காகக் கொலைத்தண்டனை யடைந்தவரெல்லாம் விடுதலை யடைவாங்க; ஒருவேளை ஆனை அறுத்துக்கிட்டுக் கிளமபினுல், அந்த அவசரத்திற் கொலைத்தீர்ப்புப் பெத்தவங்க விடுதலை யடைவாங்க; ஒருக்கால் ராசா மாறுவான்; அதனுலுங் கொலைக்குள்ளானவங்க விடுதலையாவாங்க.

சகார.—என்ன! அரசன் மாறுவானு என்ன?

சண்டா.—அடே! கொலை செய்யவேண்டிய முறையைப்பற்றிச் சீட்டுப்போடுவோம்.

சகார.—அடே! சாருதத்தனை விரைவிற் கொல்லுங்களடா. [என்று சொல்லிச சேடன் கையைப்பிடித்து ஏகாந்தமாக விருக்கின்றனன்.)

சண்டா.—ஆரியசாருதத்தனே! இராசா கட்டளையே குற்றவாளி, நாங்களல்ல, நீ நினைக்கவேண்டுதலை நினைத்துக் கொள்ளு.

சாருத.—

தீதிழைத்த வென்னூழாற் றேர்நீதி பதிதீர்ப்புக்
கோதுளனு யாற்றுகினுங் கூடுமொரு வழியுளதேன்
மாதுநல்லாள் வானுலகின் மற்றையிடத் திருந்தாலு
மோதுமவ ளொருவெளியா லுற்ற † களங் கோட்டுவனே.

ஓய்! நான் எங்குப் போகவேண்டுவது?

சண்டா.—[முன்னர்க்காட்டி] அடே! தெக்குச் சுடலை யிதோ தென்படுது; அதைக்கண்டபொழுதே கொலையாவானுக்குச் சீவன்தானே போயிடும்; பாரு, பாரு.

களுவேற்ற வுடலத்திற் கடும்பாதி வீள்ந்துளதை
எளுநரிகள் வாய்கவ்வி யெயிறளுத்தி யீர்க்கின்ற
வளுவாமே களுத்தொங்கு மற்றுமொரு பாதியிது
விளுமட்ட காசஞ்செய் வேடமெனக் காண்கிண்ட.

சாருத.—மந்தபாக்கியனான நான் நாசமாயினேன். [என்று துக்க முற்றுட்காருகின்றனன்]

சகார.—நான் போகமாட்டேன்; சாருதத்தன் கொலைசெய்யப் படுவதைப் பார்க்கப்போகிறேன். [போய்ப்பார்த்து] என்னடா! உட்கார்ந்து விட்டான்?

சண்டாளர்.—சாருதத்தனே! பயப்படுகிறியுமா என்ன?

சாருத.—[விரைவில் எழுந்து] மூர்க்கர்காள்! [இவ்வங்கத்தின் "சாவதிலச்சம்" என்னும் 27 ம் பாடலைச்சொல்லுகிறான்.]

சண்டாளர்.—ஐயசாருதத்த! ஆகாழத்திலிருக்கிற சூரியனுஞ் சந்திரனுந் துன்பமடையுறாங்க; சாவினில் அச்சங்கொண்டமனிசர்கட்குக் கேட்பானேன்!

உலகினி லுயர்ந்தோர் தாள்வார்
தாள்ந்தவ ருயர்வார் நாற்ற
மலிசவந் தனக்குந் தாள்த
லுயர்தலும் ‡ வழங்கு வாரால். (36)

† களங்கம்=குற்றம், களங்கு கடைக்குறை. ‡ வழங்கல்=சொல்லல்.

இவைகளையும்மனத்தி லிருத்தித் தேறுங்காணும் [இரண்டாவதுசண்டாளனைப்பார்த்துப்] பிரசித்தப்படுத்தவேண்டு மிடங்களில் இது நாலாவது இடமடோ! இந்தாலே அறிக்கை யிடுவோமடா! (மறுபடியும் பகிரங்கப் படுத்துகின்றனர்)

சாருத.—இவ்வங்கத்தின் "மதியொளிநேர்" என்ற 13ஞ் செய்யுளைச் சொல்லுகின்றனன்.

(பிறகு சோகத்துடன் வசந்தசேனையுஞ் சந்நியாசியும் பிரவேசம்)

சந்நியாசி.—அகோ! ஆச்சரியம்! மிகவுஞ் சோர்வடைந்திருக்கும் வசந்தசேனையைத் தேற்றி யழைத்துக்கொண்டு, சந்நியாஸத்தால் அநுக்கிரகம் பெற்றவனாயினேன்; உபாசிகையே! யான் உன்னை எங்கு அழைத்துக்கொண்டு போதல் வேண்டும்.

வசந்த.—ஆரியசாருதத்தர் வீட்டிற்கு; அவருடைய கடாட்சத்தால், மானோந்திய சந்திர தரிசநமான செவ்வல்லியைப் போல, நான் ஆநந்த பரவசை யாகும்படி ஆற்றுக.

சந்நியாசி.—எந்த வழியாகப்போவோம்! [யோசித்து] இராஜவீதி வழியாகவே போவேன்; உபாசிகையே! வா, இது இராஜ வீதி. [காதுகொடுத்து] இந்த இராஜமார்க்கத்திற் பேரிரைச்சல் கேட்கப்படுகிறது.

வசந்த.—[முன்னர்ப் பார்த்து] முன்பாக என்ன பெருங் கூட்டம்; ஆரியரே! இஃதென்னவென்று அறியக்கடவீர்; பூமியானது மிகுந்த பாரத்தால் ஆக்கிரமிக்கப் பட்டிருக்கிறது; அதனால் உச்சயினி நகரம் ஒரு பக்கத்தில் உயர்ந்திருக்கிறது.

சண்டா.—இது கடைசிப்பயிரங்க இடம், பறையடியுங்க. அடே! அறிக்கையிடுங்க. [அப்படியே செய்து] ஓ சாருதத்தனே! தயாராகவிரு, அஞ்சாதே, விரைவிற் கொல்வோம்.

சாருத.—தேவர்கள் சேமமே செய்கிறவர்கள்.

சந்நியாசி.—[இதைக்கேட்டுக்கேட்டு] உபாசிகையே! சாருதத்தன் உன்னைக் கொலைசெய்தானென்று, சாருதத்தனைக் கொலை செய்யக் கொண்டுபோகின்றனர்.

வசந்த.—[திடீரென்று கேட்டு] ஐயய்யோ! ஐயய்யோ! கெட்ட அதிருஷ்டக்காரியான என் நிமித்தம ஆரியசாருதத்தர் கொலை யுண்ணப்போகிறாரா என்ன? ஓய்! சீக்கிரம் வழி யைக்காட்டும்.

சந்நியாசி.—புத்தோபாஸிகையே! உயிருடனிருக்கிற ஆரியசாரு தத்தரைத்தேற்றும் பொருட்டுச், சீக்கிரமாகப்போ! போ! போ! ஆரியர்காள்! வழிவிடுங்கள், வழிவிடுங்கள்.

வசந்த.—மார்க்கம், வழி, வழி!

சண்டா.—ஆரிய சாருதத்தா! எசமான் உத்தரவுதான் குற்ற வாளி, ஆகையால் வேண்டுபவைகளை நினைத்துக்கொள்ளு.

சாருத.—மிருத்துச்சொல்லுதலாற் பயனென்னை? என்று இவ்வ ங்கத்தின் "தீதிழைத்த" என்ற 34ம் பாடலைச் சொல்லு கின்றனன்.

சண்டாளர்.—[கத்தியைத்தூக்கி] ஆருசாரியதத்தனே! தலை நிமி ர்ந்து நேராக நிலலு, ஒரே வெட்டில் உன்னைக் கொலவிச் சொக்கத்தில் உன்னைவிடுகிறோம்.

சாருத.—[அப்படியே நிற்கிறான்]

ஒரு சண்டாளன்.—[வெட்டமுயலுகிறான், கத்தி கையில்நின்றும் நழுவு கிறது] ஹீ ஹீ! இதென்ன?

கடுங்கோவத் தாற்களற்றிக் கைமுட்டி யாற்பிடியிற்
பிடியுற்றே யிருக்குங்காற் பெருங்கொடுமை யிடியொத்த
† கடிகத்தி கைநளுவிக் காரணமொன் றில்லாமற்
புடவிதனில் விளுந்ததிது புதுமை! மிகப் புதுமை! (37)

† கடி = கூர்மை "கடியென்கிளவி, விரைவே கூர்மை காப்பே புது மை * * * கும்மே" தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரி யியல், சூத்திரம் 87.

இது இப்படி விருந்தபடியால், ஆரியசாருதத்தன் ஆபத்துக்குள்ளாகமாட்டான் என்றுநினைக்கிறேன்; பகவதி காளியாயி! தயவுபண்ணு, தயவுபண்ணு; சாருதத்தர் விடுதலையடைவாரா? அப்போது சண்டாளர் சாதி உன்னால் அநுக்கிரகஞ் செய்யப்பட்டதாகுமே.

மற்றொரு சண்டாளன்.—கட்டளைப்படி நடப்பமடா!

முதற்சண்டாளன்.—இருக்கட்டும், அப்படியே செய்வோம் [என்று இருவரும் சாருதத்தனைக் கழுவேற்ற எத்தனிக்கின்றனர்]

சாருத.—இவ்வங்கத்தின் "இநிலைமுத்த" என்ற 34ம், பாடலைச் சொல்லுகின்றனன்.

சந்நியாசியும் வசந்தசேனையும் }.—[பார்த்து] ஆரியர்காள்! வேண்டாம், வேண்டாம்.

வசந்த.—ஆரியர்காள்! யார் நிமித்தமாக இவர் கொலையடையவிருக்கின்றனரோ? அந்தத் துரதிர்ஷ்டையாகிய நான் இதோ இருக்கின்றேன்.

சண்டா.—[பார்த்து].

வேய்த்தோளில் மயிர்புரள விடுதியிவள் விடுதியென
வாயுரைத்துக் கைதூக்கி வருந்திவரு பவள் யாரே? (39)

வசந்த.—ஆரியசாருதத்த! என்ன இது? [என்று மார்பில் விழுகிறாள்].

சந்நியாசி.—ஆரியசாருதத்த! இஃதென்னே? [என்று பாதங்களில் விழுகிறான்].

சண்டா.—[அச்சத்துடன் விலகி] என்னடா வசந்தசேனை! நல்ல காலமடா! இந்தச் சாதுவை நாம் கொல்லவில்லை.

சந்நியாசி.—[எழுந்து] அடே! சாருதத்தர் சீவித்திருக்கின்றனரா?

சண்டா.—நூறு வயது உயிருடனிருப்பார்.

வசந்த.—[*ஆநந்தத்துடன்*] என் உயிருந் திரும்பிவந்தது.

சண்டா.—*இந்தச் செய்தியை வேள்விச்சாலையிலிருக்கின்ற ராசாவுக்குச் சொல்லுவம்* [*என்று சென்றனர்*].

சகார.—[*வசந்தசேனையைப் பார்த்து மிகவும் நடுங்கி*] *ஆச்சரியம்! யாராலிவள் பிழைத்தாள்? என் பிராணவாயுக்கள் வெளியிற் போகின்றன; இருக்கட்டும், ஓடிப்போவேன்* [*என்று ஓடலுற்றான்*].

சண்டா.—[*திரும்பிவந்து*] *அடே! யாரால் அவள் கொல்லப்பட்டாளோ, அவனைக்கொல்லும்படி நமக்கு ராசாகட்டளை; ஆகையால் ராசன் மச்சானைப் பின்றொடர்வோம்.*

சாருத.—[*ஆச்சரியமுற்று*].

*† நாந்தக மேற்றாக்குண்டு நடுவுள கூற்றின்வாய் யான்*
*போந்துள தருணந்தன்னிற் புவிமிசை மழையே யின்றிச்*
*‡ சேந்துதாம் வாடும்பைங்கூழ் செழிப்புறக் கார்மே கம்போ*
*லாந்தகை மரீஇயிவ்வண்ண மடைந்தவள் § யார்யார் யாரே!*

*இவளிரண்டா வதுவசந்த சேனைஎனும் பெண்மணியா?*
*அவள்துறக்க நாட்டையோரீஇ யவனிதலத் துற்றனளா?*
*அவசமுறு மென்மனந்தா னவளிவளென் றறிகிறதா?*
*தவவசந்த சேனைமணிற் சாகாது தங்கினளா?* (40)

† நாந்தகம்=கத்தி "நாந்தக மின்னும் வீசி நராந்தகன் நடந்து வந்தான்" இராமாயணம், உயுத்தகாண்டம், அதிகாயன் வதைப் படலம், செய்யுள் 209.

‡ சேந்து=சிவந்து "சேந்தோத்தலர்ந்த செழுந்தாமரை யன்னவாட்கண்" சீவகசிந்தாமணி, பதிகம், செய்யுள் 3.

§ யார் யார் யார் என்னும் அடுக்கு விரைவுப்பொருட்டு. "விரைசொல்லடுக்கே மூன்று வரம் பாகும்" தொல்காப்பியம், எச்சவியல் 28ஞ்சூத்திரம்.

என்னுயி ரளிக்கவாசை மேவிய யிருந்தா † னத்தைத்
துன்னிய வவளேபின்னர்த் துணிந்துயர் திருக்கின்றாளா ?
அன்னவ ளுருவம்போன்ற படிவத்தை யடைந்தாளா யோர்
பொன்மயப் பாவையிங்குப் புக்குநின் றனளா ? என்னே !

வசந்த.—[கண்ணீர் சொரிய எழுந்து, பாதங்களில் வீழ்ந்து] ஆரிய சாருதத்த ! உமக்குத்தகாத இத்தீங்கு யாரால் விளைக்கப் பட்டதோ, அந்தப் பாவி நானே !

[திரைக்குள்] ஆச்சரியம் ! ஆச்சரியம் !! வசந்தசேனை உயிருடனிருக்கின்றனள். [என்று எல்லாரும் சொல்லுகின்றனர்].

சாருத.—[கேட்டு விரைவாயெழுந்து, கையாற் றேகத்தைத் தடவி, ஆநந்த பரவசனாகிக் கண்களைமூடியபடியே, களிப்பின் மிகுதியாற் றழுதழுத்த வார்த்தையுடன்] பிரியே ! வசந்தசேனைதானோ நீ ?

வசந்த.—அந்தத் துர்ப்பாக்கியை யானே !

சாருத.—[பார்த்து ஆநந்தத்தோடு] என்ன வசந்தசேனைதானோ நீ ? [களிப்பு மேலிட்டால்]

காலனூர் கையுறு வேனைக் காந்துகண்
‡ ணாலியாற் றனதட மறநனைத்தநீ
மேலுறு முயிர்தரு விச்சை யென்னவே
மாலுற எவ்வண § மகியில் வந்தனை ? (42)

பிரியே ! வசந்தசேனை !

நின்பொருட்டால் விழுந்தழிந்த நிலையில்தேக
நின்செயலாற் றன்னுயிரை நிலைக்கப்பெற்ற
தன்புமிகும் பிரியர்களின் சேர்க்கையாட்சி
யம்மம்ம ! யாதென்று புகழ்வேன்மிக்க

---

† தானம்=சுவர்க்கம் “ உயர்நிலையுலகம் புத்தேளுலகுபொன்னுலகு தானம் ” சூடாமணிநிகண்டு.

‡ ஆலி=கண்ணீர். § மகி=பூமி.

வென்பிரத்த நரம்புபுலா லியைந்தவிந்த
விருங்குரம்பை தனையிழந்தோனெளிதாய் $ மீட்டும்
மன்புணரி சூழ்புவியி லுயிரைப்பெற்று
மகிழ்ச்சியுற விருத்தலுண்டோ ? ‖ வடுக்கண்மானே !

மேலும் காதலீ ! பாரு.

என்னிடை யுடீஇய வரத்தமே வாடை
இருமய மரமலர் மாலை
யன்புறு மணப்பெண் ணடையுமோர் ¶ வரன்ற
னுடையு மாரமும் போன்ற
நன்புவி நடுங்க வொலிசெயுங் கொடுமை
நண்ணிய கொலைப்பறை யின்று
மன்பதை யுள்ளோர் மனக்களிப் பாற்று
மணப்பறை யரவமே மானும். (44)

வசந்த.—மிக்க தாட்சிணியத்தால் ஆரியர் இவ்விதஞ் செய்யத் துணிந்திரல்லவா ?

சாருத.—காதலீ ! நீ இவ்வண்ணம் வதையுற்றாயென்று—

முற்பகைஞன் வன்மையுற்றான் நரகந்தன்னில்
மூழ்குமந்தத் தீயவனுன் முடிந்தேனந்தோ ! (45)

வசந்த.—[காதைப் பொத்திக்கொண்டு] சாந்தம் ! பாவம் ! அந்த அரசன் மைத்துனனுற் கொலையுண்டேன் !

சாருத.—[சன்னியாசியைப் பார்த்து] இவர் யார் ?

வசந்த.—அந்த அநாரியனுல் உயிரிழந்தேன், இந்த ஆரியரால் உயிர் பெற்றேன்.

---

† மீட்டும்=திரும்பவும்.

‡ வடுக்கண்=மாவடுவின் பிளப்பை யொத்தகண் "வடுப்பிள வனைய கண்ணுள் வல்லவனெழுதப்பட்ட" சீவகசிந்தாமணி, கனகமாலையாரிலம்பகம், செய்யுள் 17.

§ வரன்=மணக்கோலமுற்றோன்.

சாருத.—காரணமின்றி வந்த பெந்துவே! நீர் யார்?

சந்நியாசி.—என்னை ஆரியர் அறியவில்லையா? ஆரியருடைக் கால்களைப்பிடித்தலிற் கவலையுற்றசம்வாஹகன் அல்லவா நான்? சூதாடிகளாற்றுன்பமுற்று, யானறங்களை யடுத்தவனென்ற காரணம்பற்றி, இந்த உபாஸிகை ஆபரணப்பொருளால் என்னை வாங்கினள்; சூதாட்டத்தில் வெறுப்படைந்து, சாக்கியமுனி யாயினேன்; இந்த ஆரியை வண்டிமாற்றத்தாற் புஷ்பகரண்டகமென்கிற சீர்ணோத்தியானத்திற் சென்றனள்; அந்த அநாரியனால் "நீ என்னை மதிக்கிறதில்லை" என்று, கை, கயிறு, பலாத்காரத்தாற் கொல்லப்பட்டாள்; நான் பார்த்தேன்.

(திரைக்குள் கலகல என்ற ஒலியோடு)

தக்கன்வேள்வி சிதைத்ததனி
யிடபக்கொடியோன் றுன்காக்க
மிக்ககிரவுஞ் சம்பிளந்த
விறல்வேன்முருக வேள்காக்க
† அக்குலைப் பதாகையுடை
யவனிமுழுதும் வெளிறியபஞ்
சொக்குஞ்செறுநர்ச் செற்றபுக
ழூறுமாரியகன் வெற்றிகொண்டான். (46)

(சர்விலகன் சரேலென்று பிரவேசம்)

சர்வில.—தீயவேந்தல் பாலகனைச்
செகுத்தேனந்தத் தேயத்திற்
காயுமாரி யகன்றனைப்பூ
வரசாயபிடே கமுமாற்றித்
தூயவவன்றூர் நிகரானை
சுமந்து தலையிற் றுயராழி
தோயுஞ்சாரு தத்தனெனுந்
துணையில்லானை விடுவிப்பேன். (47)

---

† அக்குலையிலை=சங்கின் நிறமுற்றகைலை.

† மிடையும்படையு மந்திரியு
 மேவாக்கோமான் றனைக்கொன்றே
யடையுமாந்தர் யாவரையு
 மாற்றலாற்றிப் பகைவனது
புடவிமுழுதுஞ் சார்வபௌமத்
 துவமானதும்பூந் தருநீழற்
புடையில்வதியும் வலாரிபதம்
 புகுந்தாற்போலப் பொலிந்ததுகாண். (48)

[முன்னர் நோக்கி] இதோ சநங்கள் கூட்டங்கூட்டமாகக் கூடியிருக்கின்றனர்; அந்த இடத்திற்றான் அவரிருத்தல் வேண்டும்; அரசன் ஆரியகனுடைய இந்த முயற்சி ஆரியசாருதத்தர் உயிருடனிருந்து, அதனாற் பிரயோசநப்படுமோ? [மிகுந்தவேகத்தோடு போய்] கொடிய பயல்களே! விலகுங்கள்! [பார்த்து] ஆநந்தத்துடன் சாருதத்தர் வசந்தசேனையோடு சீவித்திருக்கின்றனர் போலும்; நமது இராசனுடைய மனோரதம் பூரணமானதுபோலும்.

‡ மதியுணி § கான்ற முழுமதி போல
 மாத்துயர் மகோததி நின்று
விதியெனு மதிர்ஷ்ட வசத்தினாற் குணங்கள்
 விளங்கிட மாயுநல் லொழுக்கம்
வதியிடமாயு மிருக்குநற் பிரியை
 யாகிய மரக்கலந் தன்னால்
கதுமெனக் கரையைக் கண்டவன் றன்னைக்
 கடைசியாக் காண்டனுற் றேனே. (49)

பெரும்பாதகம் செய்தயான் இவரிடம் எவ்விதம்போவேன்! அல்லது எல்லாரிடத்திலுங் கபடமில்லாமையே சிறந்ததாகும் [அருகிற் சென்று அஞ்சலியோடு வெளிப்படையாய்] ஆரிய சாருதத்தரே!

---

† இந்தச்செய்யுள் முடிபு, முதல் நூற்சுலோக முடிபையேற்றதென்க.
‡ மதியுணி = இராகு. § கான்ற = உமிழ்ந்த.

சாருத.—நீர் யார்?

சர்வில.—

உன்வீட்டிற் கன்னமிட்டே
யுன் † நியாசங் கவர்ந்தனென் யான்
இன்னபெரும் பாவியுனை
திருகமலச் சரண் புகுந்தேன். (50)

சாருத.—தோழ! அங்ஙனங்கூறுதே; உன்னால் நன்மை விளைந்தது; [என்று கழுத்தைக் கட்டிக் கொள்ளுகின்றனன்]

சர்வில.—அன்றியும்,

குலமான வொழுக்கமிலை கூடியநல் லார்யகனால்
விலைப்பசுப்போற் பாலகனும் பூபாலன் விளிவுற்றான். (51)

சாருத.—என்ன?

சர்வில.—

உன்வண்டி மீதூர்ந்துன் னடியுற்றே னெவனவனாற்
றுன்னு ‡ மிட்டிப் பசுப்போலத் தோன்றல்கொலை யுண்டானால்.

சாருத.—சர்விலக! இடைச்சேரியிலிருந்து பிடித்துக் கொணரப்பட்டு, சிறைச்சாலையில் வைக்கப்பட்டு, உன்னால் விடுவிக்கப்பட்ட ஆரியகனென்றவனோ?

சர்வில.—தங்களாற் சொல்லப்பட்டவரே!

சாருத.—நமக்கு மிகுந்த சந்தோஷம்.

சர்வில.—உச்சயினியில் உமது சிநேகிதன் இராஜ்ய பரிபாலநத்தையடைந்தவுடன், வேணுநதிக்கரையிலிருக்கிற குசாவதியில் இந்த இராஜ்யம் விடப்பட்டது; உமது சிநேகிதனுடைய இச்சையை நீர் அங்கீகாரஞ் செய்யவேண்டுவது [திரும்பி] அடே! அடே! அந்தப் பாவியும் அரசன் மைத்

† நியாசம்=அடைக்கலப்பொருள். ‡ இட்டிப்பசு=யாகப்பசு.

தனனுமாகிய போக்கிரியைப் பிடித்து வாருங்கள்!

[திரைக்குள்] சர்விலகர் கட்டளைப்படி.

சர்வில.—“ இதோ என்னுற் றங்களுடைய குணமூலமாகச் சம்பாதிக்கப்பட்டிருக்கிற இந்த இராச்சியத்தைத் தாங்கள் அடையுங்கள்” என்று அரசன் ஆரியகன் கேட்டுக்கொள்ளுகின்றனர்.

சாருத.—என் குணத்தினுலா சம்பாதிக்கப்பட்டது?

[திரைக்குள்] அடே! அரசன் மைத்துன! வா; தீயசெய்கையின் பலனை நீயநுபவித்தல் வேண்டும்.

(பிற்பாடு முதுகுப்பக்கத்திலிரண்டு கையும் கட்டப்பட்டுச் சேவர்களாற் சூழப்பட்டுச் சகாரன் வருகிருன்).

சகார.—ஆச்சரியம்!

கட்டவிழ்ந்த கழுதையெனக்
கடுந்தூரம் போன எனைத்
† துட்டருக்கன் போற்கட்டித்
தூக்கி யிங்கு விட்டனரே. (52)

[நான்கு பக்கங்களிலும் பார்த்து] அரசன் மச்சானுகிய நான் எல்லாராலுஞ் சூழப்பட்டேன்; இப்போது கதியற்ற நான் ஆர்காலில் விழுவேன். [யோசித்து] இருக்கட்டும், சரணம் புகுந்தோரிடத்திற்றயை புரியும் அவனையே சரணம் புகுவேன் [எனச்சென்று] ஆரியசாருதத்த! என்னைக் காத்தருளும், காத்தருளும்! [என்று காலில் விழுகின்றனன்].

[திரைக்குள்] ஆரியசாருதத்தரே! இவனை விடும் விடும், கொல்லுகிறேம்.

சகார.—[சாருதத்தனைப்பார்த்து] ஓய்! அகதிகளுக்கு அடைக்கலம் அளிப்பவரே! என்னைக்காத்தருளும்!

---

† துட்டதுக்கன்=தீயநாய்.

சாருத.—நான் சொல்லும் வண்ணம் செய்வீரா?

சர்வில.—அதிலென்ன சந்தேகம்.

சாருத.—நிசந்தானா?

சர்வில.—நிசம்!

சாருத.—அப்படியானால் விரைவிலிவனை—

சர்வில.—கொல்லட்டுமா?

சாருத.—அல்ல, அல்ல, விட்டுவிடும்.

சர்வில.—யாது காரணத்தால்?

சாருத.—

அபராதி யாரொருவன் அடிக்கண் வீழ்ந்தால்
அவன்வாளி னாலறுக்கப் படுவா னல்லன். (53½)

சர்வில.—ஆயின் நாயைவிட்டுக்கடிக்கச் செய்வேம்.

சாருத.—அல்ல, அல்ல.

உபகாரஞ் செய்வதினா லுலகத் தென்றும்
உயிரிழக்க லுற்றார்க்கு முயர்வா மன்றே! (54)

சர்வில.—அடே! ஆச்சரியம்! என்ன செய்யலாம்? ஆரியரே! சொல்லும்.

சாருத.—அவன் விடுதலை யடையட்டும்.

சர்வில.—விடுதலையாகட்டும்; விடுங்கள்.

சகார.—ஆச்சரியம்! பின்னும் உயிருள்ளவனானேன். [என்று புருடர்களோடு சென்றனன்]

(திரைக்குள் கலகல ஒலி)

[மறுபடி திரைக்குள்] இவள் ஆரிய சாருதத்தர் மனையாள், ஆரியை தூதை! தன்காலடியில் சேலை நுனியைப்பிடித்து

இழுக்கிற குழந்தையைத் தள்ளிவிட்டு, அளவற்ற கண்ணீர் சொரிகிற சனங்களாற் றடுக்கப்பட்டவளாகி, எரியாநின்ற அக்கினியருகிற் பிரவேசிக்கின்றனள்.

சர்வில.—[கேட்டுத் திரையை நோக்கி] என்ன சந்தனகனே! அட! சந்தனக! இது என்னடா?

(சந்தனகன் பிரவேசித்து)

சந்தன.—ஆரியர் பார்க்கவில்லையா என்ன? மகாராசா அரண்மனைக்குத் தென்புறத்தில பெரிய சனக்கூட்டம இருக்கிறது; ஆரியசாருதத்தர பலையாட்டி ஆரியைதூதை காலடியிற் சிலை நுனியைப் பிடித்திழுக்கிற பாலகனைத்தள்ளிவிட்டுப், பெருங்கண்ணீர் சொரிகிற சனங்களாற் றடைசெய்யப்பட்டு, எரியும தீயிலிறங்கப போகின்றனள். "ஆரியே! இந்தச் சாகசஞ் செய்யாதே; ஆரிய சாருதத்தர் உயிருடனிருக்கின்றனா" என்று நான சொன்னேன்; துக்கத்தில் மூழ்கியிருக்கையில யார் கேட்பார்? யார் நம்புவார்?

சாருத.—[சோகத்தோடு] ஆ காதலி! யான் சீவித்திருக்கும் போது நீ இந்த முடிவு செய்தனையே!

(மேலேபார்த்து பெருமூச்செறிந்து)

நல்லொழுக்க முடையாளே! புனதுசீலம்
நளிகடல்சூழ் ஞாலத்திற் காண்டலிலை
† பலக்கற்பின் புகலிடமே பதியைநீத்துப்
பரவுலகச் சுகம்பருகல் பண்பன்றுமே. (55)

(என்று மூர்ச்சிக்கிறான்).

சர்வில.—அட! என்ன அஜாக்கிரதை!

விரைவிலந்த விடத்திற்கே போதல் வேண்டும்
மிகுமூர்ச்சை யாரியரிங் குற்று ளையோ!
புரியுமென்றன் முயற்சியெல்லாம் பயனில் லாமற்
போகின்ற தெனவெற்குத் தோற்று கின்ற. (56)

† பலசகற்பு=திடமுற்றபதிவிரதாதன்மம்.

அங்குப்போய் ஆரியையை உயிர்ப்பித்தல் வேண்டும், இல்லாவிட்டால் மனத்தளர்வால் வருத்தம் விளையும்.

சாருத.—[மூர்ச்சை தெளிந்து எழுந்து] ஆ! பிரியையே! எங்கிருக்கின்றனை? எனக்கு மறுமொழிசொல்லு.

சந்தன.—ஆரியர் இந்தப் பக்கத்தில் வாருங்கள்; [என்று எல்லாரும் போகின்றனர்].

(முன் சொன்னவிதமாய்த் தூதை பிரவேசிக்கின்றனள்)

(தூதையின் சீலைநுனியை யிழுத்துக்கொண்டும், விதூஷகனாற் பின்றொடரப்பட்டும், ரோஹஸேனனும் இரதனிகையும் பிரவேசம்).

தூதை.—[கண்ணீரோடு] குழந்தாய்! என்னை விடு, என்னைத்தடாதை; ஆரியபுத்திரருடைய அமங்களங்காதில் விழுமென்று அஞ்சுகின்றேன் [என்று எழுந்து வஸ்திரநுனியை இழுத்துத் தீயைநோக்கிச் செல்லுகின்றனள்].

ரோஹ.—அம்மா ஆரியே! நானும் வருகிறேன், இரு, உன்னைவிட்டு நான் பிழைக்கமாட்டேன். [என்று சடுதியிற் சென்று மறுபடி புடவைத்தலைப்பைப் பிடிக்கின்றனள்].

விதூஷ.—பிராமணியாகிய நீ ஒன்றியாய்ச் சிதையிலேறுதல் பாவமென்று ரிஷிகள் சொல்லுகிறார்கள்.

தூதை.—ஆரியபுத்திரரின் அமங்களத்தைக் காதிற் கேட்டலினும் பாவத்தைப் பற்றுதல் மேலானதன்றோ?

சர்வில.—[முன்னே பார்த்து] ஆரியை அக்கினிமுகத்திற் சென்றிருக்கின்றனள்; விரைவிற் போ, விரைவிற் போ!

(சாருதத்தர் விரைந்து போகின்றனர்).

தூதை.—ரதனிகே! குழந்தையைப் பிடித்துக்கொள்ளு; நான் என் எண்ணத்தை நிறைவேற்றுகிறேன்.

சேடி.—[துயரத்தோடு] நானுந் தாங்கள் செய்கிறபடி செய்கிறேன்.

தூதை.—[விதூஷகனைப் பார்த்து] ஆரியரே! தாங்கள் குழந்தையை எடுத்துக்கொள்ளுங்கள்!

வ்தூஷ.—உத்தேச சித்தியின் பொருட்டுப் பிராமணனை முதலில் வைத்தல் வேண்டும்; ஆகையால் நான் உமக்கு முந்துவேன்.

தூதை.—என்ன! இருவருந் தடுக்கின்றனரே! [குழந்தையைத் தழுவி] புத்திரக! எங்களுக்கு என்னுட னீரும் இறைத்தலுக்காக நீ தைரியமாகவிரு; காரியம முடிந்தபிறகு மனோரதத்தாற் பயனில்லை. [பெருமூச்செறிந்து] ஆரிய புத்திரர் உனக்கு ஆறுதல் சொல்லார்.

சாருத.—[கேட்டு விரைவாயோடிவந்து] குழந்தைக்கு நானே ஆறுதல் சொல்லுகிறேன், [என்று கைகளால் எடுத்து மார்பிலணைத்துக்கொள்ளுகின்றனன்]

தூதை.—[பார்த்து] ஆச்சரியம்! ஆரிய புத்திருடைய குரல் போலும்; மறுபடியும் அதிர்ஷ்டவசத்தால் இவரே ஆரிய புத்திரர்! சந்தோஷம்; எனக்குச் சந்தோஷம்.

குழந்தை.—[பார்த்து ஸந்தோஷத்தோடு] அம்மம்ம! ஆச்சரியம்! என் அப்பா என்னைக் கட்டிக் கொண்டார் [தூதையைப்பார்த்து] அம்ம ஆரியே! விருத்தியாகிறாய்; அப்பாவே எனக்கு ஆறுதல் செய்கிறார். [என்று தகப்பனைத் தழுவுகிறான்]

சாருத.—[தூதையைப்பார்ர்து]

காதலியே காதலனு னிருங்குங் காலைக்
கடுங்கொடிய முடிவுசெய்தாய் கமலநடை
ஆதவனத் தமியாம விருக்கும் போழ்தே
† அம்பகத்தை முகிழ்த்திடுமோ அறைவாய்மாதோ.

† அம்பகம் = கண்; இங்குத்தாமரைப்பூவைச் சுட்டிற்று "அனைய காலையிலம்பிகை மலர்ந்திலள் அம்பக மொருக்காலும்" பாரதம், ஆதிபருவம், சம்பவச்சருக்கம், செய்யுள் 12.

தூதை.—ஆரியபுத்திரரே! அதனுற்ருனவள் சேதந மெனறு சும்பநம் பண்ணப்படுகின்றனள்.

விதூஷ.—[பார்த்துக் களிப்புடன்] அகோ! ஆச்சரியம்! இந்தக்கண்களினுலேயே அந்தரங்க நண்பனைக் காண்கின்றேன்; ஆ! ஆ! மனைவியின் மகிமை!! அக்கினிப்பிரவேசத்தீர்மானத்தால், †இன்பனுடைய கூட்டுறவையடைந்தனள். [சாருதத்தனைப்பார்த்து] பிரிய நண்ப! சாருதத்த! வாழி!!

சாருத.—மைத்திரேய! வாரும் [என்று தழுவுகின்றனன்]

சேடி.—அடிமிக்க ஆச்சரியம்! ஆரிய! வந்தனம். [என்று பாதங்களிற்பணிகின்றனள்]

சாருத.—[முதுகிற் கையை வைத்து] இரதனிகே! எழுந்திரு. [என்றுதூக்கிவிடுகிருன்]

தூதை.—[வசந்த சேனையைப் பார்த்து] ஸகோதரியான நீ அதிர்ஷ்டவசத்தாற் க்ஷேமமாயினை!

வசந்த.—இப்போது க்ஷேமமாயினேன் [என்று இருவரும் தழுவுகின்றனர்]

சர்வில.—பாக்கியவசத்தால் உயிருடனிருக்கும் பெந்து வர்க்கத்தை உடையவரானுர் ஆரியர்.

சாருத.—உமது அநுக்கிரகத்தால்.

சர்வில.—ஆரியே! வசந்தசேனு! இராசா சந்தோஷமடைந்து உன்னை ‡"வது" என்ற வார்த்தையால், அநுக்கிரகம்பண்ணுகின்றனர்.

வசந்த.—ஆரிய! பாக்கியசாலியானேன்!

சர்வில.—[வசந்தசேனையை முக்காடிட்டுச் சாருதத்தனைப் பார்த்து] ஆரிய! இந்தச் சந்நியாசிக்கு யாது செய்வேன்?

---

† இன்பன்=கணவன். ‡ வது=மணத்திற்குரியபெண்.

சாருத.—உமக்கென்ன பிரியம்?

சந்நியாசி.—இவ்வண்ணம் நிலையில்லாமையை நோக்கித், துறவறத்தை யிரண்டு மடங்கு அபிமானித்தேன்.

சாருத.—சகாவே! இவனுடைய உறுதி திடமுற்றதாக விருக்கிறது; ஆகையால் பூமியில் எல்லாமடங்கட்கும் இவனைத் தலைவனாக்கவேண்டும்.

சர்வில.—ஆரியர் உத்திரவுப்படி.

சந்நியாசி.—எனக்கும் மிகச்சந்தோஷம்.

வசந்த.—இப்போது உயிருள்ளவளாயினேன்.

சர்வில.—ஸ்தாவரகனுக்கு யாது செய்யட்டும்?

சாருத.—அவன் நல்ல நடத்தை யுள்ளவனாதலின், அவன் சுவாமி இச்சையைப்பெறுக! இந்தச் சண்டாளர்கள் எல்லாச் சண்டாளர்களுக்குந் தலைவர்களாகட்டும்; சந்தனகன் முதல் நியாயாதிபதியாகுக! அந்த அரசன் மைத்துனன் முன்பு யாது செய்துகொண்டிருந்தானோ, அதையே இப்போதுஞ் செய்துகொண்டிருக்கட்டும்.

சர்வில.—இவைகளெல்லாம் ஆரியர் உத்திரவுப்படியே; இவனை மட்டும் விடுமே, விடும், கொல்லுகிறேன்.

சாருத.—அடைக்கலம் புகுந்தான், அவனுக்கு அபயமளித்தேன் [என்று "அபராதியாமொருவன்" என்ற இவ்வங்கத்தின் 53½ செய்யுளைச் சொல்லுகிறான்].

சர்வில.—உமக்குப் பிரியமானதும், யான் செய்யவேண்டுவதுமான மற்றவை யென்ன? அதைச் சொல்லும்.

சாருத.—இதினும் பிரியமுள்ள தென்னை!

களங்கமுற்ற வென்சரிதஞ் சுத்தம்மேய
கால்பணிந்த பகைவன்விடு விக்கப்பட்டான்
உளங்கனிந்த வெனதாரி யகநேயன்றான்
உறுபகை மூலங்களைந்து பெருமானாகி

† அளங்கரினி தாளலுற்றான் பிரியாட்பெற்றேன்
ஆர்வலனீ மித்திரனை யடைந்தாயின்னும்
பிளிறுகடல் சூழுலகில் நின்பாலேற்றுப்
பெறும்பயன்றான் யாதுளது? பேசுங்காலே. (58)

சிலரைக் குறைத்துச் சிலர் நிறைத்துச்
சிலரைத் தாழ்த்திச் சிலருயர்த்திச்
சிலரைத் துன்பிற் குள்ளாக்கிச்
செய்யும் விதமொன்றுடனொன்றே
ஓலும்வா யின்றி முரண் குழுமு
முலக நிலையை விகற் பித்துச்
சலந்தா னேற்கு மேற்றம் போற்
றளரா விதி ‡ யுண்டாட்டுற்ற. (59)

அவ்வண்ணமாயினும் இங்ஙனம் பரதவாக்கியம்:—

ஆவினங்கள் பயஞ்சுரக்க அவனிபல
வளந்தழைக்க வமையுங் காலத்
தேவணங்கார் மழைபொழிக விவ்வுலகைக்
களிப்பூட்டி யிருங்கால் வீசச்
சீவவின மனமகிழத் திருமறையோர்
நினைத்தவெலாஞ் சேரச் சேரா
சாவவென்ற அறம்வெறுக்கை தமைப்படைத்த
தார்வேந்தர் தரையைக் காக்க. (60)

(என்று எல்லாருஞ் சென்றனர்)

சம்ஹாரம் என்னும் பத்தாவதங்கம்
முற்றிற்று.

இறைவன் இருங்கழல் வாழ்க.

---

† அளக்கர்=பூமி, அளங்கரென எதுகை நோக்கி மெலிந்தது.

‡ உண்டாட்டு=மதுபான விளையாட்டு.